உ

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பிரகாச வள்ளலார்

என்னும்

## சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந் தருளிய

# திரு அருட்பா

## ௪. உபதேசப் பகுதி

இது


சென்னை

பி. ஏ., எம். எல்., (அட்வொகேட்)

ஆ. பாலகிருஷ்ண பிள்ளையால்


சுவாமிகள் அச்சிற் பதித்த முதற் பிரதியோடும்
சுவாமிகளைச் சூழ்ந்து அவர்களுக்கு ஆட்பட்டிருந்த
அன்பர்களின் கை எழுத்துப் பிரதிகளோடும்
ஒத்திட்டு ஆராய்ந்தும் தொகுத்தும்
அடக்கவிலைப் பதிப்பாக
அச்சிடப்பட்டிருக்கிறது.


கலியுகாதி௵ ௫0௩௩-ல் நிகழும் பிரஜோத்பத்தி௵
தைமீ ௧0௳

23-1-1932

உ

# திரு அருட்பா மகிமை

திருச்சிற்றம்பலம்

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்குங் — கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

சிதம்பர சுவாமிகளால்

அருளிச் செய்யப்பட்டது.

# திரு அருட்பா : ச. உபதேசப் பகுதி

## பொருளடக்கம்


| எண் | பிரிவு | உட்பிரிவு | பக்கம் |
|---|---|---|---|
| பாயிரம் | | க. திருவருட்பா மகிமை ... | உ |
| | | உ. உபதேசப் பகுதிக் குறிப்பு ... | ச |
| | | ௩. ஆசாரிய ஸ்துதி ... | எ |
| | | ச. இன்று வருமோ என்னும் திருவருட்பா ... | அ |
| | | ரு. இவ்வடக்க விலைப் பதிப்பின் விவரம். | 263 |
| க. | அனுஷ்டான முறை | | |
| | | 1. சமயானுஷ்டான விதி ... | 1 |
| | | 2. கணபதி பூஜா விதி ... | 4 |
| | | 3. செவ்வாய்க்கிழமை விரத முறை ... | 5 |
| உ. | நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல் | | |
| | | 1. சாதாரண நித்திய கரும விதி | 7 |
| | | 2. பொது விதி ... | 15 |
| | | 3. சிறப்பு விதி ... | 17 |
| ௩. | சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள் ... | | 20 |
| ச. | சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைச் சிறு குறிப்புகள் ... | | 90 |
| ரு. | சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைத் தனிக் குறிப்புகள் ... | | 156 |
| சா. | சுப்பிரமணியமும் அருள்நெறியும் ... | | 171 |
| எ. | திருவருண் மெய்ம்மொழி ... | | 185 |
| அ. | மஹோபதேசம் ... | | 194 |
| கூ. | ஔஷதி குணகராதி ... | | 212 |
| | அநுபந்தம்—சின்மய தீபிகை ... | | 232 |

# உபதேசப் பகுதிக் குறிப்பு

இந்த உபதேசப் பகுதியில் அடங்கியுள்ளவற்றில் பெரும்பாலன, சுவாமிகள் தம்மை அடுத்த அன்பர்களுக்கு வாய்மொழியாக வடலூர் தருமச் சாலையிலும் மேட்டுக்குப்பம் சித்திவளாகத்திலும் உபதேசம் செய்தவற்றை, அவ்வன்பர்களில் ஒரு சிலர் எழுதிவைத்த குறிப்புகளாகும். ஓர் ஓர் இடத்தில் அங்ஙனம் உபதேசித்த அல்லது எழுதிய தேதியும் இடமும் காணப்படுகின்றன. ஆனால் ஓரிடத்திலாவது இவற்றில் ஒன்றையோ பலவற்றையோ எழுதிய பேரன்பர்களின் பெயர்கள் முதலியன குறித்திருக்கக் காணப்படவில்லை. அதுபோலவே, இக்குறிப்புகள், சுவாமிகள் உபதேசம் செய்துகொண்டிருக்கும்போதே நேர் நேராக அங்கங்கு அவற்றில் தாங்கள் கேட்ட அல்லது கிரகித்த சொற்களையோ அல்லது கருத்துக்களையோ குறித்துக் கொண்டு போனார்களோ, அல்லது உபதேசம் முடிந்தபிறகு அவர்களே ஞாபகம் கொண்டு எழுதினார்களோ, அல்லது அங்ஙனம் கேட்டவர்கள் சொல்லக்கேட்டு மற்றவர்கள் உடனுக்குடனே எழுதிவைத்தார்களோ என்னும் விவரம் ஒன்றும் அவற்றைக்கொண்டு தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

சுவாமிகளது உபதேச முகமான திருவார்த்தைகள் அவர்கள் ஆண்டவரிடம் முறையிட்டுக்கொண்ட ஸ்தோத்திரங்களையும் விண்ணப்பங்களையும் ஒப்ப, கடல் மடை திறந்தது போல், வரம்புகடந்து, கேட்பவர்களின் அதிதீவிர அறிவின் எல்லையைக் கடந்து பாய்ந்து, நிர்மலமான ஆகாசம்போல் எப்பாங்கரும் விளங்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவற்றில் ஆயிரத்தில் ஒரு கூறு இலக்ஷத்தில் ஒரு கூறே கேட்பவர்களின் தரத்திற்குத்தக, அவரவர்களுக்குப் புலப்பட்டிருக்கும். அப்படிப் புலப்பட்டதில் எவ்வளவு தூரம்

அவர்கள் ஞாபகம்கொண்டு அல்லது அப்போதப்போது
எழுதிவைக்க முடிந்ததோ, அது திருவருளுக்குத் தான்
தெரியும். அங்ஙனம் எழுதிவைத்திருப்பதில் கேட்டவர்
களின் அல்லது ஞாபகங்கொண்டு சொன்னவர்களின் அல்
லது இவற்றைக் கேட்டு எழுதியவர்களின் கேள்விக் குறை
யாலோ, திரிபுணர்ச்சியாலோ, அல்லது எழுத்துப் பிழைகளா
லோ, எங்கெங்கு சுவாமிகளின் உபதேசங்களின் சொரூபம்
மாறுபட்டிருக்கிறதோ, அதையும் தெரிந்துகொள்வது எளி
தன்று. சுருக்கெழுத்து முறை எளிதாகப் பார்த்து கையா
ளப்படும் இக்காலத்திலேயே, சாதாரண உலகியல் விவகாரங்
களைக் குறித்துப் பிரசங்கம் செய்பவர்கள் தாங்கள் சொன்ன
வற்றிற்கு நேர் விரோதமானவைகளும் அல்லது எவ்வித
சம்பந்தமுமில்லாதவைகளும் சுருக்கெழுத்துக்காரரால் தாங்
கள் சொன்னதாகக் கூட்டல் குறைத்தல் மாற்றல் என்னும்
விபரீத முறையில் குறித்திருப்பதாக முறையிட்டு வருந்து
கிறார்கள்.

ஆனால், சுவாமிகள் உபதேசம் செய்த விஷயங்களையும்,
அவர்களது பேச்சின் தடங்கலற்ற வான் பரப்புப் போன்ற
விரிவையும், ஆழ்ந்த நுட்பத்தையும், மனுஷ்ய தரத்துக்குக்
கோடிகோடிப்பங்கு மேற்பட்ட அதீத அநுபவ நிலையையும்,
ஒரு விநாடி நேரம் ஊன்றிச் சிந்திப்பவர்க்கு இப்பகுதியில்
அச்சிட்டிருக்கும் இவ் வளவில் கூட அவ்வுபதேசங்களைக்
குறிப்புகளாகக் குறித்துவைத்தது அவ் அன்பர்களின் ஊடுரு
விய அன்புநிலையையும் தெளிந்த அறிவுவிளக்கத்தையும்
சலிப்பற்ற ஆள்வினையையும் தெரிவிக்கும். இக்குறிப்பு
களில் இங்குமங்கும் அவர்கள் சுவாமிகளைச் சுட்டும் வகை
யில் அவர்களின் மன நிலையை ஊகித்தறிந்து கொள்ள
லாம். சுவாமிகளின் உபதேசங்கள் ஓர் இம்மி அளவுகூட
வேற்றுமை யடையாதிருக்க, அவர்கள் தங்கள் தங்கள் தரத்

துக்குக் கூடுமான வரையில் அத்தியந்த சிரத்தையோடு முயன்றிருப்பார்கள் என்பதிலும் ஐயமில்லை.

எனினும், சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகளிலிருந்து பதிப்பித்த அவர்கள் ஸ்தோத்திரங்களையும் வாசகங்களையும் கொண்டே, இக்குறிப்புகளில் ஒவ்வொன்றிலும் உள்ள உபதேசத்தின் சொரூபத்தைச் சன்மார்க்க சாதகர்கள் யாவரும் எல்லைப்படுத்தி உணர்தல் வேண்டும். அங்ஙனம் ஒரு வகையாக உணர்ந்த பின், அவைகளை சுவாமிகளின் ஸ்தோத்திரங்களிலும் விண்ணப்பங்களிலும் ஜீவகாருண்ய ஒழுக்கம் முதலியவற்றிலும் உள்ள அதிநுட்பங்களை இன்னும் கொஞ்சம் விளக்கமாக அறிய இடங் கொடுக்கும். இக்குறிப்புகளில் பலப்பல பாகங்கள் இப்பகுதியின் மூலந்தான் முதல் முதலாக வெளிவருகின்றன. இவை யாவும் சன்மார்க்க சாதகர்களுக்கு முன்பின் கண்டறியாத ஆள்வினையையும் அறிவுவிளக்கத்தையும் அன்புநிலையையும் உண்டாக்கிப் பெரும்பயன் அளிக்குமென்பது அனுபவ பூர்வமாம்.

இப்பகுதி அச்சிடுவதற்குக் காரணமான—தங்கள் தங்கள் உயிரைக் காட்டிலும் அருமையாகப் போற்றி வைத்திருந்த—கை எழுத்துப் பிரதிகளின் விவரங்களும், இதைச் சங்கல்பித்த காலத்துக்குள் ஒழுங்காக அச்சிட்டு முடிக்க அடியேனுக்கு நிரகங்கார நிலையில் நற்றுணையாக நிற்கும் ஆன்ம நேயர்கள் இரண்டொருவரின் தகைமையையும் திருவருட்பா அடக்கவிலைப்பதிப்பின் வரலாறு என்பதில் விளக்கமாகக் குறிக்கப்படும்.

**ஸ்ரீமந் நடராஜ லீலா மாநுஷ்ய திவ்விய மங்களரூப அருட்பிரகாச சுவாமிநே நம:**

# ஆசாரிய ஸ்துதி

தேரூர்ந்து மேருவலஞ் செய்தொளிரும்
செங்கதிர்போற் றிகழ்ந்து நாளும்
நீரூர்ந்த கடலுலகிற் கருட்கிரணந்
தனைப்பரப்பி நெடிய மூலக்
காரூர்ந்த குப்பாயங் கிழியவருட்
பெருஞ்சோதி காணக் காட்டுந்
தாரூர்ந்த வயங்கெழுதோ ளிராமலிங்க
குருவடலூர் சபைகண் டோனே. ௧

கண்டாய்நீ வடலூறுசிற் சபையிலருட்
பெருஞ்சோதி கண்ட பின்னே
கொண்டாய்நீள் மோனபதங் கல்லாலின்
புடையமர்ந்தோன் கோலம் பூண்டாய்
தண்டாய்நீங் காத்தொழும்ப ருடனின்று
யெனையுனடித் தண்டேன் மாந்தும்
வண்டாநீர் மையனுகப் பணித்தியருட்
பிரகாச வள்ளி யோனே. ௨

வள்ளலாய் வடலூருள் வருவார்க்கு
னருளமுதம் வழங்கா நின்றாய்
கொள்ளலாம் பரிபாக மின்மையினாற்
பரிந்தேத்திக் கொளமாட் டாமல்
எள்ளலா மலத்தழுந்தி மாழாந்தே
னெனக்குமெந்தா யிரங்கு வாயோ
பொள்ளலா மலவுடல்பொன் னுடலாக்கு
மிராமலிங்கப் புனிதத் தேவே. ௩

தேவேமெய்ஞ் ஞானவருட் பிரகாச
வள்ளலெனத் திகழா நிற்குங்
கோவேயெண் குணமலையே வடலூறுசிற்
றம்பலத்துட் குலவு ஞானப்
பூவேயப் பூமணமே மணங்கமழ்செந்
தேனேநின் பூந்தாட் கென்சொற்
பாவேறத் தொண்டுகொண்டாய் முன்னெனுமா
தவம்புரிந்தேன் பதக னேனே. ௪

—மஹாவித்வான் அரன்வாயல் வேங்கடசுப்புப் பிள்ளை.

உ

# திரு அருட்பா

திருச்சிற்றம்பலம்

நேரிசை வெண்பா

இன்றுவரு மோகாளைக் கேவருமோ அல்லதுமற்
றென்றுவரு மோஅறியேன் எங்கோவே — துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்குஞ் சுகம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பா

## ச. உபதேசப் பகுதி

### க. அநுஷ்டான முறை

#### 1. சமயாநுஷ்டான விதி[1]

திருச்சிற்றம்பலம்

சிவகணபதயே நம வென்று குட்டிக் கொள்ளுகிறது. சிவகுரவே நம வென்று நமஸ்கரிப்பது.

கும்ப பூசை

சிவாய நம என்று நிரீக்ஷணஞ் செய்வது.
அஸ்திராய நம என்று புரோக்ஷணம் செய்வது.
கவசாய நம என்று திக்பந்தனம் செய்வது.
அஸ்திராய நம என்று தாடனம் செய்வது.
சிவாய நம என்று தாளத்திரயம் செய்வது.

---

1 இச் சமயாநுஷ்டான விதியும் பின் வரும் கணபதி பூஜா விதியும் சுவாமிகள்பால் ஆட்பட்டு அமர்ந்தவர்களில் தலை சிறந்தவரான இறுக்கம் இரத்தின முதலியாருக்குச் சுவாமிகள் அவர் கோரியதற் கிணங்கி உபதேசித்த வழி வந்தன ஆகும்.

கவசாய நம என்று அவகுண்டனம் செய்வது.

சிவாய நம என்று தேனுமுத்திரை செய்வது.

அஸ்திராயநம(என்று)பத்து விசை ஜபம்(செய்து), மூன்று விசை அஸ்திராய நமவென்று சிரசில் புரோக்ஷித்துக்கொண்டு, மேற்படியால் மூன்றுவிசை ஜபஞ் செய்து, மேற்படியால் மூன்று விசை தர்ப்பித்து, "ஆத்ம தத்துவாய சுவதா, வித்தியா தத்துவாய சுவதா, சிவ தத்துவாய சுவதா" என்று அரை உளுந்து அமி ழுளவாக ஜலம் ஆசமித்து, அஸ்திராய நம வென்று கட்டைவிரல் மடக்கி அதரசுத்தி செய்து, கவசாய நம வென்று முகவாய்க்கட்டை. இருபுறம், நாசி உ, கண் உ, காது உ, தோள் உ, தொப்புள், மார்பு—இப் பன்னிரண் டிடமுந் தொடுவது.

பின் திருநீ றெடுத்து இடது கையில் வைத்து, அஸ்திராய நம வென்று ஜலம் புரோக்ஷித்து வலது தொடைமேல் வைத்து, "நிவர்த்திகலாய நம, பிரதிஷ்டா கலாய நம, வித்தியா கலாய நம, சாந்தி கலாய நம, சாந்தியாதீத கலாய நம, ஈசான மூர்த்தாய நம, தத்புருஷ வக்த்திராய நம, அகோர ஹிருதயாய நம, வாமதேவ குகியாய நம, சத்தியோஜாத மூர்த்தயே நம, ஹிருதயாய நம, சிரசே நம, சிகாயை நம, கவசாய நம, நேத்திரேப்யோ நம, அஸ்திராய நம" என்று ஜபித்து, கவசாய நம வென்று குழைத்து, அஸ்திராய நம வென்று நிருதி திக்கில் தெறித்து, ஈசான மூர்த்தாய நம வென்று சிரசிலும், தத்புருஷ வக்த்திராய நம வென்று நெற்றியிலும், அகோர ஹிருதயாய நம வென்று மார்பிலும், வாமதேவ குகியாய நம வென்று நாபியிலும், சத்தியோஜாத மூர்த்தயே நம வென்று முழங்கால் தோள்

முழங்கை மணிக்கட்டு பக்கம் முதுகு கண்டம்—இந்த இடங்களில் தரித்துக்கொண்டு, கொஞ்சம் ஜலம் விட்டுக் கையலம்பி, முட்டி பிடித்து, சிவாய நம வென்று சிரசில் புரோக்ஷித்துக்கொண்டு, பின்பு முன் சொன்ன தத்வ மந்திரத்தால் ஆசமித்து, முன்போல் தொடுமிடந் தொட்டுக் கவசாய நம வென்று தி(ஜ?)லம் சூழ வளையவிட்டு, சிவாய நம வென்று மூன்று விசை அர்க்கியங் கொடுத்து, பஞ்ச பிரம மந்திரத்துடன் ஹிருதய சிர சிகை கவச நேத்திர அஸ்திராதி மந்திரங்களால் தர்ப்பித்து, முன்போல் ஆசமனுதி தொடு மிடந் தொட்டு, அஸ்திராய நம வென்று மணையின்மேரில் புரோக்ஷித்து, பின்பு சிவகணபதயே நமவென்று குட்டிக்கொண்டு, சிவகுரவே நம வென்று நமஸ்கரித்து, தக்ஷிணமூர்த்தியைத் தியானித்து, பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டு ஜபஞ்செய்து, பின்பு சிவசூரியாய நம வென்று கையில் ஜலம் விட்டுச் சூரிய அர்க்கியங் கொடுத்து, பின்பு, பதினொரு விசை நமஸ்கரித்து, தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் ஸ்தோத்திரஞ் செய்து, முன் போல் ஆசமனுதி தொடு மிடந் தொட்டு, விபூதி தரித்துக்கொண்டு, மணையின்மேரில் அஸ்திராய நம வென்று ஜலம் விட்டுத் தொட்டு, ஹிருதயாய நம வென்று மார்பிலும் நெற்றியிலு மிட்டு, பின்பு சிவதரிசனம் குருதரிசனம் செய்து, பின்பு விதிப் படி போஜனஞ் செய்து, பின்பு சிவாகமாதிகள் பாராயணஞ் செய்தல். திருச்சிற்றம்பலம்.

1. சமயானுஷ்டான விதி முற்றிற்று.

---

## 2. கணபதி பூஜா விதி[2]

திருச்சிற்றம்பலம்

நித்திய கர் மானுஷ்டானம் முடித்துக்கொண்டு, தத்துவத்திரய மந்திரத்தால் ஆசமித்து, ஹிருதயத்தால் தொடுமிடந் தொட்டு, பஞ்சாக்ஷரத் தியானஞ் செய்து, கணபதியைப் பீடத்தை விட்டு அபிஷேக ஸ்தான பாத்திரத்தி லெழுந்தருளப் பண்ணி, பீடத்தைச் சுத்தி செய்து, திருமஞ்சனஞ் செய்ய வைத்திருக்கின்ற தீர்த்த கும்பத்தைக்கந்த புஷ்பங்களால் சூழவும் "சிவாய நம, கவசாய நம" என்று சாத்தி, பின்பு பஞ்சாக்ஷரத்தால் பதினொரு விசை அர்ச்சித்து, அஸ்திராய படு வென்று மணியசைத்து, அஸ்திராய நம வென்று அர்க்கிய வட்டகையில் ஜலம் பூரித்து, பிரணவத்தா லேழு விசை கந்தாதிகளால் அர்ச்சித்து, பின்பு கணேசருக்கு ஆசன மூர்த்தி மந்திரத்தால் புஷ்பஞ் சாத்தி, தேவாரம் திருவாசகம் முதலியவைக ளோதி அபிடேகஞ் செய்தல்.

விசேட தினத்தில் ஆகம விதிப்படி தைல க்ஷீர பல முதலியவற்றால் அபிடேகித்து, இடையே ஒவ்வொன்றுக்கும் (ஜலத்தால்) அபிடேகித்து, பின்பு சந்தனாதி கும்பஜ லாபிஷேகஞ் செய்து, ஒற்றாடை சாத்தி யீரம் புலர்த்தி, வத்திரபூடணாதிக ளணிந்து, சிவாய நம வென்று வெண்ணீறும், கந்தகுராவே நம வென்று சந்தனமும், ஆசனமூர்த்தி மந்திரத்தால் புஷ்பமும், பஞ்சாக்ஷரத்தால் மூன்றுவிசை தூர்வாக்ஷதையும், தத்துவத்திரயத்தா லர்க்கியமுங் கொடுத்து, சாமான்னிய நிவேதனஞ்செய்து, தூபதீபங் கொடுத்து,

---

2 முதற் பக்கம் 1-வது அடிக் குறிப்பைப் பார்க்க.

பின்பு சுமு காதி சிவாத்மஜாய நம ஈறுகவுள்ள ஷோடச மந்திரத்தா லர்ச்சித்து, அர்க்கியங் கொடுத்து, கிரமப்படி விசேஷ நிவேதனாதி தூப தீபாராதனை செய்து, பத்திரஞ் சாத்தி, தோத்திரித்து, பிரதக்ஷிணாதி புஷ்பஞ் சாத்தி நமஸ்கரித்து, மனத்தால் ஹிருதயத்தி லெழுந்தருளப் பண்ணிக்கொண்டதாகச் சிந்தித்து, முன் சொன்னபடி ஆசமனஞ் செய்து, பஞ்சாக்ஷர ஜபஞ்செய்து, திருவெண்ணீறு தரித்துக்கொண்டு, போஜன விதிப்படி போஜனஞ் செய்யவும்.

மேலும், மேல் குறித்தபடி பூஜையை மானசிகமாகச் சுப்பிரமண்ணியம், சிவம், தக்ஷிணாமூர்த்தி நடராஜமூர்த்தி இவற்றிற்கும் செய்யலாம். இவ்வணஞ் செய்திருந்தால் பரமாசாரியர் கிடைப்பர். ஷை பரமாசாரியரை மானசிகத்தா லர்ச்சித்து உண்மை யறிந்து நிராசை மயமானல் சிவானுபவம் பெறலாம். திருச்சிற்றம்பலம்.

2. கணபதி பூஜா விதி முற்றிற்று.

## 3. செவ்வாய்க்கிழமை விரத முறை[3]

திருச்சிற்றம்பலம்

திங்கட்கிழமை இரவில் பலாகாரஞ் செய்து, செவ்வாய்க்கிழமை அருணோதயத்தி லெழுந்து, திருநீறு நெற்றியில் மாத்திரம் அணிந்து, நல்ல நினைப்புடன் அங்கசுத்தி தந்தசுத்தி முதலானவையுஞ் செய்துகொண்டு, சூரியோதயத்திற்கு

3 இது சுவாமிகளுக்கு ஆட்பட்டுச் சிறந்தவர்களில் ஒருவரான சென்னை ராயல் ஹோட்டல் புதுவை வேலு முதலியாருக்குச் சுவாமிகள் அவர் கோரியதற் கிணங்கி உபதேசித்த வழி வந்த தாகும்.

முன் ஆசாரமான சுத்த சலத்தில் ஸ்நானஞ் செய்து, விபூதியைச் சலத்தினால் குழைத்து அனுஷ்டானப்படி தரித்துக்கொண்டு, கணபதியை நினைத்து, பின்பு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டு முறை செபித்து, பின்பு சிவத்தியானம் செய்து, எழுந்து வாயலில் வந்து சூரியனைப் பார்த்து ஓம் சிவ சூரியாய நம வென்று மெதுவாகச் சொல்லி நமஸ்கரித்து, அதன் பின்பு அவ்விடத்திலேதானே நின்றுகொண்டு, தங்கள் தங்கள் மனத்திலிருக்கிற கோரிக்கைகளை முடித்துக்கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீ வயித்தியலிங்கரையும் தையனாயகியையும் முத்துக்குமாரசாமியையும் தியானித்துக் கொண்டு, பின்பு ஓம் வயித்தியநாதாய நம வென்று நூற்றெட்டு ஆயிரத்தெட்டு—இரண்டில் எந்த அளவாவது செபித்து, ஒரு பலம் மிளகு சீலையில் முடிந்து வயித்தியலிங் கார்ப்பணம் என்று ஓரிடத்தில் வைத்து, சிவனடியார் ஒருவர்க்கு உபசாரத்தொடு அமுதுபடைத்து, பின்பு சுசியொடு பச்சரிசிப் பொங்கல் முதலான புசிப்பை அரை யாகாரம் முக்கால் ஆகாரங் கொண்டு, அன்று மாலையில் சிவதரிசனஞ் செய்து, பாய் சயனம் கொட்டை முதலாகியவையும் விட்டு, மெழுகிய தரையில் கம்பளம் விரித்துப் படுக்கவேண்டும்; சிவசரித்திரங் கேட்கவேண்டும்; செபஞ் செய்துகொண் டிருக்க வேண்டும்; சந்தனம், புட்பம், தாம்பூலம், இராகம், சுகம், பெருந்தூக்கம் முதலானவையும் விட்டிருக்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

## 3. செவ்வாய்க்கிழமை விரத முறை முற்றிற்று.

## க. அனுஷ்டான முறை முற்றிற்று.

# உ. நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்

## 1. சாதாரண நித்திய கரும விதி

அருட்பெருஞ் ஜோதி

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து, விபூதி தரித்துச் சிறிதுநேரம் உட்கார்ந்து, கடவுளைத் தியானஞ் செய்தல்வேண்டும்.

பின்பு களிப்பாக்கு மிகுதியாகவும் வெற்றிலை சுண்ணம்பு குறைவாகவும் போட்டுக்கொண்டு, முன் ஊறுகிற ஜலத்தை உமிழ்ந்து, பின் வரும் ஜலத்தையெல்லாம் உட்கொள்ளல் வேண்டும். பின்பு எழுந்து உள்ளே சற்றே உலாவுதல்வேண்டும். பின் மலஜல வுபாதிகளைக் கழித்தல் வேண்டும். மலங் கழிக்கின்றபோது, வலது கையால் இடது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். ஜலங் கழிக்கும்போது, இடது கையால் வலதுபக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல்வேண்டும். மலமாவது ஜலமாவது பற்றறக் கழியும் வரையில், வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், மலஜல சங்கற்பத்தோடு இருக்கவேண்டும். மலம் பின்னுந் தடைபடுமானால், இடது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராண வாயுவை வலத்தே வரும்படி செய்து கொண்டு, மல சங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல்வேண்டும். ஜலம் தடைபட்டால், வலதுபக்கமாகச் சற்றே படுத்துப் பிராண வாயுவை இடது பக்கம் வரும்படி செய்துகொண்டு, ஜல சங்கற்பத்தோடு ஜலவுபாதி கழித்தல்வேண்டும்.

மலஜல வுபாதி கழிந்தபின், செவிகள் கண்கள் நாசி வாய் தொப்புள்—இவைகளில் அழுக்கு பீளை

சளி ஊத்தை என்கின்ற அசுத்தங்களையும், கைகால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும் வெந்நீரால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் வேலங்குச்சி ஆலம்விழுது—இவைகளைக்கொண்டு பல்லழுக்கெடுத்து, அதன்பின் கரிசலாங்கண்ணித் தூள்கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி பல்லில் தேய்த்து வாயலம்பின பின்பு, பொற்றலைக் கையாந்தகரை யிலை அல்லது கரிசலாங்கண்ணி யிலை ஒரு பங்கு, தூதுளையிலை முசுமுசுக்கையிலை கால் பங்கு, சீரகம் கால்பங்கு—இவைகளை ஒன்றாகச் சேர்த்துச் சூரணமாகச் செய்துகொண்டு, அதில் ஒரு வராகனெடையை ஒரு சேர் நல்ல ஜலத்திற் போட்டு, அதனுடன் ஒரு சேர் பசுவின் பால் விட்டுக் கலந்து, அதிலுள்ள ஒருசேர் ஜலமுஞ் சுண்டக் காய்ச்சி அந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடல்வேண்டும்.

காலையில் இளம்வெய்யில் தேகத்திற் படாதபடி, பொழுது விடிந்து ரு நாழிகை பரியந்தம் உடம்பைப் போர்வையோடு காத்தல்வேண்டும். பின்பு வெய்யிலில் நெடுநேரம் தேகமெலிவு வரத்தக்க உழைப்பை யெடுத்துக்கொள்ளாமல், இலேசான முயற்சியில் சிறிது வருத்தந் தோன்ற முயலுதல் வேண்டும். பின் இளம் வெந்நீரில் குளித்தல்வேண்டும். விபூதி தரித்துச் சிவசிந்தனையோடு சிறிது நேரம் இருத்தல்வேண்டும்.

பசி கண்டவுடன் தடைசெய்யாமல் ஆகாரம் கொடுத்தல்வேண்டும். ஆகாரங் கொடுக்கும்போது, மிகுந்த ஆலசியமு மாகாது, மிகுந்த தீவிரமு மாகாது. முதற் பக்ஷம் சீரகச்சம்பா அரிசி—அன்றிப் புன்செய் விளைவும் கார்அரிசியுந் தவிர நேரிட்ட அரி

சியின் வகைகள்—ஆகும். அது சாதமாகும்போது, அதிக நெகிழ்ச்சியு மாகாது, அதிக கடினமும் ஆகாது. நடுத்தரமாகிய சோற்றை அக்கினி அளவுக்கு அதிகப்படாமலும் குறைவுபடாமலும் அறிந்துண்ணுதல்வேண்டும். ஆயினும் ஒருபிடி குறைந்த பக்ஷமே நன்மை. போஜனஞ் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல்வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடியாதிருத்தல்வேண்டும்.

கிழங்கு வகைகள் உண்ணாமல் இருக்கவேண்டும். அவற்றில் கருணைக்கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும். பழ வகைகள் உண்ணாதிருத்தல் வேண்டும். அவற்றில் பேயன் வாழைப்பழம் ரஸ்தாளி வாழைப்பழம்—இவை நேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல்வேண்டும். பதார்த்தங்களில் புளி மிளகாய் சிறிதே சேர்க்கவேண்டும். மிளகு சீரகம் அதிகமாகச் சேர்த்தல்வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பு குறைவாகவே சேர்த்துக் கொள்ளல்வேண்டும். அன்றி, எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம். தாளிப்பில் பசுவெண்ணெய் நேரிட்டால் தாளிக்க வேண்டும். நேராத பக்ஷத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க்கவுங் கூடும். வெங்காயம் வெள்ளைப் பூண்டு சிறிதே சேர்க்கவேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கலியாணப் பூசணைக்காய், புடலங்காய், தூதுளங்காய், கொத்தவரைக்காய்,—இவைகள் பதார்த்தஞ் செய்தல்கூடும். இவற்றினுள் முருங்கை,

கத்தரி, தூதுளை, பேயன்வாழைக்காய்—இவை களை அடுத்தடுத்துக் கறிசெய்து கொள்ளலாம். மற்றவைகளை ஏகதேசத்தில் செய்துகொள்ளலாம். வடை, அதிரசம், தோசை, மோதகம் முதலிய அப்ப வர்க்கங்கள் கொள்ளப்படாது ; ஏகதேசத் தில் சிறிது கொள்ளவுங் கூடும். சர்க்கரைப் பொங் கல், ததியோதனம், புளிச்சாத முதலிய சித்தி ரான்னங்கள் கொள்ளப்படாது ; ஏகதேசத்தில் சிறிது கொள்ளலாம். புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. கரி சலாங்கண்ணிக்கீரை தூதுளைக்கீரை முன்னைக்கீரை பசலைக்கீரை முருங்கைக்கீரை—இவைகளைப் பருப் போடு சேர்த்தும், மிளகோடு சேர்த்தும், புளியிட் டும், தனித்தும், கறிசெய்து கொள்ளக் கூடும். மற் றைக் கீரைகள் ஏகதேசத்தில் நேரில் சிறிது சேர்த் துக் கொள்ளவுங் கூடும். புளித்த தயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் முளைகட்டாத துவரம் பருப்பு அல்லது முளைகட்டின துவரம்பருப்பு மிளகு சேர்த்துக் கடைதல், துவட்டல், துவையல் செய்தல், குழம்பிடல், வேறொன்றில் கூட்டல் முத லியவாகச்செய்து, நெய் சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவுஞ் சேர்க்கப்படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமல்ல. ஏக தேசத்தில் நேர்ந்தால் கொள்ளவுங் கூடும். சுக் கைச் சுண்ணம்பு தடவிச் சுட்டு, மேலழுக்கைச் சுரண்டிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக் கொண்டு, நல்ல ஜலத்திற் கொஞ்சம் போட்டு, ரு பங்கில் ௩ பங்கு நீர் சுண்ட உ பங்கு நீர் நிற்கக் காய்ச்சி, அதைத் தாகங்கொள்ளுதல் வேண்டும். நோதபக்ஷத்தில்வெந்நீராவதுகொள்ளுதல்வேண்

டுமேயன்றிக் குளிர்ந்த ஜலங் கொள்ளப்படாது. எந்தப் போஜனத்திலும் புலால் எந்த வகையினும் புசிக்கப்படாது. எப்படிப்பட்ட போஜனமாயினும் சிறிது குறையவே புசித்தல்வேண்டும். எந்தக் காலத்திலும் பசித்தா லல்லது எந்த வகையிலும் போஜனஞ் செய்யப்படாது. வாத பித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கத் தக்க போஜனங்களை அறிந்து விடல்வேண்டும்.

பகலில் போஜனஞ் செய்தவுடன் சற்றே படுத்தெழுந் தல்லது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப்படாது. ஆயினும் நித்திரை வரும்படி படுக்கப்படாது. பகலில் எந்த வகையிலும் நித்திரை யாகாது. சிறிது படுத்து எழுந்தபின் பாக்கும் வெற்றிலையும் குறைவாகவும் சுண்ணாம்பு சிறிது அதிகமாகவும் தாம்பூலம் பஞ்ச வாசங்களோடு தரித்து முதலில் ஊறிய ஜலத்தைப் புறத்தில் உமிழ்ந்து விட்டுப் பின்பு ஊறுஞ் ஜலத்தை உட்கொள்ளல் வேண்டும். பகற் போஜனஞ் செய்த சுமார் பதினேழரை நாழிகைக்குப் பின்பு, பேயன் வாழைப் பழம் ரஸ்தாளி வாழைப்பழம் பங்காள வாழைப் பழம் சிறிது சர்க்கரை சேர்த்து நேர்ந்தால் சாப்பிடக் கூடும். காலையில் பால் சாப்பிடும்போது பசி அதிகரித்திருந்தால், இந்தப் பழங்களில் நெய் சர்க்கரை கலந்து சிறிது சாப்பிடக்கூடும். பகலில் பெண்கள் தேகசம்பந்தங் கூடாது. பகற் போஜனஞ் செய்தபின், சற்று நேரங் கடவுளைத் தியானித்திருக்கவேண்டும். அதன்பின் எந்த வேலை செய்யினுந் தேக கரணங்களுக்கு மெலிவு உண்டுபண்ணுகிற வேலைகளாகச் செய்யப்படாது. செய்யினும் சிறிது சிறிதாகச் செய்தல்வேண்டும்.

சாயங்கால வெய்யில் தேகத்திற் படும்படி சிறிது உலாவுதல்வேண்டும். காற்று மிகுந்தடிக்கில் அப்போது உலாவப்படாது. அன்றி, கடின வெய்யில், பனி, மழை—இவைகள் தேகத்திற்பட உலாவப்படாது.

இராத்திரி முன் பங்கில் தேக சுத்திசெய்து, விபூதி தரித்துச் சிவத்தியானஞ் செய்தல், தோத்திரஞ்செய்தல், சாத்திரம் வாசித்தல், உலகியல் விவகாரஞ் செய்தல்—இவை முதலியவை கூடும். பின் போஜனஞ் செய்தல்வேண்டும். இராப்போஜனம் பகற் போஜனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல்வேண்டும். இரவில் தயிர் கீரை வாயுவான பதார்த்தம் குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப்படாது. சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்கவேண்டும். அவை சிறுகத்தரி முருங்கை அவரைவற்றல் முதலியவை யாம். இரவில் போஜனஞ் செய்தபின், சிறிது உள்ளே உலாவுதல்வேண்டும். பின்பு சிவத்தியானம் முதலியவை செய்தல் வேண்டும். சுமார் கஉ நாழிகைக்குமேல் காலைக்குச் சொல்லியபடியாவது தனித்தாவது பசுவின் பாலை நன்றாகக் காய்ச்சிப் புசித்தல்வேண்டும். பின் சில நேரஞ்சென்று சுமார் கரு நாழிகையில் பாக்கும் சுண்ணாம்பும் மிகவுங் குறைய வெற்றிலை மிகவும் அதிகப்படக் கலந்து பஞ்சவாசத்தோடும் போட்டுக்கொண்டு, முதற் ஜலத்தை யுமிழ்ந்து பின்வருஞ் ஜலத்தை யுட்கொண்டு, திப்பியை யுமிழவேண்டும். மற்ற வேளையும் தாம்பூலத்தின் திப்பியை உமிழுதல் அவசியம்.

பெண்களுடன் தேகசம்பந்தம் செய்யவேண்டில், முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்தைத் தேக

சம்பந்தத்தில் வையாது வேறிடத்தில் வைத்துப் பின் சம்பந்தஞ் செய்தற்குத் தொடங்கல்வேண்டும். தொடங்கியபோது அறிவு விகற்பியாமல்—என்ருல், வேறுபடாமல்—மனமுதலிய கரண சுதந்திரத்தோடு, தேகத்திலும் கரணங்களிலுஞ் சூடுதோன்ருமல், இடது புறச் சாய்வாகத் தேக சம்பந்தஞ் செய்தல்வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத்தக்க உபாயத்தோடு தேகசம்பந்தஞ் செய்தல்வேண்டும். அவ்வுபாயமாவது பிராண வாயுவை உள்ளேயும் அடக்காமல் வெளியேயும் விடாமல் நடுவே புலாவச் செய்து கொள்ளுதலாம். ஒரு முறை யன்றி யதன் மேலுஞ் செய்யப்படாது. தேக சம்பந்தஞ் செய்த பின், தேகசுத்தி செய்து திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து, பின்பு படுக்கவேண்டும்.

படுக்கும்போது, இடதுகைப் பக்கமாகவே படுத்தல்வேண்டும். எந்தக் காலத்தில் எது குறித்துப் படுத்தபோதிலும், இடது கைப்பக்கமாகவே படுத்தல் வேண்டும். பின்பு ஏழரை அல்லது பத்து நாழிகை யளவு நித்திரை செய்தல்வேண்டும். அதன்பின் விழித்துக்கொண்டு நல்ல சிந்திப்புடனிருத்தல் வேண்டும். இரவில் தேகசம்பந்தம் ச தினத்திற் கொரு விசை செய்தல் அதம பக்ஷம். அ தினத்திற் கொரு விசை செய்தல் மத்திம பக்ஷம். கூ தினத்திற் கொரு விசை செய்தல் உத்தம பக்ஷம். அதன் மேற்படில் சுக்கிலம் ஆபாசப்பட்டுத் தானே கழியும். ச தினத்திற் கொரு விசை செய்யில் சுக்கிலம் நெகிழ்ச்சிபட்டுச் சந்ததி விருத்தியைக் கெடுக்கும் ஆகலில், அதம பக்ஷமாயிற்று. இர

வில் சொப்பனம் வாராது மிருதுவாகவே நித்திரை செய்து விழித்துக்கொள்ளல் வேண்டும்.

எப்போதும் பயத்தோ டிருக்கப்படாது. பரிச்சேதம் பயமில்லாமலும் இருக்கப்படாது. எப்போதும் மனவுற்சாகத்தோ டிருக்கவேண்டும். கொலை, கோபம், சோம்பல், பொய்மை, பொறாமை, கடுஞ்சொல் முதலிய தீமைகள் ஆகா. உரத்துப்பேசல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டையிடல் கூடா. எந்த விதத்திலும் பிராணவாயு அதிகமாகச் செலவாகாமற்படி, ஜாக்கிரதையோடு பழகுதல்வேண்டும்.

பொற்றலைக் கையாந்தகரையை உலர்த்தித் தூள் செய்து வைத்துக்கொண்டு, அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு ௪ நாளைக்கு ஒரு விசை வெந்நீரில் முழுகவேண்டும். அன்றி வாரத்திற்கு ஒரு விசையாவது முழுகுதல் வேண்டும். தூளில்லாத பக்ஷத்தில் நல்லெண்ணெயைக் காய்ச்சியே முழுகுதல் வேண்டும். புகைக்குடி, கஞ்சாக்குடி, கட்குடி, சாராயக்குடி முதலிய மயக்கக் குடிக ளாகா. மலஜலத்தைச் சிறிதும் அடக்கப்படாது. சுக்கிலத்தைச் சிறிதும் வீணில் விடப்படாது. துன்மார்க்கப் பழக்கஞ் செய்யக்கூடாது. எந்த வேலை செய்யினும், எந்த விவகாரஞ் செய்யினும், சிவசிந்தனையோடு செய்து பழகுதல் வேண்டும்.

இந்தத் தேகத்தில் புருவமத்தியில், நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்தில், கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய

அன்பையும் ஜீவர்களிடத்தே புண்மையாகிய காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து, ஓங்கார பஞ்சாக்ஷர ஞாபகஞ்செய்தல் வேண்டும்; சிவ பஞ்சாக்ஷர ஞாபகஞ் செய்தல் வேண்டும்: அவசியம்.

அருட்பெருஞ் ஜோதி

1. சாதாரண நித்திய கரும விதி முற்றிற்று.

## 2. போது விதி

அருட்பெருஞ் ஜோதி

க. ஆறு மாதம் அல்லது மூன்று மாதத்திற் கொருதரம், வெள்ளைக்காக்கட்டான் முதலானவைகளால் விரேசனம் வாங்கிக் கொள்ளுதல்.

உ. நாலு மாதத்திற்கு ஒருதரம் மருக்காரை முதலியவைகளால் வமனத்திற்கு வாங்கிக்கொள்ளல்.

ங. ஒரு வருடத்திற்கு ஒரு தரம், முள்ளி முதலானவைகளால் நசியஞ் செய்துகொள்ளல்.

ச. நாலு நாளைக்கு ஒரு தரம், அத்திமுதலிய வஸ்துக்களால் செய்வகைப்படி செய்த மைகளால் கண்ணுக்கு அஞ்சனந் தீட்டல்.

ரு. ஒரு பக்ஷம் அல்லது ஒரு வார வட்டத்திற்கு ஒரு தரம், சாவதானமாக நல்ல நினைப்போடு தன் வசத்திலிருந்து, மூச்சு அதிர்ந்து மேலிடாது, மெல்லெனப் பெண்போகம் செய்தல்—இது விருத்தர்களுக்கு விதித்ததல்ல.

சு. வாரவட்டம் அல்லது நாலு தினத்திற் கொரு தரம், முலைப்பால் பொன்னாங்கண்ணி முதலிய

தயில மிட்டுக்கொண்டு செம்பாகமான வெந்நீரில் மெல்லென முழுகல்.

எ. இளவெயில், கடுவெயில், மழை, குளிர் காற்று, பனி—இவைகளால் உடம்பை வருத்தாமற் காத்துக் கொள்ளுதல்.

அ. கடுநடை, ஓட்டம், பெருஞ்சொல், பேரோசை, இசைபாடுதல், வழக்காடுதல், பெருநினைப்பு, பெருஞ் சிரிப்பு, பெருந்துயர், மிகுபார்வை, ஊன்றிக்கேட்டல், துர்க்கந்த நற்கந்த முகர்தல், சுவை விரும்பல், பேருண்டி, பெருந்தூக்கம், வீண்செயல், பெருமுயற்சி, விளையாட்டு, மலமடக்கல், சலமடக்கல், தாகமடக்கல், பெருநீர்குடித்தல், சயனவுணர்ச்சி, பயம், அகங்காரம், இடம்பம், பேராசை, உலோபம், கோபம், மோகம், மதம்—இவை முதலிய தேகேந்திரிய கரண குற்றங்களடையாதிருத்தல்.

கூ. பழஞ்சோறு பழங்கறி, எருமைப் பால் எருமைத்தயிர் மோர் நெய், செம்மறிப்பால் தயிர் மோர் நெய், கேழ்வரகு வரகு தினை சாமை பருப்புவகை, அதிரசம் அப்பம் சுகியம் முதலிய சிற்றுண்டி, தயிர்ச்சோறு புளிச்சோறு முதலிய சித்திரான்னம், காரரிசிச்சோறு, முளைக்கீரை அகத்திக்கீரை முன்னை முதலான இலைக்கறி, சுரை பூசுணை பறங்கி பீர்க்கு புடல் பாகல், கடுகு நல்லெண்ணெய் புளி, புகையிலை கள் சாராயம் கஞ்சா, புலால் மாமிசம் முதலிய விலக்குகளை நீக்கி, விதித்தவைகளை யனுசரித்தல்.

அருட்பெருஞ் ஜோதி

2. பொது விதி முற்றிற்று.

## 3. சிறப்பு விதி

அருட்பெருஞ் ஜோதி

௧. நித்தியம் சூரியோதயமாக ௫ நாழிகைக்கு முன்னே நித்திரை நீங்கி யெழுந்திருத்தல்.

௨. எழுந்தவுடன் விபூதி தரித்துச் சற்றுநேரம் செவ்வையாக வுட்கார்ந்து, கடவுளை ஊன்றி நினைத்து எழுதல்.

௩. அங்ஙனம் எழுந்து, சிறிதுந் தாமதியாமல், மவுனமாகச் சிறிது தூரம் நடந்து, எவ்விடத்தில் மலசல வுபாதி நேரிடுகிறதோ, அவ்விடத்தில் அப்பொழுதே ஒன்றுஞ் சேஷ்டையில்லாமல் விரைவில்லாமல் இருந்து அறவிடுதல்.

௪. பொற்றலைக் கையாந்தகரை கரிசலாங்கண்ணி—இவைகளில் ஒன்றுகொண்டு, உள்ளே சிறிது சாரம் போகவும், கபநீர் பித்தநீர் வெளியாகவும் தந்தசுத்தி செய்தல்.

௫. பின்பு திருநீறு தரித்துக்கொண்டு, ஏகாந்தமாக ஓரிடம் பற்றி யிருந்து, சூரிய னுதயமாகிற வரையில், கடவுளைத் தியானஞ் செய்துகொண் டிருத்தல்.

௬. உதயந் தொடங்கிச் சுமார் சாம பரியந்தம் தக்க முயற்சியோடு பழகுதல்.

௭. காலையில் உண்ணாமல் சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணுதல்.

௮. காலையில் சூரியோதய மானவுடன் தூதுளை, பொன்னாங்கண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக் கையாந்தகரை, புளியாரை, வல்லாரை, நன்னாரி கடுக்காய், மிளகு, அறுகம்வேர்—இவைகளில் யாதா

யினும் ஒன்றைப் பசும்பாலிற் சுத்திசெய்து சூரணமாக்கிக்கொண்டு, சர்க்கரையிற் கலந்தாவது அல்லது சூரணமாகவாவது பசும்பாலில் அனுபானித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல்.

௯. சுமார் ௧௫ நாழிகைக்கு உண்ணத் தொடங்கும்போது, முன் புசித்த போசன முழுதுஞ் ஜீரணித்ததை நன்றாயூன்றி யறிந்து, பின்பு ஜீரணித்த அக்கணமே விருப்பால் ஏறுமலும் வெறுப்பால் குறையாமலும் தராசு முனைபோல் அளவறிந்து, அந்த அளவின்படி, அதிக விரைவும் அதிக தாமதமுமில்லாதபடி சமமாகப் புசித்தல்.

௧0. புசிப்பில் பச்சரிசிச்சாதம், பசும்பால் பசுநெய், முருங்கை கத்தரி முள்ளி தூதுளை முதலிய இளங்காய், பொன்னாங்கண்ணி தூதுளை முதலிய இளங்கீரை—இவைகளில் மிளகு ஒரு பங்கு, சீரகம் காலே அரைக்காற் பங்கு, வெந்தயம் காற்பங்கு, புளி வீசம் பங்கு, உப்பு வீசம் பங்கு, மிளகாய் வீசம் பங்கு சேர்க்கப்பட்ட கறியமுது குழம்பு ரசம் முதலானவைகளைக் கொண்டு, பெருங்காயம் வெங்காயம் வெள்ளைப் பூண்டு முதலானவைகளைத் தள்ளி, புசித்தல்.

௧௧. புசித்தபின்பு, மத்தியானந் தொடங்கி ௨௫ நாழிகை பரியந்தம், சத்துவமான விவகாரங்களை மெல்லென இருந்தபடி நடத்தல், பிறர்க்கு விசேஷங் கேளாவகை படித்தல், மெல்லெனப்பேசல்—இவையன்றி நல்ல நினைப்போ டிருத்தல்.

௧௨. காலை, மத்தியானம், சாயங்காலம்—இப்பொழுதுகளிலும் மத்தியிலும் நித்திரை செய்யாதிருத்தல்.

கரு. மத்தியான போஜனஞ் செய்கிறபொழுது, அடிக்கடி தாகநீர் குடியாமல், போஜனஞ் செய்த பின்பு, ஒரு தரமாக இளஞ் சூடுள்ள வெந்நீரைக் கிரமமாகத் தாகத்துக்குக் கொண்டு, குளிர்ந்த ஜலம் சிறிதுங் கொள்ளாது தள்ளுதல்.

கச. மத்தியானத்தில் சுமார் ரு நாழிகை பரியந்தஞ் செவ்வையர்க ஓரிடத்தி லிருந்து, மனத்தை ஒருவழிப்படுத்தித் தெய்வ சிந்தனையோ டிருத்தல்.

கரு. காலைப்புணர்ச்சி பகற்புணர்ச்சி அந்திப் புணர்ச்சி இரவு முன்பங்குப் புணர்ச்சி, காலைப் போஜனம் அந்திப்போஜன முதலானவை யில்லா திருத்தல்.

கசு. சாயங்காலத்திலும் ரு நாழிகை யாதொரு முயற்சியு மில்லாமல், ஓரிடத்தி லசையாதிருந்து தியானித்தல்.

கஎ. இரவில் ௧௦ நாழிகைக்குள் மத்தியான போஜனத்துக்கு அரைத்தரமாகப் புசித்தல்.

கஅ. அதற்குமேல் இராத்திரி கரு நாழிகை பரியந்தம் மனத்தை யடக்கித் தியானித்திருத்தல்.

கசு. கரு நாழிகை தொட்டு இருபத்திரண்டரை நாழிகை பரியந்தம் மெல்லெனத் தூங்கல்.

உ௦. படுத்து விழிக்கிற பரியந்தம் இடக்கை கீழிருக்கச் செய்தல்.

உக. ஆகாரம் அரை, நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம், பயம் பூச்சியம் ஆகப் பெறுதல்.

அருட்பெருஞ் ஜோதி

3. சிறப்பு விதி முற்றிற்று.

உ. நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல் முற்றிற்று.

## ௩. சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்[4]

### 1. அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

திருச்சிற்றம்பலம்

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கின்ற நாலிடத்திலும் கடவுட் பிரகாசமுள்ளது. அதனில் காரியத்தாலுள்ள விபரம்: பிண்டத்தில் அகம் ஆன்மா, ஒரு பொருளினது உண்மையை யறிதல் ஆன்ம அறிவு; பிண்டத்தில் அகப்புறம் ஜீவன், ஒரு வஸ்துவின் பிரயோஜனத்தை யறிந்த அறிவே ஜீவ அறிவு; பிண்டத்தில் புறம் கரணம், ஒரு வஸ்துவின் நாமரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித் தறிதல் கரணமாகிய மன அறிவு; பிண்டத்தில் புறப்புறம் கண் முதலிய இந்திரியங்கள், ஒரு பொருளினது நாமரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு; இதுபோலவே கரணக் காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக் காட்சியுமுண்டு; இது போல், அண்டத்தில் அகம் அக்கினி, அண்டத்தில்

---

4 இவை—தம்மை அடுத்து விடாது சூழ்ந்திருந்த பேரன்பர்களின் இடையறாத வேண்டுகோள்கட் கிணங்கிச் சுவாமிகள் வாய்மொழியாக அவர்கட்குக் கூறியவற்றை அவ்வன்பர்களில் ஒரு சிலர் அப்போதப்போது "திருவருட் பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள் - சன்மார்க்க ஒழுக்கத் திருநெறி" என்னும் தலைப்பின் கீழ்க் குறித்து வைத்த குறிப்புக்களாகும்.

அகப்புறம் சூரியன், அண்டத்தில் புறம் சந்திரன், அண்டத்தில் புறப்புறம் நக்ஷத்திரங்கள்; ஆகவே பிண்டத்தில் நாலிடம் அண்டத்தில் நாலிடம்—ஆக எட்டிடத்திலும் கடவுட் பிரகாசம் காரியத்தாலுள்ளது. காரணத்தாலுள்ள இடம்: பிண்டத்தில் புருவமத்தி, அண்டத்தில் பரமாகாசம். காரியகாரணமாயுள்ள இடம்: சர்வயோனி யிடத்தும், விந்து விளக்கமாகிய மின்னலிடத்தும், நாத விளக்கமாகிய இடியிடத்தும்; இதல்லாது, பாரொடு விண்ணாய்ப் பரந்ததோர் ஜோதி என்றும், ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாயும் . . .[5] மேல் குறித்த அகமாகிய ஆன்மப் பிரகாசமே ஞானசபை, அந்தப் பிரகாசத்துக்குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள், அந்த உள்ளொளியின் அசைவு நடம்—இதுதான் ஞானாகாச நடனமென்றும், அசைவற்றதே[6] நடராஜரென்றும் ஆனந்த நடனமென்றும் சொல்லுகின்றது. ஆதலால் ஏமம், கனகம், ரஜதம், ரௌப்பியம் முதலாகச் சொல்வதில் சூரியனிடத்தில் கனகமும் சசியிடத்தில் ரஜதமும் . . .[7] இதுபோல் பிண்டத்தில் ஆன்மாகாசம் பொற்சபை யென்றும், ஜீவாகாசம் ரஜத சபையென்றும் சொல்லுவது. ஆதலால் மேல்குறித்த இடங்கள் யாவற்றிலும் கடவுள் பூரண வியற்கை விளக்கம் காரியமாயும் காரணமாயும் காரிய காரணமாயும் இருக்கின்றது. முக்கிய இடங்களாகிய பிண்டத்தில் நாலும் அண்டத்தில் ஐந்தும் ஆகிய கூ இடத்திலும் கடவுள் விளக்கம் விசேஷ

---

5 இங்குத் தொடர்பு குறிக்காது தவறுதலாக விட்டிருக்கிறது போலும்.

6 அசைவுற்றதே?

7 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

முள்ளது. ஆதலால் நாம் தினம் ஆறுகாலத்திலும் மேல் குறித்த பிரகாசமே சபையாகவும் அதின் உள்ளொளியே பதியாகவும் வணங்க வேண்டும். எக்காலத்திலும் புருவ மத்தியின்கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்தவேண்டும். மேல் குறித்த காலங்கள் சூரிய உதயம், உச்சிப்போது, சாயரக்ஷை, மாலை, யாமம், வைகறை—ஆகிய காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும்.

## 2. முத்திக்கு முதற் படி

நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவரெழுந்தருளி இருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருள் அன்பினாலல்லது வேறுவகையாலடைவதரிது. இவ்வன்பு ஜீவ காருண்யத்தாலல்லது வேறுவகையால் வாராது. ஜீவ காருண்யத்தின் லாபமே அன்பு. இந்த ஜீவ காருண்ய முண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில்: கடவுளுடைய பெருமையையும் தாரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய வுயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவ காருண்யம். இதுதான் முத்தியடைவதற்கு முதற் படியாயிருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

## 3. நம்மை நஷ்டஞ் செய்யும் நான்கு

நம்மை நஷ்டஞ் செய்வன நான்கு. அவையாவன: ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம்—ஆகிய இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

இந்த நான்கினும் முக்கியமானவை ஆகாரம், மைதுனம். ஆதலால், இவ்விரண்டிலும் அதனிலும் அதிக ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும். இந்த இரண்டிலும் முக்கியமானது மைதுனம். ஆதலால், இந்த விஷயத்தில் எல்லாவற்றைப் பார்க்கினு மதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அவ்வாறு இராவிடில் தேகம் அதி சீக்கிரத்தில் போய்விடும்; பின்பு முத்தியடைவது கூடாது. முத்தியடைவதற்கு இம் மானிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தா லதை யடைவது அரிதாயும் இருப்பது ஆதலால், எவ்விதத்தாலாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்.

## 4. தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்

தேகம் நீடிப்பதற்குத் தீபப்பிரமாணம்:— அகல் தேகம், எண்ணெய் இரத்தம், திரி சுக்கிலம், பிரகாசம் ஆன்மா; ஆதலால், மேல் குறித்த தீபத்தினது திரியைத் தூண்டிவிட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும், காற்றில்லா விடத்தில் வைத்தாலும், பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், விட்டில் பிரமரம் மூஷிகம் மார்ச்சாலம் முதலிய அஜாக்கிரதையாலும், மேற்படி தீபம் நஷ்டமாகும். புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச் சொன்னால், புத்தி விசாலத்தால் மேல் குறித்த அஜாக்கிரதையின்றி, தகளிக்குச் சூடேறுமலும், எண்ணெயில் அழுக்கு ஏறுமலும், வர்த்தி தூசு இறுகல் தளர்ச்சி பருமன் இவைகளில்லாது—சிறு திரி போட்டு, அடிக்கடி தூண்டாமல், தீபத்தை மற்றொரு தினமு மிருக்கச் செய்விப்பான். மேல் குறித்த குற

றங்களோடு தீபமேற்றினால், பதினைந்து வினாடி அல்லது கணம்—இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால், பதினைந்து நிமிஷத்திற்கொரு விசை சிட்டங் கட்டும். விசேஷ அறிவுடையவன் மேல் குறித்த[8] லோகம் முதலியவற்றில் தீபம் வையாது, வைர படிகங்களில் அமைத்த தீபத்தகளியில், மேல் குறித்த தீ போபகாரணங்களைத் திராவகமாக்கி, சுத்தாக்கினியால் பிரகாசமுண்டாக்குவன். அப்போது சிட்டமும் பிரகாச நஷ்டமும் நேரிடாது. ஆதலால் நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தாண்டி அடிக்கடி பெண்ணிடத்தாகிலும் வேறு தந்திரத்தாலாயினும் செலவு செய்துவிட்டால், திரிபோய் ஆயுளாகிய பிரகாசம் நஷ்டமாய்விடும். ஆனால் சிட்டத்தை மாத்திரம்—தொள்ளாயிரத்து அறுபது நாழிகைக்கொருதரம் தேகசம்பந்தஞ்செய்து ஆபாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை—வெளிப்படுத்திவிட வேண்டும். இது மந்தனுக்கு. அதிதீவிர பக்குவியாய் மேல் குறித்த வண்ணம் கடவுளிடத்தில் இலக்ஷியமும் ஜீவர்களிடத்தில் தயவு முடையவனுக்கு சிட்டம் போன்ற சுக்கி லாபாசம் நேரிடாது : தேகம் நீடிக்கும்.

## 5. இல் வாழ்வானுக்கு ஞாயம்

மைதுனம் ஊற்றுக்கேணி ஞாயத்தை ஒத்திருக்கின்றது. அதாவது, ஊற்றுக்கேணியை இடைவிடாமல் ௧௦ தினம் இறைத்தால், அதின் வருவாய் குறைந்து, அதில் சலமில்லாமல் போய்ப் பிரயோசனப்படாது. அதுபோல் இறைக்காத ஊற்றுக்கேணி

---

8 மேலே விவரம் குறிக்கத் தவறியது போலும்.

யிலுள்ள நீரி லழுக்கேறி, அதின் வருவாய் அடைபட்டு, அதின் சுரப்பு நின்றுவிடும். பின்பு அந்தக் கேணியிலுள்ள சலம் சூரிய வுஷ்ணத்திஞல் கிரகிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போய்விடும். இது போல் இடைவிடாது மைதுனஞ் செய்தால் இந்திரியத்தின் வருவாய் குறைந்து, அருமையாகக் கிடைத்திருக்கின்ற தேகம் அதி சீக்கிரத்தில் போய் விடும். மைதுனம் எந்தக் காலத்தும் இல்லாதிருத்தலிஞலும் மேல் குறித்த ஊற்றுக்கேணி ஞாயத்தால் கேடுண்டு. அதாவது மைதுனம் எந்தக்காலத்திலு மில்லா திருத்தலிஞல் இந்திரியத்தின் தன்மை கெட்டு, அதஞல் அவ்விந்திரியத்தின் வருவாயடைபட்டு, மிகுந்திருந்த அவ் விந்திரியமும் உஷ்ணத்திஞல் வற்றிவிடும். பின்பு தேகம் உடனே போய்விடும்.

## 6. தேகம் நிற்கும் உபாயம்

கரிசாலையை தினே தினே பச்சையாக வாவது சமையல் செய்தல் முதலிய வகையா லாவது சாப்பிட்டு வரவேண்டும். பிரதம உள்ளுடம்பாகியதை நீடிக்கப் பண்ணும். மேல் குறித்த மூலிகையை அலக்ஷியம் செய்யாது ஆசாரியன் திருவடியின்கண்ணே இலக்ஷியம் வைத்து, எவ்வித தந்திரத்திஞ லாவது தினம் தினம் உட்கொண்டால், தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி, தேகம் வலுவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முத்தியடைவதற்கு சகாயமாயுமிருக்கும். மகான்களிடத்தில் அனந்தகாலம் காத்தாலும், மேல்குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் வெளியிடார்கள். பரம கருணைநிதியாகிய நம் தலைவஞல் கிடைத்

தது. அசட்டை யின்றி உட்கொள்ளல்வேண்டும். மேல்குறித்த மூலிகை ஜலமில்லாத இடத்தில் இருக்கிறது விசேஷ நன்று. ஜலமுள்ள இடத்திலுள்ளதில் காரமிராது. தந்த சுத்திசெய்து அண்ணாக்கில் தர்ஜனி விரலால் தேய்க்க—மேல்குறித்த மூலிகையால்—பித்தநீர் கபநீர் வெளியாகி, கண்ணொளி விசேஷிக்கும். நேராத பக்ஷத்தில் பொற்றலைக்கையாந்தகரை கூடும். மேல்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தயிலம் வாங்கியும் செந்தூரஞ் செய்யலாம். அதுபோலவே, அறிவை விளக்குவதற்கும், கவனசத்தி உண்டு பண்ணுவதற்கும், காணம் ஓய்வதற்கும், சபத்தை அரிப்பதற்கும் யோக்கியதை யுடைய ஓஷதி துதுளை. (அதை) மேல்குறித்தபடி அநுஷ்டித்தால் விசேஷ நன்மைசெய்யும். கரிசாலை தந்த சுத்தியால் வசீகாமும் நேரிடும்: உண்மை.

## 7. சிவம் என்பதன் பொருள்

சிவம் என்பதற்குப் பொருள் சச்சிதானந்தம். சச்சிதாநந்தமென்பது சத்து, சித்து, ஆனந்தம். இதில் சிகாம் சத்து, வகாம் சித்து, மகாம் ஆனந்தம்; சிகாம் எல்லா முள்ளதாய் விளங்குவது, வகாம் எல்லாம் விளங்குவதா யுள்ளது, மகாம் இரண்டினாலும் நிரம்பிய வின்பம்.

## 8. சிவ என்பதன் பொருள்

சிவ என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாத சர்வ வல்லமை யுடையது. சி என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாதது; வ என்பதற்குப் பொருள் சர்வவல்லமை யுடையது.

## 9. பஞ்சாக்ஷரத்தின் தாத்பர்யம்

சமய சூக்கும பஞ்சாக்கரத்தின் தாத்பரியம் நான்கு, ஷை அக்ஷரம்டு:சிவாயநம—இதற்குத் தாத்பரியம் நான்காவன,பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் ஆக ச. இதில் பூர்வத்திற்கு அர்த்தம் : சிவனை நமஸ்கரிக்கின்றேன். பூர்வ பூர்வத்திற்குத் தாத்பரியம்: அநாதியில் மலமில்லாத எல்லாமுடைய சிவத்திற்கு என்னுடைய கரண வுள்ளங்களைச் சமர்ப்பிக்கின்றேன். மற்ற இரண்டிற்கும் (அர்த்தம்) அநுபவத்தால் தெரியலாம். இதுபோல் மத சன்மார்க்கத்திற்கும் ஷை அக்ஷரமே. அதற்கும் முன்போலவே நான்கு தாத்பரிய முள்ளது. அதில் பூர்வத்திற்குத் தாத்பரியம்: சி என்பது பதி, வா என்பது சத்தி, ய வென்பது ஜீவன், ந வென்பது திரோதை, ம வென்பது மா மாயை ; ஆதலால், மா மாயை திரோதை நீங்கி, ஜீவபோத மற்று, அருள் வடிவாய்ச் சிவமாவது. பூர்வ பூர்வத்தின் தாத்பரியம்: சி என்பது எல்லாமுடையது, வா என்பது அபிந்நமாகிய அருள், ய வென்பது ஆன்ம சிற்சபை, ந வென்பது சீவன், ம வென்பது பசு ; ஆதலால், பசுத்தன்மை கெட்டு, ஜீவ போதம் போய், ஆன்ம வியற்கை வடிவாய்ச் சத்துவமயமாய் எல்லாமுடையதுவாய்ப் பூரணமாய் நிற்றல்: ஒருவாறு. அநுபவத்தில், பரவிந்து பரநாதம் பரத்திலும், அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும். இவ்வளவும் செப மூலமாய்க் கரண சுத்திவந்து, அக்ஷர முன்னுதலை விட்டு, அறி வாகிருதியாய், கருணையும் சிவமுமே பொருளெனும்படி நிற்றற்கு முதற் றுவாரமாம். மற்ற உத்தரத்தில் ஏம சித்தியும் உத்தரோத்தரத்தில் தேகசித்தியும் சொல்லும்: இஃது மத சன்

மார்க்க அநுஷ்டானம். இதுபோல் சமயத்திலும் தேகசித்தியும் ஏமசித்தியு முள.மேல்குறித்த சமய மதங்களின் விரிவு அனந்தகோடி. அந்த சித்தி கள் யாவும் அவ் வச்சமய மதங்களின் கர்த்தா மூர்த்தி தலைவன் தலைவி முதலியவர்கள் பதப்பிரா ப்த்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேல்குறித்த இரண்டு சித்தியும் எக்காலத்தும் அழிவுறு திருப்ப தாகச் சொல்லுவது சுத்தசன்மார்க்க பூர்வோத்த ரம். ஏமசித்தி தேகசித்தி (ஆகிய இவற்றை) மேல் குறித்த சூக்கும பஞ்சாக்கரத்தில் சொல்லுவதற் குப் பிரமாணம் :—"சிவாய நம வெனச் செம்பு பொன் னாயிடும்"9 "சிவாய நம வெனச் சிந்தித் திருப்பார்க்கு அபாய மொரு நாளு மில்லை."10 ஆத லால், மேல் குறித்த அக்கரத்தை மகான்கள் குழூக் குறியாக — வரிவடிவாய் — சுட்டினார்கள். இதை அக அநுபவிகள் தத்துவங்களை அறிந்து, அநுசந் தானஞ் செய்வார்கள். சாதகிகளுக்கு நாவினு னுன் னிக் கரண மோய்ந்தால், தத்து வானுசந்தானஞ் செய்யக்கூடும். உலகிகள் நாவினு லுன்னத் தங் கள் மனோரதம் சித்திக்கும். வகர வித்தையுடைய வர்கள் மேற்படி அக்கரத்தின் உண்மையைப் பவுதி கம், லோகம், ஓஷதி, லவணம் முதலியவற்றிற் சேர்த்து வகரத்தை முடிப்பார்கள். தகர வித்தை யுடையவர்கள் அதுபோலவே அமைத்துக்கொண்டு, தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேல் குறித்த அக்கரங்கள் பரிபாஷை. இதனது உண் மை யாவும் சுத்த சன்மார்க்க சகஜ சாத்திய ஞானு னுபவிக்கு விளங்கும்.

---

9 திருமூலர் திருமந்திரம்—சு-ந் தந்திரம் உக-வது மந்திரம்.

10 ஔவையார்—நல்வழி.

## 10. சி என்பதன் பொருள்

மேலும் சி என்னுமெழுத்துக்குப் பொருள் ஒருவாறு:—இதி லடங்கிய பீஜம் ரு. அவையாவன: தோன்றி அசைத லாகிய விந்து ஒன்று, அதின் புடைபெயர்ச்சி ஒலி யாகிய நாதம் உ, அதின் வண்ண வடிவ மாகிய வரி அக்கரத்தின் சகரமெய் யென்னும் ச் ங, அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்கரமாகிய பிரணவமூல அகரம் ச, இதைத் தன் வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகரம் ரு—ஆகக் கூடிய விந்துக்களைந்தும் ஒருருவமாய்ச் சிகரமாயிற்று. இதன் இலக்கணம் விரிக்கிற் பெருகும். அநுபவத்தா லறிக.

## 11. அகரத்தின் லக்ஷணம்

மூலாங்கப் பிரணவமாகிய அகர லக்ஷணம் ஒருவாறு:—ஊன்றல் வாமை, சுழித்தல் ஜேஷ்டை, விசிரிம்பித்தல் ரௌத்திரி, மடித்து மேலேறல் காளி, அங்கிருந்து கீழ்வரல் கலவிகரணி, மேல் புடை பெயர்த்தல் பலவிகரணி, கீழ்த்தாழல் பலப்பிரமதனி, கீழ் ஊன்றி நிற்றல் சர்வபூத தமனி, வரிவடிவாதல் மனோன்மனி—இதில் விந்து நாதம் முதலிய நவ நிலைகளுமுள.

## 12. சன்மார்க்க சத்திய ஞான ஆசாரம்

ஜீவகாருண்யத்தால் பிரமன் ஆயுசும், பாச வைராக்கியத்தால் விஷ்ணு ஆயுசும், ஈசுர பக்தியால் ருத்திரன் ஆயுசும்—பிரம்மஞானத்தால் என்று மழியாத சுவர்ண தேக முதலியவைகளைப் பெற்றுக் கடவுள் மயமாகலாம். எப்படியெனில்:—கட

வுள் சர்வஜீவ தயாபரன், சர்வவல்லமையுடையவன்; ஆகையால், நம்மையும் சர்வ ஜீவ தயையுடையவர்களாய்ச் சர்வ வல்லமையையும் பெற்றுக்கொள்ளும்படி மனிததேகத்தில்வருவித்தார். ஞானிக்குத்தயவு அதிகப்பட்டு இருக்கிறபடியால், கேளாத கேள்வி முதலிய மஹா அற்புதங்களான இறந்தாரெழுதல் முதலிய அற்புத வல்லமையைப் பெற்று இருக்கின்றார். எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தி யாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ, அந்த ஜீவர்களிடத்தில்கடவுள்விளக்கம்விசேஷமாயிருக்கும். மற்றவர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக் காலங்களில், கடவுளிடத்தில் அன்பும் ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்தவேண்டும். ஆதலால் பக்தி யென்பது மனநெகிழ்ச்சி, மனவுருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்ம வுருக்கம். எல்லா வுயிர்களிடத்தும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே யீசுர பக்தியாம். அந்தக்கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது. ஜீவகாருண்ய முண்டானால் அருளுண்டாகும், அருளுண்டானால் அன்புண்டாகும், அன்புண்டானால் சிவானுபவ முண்டாகும். தீத்துவ வொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. தயவை விருத்திசெய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன: ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசா

ரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேல்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சிவ சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேல்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்திமுத்திகளைப் பெறக்கூடுமே யல்லது, இல்லாவிடில் கூடாது.

## 13. சந்நியாசமும் தயவும்

மூன்றாசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தய வில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும்: மேல்படி குற்றமற்றவர்களுக்குச் (சந்நியாசம்) வேண்டுவதில்லை. சந்நியாசி காவிவேஷ்டி போடுவதற்கு ஞாயம்: தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்துவாபாசமுள்ளது; தத்துவத்தைச் செயித்து தயவை நடத்துவதற்கு யுத்தக் குறி (அல்லது) அடையாளமாகத் தரிப்பது காவி. வெற்றியான பிறகு அடைவது தயவு. ஆதலால் வெற்றிக்கொடி வெள்ளை. தயவு வெள்ளை யென்பதற்கு ஞாயம்: தய வென்பது சத்துவம், சத்துவ மென்பது சுத்தம், சுத்த மென்பது நிர்மலம்; நிர்மல மென்பது வெள்ளை வருணம், வெள்ளை என்பது ஞானம், ஞான மென்பது அருள், அருளென்பது தயவு, தயவென்பது காருண்யம்.

## 14. கற்பபேதம் என்பதன் பொருள்

கற்ப பேத மென்பது கடவுள் இடபவாக னாரூடராய் உலகத்தி லெழுந்தருளிக் காட்சி கொடுத்தருளுங் காலம். இடப மென்பதற்குப் பொருள் தர்ம சுவரூபம். தர்ம மென்பது காருண்யம், தயவு, அருள். ஆதலால், அருள் வடிவமா(வ?)ன ஆன்

மாலய உலகமான தேகத்தின் அநுபவ ஞானம் தோன்றுதல்.

## 15. அயக்கிரீவம் என்பதன் பொருள்

அயக்கிரீவ மென்பதற்குப் பொருள் :—அயம் பிராணவாயு, கிரீவ மென்பது கழுத்து: ஆகவே அயக்கிரீவ மென்பது பிராணவாயுவையே கழுத்தாகக் கொண்டது.

## 16. சமய நூல்களின் ஹிருதயம்

பெரிய புராணத்தில் குறித்த ௬௩ நாயன்மார்களும் மற்ற நாயன்மார்களும் தத்துவங்களை யொழிய வேறில்லை. அதை அதை விசாரித்து அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்திகளைக் கொடுக்கும். இதுபோல் சைவத்தில் சொல்லுகின்ற சௌராதி சண்டை பரியந்தமும் தத்துவமே யாம். சைவ புராணம் விஷ்ணு புராணம் முதலிய யாவற்றின் உண்மையும் தத்துவசம்மாரங்கள். சூரபத்மன் (யுத்தம்) முதலிய யுத்தங்களும் தத்துவ சம்மாரங்களே. இதுபோல் மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய மகான்களின் சரித்திரமும் தத்துவ சித்தியே. மேல்குறித்தவர்கள் பேரால் ஒவ்வொரு மஹான்கள் சாஸ்திரங்களையும் தேவாரம் திருவாசகங்கள் முதலியவைகளையும் அமைத்து, இவற்றிற்கு இடமாக ஆலயங்கள் அமைத்து,மேல்படி சித்திக்குஉரிய தத்துவ தத்துவிகளின் பெயரைக் கர்த்தாவாக்கி, அந்தச் சித்திமுடிக்கும் காலம் தினம் கருவி முதலியவைகளை மேற்படி யாலயங்களுக்கு விசேஷ காலமாக்கி,வழக்கத்தில் வருவித்தார்கள்.மேல் குறித்த நாயன்மார் முதலியவர்களின் உண்மையநுபவ தாத்பரியமுடைய சித்திகள் முன்னும் பின்னும் இனியு

முள. நாம் மேற்படி தத்துவங்களை அநுஷ்டித்தால் அவ்விதமாக ஆகக் கூடும். இது போலவே திருவிளையாடல் பாரத பாகவதங்களு மமைத்துக் கொள்க. ஒருவாறு.

## 17. தேவாமுத பான உண்மை

திருப்பாற்கடல் கடைந்து அமுதபானம் தேவர்கள் செய்யும்பொருட்டு விஷத்தை ருத்திரன் உட்கொண்டா ரென்பதற்குப் பொருள் :—திருப்பாற்கட லென்பது தேங்காய், அமுத மென்பது அதன் ஜலம், தேங்காயின் பாலி லுள்ள எண்ணெயே விஷம்; ஷை எண்ணெயாகிய விஷத்தைப் போக்குவது முப்பூவாகிய ருத்திரன். ஆதலால், தேங்காய்ப் பாலிலுள்ள விஷமாகிய எண்ணெயை முப்பூவால் போக்குவது ருத்திரன் விஷம் சாப்பிட்டது. மற்றக் கடல்கள் யாவும் இட்சு மது முதலிய வஸ்துக்களே. இவ்வாறு, அண்டத்திலும் பிண்டத்திலும் பௌதிகத்திலும் தாதுக்களிலும் ஔஷதியிலும் கடல்கள் உள.

## 18. திருவிளையாடல்களின் உண்மை

குண்டோதரனுக்கு அன்னமிட்டார் என்பதற்குப் பொருள்: குண்டோதரம்(?) என்பது துத்தநாகக் குடாக்கு, ஓதனமென்பது அன்னம், தான்(?) என்பது பசியில்லாதவன்; மேற்படி நாகத்தைச் சுண்ணஞ் செய்து பசியில்லாதவனுக்களிக்க விசேஷ பசி உண்டாகும். எப்படியெனில்: நாகக் கொட்டையை மை போலாட்டி, நாகத்திற்குப் பிடிப்பித்துச் சிறு புடமாய்ப் பத்திட்டு எடுத்து, நாலி லொன்று சூதஞ்சேர்த்து, வட்டாக்கிக் கருந்துளசியால் கவசித்

துச் சிலைமண்செய்து, புடமிடச் சுண்ணமாம். இது போல் மற்ற விளையாடல் முழுமையும். ஒருவாறு.

## 19. சிற்சில சஞ்சீவிகள்

கறுப்பு நாயுருவிக் கஷாயத்தை ஐந்து மதிக் கர்ப் பிணிக்கு அடிக்கடி மூன்றுதர மீந்தால்—தசமதி யாய்—அஞ்சு கடிகைக்குள் தத்துவபூர்த்தியாய்ச் சுகப் பிரசவமாம்.

குளுந்த கொள்ளி யென்பதைக் கசக்கிக் குக்கு டாண்டத்திற்குக் கவசித்து இரண்டரைக் கடிகை மூடிவைத்தால், நவீனமான பார்ப்பு ஜனிக்கும்.

தீப்பூடு நசுக்கி இறந்த கிளி முதலிய பறவை களின் வலது காதில் வைக்க அவை பிழைக்கும்.

முத்துப் பூண்டுச் சாற்றை எல்லாப் பக்ஷிகளின் காதிலும் சிறுகச் சிறுக இரண்டரை நாழிகை பிழிய (அவை) சீவிக்கும்.

கருங்காந்த ளிலையைக் கசக்கி வெட்டுண்ட கைத் துண்டைச் சேர்த்து ஷெ மூலிகையை யப்பிக் கட் டக் கை கூடும்.

## 20. மார்க்கண்ட சரித்திர உண்மை

மார்க்கண்டர்க் காக ருத்திர மூர்த்தி இடது காலால் எமனை உதைத்ததற்கு ஞாயம்:—மார்க் கண்ட ரென்பது மயக்கமாகிய மறைப் பென்னும் மரணத்தைத் தவிர்த்தது. ருத்திர னென்பது தனித்த ஆன்ம அறிவு. எம னென்பது மயக்கத் தைத் தரத்தக்க வெகுளி சினம் முதலிய. இடது காலால் எமனை யுதைத்த தென்பது: இடது என் பது சந்திரகலை, காலென்பது பிராணவாயு; ஜன்ன

மரணத்தை உண்டு பண்ணுவது சந்திர சூரிய கதி. ஆதலால், அஞ்ஞான பாசத்தால் சினமாகிற கூற்றுவன் கட்ட, விவேகியென்னும் மார்க்கண்டன் ருத்திர னென்னும் ஆன்ம அறிவோடு கூடவே, வைடி ருத்திரன் பிண்ட நஷ்டஞ் செய்கின்ற இடகலையை மே லேற்றி, குணங்க ளாகிய சூலத்தால் கூற்றை யொழித்து, அருளாகிய சத்துவ மயமாய் நீடிக்கச் செய்வது—எம சம்மாரம்.

## 21. தர்மம் என்பதன் பொருள்

தர்மமென்பதற்குப் பொருள் சீவதர்மம், குல தர்மம், சாஸ்திர தர்மம், ஆசார தர்மம், ஆசிரம தர்மம், சாதி தர்மம் முதலியவாக விரியும். இதில் அதினுண்மை அதின் தன்மை . . .[11] தன்மை யென்பது அதின் சுபாவம், சுபாவ மென்பது இயற்கைக் குணம், அது வென்பது ஆன்மா. ஆதலால், ஆன்மாவுக்கு இயற்கைக் குணம் தயை; ஆன்மாவின் இயற்கை யென்பதே தர்மத்திற்குப் பொருள்; ஆன்ம இயற்கையோடு இருந்தால் சிவ மாகலாம். இதைப் பலவாகத் தர்ம மென்று பெயரிட்டார்கள். அருள் வெளியாகிய ஆன்ம இயற்கையால் சிவானுபவத்தைப் பெறுவதுஉண்மை. இதற்கு வேதாகமங்களில் பலபட விரிந்த நாமங்கள் அனந்தம். அவற்றில் சில: அருட்சத்தி, அருள்வெளி, விருஷபம், தர்மதேவதை, அறுதி யியற்கைக் குணம், பரஞானம், வகர வுகரம்[12] அருள் நடம், அன்பு, ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்ம அசைவு, சுத்த தத்துவம், ஆன்ம அறிவின் பேதம்—என இதை விரித்தார்கள். அருள் வடி

11 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

12 அகர உகரம் ?

வாய்ச் சிவமாகிப் பின்ன மன்றிப் பூரணமா யிருப்பது நிரதிசயானந்தம். ஆனந்த மென்பது சந்தோஷம், நிரதிசய மென்பது ஆனந்த மின்மை(?) சீவர்களுக்குத் திருப்தி யின்பத்தை நேர்ந்தவரையில் செய்வது ஆனந்தா னுபவம்.

## 22. குணத்தின் வேறுபாடு

தானாக நிற்றல் சத்துவகுணம், ராகத் துவேஷ சம்பந்தமுடையது ராஜசம், சோம்பலாதி ஜீவ இம்சைக் கிடனாவது தாமசம்; ஆன்மாவின் செயற்கை ரஜோதமங்கள், இயற்கை சத்துவம். ஜனன மரண ஏது செயற்கையா லுண்டாம்; இயற்கையால் சிவானுபவம் பெறலாம். இதை விரிக்கில், ஒவ்வொன்றும் மும் மூன்றாகும், அனந்தமு மாம்.

## 23. சங்கல்பம் என்பதன் பொருள்

சங்கல்பத்தின் பொருளும் விரிவும் யாதெனில்:— விரிவாவது ஐந்து: நிர்விகல்பம், சவிகல்பம், சங்கல்பம், விகல்பம், கல்பம். இவற்றுள் நிர்விகல்பமாவது கடவுளறிவு. ஷை அறிவின் வியாபகமே சவிகல்பம். சங்கல்ப மென்பது—காரணம் யாதொன்றிலும் பற்றாமல் சுத்தமா யிருந்த காலத்தில் தோன்றிய அசைவே சங்கல்பம்—ஒன்றிலும் பற்றாது அசைந்த மே லசைவென்னும் புடைபெயர்ச்சியே சங்கல்பம்—நாம் நஷ்ட மடையோம் என்று உள் ளெழுந்திய பிரக்ஞையே சங்கல்பம். விகல்ப மென்பது பிரம சதாசிவ கால அளவைக் குறித்தது. இதில் பலவாக விரிந்த அநுசந்தானங்கள் கல்பம். உள்ளெழுந்தல், அதைச் சிந்தித்தல், சிந்தித்தலை விசாரித்தல்—இம் மூன்றுமே சங்கல்ப விகல்ப கல்பம்.

மேற்குறித்த சங்கல்ப மயமா யிருந்தால் சிவானுபவம் பெறலாம்: "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றி னதுதான் வந்து முற்றும்"[13] என்றபடி. சர்வசித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி—அணுக்கள்—தபசுசெய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக்கொண்ட மூர்த்திகளாகிய(வர்) ஒருதொழிலுடைய பிரமாவும் இரண்டு சித்தியுடைய விஷ்ணுவும் மூன்று சித்தியுடைய ருத்திரனும்—இதுபோன்ற மற்றையர்களும். மேல் குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவ சித்திக் கற்பனைக ளாகிய சமய மத மார்க்கங்களை அனுஷ்டித்து, அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி, வழிபாடு செய்துவருகிற இதுவரையிலுமுள்ள அணுக்கள் மேல் குறித்தவர்களது பதப் பிராப்தியை—ஷை அணுக்கள்—லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அசைப்பித்து அநுக்கிரகிக்கும் சர்வ சித்தியையுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக் குள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியையுடைய கடவுளுக்குக் கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தி லிருக்கின்றார்கள்.

ஆகவே சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேல் குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல் படிகள் ஏறவேண்டியவைகளை யேறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல், இங்கு மற்றவைகளை உன்னி அவல மடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவ ருண் டென்று, அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து,

13 தாயுமான சுவாமிகள்—கருணாகரக் கடவுள்.

பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும், தனித்தலைவன் லக்ஷியந் தவிர அநித்திய சட துக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கையல்ல. உபாசனை முதலியவற்றால் வழிபடுதலும் மேல் குறித்த தலைவனை(க் குறித்ததே) தவிர வேறில்லை.

இதற்குப் பிரமாணம்:—14 "சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன்"15 என்னும் திரு அருட் பாசுரத் திரு உள்ளக்கிடையானும், "அறங் குலவு தோழி இங்கே"16 என்னும் அருட் பாசுர உள்ளக்கிடையானும் பெரும்பதி தெரிவித்தார். இதன்றி, திருக்கதவந் திருக்காப் பிடுவதற்கு முந்தின இரவில் "இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சன்மார்க்க வொழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை. யாதெனில்: இங் கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாகவுடையது கடமை.

## 24. நினைப்பு மறைப்பு

நினைப்பு மறைப்பு உண்டாவதற்குக் காரணம்: சந்திரன் அக்கினியோடுகூடி, சூரிய பாகத்திலுண்

14 இந்தப் பத்தி திருவார்த்தைக் குறிப்பெழுதிய அன்பரது சொந்தக் குறிப்புப் போலும்.

15 திரு அருட்பா—தனிப்பாடல், கடுகூ: ச. மு. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் பதிப்பு (1924).

16 திரு அருட்பா—கூ-ந் திருமுறை—தோழிக் குரிமை கிளத்தல், கூ.

டாகும் காற்றினால் அசைக்கப்படும் போது, உண்டாகும் நினைப்பு ; சூரியன் அக்கினியோடு கூடி, சந்திர பாகத்தி லுண்டாகுங் காற்றினால் அசைக்கப் படும்போது உண்டாகின்றது மறைப்பு. நினைப்பு மறைப்பு என்பதற்குப் பொருள்: நினைப்பென்பது யாது ? ஜனனம், மன அசைவு, ஒன்றை நினைத்தல், சகல காலம், மேற்படி தத்துவம் வேறொன்றில் பற்றல், தத்துவத்தின் அசைவாகிய ஆவி மேலேறுதல், ஷை ஆவி யேறின இடத்தினில்லாது அக்கிரமித்தல். மறைப்பென்பது யாது? மரணம், தூக்கம், மன மொன்றைப்பற்றி உடனே மறைதல், கேவல காலம், ஷை தத்துவத்தின் கூர்மை கீழ்ச்செல்லுதல், பிரக்ஞை இல்லாதிருத்தல், ஷை ஆவி அக்கிரமித்தில், மனம் ஆபாசப்பட்டுச் சூனிய மாதல். மேற் குறித்த நினைப்பு மறைப் பற்று நிரதிசயானந்தமாய் அருள்வடிவாவதே சுத்த சன்மார்க்க சாதனம்.

## 25. விருப்பு வெறுப்பு

விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள் : விருப் பென்பது—ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டு, பூரண லக்ஷியத்தை விட்டு, அதிசயமாகப் பார்த்து நிற்றல், விருப்பு. இந்த விருப்பால் தானுங் கெட்டு, இதர வஸ்துவுங் கெட்டு, சாதனமுந் தடைப்பட்டு விடும். எவ்வகையிலும் விருப் பென்பது கூடாது. வெறுப் பென்பது யாது ? வேண்டாமை, துவேஷம், இதர வஸ்துவைப் பற்றா திருத்தல். இந்த வெறுப்பால் இதர வஸ்துவிடத்தில் துவேஷந் தோன்றி ஜீவோபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் வெறுப்புங் கூடாது. மேற் குறித்த இரண்டு மற்று, சத்துவ மயமாய் நிற்றல்வேண்டும்.

## 26. ஞான வகை

ஞானமென்பது மூன்று வகைப்படும். அவை உபாய ஞானம், உண்மை ஞானம், அநுபவ ஞானம். இவற்றின் தாத்பர்யம்: நக்ஷத்திரப் பிரகாசம்போல் தோன்றிய ஜீவ அறிவே உபாயஞானம்; சந்திரப் பிரகாசம்போல் தோன்றி அறியும் ஆன்ம அறிவே உண்மை ஞானம்; எல்லா வஸ்துக்களையும் தெரிந்து அநுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவு ளறிவே அநுபவ ஞானம். ஒரு வஸ்துவை அதன் நாமரூபமின்றிக் காண்பது இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு: கூடமாக அறிதல் கரணக் காட்சி, கரண அறிவு, இன்னதென்று தெரிதல் ஜீவக் காட்சி, ஜீவஅறிவு; எதையுந் தானாக அறிதல் ஆன்மக்காட்சி, ஆன்ம அறிவு; இதற்குத் தோன்றுமறிவு க, தோற்றுமறிவு க, தோற்றுவிக்குமறிவு க, பதியறிவு க. ஆதலால், ஒரு வஸ்துவினிடத்தில் பற்றுதல் அவா; அதை அநுபவிக்க வேண்டுமென எழுந்தது ஆசை; அதன் மய மாதல் காமம்; அதைத் தன் வசப்படுத்த எழுவது மோகம்; எந்த வஸ்துவிடத்திலும் மோக மாதிக ளின்றி அவா மயமாய் நிற்றல்வேண்டும்.

## 27. கன்மபேதமும் சிருட்டிக்கிரமமும்

ஆணவம் மாயை கன்மம் என (மலம்) மூன்று. இதில் பக்குவம் ங, அபக்குவம் மூன்று—ஆக சு. இவை ஒவ்வொன்றும் மும்மூன்றாக விரிதலின் கஅ ஆம். இந்தக் கன்மபேதத்தால் அருட்சத்தியின் சமுகத்தில் எழுவகைத் தோற்ற முண்டானது. மேற்படி கன்ம மலத்தால் சிருட்டி உண்டாகும் விவ

ரம் ஒருவாறு: பக்குவ ஆணவம், பக்குவ மாயை— இவ் இரண்டினுலும் விக்ஞான கலா பேதம். அபக்குவ மாயை, அபக்குவ கன்மம், அபக்குவ ஆணவம் கூடியது தேவ நரக பைசாசங்கள். பக்குவ மாயை, அபக்குவ கன்மம் கூடியது ஜீவர்கள். அபக்குவ கன்மம், அபக்குவ கன்ம ஆணவம், அபக்குவ கன்ம மாயை—இவை கூடியது தாவர வுயிர்கள். இதை விரிக்கில் பெருகும்.

## 28. பக்ஷபேதமும் சிருஷ்டியும்

சிருஷ்டிகள் பக்ஷபேதத்தால் அனந்தவகை. பக்ஷமாவன அணுபக்ஷம், பரமாணுபக்ஷம், சம்புபக்ஷம், விபு பக்ஷம், பிரகிருதி பக்ஷம்—ஆக ரு. இவற்றில் சம்பு விபு—இவ் இரண்டிற்கும் அபக்குவ மில்லை. மற்ற மூன்றிற்கும் பக்கு வாபக்குவ முள. இதற்குப் பிரமாணம்:[17] "அடர்மலத்தடையால் தடையுறும்"[18] "தடையுறுப் பிரமன்"[19] என்னும் திருப்பாசுரங்களின் உள்ளக்கிடையா லுணர்க. ஷை பக்ஷ சிருஷ்டி விசித்திரங்களாவன: அணுபக்ஷ அபக்குவ சிருஷ்டி ஔஷதிகளாலும் பௌதிகங்களாலும் ஆகார மூலமாய் ஸ்திரீ புருஷ சம்பந்தத்தோடு உண்டாக்குவது. ஷை பக்குவ சிருஷ்டியாவது புருஷன் ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் தன் அஸ்தத்தால் ஸ்திரீயைத் தடவி ஊன்றிநோக்கிப் புருஷனேடு தேகசம்பந்தஞ் செய்வித்து உண்டாக்குவது. பரமாணுபக்ஷ அபக்குவ சிருஷ்டி தேகத்தைக் கரத்தால் பரிசித்து ஊன்

17 இங்ஙனம் பிரமாணம் தெரிவித்தல் இஃது எழுதிய அன்பரது சொந்தக் குறிப்புப் போலும்.

18 திரு அருட்பா, ௬-ம் திருமுறை—திருவடி நிலை, ௩.

19 திரு அருட்பா, ௬-ம் திருமுறை—திருவடி நிலை, ௨.

றிப் பார்த்த உடன் கருத்தரித்தல். ௸ பக்ஷத்தில் பக்குவம் கண்ணால் பார்த்த உடனே புணர்ச்சி யன்றிக் கருத்தரித்தல். சம்பு பக்ஷம் வாக்கினால் சொன்னவுடன் கருத்தரித்தல். பிரகிருதி பக்ஷத்தார் சங்கல்பித்த ௩௬ நாழிகைக்குள் பிண்டம் கீழ்த் தோன்றுதல். விபு பக்ஷ சிருஷ்டி பார்த்தவுடன் திரண முதலானவற்றையும் நரனாகச் செய்வித்து அநேக விசித்திரங்கள் உண்டுபண்ணுவது. ௸ சிருஷ்டிகள் பல; வேதாகமங்களிலேயும் பலபட விரிந்தன.

இந்து வேதத்தின் முக்கி யாமிசத்தை . . . [20] கிறிஸ்தவர்கள் ௭ நாளில் இந்த வுலகத்தைப் படைத்ததாகச் சொல்லுவதின் உண்மை—அதுவல்ல—யாதெனில்: சில அநுபவ விஷயங்களை (அது) விரிக்கின்றது; கைந்நொடிப்பொழுதில் ௯0-ல் ௭ பாகம் ஆகிய ௭ கலையில் முடிந்தது. ௸ கலைகளாவன பெண் பாகத்தில் ௪, ஆண்பாகத்தில் ௩—ஆக ௭. ஒவ்வொரு கலையில் ஒவ்வொரு தாது அணுவாய்ச் சேர்ந்து, ௭-வது கலையில் கரு சம்பூர்ணமாய்ச் சப்த தாதுவுங் கூடிய பிண்டமாகும்.

## 29. கரு உற்பத்தி

௸ கருத்தோன்றும் சுக்கில ஞாயம். அது யாதெனில்: ௸ சுக்கிலம் இரண்டரை வராக னெடையளவா யிருக்கும். அதில் விஷபாகமாகிய சத்தி ௧; சாதாரண மென்னும் பூத மாகிய அறிவு ௧; அசாதாரண அமுத மாகிய விந்து ௯—ஆக ௨௯. இது போல் பெண்பாலிடத்தும் சுரோணித முளது. மேல்கண்ட சுக்கில சுரோணித மிரண்டினும் கடவுள் ஆவியுள்ளது. கோசத்தின் முன் விஷம், (அதை)

20 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

அடுத்து பூதம், அதற்கு மே லமுதம் உண்டு. இவ்வாறு பெண்பாலிடத்து முண்டு. முன்னுள்ள விஷபாகம் புணர்ச்சிக் காலையில் வெளிப்பட்டால் தேகநஷ்டம்; பூதம் வெளிப்பட்டால் வியாதி ; அமுதம் வெளிப்பட்டால் சந்ததி விர்த்தி. கடவுளருளால் காலச்சக்கரம்போல் ஏகதேசத்தில் கோச உபஸ்தங்களில் அமுதபாக நாடியை முன்னே தள்ளி, விஷாதிகளைப் பின்னே சேர்த்துக் கருத்தரிக்கச் செய்விப்பார். இந்த ஞாயத்தால் இடைவிடாது புணருகிறவர்களுக்குக் கர்ப்ப மில்லை. மேலும், விந்துவளம், இடவளம், வன்னி, கிருமி, மோகவிசேடம்—இவற்றாலுங் கர்ப்ப மில்லை.

ஷை சுக்கிலம் உண்டாவதற்குக் காரணம். தினம் ஆகாரங் கொண்டால், அவ் வாகாரம் மார்பிடத்தில் (?) ஓர் தட்டில் (?) தங்கும். அந்தத் தட்டின்மேல் கடவுள் கடவுளி என் றிரண்டாகியிருக்கிறது. உண்ட அன்னத்தை உ௭ நாழிகையில்—அந்த அன்னத்திலுள்ள அமுதைப் பிரித்து, ஊட்டவேண்டிய தத்துவத்திற்கு ஊட்டுகின்றது. மறுபடியும் ஐந்து நாழிகைக்குள் ஷை அன்னத்தினது மத்திய தரமாகிய நெகிழ்ச்சியைக் குறித்துச் சுக்கில மாக்கி, உ௭ வராக னெடையில் கோசநுனியில் ஒன்றும் நாபியில் ஒன்றும் பிரமரந்திரத்தில் அரையுஞ் சேர்த்து, மற்றவைகளைக் கொண்டு அங்கங்கு விளக்கத்தை யுண்டு பண்ணி ஈளை குரும்பை நகத்தூசு தொப்புளழுக்கு கண்பீளை முதலான அழுக்கை வெளிப்படுத்துகின்றது. ஷை அன்னத்தை எ௭ நாழிகைக்குள்—அதிலுள்ள திரு(ர?)வாம்சத்தைப் பிரித்து, உதிரமாக்கி யூட்டுகின்றது. எ௭-க்குமேல் ஷை சக்கையை மலபாகத்தில்

தள்ளிவிடுகின்றது. இதுபோல் எந்த வஸ்துக்களை யும் பிரிக்கின்றது. ஆதலால், ஆகாரங்கொண்ட ஏழு நாழிகைக்கு மேல் ஆகாரங் கொள்ளவேண்டும்.

## 30. சப்த தாதுக்களின் விவரம்

ஆணில் ௩, பெண்ணில் ௪. ஆணில் மூன்றுவன: ஆகாசம், பிரகிருதி, ஆன்ம வுணர்ச்சி—இவைகள் ஒருமித்துச் சுக்கிலமாகத் தடித்துக் கோசத்தடி யில் செம்பரத்தம் பூவிதழ் மூன்று மொன்று யடுக் கியது போலிருக்கும். பெண்ணிடத்தில் நான்கா வன: பிருதுவி அப்பு தேயு இயமானன் என்னும் வாயு—ஆக நான்கும் ஒருமித்துப் பல்லிமுட்டை போல் ௪ பாகமாகப் பிரிந்து ஒரே வண்ணமாய் யோனிக்குள் இருக்கும். ஆக ௭-ம் கூடி ஒருமித் துச் சுக்கில சுரோணித சம்பந்தப்பட்டுப் பிண்ட மாம். இது சப்த தாது. ௸ தாதுக்களின் பெயர் தோல், அஸ்தி, தசை, மூளை, சுக்கிலம், இரத்தம், இரசம்—ஆக ஏழு. ௸ சத்துக்கள் ஆணிடத்துள்ள இடங்கள் மூளை, தொப்புள், விங் கத்தடி; பெண்ணுக்குள்ள இடங்கள் மூளை, தொப் புள், உபஸ்தத்தடி, ஸ்தனத்தின் கீழ். புணர்ச் சிக் காலத்தில் இந்தச் சத்துச் சேர்ந்து வெளிப்பட் டால் கர்ப்பமுண்டாம்.

## 31. பிண்ட லக்ஷணம்

தலை அண்டம், மார்பு முதலானவை பிண்டம். அண்டத்தில் பிண்டம் புருவ மத்தி, அண்டத்தி லண்டம் பிரமரந்திரம். இதில் சோம சூரி யாக்கினி பிரம விஷ்ணுக்கள் இருக்குமிடம்: நேத்திரம், புருவமத்தி, அண்ணு, பிரமரந்திரம். இதில் பிர

காசமாயும் அறிவாயும் பிராணவாயுவாயும் . . . 21 இருக்கின்றது. பிண்டத்தில் பிண்டம் இடுப்புக்குங் கீழ் பாதபரியந்தம். பிண்டத்தி லண்டம் பீசம். பிண்டம் வயிறு. . . . 22 ஷை பிண்டஸ்தானத்தில் கர்த்தாக்க ளிருக்குமிடம் கோசம், தொப்புள், மார்பு; இவர்கள் வண்ணம், நாடி, உஷ்ணம், காற்று, குறி முதலிய பேதங்களாம். ஆதலால், பிரம விஷ்ணு ருத்திர பேதங்கள் அனந்த கோடி. அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இது போலவே பிரமாண்ட ஞாயம்.

இந்தத் தேகத்தில் ஜீவன் இருக்கின்ற ஸ்தானம் ரு. அதில் முக்கிய ஸ்தானம் உ. அவை யாவை? கண்டம், சிரம். சிரத்திலுள்ளது பரமாத்மா வென்னும் சாமானிய ஜீவன்: இது இறக்காது. கண்டத்திலுள்ளது ஜீவாத்மா வென்னும் விசேஷ ஜீவன்: இது இறந்துவிடும். ஷை தேகத்தில் பிரமபேதம் கீழும் மேலு மிருப்பதால், நாமடையவேண்டிய பதஸ்தானங்கள் எவை என்றால்: (அவை) கண்டமுதல் உச்சி வரையில் அடங்கியிருக்கின்றன. ஷை பதங்களாவன சொர்க்க பூர்வமாக சதாசிவபத மீறாகவுள்ளன. இதற்குமேல் நாதாதி சுத்த மீறாக வுள்ளன. கைலாசாதி பதங்கள் உந்திக்குமேல் கண்ட மீறாக வுள்ளன: இது சாதாரணபாகம். நரகஇடமாவன உந்தி முதல் குத பரியந்தம். கர்ம ஸ்தானம் குத முதல் பாத மீறாக வுள்ளது. இவைகளில் பிரமாதிப் பிரகாசமுள்ளது. அநுபவிப்பது கண்டத்தில். இந்தத் தேகத்தில் எமனிருக்கு மிடம் குதமாகிய நரகஸ்தானத்துக்கு இடது பாகம். ஷை தேகத்தில் ஆன்மா

---

21, 22 இவ்விடங்களில் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

தனித்திருக்கும் ; ஜீவன் மனமுதலிய அந்தக் காணக் கூட்டத்தின் மத்தியிலிருக்கும்.

பிண்டத்தில் பூர்வமென்பது தலை, உத்தரமென்பது கால். பூர்வமென்பது பூர்வ சம்பந்தத்தால் வந்த பெயர். பூர்வஞான மென்பது நெற்றிக் கண்ணால் பார்த்தல். பிண்டத்திற்குக் கிழக்கு முகம், மேற்கு கால், வடக்கு வலது கை, தெற்கு இடது கை; கொடிமரம் தொப்புளடி, அடி மரத்தின் அளவு உண்ணாக்கு, கொடி புருவ மத்திக்குள் ளிருக்கும் வளை, பலி பீடம் தொப்புள், நந்தி யென்பது பசு, ஆணவமலம்(?), மூலாதாரத்தினது உள்ளங்கமே சிவலிங்கம், வாய் வாசல், புருவமத்தி சபை, அறிவே பதி; ஆதி கால், அநாதி தலை; கீழ் தலை, மேல் கால். ஆதலால், பூர்வம் பூர்வபூர்வம் உத்தரம் உத்தரோத்தரம் என நான்கு. இதில் பூர்வமென்பது புறப்புறமாகிய நக்ஷத்திரம் போன்ற இந்திரியக் காட்சி. பூர்வ பூர்வம் புறமாகிய சசிபோன்ற காணக் காட்சி. உத்தரம் அகப் புறமாகிய பரிதி போன்ற ஜீவக் காட்சி. உத்த ரோத்தரம் அக மாகிய அக்கினி போன்ற ஆன்மக்காட்சி. ஆதலால், அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என்னும் நான்குமே மேற்குறித்த பூர்வாதி உத்தரோத்தர மென வழங்குவது.

## 32. ஆண் பெண்

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருக்கும் விதம் எவ்வாறெனில் : பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் பிரகிருதி ஆன்மா வென்னும் எ-ம் கூடி, சுக்கில சுரோணித சம்பந்த சப்த தாதுவாய், சிருஷ்டிக்குக் காரண மாயின. ஆதலால் ஆண்பாகம் சேராது பெண்ணுருவப்படாது, பெண்

பாகஞ் சேராது ஆணுருவப்படாது. மேலும் ரூப பேதத்தைப் பெண் ணா ணென்பது அறியாமை. மேலும் அறிவி னுயர்ச்சி தாழ்ச்சியாலும் சிருஷ்டிக் குக் காரணமான வித்துத் தங்குவதற்கு க்ஷேத்திர மானதாலும் ஒருவாறு உருவத்தால் கொள்ளலாம்; அனுபவத்தால் கொள்ளப்படாது. அறிவினுயர்ச்சி தாழ்ச்சிஎன்பது ஜீவ அறிவாகிய மன அறிவு பெண் ணிடத்தும் ஆன்ம அறிவாகிய அறிவு ஆணிடத் தும் உள்ளது. மேலும் மனஅறிவு புத்தியறிவு என்றும் சொல்லக்கூடும். ஆதலால் உருவங் குறிப் பது அவசிய மல்ல. மேலும் ஆகாசத்தில் பிருதிவி தோன்றுவதுபோல் ஸ்திரீ பாகமாகிய பிருதிவியில் ஆகாசமுந் தோன்றும். ஆனதால் அநுபவத்தில் தெரியும்.

## 33. சுரர் அசுரர்

சுரர் அசுரர் என்பதற்குப் பொருள்: சுரர் என் பது—அறிவுடைய ஜீவர்கள் முதல் வாசனாதி வஸ் துக்களெல்லாம் சுரர். அகங்காரி முதல் துர்க்கந்த (வஸ்துக்களெல்லாம்)—பூமிக்குள் தோன்றுங் கந்த மூலம்—அழுக்குடைய வஸ்து—இவைகள் அசுரர். மேலும் அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் தேவரென் றும் மனிதரென்றும் சொல்லப்பட்டதே தவிர, வேறு எந்தக் காரணத்தாலு மல்ல. ஆனால் தயை விசேஷமிருக்க வேண்டு மென்பது அறிவு உயர்ச் சியில் அடங்கிவிட்டது. தேவர்களுக்கு நான்கு கை என்பது தயையின் விசேஷத்தைக் குறித்துச் சொன்னதே தவிர வேறில்லை. தயையே வடிவமாக இருக்கின்ற புண்ணிய தேகிகளே தேவர்கள் . . . [23]

23 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

மேலும் ஒருவன் இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால், அவன் ஆயிரம் வருஷம் ஜீவித்திருப்பான். எப்போதும் சலிப்பில்லாமல் சுத்தக் கரணமாய் அருள் வடிவாய்த் தானாக நிற்றலே சாகாக் கல்விக்கு ஏது.

## 34. எழுவகைப் பிறவி

மேலும் இந்தத் தேகத்திற்குப் பிறப்பு எ உண்டு. அது போல் எழு வகைப் பிறப்பிலும் ஒவ்வொரு பிறப்பிற்கு எவ் வேழு பிறப்புண்டு. அந்த எவ்வேழு பிறப்பும் ஒவ்வொன்றில் அனந்தமாய் விரிந்த யோனி பேதங்களின் விரிவெல்லாம் தோன்றி மேலேறி மறு பிறவி உண்டாம். ஒவ்வொரு பிறவியும் எந்தக் கல்பத்தில் நஷ்டமடைகின்றதோ அந்தக் கல்பகாலம் வரையில் தோற்றமில்லாமல் மண்ணில் மறைந்திருந்து, மறு கற்பத்தில் தோன்றி, இவ்விதமாகவே மற்ற யோனிகளிடத்திலும் பிறந்து, முடிவில் இத்தேகங் கிடைத்தது. இத்தேகத்திற்கும் எழு பிறவி யுண்டு. யாதெனில்: கர்ப்பத்திலிருந்து மாதம் வரையில் குழவியாயிருப்பது ஒன்று, அவயவாதி உற்பத்தி காலம் ஒன்று, பிண்டம் வெளிப்பட்ட கால மொன்று, குழந்தைப் பருவ மொன்று, பாலப்பருவ மொன்று, குமாரப் பருவ மொன்று, விருத்தப்பருவ மொன்று—ஆகப் பிறவி எ. இவ்வாறே தாவர முதலியவற்றிற்கு முள. மேலும், ஸ்தூலப் பிறப்பு எ சூட்சுமப் பிறப்பு எ காரணப் பிறப்பு எ ஆதலால், மேல் குறித்த ஸ்தூலப்பிறப்பு, சூட்சுமப் பிறப்பு யாதெனில்: ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, ஜாக்கிரத்தில் சொப்பனம், ஜாக்கிரத்தில் சுழுத்தி, சொப்பனத்

தில் சொப்பனம், சொப்பனத்தில் சுழுத்தி—ஆக பிறப்பு எ. காரணப்பிறப்பு—மனோ சங்கல்பங்களெல்லாம் பிறவி. ஆதலால் மேற்குறித்த பிறவிக்குக் காரணம் நினைப்பு மறைப்பு. அது அற்றால் பிறவி யில்லை. எப்படி அறு மெனில்: பரோபகாரம் சத் விசாரம்—இவ் விரண்டாலும் மேற்குறித்தது நீங்கிச் சிவாநுபவம் பெறலாம்.

## 35. பரோபகாரமும் சத்விசாரமும்

பரோபகார மென்பது யாது? தேகத்தாலும் கரணத்தாலும் இந்திரியத்தாலும் திரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தல். திரவியம் நேராதபட்சத்தில், திரிகரண சுத்தியாய் ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சீவர்களினது வாட்டத்தைக் குறித்தும் பிரார்த்தித்தல். சத்விசார மென்பது கடவுளினது புகழையும் ஆன்மாவின் தரத்தையும் நமது சிறுமையையும் கடவுளின் தரத்தையும் இடைவிடாது விசாரித்து, நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது. சிவாநுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு துவாரந் தவிர வேறில்லை. மேலும் தய வென்பது இரண்டு வகைப்படும். யா வெனில் கடவுள்தயை ஜீவதயை (ஆகிய) இரண்டு. கடவுள் தயை யென்பது இறந்தவுயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், மிருக பட்சி ஊர்வன வாதிகளுக்கு ஆகாரம் நியதியின்படி அருட்சத்தியால் ஊட்டிவைத்தல், சோம சூரி யாக்கினிப் பிரகாசங்களைக் கால தேச வண்ணம் பிரகாசஞ் செய்வித்தல், பக்குவிகளுக்கு அநுக்கிரகித்தல், அபக்குவிகளைச் செய்யவேண்டிய அருள்நியதியின்படி தண்டனை செய்வித்துப் பக்குவம் வருவித்

தல். ஜீவதயை யென்பது தன் சத்தியி னளவு உயிர்க்கு உபகரித்தல், அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றித் தயாவடிவமா யிருத்தல்.

## 36. மனித தேகத்தில் கடவுள் காரியப்படுவேது

இந்த மனித தேகத்தில் புருவ முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றி நெற்றி முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றா திருப்பதற்கு ஞாயம் யாதெனில் :—இத்தேகம் பாதாதி பிரமரந்திர பரியந்தம் வாயுவா லாகிய தேகம். ஷை வாயுவினுடைய பிருதிவி காரியமே தேக வடிவம். ஆதலால், வாயுவின் வர்ணம் செம்மை, கருமை நிற உரோமம் பிருதிவியின் கூறு. தேகத்தில் பிருதிவி வாயு இரண்டும் முக்கிய காரண மானதால், செம்மையும் கருமையு மாகிய உரோமம் உண்டாயிற்று. இதுநிற்க.நரை யுண்டாவது தத்துவக் கெடுதியால். இத்தேகத்தில் உஎ இடங்களில் வாயுவில் பிருதிவி தங்கும். அவசியம் ஷை யிடங்களில் ஆண்பாலுக்கு உரோமம் தோன்றும். ஷை இடங்கள் எவை எனில்: கபாலம் க, புருவம் உ, கண் கீழ்இமை உ, மேலிமை உ, நாசிக்கு உட்புறம் உ, மீசை க, மோவாய் கன்னம் உ, காதுக்குட்புறம் க, இருதயம் க,கைம்மூலம் உ, உந்தியின்மேல் ரேகை க, அடிவயிறு க, லிங்கத்தடி க, புட்டத்தின் கீழ்ப்புறம் க, துடை உ, முழந்தாள் க, பாதத்தின் மேலிடம் ஒன்று ஷை விரலின் மேலிடம் பலவும் க, முதுகு உ, விலாப்புறம் உ, முழங்கைக்குங்கீழ் உ, கைவிரலின் மேற்புறம் க—ஆக உ0எ.[24] இவை அல்லாது மற்ற இடங்களில்

24 இங்குச் சிற்சில எண்களும் இடங்களும் குறிக்கத் தவறிப் பிறழ்ச்சி யுற்றன போலும்.

தோன்றுவது தத்துவக் கெடுதி. தத்துவங்களின் உட்புற மலங்களே வாயுவின் பிருதிவி. ஆதலால், மேல் குறித்த இடங்களில் அக்கினியின் காரியமில்லாததினால் உரோமம் உண்டாகின்றது. அக்கினி காரியப்பட்ட இடங்களில் உரோமம் தோன்றியும் தோன்றாமல் அருகி யிருக்கின்றது.

நெற்றியில் தோன்றா திருப்பது ஷை இடத்தில் ஆன்மவிளக்கம் விசேஷ முள்ளது. அதைப் பற்றி ஷை இடத்திற்கு விந்துஸ்தான மென்றும், அறிவிட மென்றும், லலாட மென்றும், முச்சுடரிட மென்றும், முச்சந்தி மூல மென்றும், நெற்றிக்கண் ணென்றும், மஹாமேரு வென்றும், புருவமத்தி யென்றும்; சித்சபா அங்க மென்றும் பெயர். ஆதலால், விந்து வென்பதே ஆன்மா. விந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கம். ஆதலால், உரோமம் அருகி யிருக்கின்றது. பூர்வத்தில் விந்துவும் உத்தரத்தில் நாதமும் இருக்கின்றன. விந்து ஆன்மா, நாதம் பரமான்மா. நாதத்தோடு விந்து சேர்தலால், விந்து சத்தியும் நாதம் சிவமு மாகின்றன. விந்துவுக்கு உத்தர ஞாயம் பூர்வ ஞாயமாவது. எல்லாத் தத்துவங்களுக்கும் புறத்தும் அகத்தும் மற்றும் விளங்கி, தத்துவங்களைத் தன்வசப்படுத்தியும் தொழில்களைச் செய்வித்தும் தனித்து (நின்று)ம் தன்னோடு தத்துவங்களைச் சேர்க்கின்ற படியால்(உம்), விந்து சத்தனும் தத்துவங்கள் சத்தியாயு மிருக்கும். மேலும் ஆன்மாவுக்குச் சகல விளக்கமாகிய சாக்கிர ஸ்தானம் லலாடம். ஆதலால், விசேடம் சிறந்தது லலாடத்தில் மூக்கு நுனியாகிய புருவ மத்தி. இதற்கு அநுபவ சித்திகள் திரயோத சாந்தம் வரையிலு முண்டு.

திரயோத சாந்தமாவது யாதெனில் : ஜீவசாக்கி ரம், ஷை சொப்பனம், ஷை சுழுத்தி ஆக ௩: நிர்மல சாக்கிரம், ஷை சொப்பனம், ஷை சுழுத்தி ஆக ௩. பரசாக்கிரம், ஷை சொப்பனம், ஷை சுழுத்தி ஆக ௩. குரு சாக்கிரம், குரு சொப்பனம், குருசுழுத்தி, குரு துரியம், குரு துரியா தீதம் ஆக ௫. ஆக(மொத் தம்) ௧௪. இதற்கு மேலு முள சுத்த சிவசாக்கிரம், ஷை சொப்பனம், ஷை சுழுத்தி, ஷை துரியம் துரியாதீதம்—இவை சே(நே?)ருங்கால் ஜீவசாக்கி ராதி நீக்கப்படும். இவ்வள வநுபவமும் பூர்வத்தி லுள்ள அநுபவிகளால் குறிக்கப்பட்ட நிலைகளில் இல்லை. ஒருவாறு, குரு துரிய பரியந்தம் வேதாக மங்களாலும் தத்துவராயர் முதலிய மகான்க ளனு பவத்தாலும் குறிக்கப்படும். அதற்கு மேற்பட்ட அநுபவம் சுத்த சன்மார்க்க சாத்தியம்.

மேலும் பெண்களுக்கு உரோமம் தோன்றாதி ருப்பதற்குக் காரணம். ஆணிடத்தில் ௩-ம் பெண் ணிடத்தில் ௪-ம் ஆக இருப்பதால், ஷை பெண் களுக்குத் தலை, புருவம், இமைக்கீழ் மேல், மூக் கினுட்புறம், கைம் மூலம், லிங்கத்தடி—இவைகள் தவிர மற்ற இடங்களில் உரோமம் தோன்றாது, அருகியிருக்கும். உரோமம் விசேஷம் மற்ற இடங் களில் உண்டாவது தத்துவக் கெடுதி. மேலும் உரோமம் தோன்றா திருக்கிற இடங்களெல்லாம் விந்துவாகிய பிரகாசம் ஜாஸ்தியா யிருக்கும். ஷை விந்துக்கள் மோவாய், மார்பு, ஸ்தனத்தின் கீழ்ப் புறம்—இவைகளில் நிரம்பியிருக்கின்றன. அதனால் பெண்பாகம் உரோமம் இல்லை.

பரமாத்மா ஜீவாத்மா வென்னும் இரண்டின் நித்தி யாநித்தியங்களையும் பிண்ட பேதத்தில் உயர்வு

தாழ்வையும் காரியகாரண சம்பந்தங்களையும் தெரிவித்தல் யாதெனில் : சாமாநியம் விசேடமென்று ஜீவன் இரண்டு. இவற்றில் சிறந்தது சாமாநியம், தாழ்ந்தது விசேடம். ஜீவன் இரண்டென்பது தெவ்வாறெனில்: ஆன்ம காரணம் சாமாநியம், ஆன்ம காரியம் விசேஷம். சாமாநியமென்பது ஆன்ம அறிவு, விசேடமென்பது மன அறிவு. இவை பூர்வோத்தரமா யிருக்கின்றன. பூர்வமென்பது லிங்கஸ்தானம். உத்தரமென்பது பிந்து ஸ்தானம். ஆதலால் சிருட்டிக்குக் காரணம் லிங்கம். ஆதலால், சாமாநிய ஜீவன் காரணப்பட, விசேஷ ஜீவன் காரியப்படும். விசேஷ ஜீவ சம்பந்த மில்லாத பக்ஷத்தில் சிருஷ்டி காரியப்படாது. இது சாதாரண பாகம். அசாதாரண சம்பு பக்ஷ சிருஷ்டியில் சாமாநியத்தைக் கொண்டே விசேடத்தை வெளிப்படுத்திக் கொள்ளலாம். சாமாநியம் சந்தானம், விசேட மதற்குள் ளடங்கியிருக்கும். பிரமாணம் யாதெனில் : அங்குலிகளில் நகத்திற்கு அடி சந்தானமும் வளர்ச்சி விசேடமும் போல.

மேலும், நெற்றியில் உரோமம் உண்டாகாத வஸ்துக்களெல்லாம் ஆன்ம காரண அறிவு காரியப்பட்டது. மிருகாதிகளுக்கு உரோமம் உண்டான படியால் ஆன்ம காரண அறிவு காரண காரணமாய் அருகியிருக்கின்றது. எப்படிஎனில்: சர்வேசுரனென்னும் நாமத்தின் பிரத்தியேக ஆத்ம சைதந்நியமாகிய வஸ்து எங்கும் பூரணமாய் இருப்பது இயற்கையுண்மை ஏகதேசம் . . . 25 ஆதலால், கடவுளை—அறிவதற்கு—ஆன்ம அறிவைக் கொண்டே

25 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

அறியவேண்டும். ஷை அறிவு ஆன்ம [26]வியாபக ஆலயமாகிய மனிதர் தேகத்தில் கடவுள் காரியப் படுவது உத்தமம்.

இதன்றி, சமய மத ஏற்பாட்டில் மகான்கள் குழூக் குறி—அடையாளங்—களாகப்பெயரிட்ட விக்கிரக பேதமாகிய சிலா லோக தாரு தந்த இஷ்டி முத லியவைகளில் கடவுள் காரியப்படுவது சரியை கிரி யாதி பேதம் எட்டில் சரியையில் சரியை கிரியை யில் சரியை—இவ்விரண்டையும் செய்கின்ற மந்தர் களினது ஞாயம். மேலும் அதில் தோன்றி அனுக் கிரகிப்பதுஞ் சாலம். அரு ளுருவமான அறிவே உருவங்கொண்ட சிவத்தை அறிவாலே அறிவது உண்மை. மேலும் தாணு(அன ?)வுக்குச் சரியான கர்ப்பூரம் பஞ்சு கரி கட்டை முதலிய வஸ்துக்களில் அக்கினி சீக்கிரம் காரியப்படும். கதலிமுதலிய வஸ் துக்களில் காரியப்படுவது தாமசம். அதுபோல், பக் குவான் மாக்களிடத்தில் கடவுளருள் வெளிப்பட் டால் சுத்தமாதி மூன்று தேகமும் அத் தருணமே வரும். பக்குவ மில்லாதவர்களுக்கு அருள்செய்தால் வாழையினிடத்தில் அக்கினி காரியப்படுவது போ லாம். ஆதலால், கடவுளருள் வெளிப்படுவதற்கு அபக்குவிகள் தங்கள் செயற்கைக் குணங்களாகிய ராகத் துவேஷாதிகளை நீக்கல்வேண்டும். சினம் வெகுளி முதலியவற்றையும் நீக்கல்வேண்டும்.

சின மென்பது யாது? உள்வேக்காடு, புட ஞாயம் போல். இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டம் பண் ணும். வெகுளி யென்பது மீசை துடித்தல், கண் சிவத்தல், கை முதலிய உறுப்புகள் துடித்தல், வாய்

26 அறிவு ஆன்ம என்பது ஆன்ம அறிவு என்பதின் பிறழ்ச்சி போலும்.

குழறி மேல் விழுந்துகூவுதல்—இஃது ஆயுளை நஷ்டம் பண்ணும். ஆகையால், எவ்வகையிலும் கோபத்தின் பூர்வோத்தர மாகிய சினம் வெகுளி என்னும்கூற்றை ஒழித்தல் அவசியம்.

இதுபோல் மற்றக் கெடுதியாகிய காமக் குரோதாதி சம்பந்தங்களையும் நீக்கல்வேண்டும். காரணமென்பது காரண சம்பந்த முடையது. கரணமென்பது ஒற்றுமை வேற்றுமைத் தொழிற் றன்மை உடையது, மட்குடத்தைப்போல். மேலும், இலக்ஷணம் அடையாளம், இலக்ஷியம் அடையாளத்தை யுடையது, அங்கம் இலக்ஷணம். ஆதலால், இலக்ஷணம் இலக்ஷியம் அங்கம் காரணம் கரணம் முதலிய சம்பந்தங்களு மொன்று மில்லாது, கெடுதியாகிய தத்துவங்களை அடக்கல்வேண்டும்.

## 37. ஞானசித்தியும் ஒளிநிலையும்

மேலு மிரவில் தீபமில்லாத விடத்தில் இருக்கக்கூடாது. ஏனெனில், அஃது பிராண நஷ்டம் பண்ணும். ஆதலால், நமது கிருகத்தில் தீபம் வைத்து இருளைப்போக்கி ஆனந்த மயமாய் நித்திரை யில்லாதிருந்தால், ஆயுள் விருத்தியாம். இஃது சாத்தியனுக்கு. சாதகன் ஒருவாறு நித்திரை செய்தல்வேண்டும். கிருகத்தில் இருளில்லாது எங்கும் பிரகாசமாய் தீபம் வைத்தால், ஷை இருள் அந்தத் தீபத்தில் அடங்கும். அதுபோல் ஜீவதீபமாகிய நாம் வசிக்கிற கிருகத்தில் பிரகாசமில்லாவிட்டால், ஷை இருள் ஜீவப் பிரகாசமாகிய நம்மிடத்தில் சேர்ந்து நஷ்டத்தைப் பண்ணும். அதுபோல் ஆன்மவாசமாகிய இந்தத் தேகமாகிற கிருகத்தில் அருட்பிரகாச மில்

லாது மருளாகிய அஞ்ஞான சம்பந்தமுடைய இருள் சேர்ந்தால், பிராண நஷ்டம் சீக்கிரமாம்.

ஆதலால், நாம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை ஆசாரியர் அனுக்கிரகத்தால் திறக்கப்பெற்றுக் கொள்வது நலம். ஏனெனில்,ஷை நெற்றிக்கண்ணைத் திறக்கப்பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல்போல் தெரியும். அவன் தான் சுத்தஞானி. ஷை ஞானி தயவோடு ஒரு பிரேதத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிரேதம் உயிர் பெற் றெழும். ஷை ஞானிக்கு ஆன்மாக்களினது அபக்குவ பரிபாகத்தால் சினம் தோன்றினால், உடனே அந்த ஜீவன் பஸ்மமாகி விடுவன். ஷை ஞானிக்கு மேற்குறித்த அடையாளங்க ளுள. ஷை கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டு முளது. ஷை பூட்டை அருளென்கிற திறவுகோலைக் கொண்டு திறக்கவேண்டும். ஆதலால், ஷை அருளென்பது ஆன்ம இயற்கையாகிய பெருந் தயவு. நாம் தயா வடிவமானால் ஷை அநுபவம் நேரும்.

மேலும் அந்தச் சுத்த ஞானி இறந்த வுயிர்களை எழுப்புவதற்குப் பிரமாணம் யாதெனில்: ஒருவாறு தீபப் பிரமாணத்தா லறிக. தீபப் பிரமாண மென்பது யாது? தீபத்தினிடத்தில் காரியவொளி காரிய காரணவொளி காரணவொளி என மூன்று. ஷை ஒளியாவன ஒளி சோபை பிரகாசம். ஆதலால் கடவுள் காரியமாய் பிரகாசம்போல் சுவர்ண தேகியாய்த் தோன்றினால், அதி தூரத்திலிருக்கிற இருளென்னும் அஞ்ஞானத்தைப் போக்கி ஆன்ம அனுபவத்தை வருவிப்பது பிரகாச மயம்.[27] அதுபோல்

---

27 இந்த வாக்கியத்தில் சொற்றொடர்பு பிறழ்ச்சியுற் றிருக்கிறது போலும்.

ஒளி ஷை பிரகாசத்திலடங்கிச் சோபை காரிய காரணமாய் இருக்கின்றதுபோல், ஆன்மாக்கள் அஞ்ஞானத்தில் கட்டுண்டு அறிவையுந் (அறிவாகிய ?) தீபத்தைக் கருதினால் ஷை (அறிவாகிய தீபம் ?) தோன்றின கணமே அதின் மயமாவார்கள். அதுபோல் கடவுளின் சோபையைக் கண்டால், பஞ்ச கிருத்தியமுஞ் செய்யக்கூடும். ஒளியைத் தொட்டால் சுடுவதுபோல், இறந்த பிரேதத்தை அவர்க்குச்சமீபிக்கச் சேர்த்தால், தக்கணமே (அது) ஜீவிக்கும். மேலும் பிரகாசம் எங்குமுள்ளது. எந்த இடத்தில்புலை கொலை அந்நிய (அகற்றிய?) சீவர்கள் பிரார்த்தித்தால் (உம்) தக்கணமே அவரது காரணவுருவமாகிய பிரகாசத்தில் நின்று காரிய வுருவமாகிய ஒளி வடிவாய்த் தோன்றி அருள் செய்வர். இதற்குப் பிரமாணம்: சித்த மார்க்கத்தி லுள்ள துருசுச்சுண்ணத்தை—மஞ்சளில் தோய்த்த நூலைநெடுந் தூரங்கட்டி, அங்கங்கு காயாது உபகரணம் பூசி, மனிதர்களை நிற்க வைத்து, ஷை சுண்ணத்தை அடியில் காட்டின தக்ஷணமே நுனியில் சிவப்பேறும்.

## 38. சன்மார்க்க ஆகார விலக்கு

சுத்த சன்மார்க்க சாத்தியர்கள் நெய் முதலிய வஸ்துக்கள் கொள்ளப்படாது. அதுபோல் சாதகர்களும் . . . [28] ஒருவாறு கொள்ளப்படும். ஏனெனில், ஓர் தேகத்திலுள்ள தாதுக்களில் முதல் தாது கொழுப்பு, அதின் அமிசமே பால், அதின் அமிசம் நெய், ஷை ஆபாசம் மோர் தயிர். ஆதலால், ஷை கொழுப்பு வெளிப்பட்டால், ஷை பசுவின்கண் கெடுதியும் நேரும். ஆதலால் கொலை. கன்றுக்கு ஒருவாறு

28 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

விட்டு ஷை பாலை கிரகிக்கலாம். ஆதலால், இஃதால் ஜீவ இம்சை நேருதலால், ஷை வஸ்துக்கள் கொள்ள லாகாது; நேராத பக்ஷத்தில் கொள்ளலாம்.

## 39. பஞ்ச கவ்யம்

மேலும், பஞ்சகவ்வியத்தின் உண்மை யாதெனில்: கோமயம் ஷை ஜலம் ஷை கிருதம் ஷை ததி ஷை க்ஷீரம் —இவை ஐந்து. இவற்றின் குணம்: ஷை மயத்தால் பிருதிவி சுத்தி, ஷை ஜலத்தால் ஜல சுத்தி, ஷை கிருதத்தால் அக்னி சுத்தி, ஷை ததியால் வாயு சுத்தி, ஷை பயசால் ஆகாச சுத்தி. இதுபோல் பிண்டத்தில் பிருதிவியாகிய தேகத்திலுள்ள குருக்களையும் அசுத்த மலங்களையும் ஷை மயம்போக்கும்; நீர்க்கட்டு கோவை முதலியவற்றை ஷை ஜலம் போக்கும்; உஷ்ண ஆபாசம் முதலியவற்றை ஷைகிருதம் போக்கும்; அதுபோல் வாயுவின் கெடுதியாகிய மலபந்த முதலியவற்றை ஷை ததி போக்கும். ஆன்மாவாகிய பிராணச் சோர்வை ஷை க்ஷீரம் போக்கும்; மேலும் பசு மிருகத்தின் நக்ஷத்திர(ம்.)[29] விருக்ஷத்தின் மூலாதி பலங்களே பஞ்ச கவ்யங்களாம்.

## 40. புறப்புற அமுதம்

அண்டத்தையும் பிண்டத்தையு மொருங்கே வளர்ப்பது புறப்புற வமுதம். ஆதலால் அஃதே கொள்ளல்வேண்டும். யாதெனில்: ஊற்றுநீர், பொற்றலை வாழை தென்னை முதலியவற்றின் பேரிலுள்ள பனி ஜலம், மழை ஜலம்—இவைகள் கொள்ளலாம்; சாதாரண ஜலங் கொள்ளுவது கெடுதி. ஏனெனில் ஷை ஜலத்தில் மூன்று குணமுண்டு. எவை எனில்: விஷம்

29 இங்குச் சொற்றொடர்பும் கருத்துத் தொடர்பும் குறிக்கத் தவறிப் பிறழ்ச்சி யுற்றிருக்கின்றன போலும்.

பூதம் அமுதம். இம் மூன்று மொன்றாகவே இருக்கும். எப்படியெனில்: மேல் பாகத்தில் சிலிர்ப்பாகிய விஷமும், அதனடியில் ஏகதேசம் சுடுகையுள்ள பூதமும், அதனடியில் விசேஷ உஷ்ணமுள்ள அமுதமும் கூடி ஒன்றாயிருக்கும். ஷை ஜலத்தினது குணங்கள் ஆவன: பூதஜலம் தத்துவ விருத்திசெய்யும்; அமுத ஜலம் பிராண சக்தி செய்யும்; விஷ ஜலம் தத்துவத் துரிசைப் போக்கும். ஆதலால் இடபேதத்தால் ஷை நீர்கள் தனித்தனியாகவு முள்ளன; ஒவ்வொன்றில் மும்மூன்றாகவும் விரியும். ஆதலால், ஷை சுத்தாமுதங் கிடையாத பக்ஷத்தில் இதர ஜலங்களைப் பச்சையாகக் கொள்ளப்படாது; வெந்நீராகக் கொள்ளுதல் வேண்டும். அந்நீரும் ஐந்து மூன்றும் ஐந்து இரண்டு மாகக் காய்ச்சி, சர்க்கரை வெல்லம் கற்கண்டு—இவைகள் சேர்த்துக் கொள்ளவும். நேராத பக்ஷத்தில், தென்னை நாயுருவி வாழை முதலிய வஸ்துக்களைச் சம்பந்தப் படுத்தியாவது, சூரியகிரணத்தில் வைத்தாவது, சூரிய சரத்தால் பார்த்தாவது, சிகரத்தை உன்னியாவது கொள்ளல் வேண்டுமே யல்லது பச்சையாய்க் கொள்ளப் படாது. சநி நீரென்று சொல்லுவது சநி போன்ற கருமையான கருகிய நீரா லென்று சொன்னது. யாதெனில்: வெந்நீர். ஒருவாறு ஊற்று நீர். இதன்றி—மற்றப்படி—சொல்வது தெரியாமை.

## 41. சர்க்கரையும் உப்பும்

மேலும், சுத்தசன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் புழுக்கா திருக்கிற வஸ்துவைக் கொள்ளல் வேண்டும். புழுக்காத வஸ்துக்கள் யாவெனில்:

சர்க்கரை தேன் கற்கண்டு வெல்லம், அயம் முதலிய செந்தூரம், தாமிர முதலிய பஸ்மம். ஆதலால் அவசியம் ஆகாரத்திற்கு முக்கிய வஸ்து மேற்குறித்தவை. பரியாயத்தில் சர்க்கரையென்று லவணத்தைச் சொல்லுவது முண்டு. ஷை லவணத்தைத் தூசு (துரிசு?) போக்கி ஜய லவணமாய்க் கட்டி ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். இதன்றி, சத்வ பதார்த்தத்தில் லவணம் சிறுகச் சேர்த்துக் கொள்ளவுங் கூடும்.

## 42. துர் மரணம்

ஜீவர்களுக்கு வாந்திபேதி மாரடைப்பு முதலியவற்றால் நேரிடும் துர் மரணங்கள் ஆகாரக் குறைவாலும் மிகுதியாலும் அக்கிரம அதிக்கிரமத்தாலும் பொருந்தலாலும்—இவைபோன்ற பலவகைக் கெடுதியாலும் உண்டாகின்றன.

## 43. மழை

புகையின் மூன்றுவது கலையின் சீதள சத்தியினால் மழை யுண்டாகின்றது. இதுபோல் சூரிய கிரண உஷ்ண ஆவியாகிய புகை ஓஷதிகளிலும் நீரிலும் பாரிலும் பொருப்பிலு முள்ள திரவசத்தியைக் கிரகித்து, வாயு மண்டலத்தில் சேர்த்து, மேலுங் கீழும் உஷ்ணம் நிரம்ப, மத்தியிலுள்ள திரவ அணுக்கள் புழுங்கி நீராய், காலபேத வண்ணம் வாயுவால் பிரேரிக்கப்பட்டு அசைக்கும்போது கீழுமேலு முள்ள உஷ்ணவாயு தடிப்பு விலகும்போது மின்னலாகிய பிரகாசமும், நெருங்கி யொன்றுபடும்போது சத்தமாகிய இடியும், அத்தொனியால் படலம்போல மூடியிருந்த—

காராகிய—மேகம் விலகி வாயுவால் கலங்கியபோது மழையும் உண்டாகும். இதன்றி, மேகம் கடல் ஜலத்தை உண்டு மழை பெய்வதென்பது பொய்.

## 44. திருமந்திரமும் திருவாசகமும்

சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் திருமந்திரம். இஃது மொத்தம் எண்ணாயிரம்; தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம்: இவற்றை ஊன்றிப் பார்க்கவும்.

## 45. சூரியன் சந்திரன் அக்கினி

சூரியன் ஆணாகவும் சந்திரன் பெண்ணாகவும், வலம் இடம் சத்தி சிவமுமாக வுடையது மருட்டேகம். வலம் சந்திரனாகிய சத்தியாயும் இடம் சூரியனாகிய சிவமாயு மிருப்பது அநுபவம். திரிசிய அனுபவத்திலுள்ள இடம் வலமாகவும் வலம் இடமாகவும் அநுபவந் தோன்றும்.

மேலும், சூரியன் அக்கினியோடு கூடினால் திங்களும், சந்திரன் அக்கினியோடு கூடியபோது பானுவும், சூரியன் மதியோடு கூடியபோது பௌமனும், சந்திரன் பானுவொடு கூடியபோது சௌமியனும், சூரியன் சௌமியனொடு கூடியபோது குருவும், சந்திரன் பௌமனொடு கூடியபோது பிருகுவும், சூரிய சந்திரர்கள் அக்கினியோடு கூடிய போது மந்தனும் தோன்றும். ஆக எ.

மேற்படி சூரியனுக்குக் கலை கரு. ஷை கலை கரு-ல் சந்திரனுக்குக் கலை ச போக இருப்பு கலை கஉ. சூரியன் காரிய வுருவன். சந்திரனுக்குக் கலை கரு. ஷை கலை கரு-ல் தாரகைகளுக்குக் கலை ச போக, சூரியனால் கொடுத்த ச கலையுஞ்சேர்த்து சந்திரனுக்குக்

கலை கசு. சந்திரன் காரிய காரண உருவன். சகலன் சூரியன், கேவலன், சந்திரன். அனுபவத்தில் இடம் வலம் போல் மாறும். பிரமத்துவம் சூரியனிடத்தி லும் விஷ்ணுத்துவம் சந்திரனிடத்திலும் உள்ளன. அக்கினிக்குக் கலை கூச. இப்போது எட்டுக் கலை யோடு காரண உருவனாய் மற்றைக் கலைகளை உள் ளடக்கி நீருறு தீப்போல் எங்கு முடையவன். ஆக கலை கூசா. ஷை கூசு கலையே கூசு தத்துவமாய்ப் பிண்ட வடிவாயிற்று.

அக்கினிகலை கூச-ன் குணங்கள் சைவத்தில் கூச திருவிளையாடல்(கள் ஆகவும்), உண்மை அடியார் கள் கூசு அதீதம் ஒன்று ஆகவும் வழங்குகின்றன. சந்திரகலை கஉ-மே வைஷ்ணவ பரத்தில் துவாதச ஆழ்வார்களாக வழங்குகின்றன. மற்ற உ௦ கலையும் கௌமாரம் பாசுபதம் மஹாவிரதம் சாத்தேயம் காணுபத்தியம் காபாலம் சௌரம் மகம்மதீயம் பௌத்தம் கிறிஸ்து(வம்) முதலிய சமயங்களில் வழங்குகின்றன. இவற்றின் அநுபவங்களைக் குரு முகத்தில் அறிக.

மேற் குறித்த சோம சூரியர்கள் ஒன்றுபடுவது அமாவாசை. ஒன்றுபட்ட சோமன் ஒவ்வொரு கலையாகச் சூரியனிடத்திலிருந்து விடுபட்டு மேலே றிப் பகிரண்டத்தில் செல்லும்போது கசு கலையும் பூர்த்தியாய்ப் பிரகாசிப்பது பௌர்ணமி. பகிரண் டத்திலிருந்து பிரமாண்டத்திற்கு வியாபக மாகும் போது, சூரிய உஷ்ணம் சோம கலையை ஒவ்வொன் றாகக் கிரகிக்க ஒரு கலையோடு பானுவுடன் சேர் தல் அமாவாசை. ஷை சோமகலையைப் பானு கிர கிக்காவிட்டால் இவ்வுலகம் ஜீவிக்காது. சூரியன் பிரமாண்ட பகிரண்ட வியாபகி. சந்திரன் பகி

ரண்ட பிரமாண்ட வியாபகி. சூரிய வியாபகம் தோன்றுது, சந்திர வியாபகந் தோன்றும்.

## 46. கலியுகம்

கலியுகத்தின் தாத்பர்யம்:—முதல் யுகத்துக்கு நாள் ௮, இரண்டாவது யுகத்துக்கு நாள் ௬, மூன்றுவது யுகத்துக்கு நாள் ௪, நாலாவது யுகத்துக்கு நாள் ௨. ஒரு தினத்திற்கு நாழிகை ௬0, நிமிஷம்[30] ௨,௧௬,000. இரண்டு நாளைக்கு ௪,௩௨,000 நிமிஷம். இவ்வண்ணமே ௪, ௬, ௮ முதலியவற்றிற்கும் கொள்க. ஆக நாள் ௨0-க்கு நிமிஷம் ௪௩,௨0,000. இதைக் குழுக் குறியில் வருஷமாகச் சொன்னது. முதல் யுகம் களங்க மார்க்கம்; இரண்டாவது யுகம் திராவக மார்க்கம்; மூன்றுவது யுகம் நவநீத மார்க்கம்; நாலாவது யுகம் பஸ்ம மார்க்கம். ஆதலால், மேற்குறித்த பஸ்மத்தை மேற்குறித்த வருஷத்தில் முடித்து உட்கொண்ட புருஷனுகிய சித்தனுக்கு கலிபுருஷனென்று நாமம் வந்(த)து. மேற்படி பஸ்மத்தை யிரண்டு தினத்தில் முடித்து கற்பங்கொண்டு தேக சித்தியைப்பெற்றுத் திரிசியப்படாமல், (ஷடி புருஷன்) தனது சங்கல்ப விகல்பங்களால் இவ்வுலகத்தைத் தோன்றலாதி அசைவுகள் செய்வித்து ஆடுகின்றுன். இந்த வுலகம் முடிவதற்கு இன்னும் உள வருஷ இருக்கின்றது; இதற்குமேல் மேற்படி புருஷன் செயல் நடவாது; ஞானசித்தன் செயல் உண்டாம்: ஆங்கிரச வருஷ புரட்டாசி மீ ௩௨ (இது) எழுதியது.[31]

---

30 இது ஒரு மணிக்கு அறுபது நிமிஷம் என்னும் கணக்குக்கு வேறுபட்ட ஓர் அளவு.

31 இத் தேதிக் குறிப்பு இவற்றை எழுதிய அன்பரின் சொந்தக் குறிப்புப் போலும்.

## 47. சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல்

சாகாத் தலை வேகாக் கால் போகாப் புனல் என்பவற்றிற்குப் பொருள் யாதெனில்:—அடியில் வருவதேயாம். சாகாத் தலை யென்பது ருத்திரபாகம், ருத்திர தத்துவம். வேகாக் காலென்பது மகேசுவர பாகம், மகேசுவர தத்துவம். போகாப்புன லென்பது சதாசிவ பாகம், சதாசிவ தத்துவம். இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும். ஆத்ம தத்துவாதி சிவகரணம் ௩௬, நிர்மல குரு துரியாதீதம் ௭; ஆக நிலைகள் ௪௩, இந்த ௪௩ நிலைகளில் ஒவ்வொரு நிலைகளிலும் மேற் குறித்தவை உள. மேலும் இவை மூன்றும் பிண்டத்தில் நாலிடத்திலும் அண்டத்தில் நாலிடத்திலும் உள. அவைகள் பிண்டாண்ட ருத்திர சதாசிவ பேதம். சாகாக் கல்வியைக் குறித்த ௪௩ நிலைகளில் முதல் நிலை அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் பிரமன். அவனது காலம் ஒரு கல்பம். இப்படி ௩௨ நிலைகளையு மேறி அநுபவத்தைப் பெற்றவன் காலங் கடந்த காலாதீதன்.

மேற்குறித்த மூன்றும் பரமார்க்கமாகிய யோகக் காட்சியில் உண்டாகும் யோகானுபவங்களின் உண்மைப் பொருள். அபர மார்க்கத்தில் சிலர் உப்புவகைகளின் பேதமென்றும் ஔஷதி பேதமென்றும் பூதபேதமென்றும் சொல்லுவது உபாய மார்க்கம். அக அநுபவமே உண்மை. உபாய வகையாகிய அபரமார்க்கம் தேகபூஷணாதி காமிய சித்தியைத் தரும். உண்மை நீக்க மற்ற சொரூப ஞானத்தைத் தருமென் றறிக. ஷ உபாயங்களை ஒருவாறு தெரிவிப்பதும் சைவசமயங்கள் தவிர வேறு எவ்வித சமயங்களிலு மில்லை. அப்படி யிருப்ப

தாகச் சொல்லியிருப்பதும் ஏகதேச மென் றறிய வும். ஷை ஏகதேசங்கள் . . . [32] மந்திரங்களிலும் ஷை மூன் றும் வழங்குகின் றபடியால், ஒன்பது மாற் றுக்கு மேற்பட்ட தங்கரேக்கில் பஞ்சாக்ஷரத்தை யடைத்து விக்கிரகத்தின் அடியில் வைக்க, மகத்து வங்க ளுண்டாகும். மேலும் ஷை உயர்வுடைய தங் கத்தில் விக்கிரகஞ் செய்துவைத்து ஒஷதியாதி லவணங்களை அதற்குச் சேர்த்து வைத்தால், விசேஷ சித்தி விளங்கும். இஃது திரிசியக் காட்சி. சுத்த சன் மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபர மார்க்கக காட்சி கூடாது. பர மார்க்க மாகிய அக அநுபவமே உண்மை. ஷை மூன்றையும் இல க்ஷியமாகவே கொள்க. உபாய வகையான வாச்சிய திரிசியக் காட்சிகள் பரோபகாரம்(?). ஆதலால், சாகாத்தலை வேகாக்கால் போகாப்புன லென்பவை இரண்டு புறத்திலு முள. உபாய வகையை நம்புதல் கூடாது ; உண்மையை நம்புதல் வேண்டும். இஃது ரகசியம். (இது எழுதியது) ஆங்கிரச ளூ புரட் டாசி மீ ரு உ. [33]

## 48. ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்

சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அநுஷ்டிக்கின்ற கூட்ட மென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன: தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு.

32 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

33 இத் தேதிக் குறிப்பு இவற்றை எழுதிய அன்பரின் சொந் தக் குறிப்புப் போலும்.

ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின். அநுபவம் காலம் இடம் முதலிய வேறு பாடுகளால் ஏறிக் குறையும். ஆதலால், ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன. ஷ அந்தம் நான்கின் ஐக்கிய விவரம்: வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும் அடங்கி யிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அநுபவத்தில் சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.

இவற்றிற்கு அதீதம் (ஆகிய) சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்தமாகிய சமரச சுத்த சன்மார்க்கமே நித்திய மார்க்கம். மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அந்நியமாய் விளங்கும்; அந்நியமல்ல. மேற்படி சமயமத மார்க்கங்கள் எவை எனில்: சமய சன்மார்க்கம் மதசன்மார்க்கம் என இரண்டு. இவற்றுள் ளடங்கிய சன்மார்க்கம் அநந்தம். அதில் சமய சன்மார்க்கத்தின் வகையாறு, தொகை முப்பத்தாறு, விரிவு அறுகோடி. இதுபோல் மதத்திலும் வகை தொகை விரிவு உள்ளன. மேற்குறித்த சமய மத சன்மார்க்கங்களில் வகாரவித்தை தகரவித்தை யுள. அவை அவ்வச் சமயமத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா மூர்த்தி ஈசுரன் பிரமம் சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்த மிருக்கும்; அதற்குமேலிரா.

மேற்படி சமயமத சன்மார்க்கங்களில் ஷடாந்தசம ரச முளதோ வெனில்: உளது. யாதெனில்: வேதாந்த சித்தாந்த சமரசம்,யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம்.இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால், சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்க சுத்த சமரச சன்மார்க்க மாம். இது பூர்வோத்தர ஞாயப் படி, கடைதலைப் பூட்டாகச் சமரச சுத்த சன் மார்க்க மென மருவியது.

இதன் தாத்பரியம் யாதெனில்: சமரசம் என்ப தற்குப் பொருள்—எல்லா அந்தங்களினது அந்த மும் தனக்குப்பூர்வமாக்கித் தா னுத்தரத்தி னின்று மருவியது சமரசம். இதற்கு அநுபவம் குருதுரிய ஸ்தானம்.சுத்த சமரச மென்பதற்கு ஞாயம்: விந்து பாவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந் ததுபோலும், சிவம் பரசிவம் இரண்டையு மறுத் தது சுத்த சிவம் போலும், சன்மார்க்கம் சிவசன் மார்க்க மிரண்டையு மறுத்தது சுத்த சன்மார்க்கம். பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப் பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு ஷடா ந்த சமரச சுத்த சன்மார்க்க மென்றே மருவியது. ஒருவாறு, ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று,இதன் பூர்வத்தில் சமரச சன் மார்க்கம் ஒன்று, இதன் உத்தரத்தில் சுத்த சன் மார்க்க மொன்று; ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன் மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன் மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன் மார்க்கங்கள் யாவும் அநந்நியம்.

சன்மார்க்கம் என்பதில் வகை தொகை விரிவு அனந்தம். இதன் தாத்பரியம் யாதெனில்: சமயசன் மார்க்கத்தின் பொருள் குணத்தினது லக்ஷியத்தை அனுசந்தானஞ் செய்வது. குணமென்பது யாது? சத்துவகுணம். இயற்கை உண்மை ஏகதேசமான சத்துவ குணத்தின் சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம். சத்துவ சம்பந்தமுடைய மார்க்கம் யாதெனில்: சத்போதம் சத்கர்மம் சத்சங்கம் சத்காலம் சத்விசாரம் சத்பாத்திரம் சற்சனம் சற்செய்கை முதலியனவும் சத்துவ சம்பந்தம் உடையன. இதனியல்பாவன: கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரியநிக்கிரகம், ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருண்யம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம். இவ்வணம் வாச்சியாநுபவம் பெற்றுச் சொரூபாநுபவமாகிய சாதனமே சமய சன்மார்க்கம்.

சமயாதீதமாவது மதம். மத சன்மார்க்கத்தின் பொருள் நிர்க்குண லக்ஷியஞ் செய்வது. நிர்க்குணமாவது பூர்வகுணமாகிய சத்துவத்தின் வாச்சியாநுபவம் பெற்று லட்சியாநுபவம் பெறுதல். யாதெனில்: சோகம், சிவோகம், தத்வமசி, சிவத்துவமசி என்னும் வாக்கியத்தின்முக்கியாநுபவம். அநுபவம் என்பது யாது? . . . [34] சத்துவகுண நிர்க்குண லட்சியத்திற்கு மார்க்கம் நான்கு: எவை எனில் சத்துவ குணத்தின் முதல் விளைவு தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், இரண்டாவது புத்திரனாகப் பாவித்தல், மூன்றாவது சிநேகிதனைப்போலப் பாவித்தல்,நான்காவது தன்னைப்போலப் பாவித்தல்.இது ஜீவ ஞாயம். இவ்வாறேதான் கடவுளுக்கு அடிமை

34 இங்குக் கருத்துத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

யாதல், புத்திராதல், சிநேகனாதல், கடவுளேதா னாதல். இது சத்துவகுண லட்சியார்த்தமாகிய மத சன்மார்க்க முடிபு.

சத்துவகுண விளைவு என்பதற்குப் பொருள் சத்துவகுணத்தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம் வல்ல சர்வ சித்தியோடு ஞான சித்தியைப் பெறு தல். நெல்லை விளைத்தான் என்பதன் பொருள் உழு தல் தொடங்கிக் கிருகத்தில் சேர்த்து அநுபவிக் கிற பரியந்தம் அடங்கி யிருப்பதுபோல் சன்மார்க் கம் என்பது சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறாக அடங்கிய பொருளெனக் கொள்க. குண நிர்க் குண வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதத்தின் அநுபவ மல்லாதது சுத்த சன்மார்க்கம். இம்மார்க் கத்திற்கு மேற் குறித்த மார்க்கங்கள் அல்லா தனவே யன்றி இல்லாதன வல்ல.

சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில்: சுத்தம் என் பது ஒன்றுமல்லாதது. சுத்தம் என்பது சன்மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால், மேற் குறித்த சமய மதாநுபவங்களைக் கடந்தது. சத் மார்க்கம் என்னும் பொருட்கு அர்த்தம் நான்கு வகை: அஃது பூர்வாதி உத்தரோத்தர பரியந்தம். இதின் முக்கிய லட்சியம் சுத்தசன்மார்க்க அநுபவ ஸ்தானமாகிய சுத்த சிவ துரியாதீத நிலை பெறில் விளங்கும். ஏகதேசத்தில் ஒருவாறு பூர்வம் என் பதற்குப் பொருள்—சிருஷ்டியாதி அநுக்கிரக மீறா கச்செய்யும் பிரமாதி சதாசிவ மீறாக வுள்ள பஞ்ச கிருத்திய கர்த்தர்களி லொவ்வொரு கிருத்தியத் தின் விரிவு ஐந்தாக விரிந்த கர்த்தர் பேதம் (உரு ஆக) இருபத்தைந்தாக விரிந்த மஹாசதா சிவாந்த அனுபவ காலத்தை அறுபத்து நாலாயிரத்தில்

(கூச,000) பெருக்கிய கால அளவு எவ்வளவோ அக்கால அளவு சுத்த மகா சதாசிவானுபவத்தைப் பெற்றுச் சுத்த தேகியா யிருப்பது. சத்தென்பது பரிபாஷை. அது அனந்த தாத்பர்யங்களைக்கொண்டு ஓர் வாக்கிய பதமாய் நின்றது. மார்க்கம் என்பது யாதெனின் : துவாரம், வழி. வழி யென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கிற மார்க்கம். ஆதலால், எவ்வகையிலும் உயர்வுடையது பாவனாதீ தாதீதம், குணாதீ தாதீதம், லட்சி யாதீ தாதீதம், வாச்சி யாதீ தாதீதம் ஆகிய சுத்த சன் மார்க்கம்.

மேற்படி மார்க்கத்தின் ஏகதேசம் அடியிற் குறிக்கும் அநுபவங்கள்: எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வகைத் தடையும் வாராத சுத்தமாதி ஞானதேக சித்தியும், அண்ட பிண்ட தத்துவங்களைச் சுதந்தரத்தில் நடத்தும் தனிப்பெரும் வல்லமையும், ஏம ரவுப்பிய பிரேதஜீவி தாதி சித்தியும், வஸ்துப் பிரத்யக்ஷானுபவ சித்தியும்—ஆகிய இவற்றை ஒருங்கே அடைவது மேற்குறித்த மார்க்கத்தின் முடிபு. ஒருவாறு.

சத் என்னும் சொல் பரிபாஷை என்பதற்குக் குழூஉக் குறியாக இதன் கீழ்வரும் சில மந்திர வாசக பத வர்ணாதிகளை உணர்க. காரண மாத்திரமாய் விளங்கா நின்ற விந்து நாத முதலியனவும், காரிய காரண மாத்திரமாய் விளங்கா நின்ற அம் அங் சிங் வங் மங் சிவா வசி ஓம் முதலியவும், காரிய மாத்திரமாய் விளங்காநின்ற ஹரி சச்சிதானந்தம் பரிபூரணம் ஜோதியுட்ஜோதி சிவயவசி சிவயநம நமசிவய நாராயணாயநம சரவணபவாயநம (முதலியவும்)—இவ்வண்ணம் குறித்த பரிபாஷைகளின்

உண்மை ஆன்ம அநுபவத்திலும் வகார தகார வித்தையினும் விளங்கும்.

மேலும், மேற்குறித்த வண்ணம் தத்துவங்களை உபாசித்தும், அர்ச்சித்தும், தத்து வாதீ தாதீதத்தைத் தியானித்தும், இடையில் ஜபித்தும், காணலயமாகச் சமாதிசெய்தும், தத்துவச் சேட்டைகளை அடக்கா நின்ற விரதமிருந்தும், சாதாரண யோக பாகத்தில் மூச்சடக்கியும் சாதகர்கள்—மேற்குறித்த வண்ணம்—செய்வார்கள். சாத்தியர்கட்கே—கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டைகூடல் என்னும் நான்கும் கடந்து (அவர்கள்) ஆரூடராக நிற்பதால்—சாதன மொன்றும் வேண்டுவதில்லை. மேற்படி சாத்தியர்களே சுத்த தேகிகள். அவர்கள் அநுபவத்தை விரிக்கில் பெருகும்.

## 49. கடவுள் ஏகம் அநேகம்

கடவுள் ஏகம் அனேகம் என்பதற்குப் பொருள்: சமயத்தில், சிவம் ஏகம் பிமாதிக ளநேகம்; மதத்தில், பிரமம் ஏகம் ஜீவர்கள் அநேகம்; சாதாரணத்தில், கடவுள் ஏகம் பசுக்கள் அநேகம்; சுத்த சன்மார்க்கத்தில், தனிக்கடவுள் ஏகம் அவ்வருளால் சுத்தமாதி ஞானதேகம் வேறுகப் பெற்ற ஞானிகள் அநேகம்—எனக் கொள்க.

## 50. கூடஸ்த பிரம ஐக்கியம்

மேலும், கேவல வேதாந்தத்தில் கூடஸ்த பிரம ஐக்கியத்தின் பொருள்: ஜீவ சைதன்யம், ஈசுர சைதன்யம், பிரம சைதன்யம், கூடஸ்த சைதன்யம், சர்வசாக்ஷி. இவற்றிற்குப் பிரதிநாமம் மேகாகாசம், ஜலாகாசம், கடாகாசம், தத்துவாகாசம், மஹாகாசம்

ஆக ஐந்து. தம்பப் பூச்சி முதல் மனுஷர்களில் மூடர் பரியந்தம் பாதந்திரர்கள், ஜீவ சைதன்யம். சுராசுரர் அறிவுடைய ஜீவர்கள் சுதந்திரர்கள், இவர்கள் ஈசுர சைதன்யம். காரியம் ரூபம் முதலியவற்றோடு கூடிய சுத்ததேகி பிரம சைதன்யம். காரண காரியம் ரூ பாரூபம் முதலியவற்றுட னின்ற பிரணவ தேகி கூடஸ்த சைதன்யம். காரணம் அரூபம் முதலிய(வாக நின்ற) ஞானதேகி சர்வசாக்ஷியெனக் கொள்க.

## 51. பௌதிகம் என்பதன் பொருள்

பௌதிக மென்பது லிங்கமாதி உபாசம் நூற்றிருபதிற்கும், பாஷாணமாதி சுச பாஷாணங்கட்கும், சுக்காதி ஓஷதி மூல பத்திர பீசங்கட்கும் பெயர். இஃது ஒருவாறு பூதகாரிய தேகமாதி தத்துவங்கட்கும் பெயர். பௌ-தீ-அகம்: பௌதீகம். பௌ மூடல், அகம் உள், தீ அக்கினி. ஆதலால் தீயை உள்ளடக்கியது பௌதீகம். தீ என்பது காரண உஷ்ணம்.

## 52. பூதம் என்பதன் பொருள்

பூதம் என்பது பூ-த-ம்: பூ அலர்ந்தது, த தடித்தது, ம் கலத்தல். ஆதலால், எங்கும் நிறைந்து அணுவாய்க் கலத்தல் பூதம்.

## 53. தத்துவம் என்பதன் பொருள்

தத்துவமென்பது—தத்-த்வம்: தத்துவம். தத் அது, அது வென்பது சிவம்; த்வம் அதின் தன்மை. ஆதலால், தத்துவம் என்பது சிவத்தின் தன்மை.

## 54. உண்மை நெறி

### (க) புருஷார்த்தம்

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவை யாவன: ஏமசித்தி, சாகாக்கல்வி, கடவுணிலை யறிந்து அம்மயமாதல், தத்துவநிக்கிரகம் ஆக ச.

### (உ) ஒழுக்கம்

இவை பெறுவதற்கு ஒழுக்கம் யாதெனில்: (அது) நான்கு வகைப்படும்: க. இந்திரியவொழுக்கம், உ. கரண வொழுக்கம், ந. ஜீவவொழுக்கம், ச. ஆன்ம வொழுக்கம்.

#### 1. இந்திரிய ஒழுக்கம்

இவற்றில் இந்திரிய வொழுக்கம் கன்மேந்திரிய (ஒழுக்க)ம் ஞானேந்திரிய (ஒழுக்க) மென இரு வகைப்பட்டது. கொடிய சொல் செவி புகாது நாத முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்; அசுத்த பரிச மில்லாது தயாவணமாகப் பரிசித்தல்; குரூர மாகப் பாராதிருத்தல்; உருசி விரும்பாதிருத்தல்; சுகந்தம் விரும்பாதிருத்தல்; இன்சொல் லாடல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்விதத் தந்திரத்தி லாவது தடை செய்தல்; பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்; ஜீவோபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும் (வேறு இடங் களிலும்) சஞ்சரித்தல்; நன் முயற்சியிற் கொடுத்த லெடுத்தலாதி செய்தல்; மலஜல உபாதிகளை அக் கிர மாதிக்கிரம மின்றி கிரமத்தில் நிற்கச் செய்வித் தல், எவ்விதமெனில், மிதாகாரத்தாலும் மிதபோகத் தாலும் செய்வித்தல், காலபேதத்தாலும் உஷ்ண பாசத்தாலுந் தடை நேர்ந்தால், ஔஷதி வகைகளா

லும் பௌதிக மூலங்களாலும் சரபேத அஸ்த பரிச தந்திரத்தாலும் மூலாங்கப் பிரணவ த்யான சங்கற்பத்தாலும் செய்வித்தல்; சுக்கிலத்தை அக்கிர மாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்—மந்ததரம், தீவிரதரம்—எவ்வகையிலுஞ் சுக்கிலம் வெளிப்படாமல் செய்வித்தல்; இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல், இதுபோல் உச்சி மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்; சஞ்சரிக்குங் காலத்தில் காலிற் கவசந் தரித்தல்; அழுக்காடையுடுத்தாதிருத்தல் (முதலியன இந்திரிய ஒழுக்கமாம்).

### 2. கரண ஒழுக்கம்

கரண வொழுக்க மாவது மனத்தைச் சிற்சபை என்னும் அறிவாகிருதி ஆக்கல்; இதன் பூர்வத்தில் புருவமத்தியி னிற்கச்செய்தல்; இதன்றி, துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்; சீவதோஷம் விசாரியாதிருத்தல்; தன்மதிப் பில்லாதிருத்தல்; இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவமய மாதல்; தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் (முதலியனவாம்).

### 3. ஜீவ ஒழுக்கம்

ஜீவ வொழுக்க மாவது ஆண்மனிதர் பெண் மனிதர் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி சமயம் மதம் ஆசிரமம் சூத்திரம் கோத்திரம் குலம் சாஸ்திரசம்பந்தம் தேசமார்க்கம் உயர்ந்தோர் தாழ்ந்தோ ரென்னும் பேதம் நீங்கி, எல்லவருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுவது.

### 4. ஆன்ம ஒழுக்கம்

ஆன்ம வொழுக்கமாவது யானை முதலெறும் பீறுகத் தோன்றிய ஜீவர்களினது சூக்குமம் தனித்

தலைவன் ஆதலால்—அவ்வச் சீவர்களில் ஜீவான்மாவே திருச்சபையாய் அதனுள் பரமான்மாவே பதியாய் நிற்பதால்—யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேதமற்று எல்லாந் தானாக நிற்றல்.

இவ்வண்ணம் நின்றால் மேற்குறித்த அரும்புருஷார்த்தங் கைகூடும் . . .[35] ஒருமை யென்பது தமது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில், தானே கூடும்; மற்ற இடத்தில், தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது. ஆங்கீரச ஹு கார்த்திகை மீ கசுஉ (இது எழுதியது.)[36]

## 55. பிண்டானுபவ லக்ஷணம்

மனித தேகத்தில் கோசத்திற்கு உ௦ அங்குலத்திற்குமேல் நாற்சதுர மான ஒரு பையுண்டு. அதில் கசு வயதளவும் உண்டாகும் இந்திரியம் ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான் மானச தடாகமென்று சொல்லுகின்றது. கசு-க்குமேல் சேரும் இந்திரியம் உறைந்த அந்த ஜலத்திற்கு மத்தியில் சேருகிறது. அப்படியாகச் சேர்ந்துகொண்டு வரும் இந்திரியம் பொன் வர்ணமாக விருக்கும். அது தாமரைப்பூவென்று சொல்லப்படும். அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றிலொரு பங்காக வெகு நேர்மையாக விருக்கும். அதன் வண்ணம் பொன்மயமா யிருக்கும். அதற்கு அதிஷ்டான தெய்வம் பிரமனென்று சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலம் அவருக்குச் சகல காலம் என்

---

35 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

36 இத்தேதிக் குறிப்பு இவற்றை எழுதிய அன்பரின் சொந்தக் குறிப்புப் போலும்.

றும் அடங்குங் காலம் கேவலகாலம் என்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலத்தில் செயற்கையானல் கருத்தரிக்கும். அது சிருட்டியென்று சொல்லப்படும்.

அதில் ஆவி யுண்டாகத் தொப்புளிலிருந்து ஒரு நாடி தோன்றி அதன் மத்தியில் முகந்துகொண்டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினி யிருக்கின்றது. அது மூலாக்னி என்று சொல்லப்படும். அது தொப்புளிலிருந்து உண்டாவதால் விஷ்ணு தொப்புளிலிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதன் மேல் ௨௨ அங்குலத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பையுண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் பால்போன்ற ஜலமயமாய் ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கின்றது. அதை க்ஷீராப்தி என்று சொல்லுகிறது. அந்தப் பையிலிருக்கும் பால் போன்ற ஜலத்தின்மேல் ஆலிலை வடிவையுடைய வயிற்றி னுட்பாகம் படிவதனல் அதே வண்ணமாக ஓராடை கட்டியிருக்கும். அதை ஆலிலையென்று சொல்கின்றது. அந்த ஆடையின்மேல் (ஒரு) நரம்பு வட்டமாய்த் தலைதூக்கி யிருக்கின்றது. அதைச் சேஷனென்று சொல்லுகின்றது. அந்தக் குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்புபோன்ற பச்சை மேனியா யொரு சத்தியுண்டு. அதை விஷ்ணுவென்றும், அச் சத்தியில் முன் பின் நடுவென்னும் இடத்தில் அதன் காரணச் சத்து பொன் வண்ணமாயும் அரித்திரா வண்ணமாயும் குங்கும வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றைச் சீதேவி பூதேவி நீளாதேவி யெனச் சொல்லு

கின்றது. மத்தியில் ஒரு சத்தி யிருப்பதால் விஷ்ணு மார்பில் லக்ஷ்மியை வைத்தா ரென்பது.

குண்டலிவட்டமான நாடி மத்தியிலுள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாய் இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும் ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூலமாய் அந்தச் சத்து மேலே செல்லும்போது பசுமை வண்ணமாகவும் கீழ்ச் செல்லும்போது பீத வண்ணமாகவும் செல்லுகின்றது. மேலே செல்லுவதினால் ஜீவர்களுக்கு ஜீவிப்பும் அதின் சாரம் கெட்டுக்கீழே செல்வதினால் ஜீவிப்பின்மையும் உண்டாகின்றது. மேலே செல்வதில் ஜீவிப்புண்டாகுவதால் காத்தல் தொழிலை உணர்த்துகின்றது. மேலும் மேலே செல்லுகின்றதை விஷ்ணு வைகுந்தம் போகின்றா ரென்றும் கீழே செல்கின்றபோது க்ஷீராப்தியில் இருக்கின்றா ரென்றும் சொல்லுகின்றது. கீழே செல்லும் நாடி முன் சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாய் பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும் இந்தச் சதுரமான பையின் வலப் பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாயிருக்கின்றது. அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக்கொண்டு அசத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்து விடுகின்றது. கிரகித்த சத்தை முன்சொன்ன க்ஷீராப்திப் பையில் சேர்க்கின்றது. இதை வடவாக்கினி என்று சொல்லுகின்றது. மேலும் இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரமமின்றிச் சமப்படுத்தி பிரளயம் வாராது காத்துக்கொண்டிருக்கிறது. இந்த உதராக்

னி குறைவுபட்டு க்ஷீராப்தியின் ஜலத்தின் தரங் கெடுமானால் நோயுண்டு.

இந்தப் பையாகிய ஸ்தானத்திற்குமேல் உ௨ அங்குலத்தில் இருதயத்தில் மலர்ந்த வாழைப்பூப் போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாயிருக்கும். இதைக் கைலாயமென்று சொல்லுகின்றது. இந்தப் பையுள் முன் சொன்ன காற்றில் பதிறுயிரங்கோடி பங்கி லொரு பங்காக வெகு நேர்மையாய் அக்கினி மயமாய் ஒரு ஆவி யிருக்கும். இதற்குக் காரணாக்கினி யென்று பெயர். இவ்வக்கினியைக் கால சந்திர ருத்திர மூர்த்தி யென்பர். இப்பையின் அருகில் இடப்புறத்தில் மலர்ந்த தாமரைப் பூப்போல் ஒரு பையுண்டு. அந்தப் பை பசுமை வண்ணமா யிருக்கும். அதற்கும் முன் சொன்ன வெண்மைப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய்க் காரணாக்கினி அதிகப்படுத்தாமலும் குறைவு படுத்தாமலும் சமப் படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பைக்கும் கீழிருக்கும் க்ஷீராப்திப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணங் கொடுத்து நிலையில் வைக்கும். இதனால் ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்ததாய்ச் சொல்லுகின்றது. இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும் பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் ருத்திரனைச் சம்ஹார கர்த்தா வென்று சொல்வது.

இந்த அக்கினிப் பையில் குண்டலி வட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்றாகப் பிரியும் கிளையுண்டு. அது மூல முதல் பிரமரந்திரம் வரையில் இடம் வலம் நடு வென்று கத்தரி மாறலாய்ப் பிராணாபானனுக்கு இடங்கொடுத்து ஊடுருவி நிற்கும். இந்

நரம்புகளுக்குச் சோம சூரி யாக்கினி யென்று பெயர்.

இஃ தன்றி இக் குண்டலி வட்ட நரம்பி னடியில் நின்று இரண்டு நரம்பு—வலத்தில் அஞ்சு கவருடைய தலையாயும் இடத்தில் ஆறு தலையுடைய கவராயும்—நிற்கின்றன. வலத்திலுள்ளது கணபதி யென்றும், இடத்திலுள்ளது சுப்பிரமணிய ரென்றும் பெயர் சொல்லுவது. மேற்படி ஐந்து கவருடைய நரம்பிற்கு அடியில் தலையெடுப்பான நரம்பு கீழ் நோக்கி கிருஷ்ணவர்ணமா யிருக்கும். இந்த நரம்பு இடைவிடாது அசைந்துகொண் டிருக்கும். இந்த அசைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் (இதற்குக்) கணபதியென்று பெயர். மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம் வலம் இரண்டிலும் சித்தி தத்துவம் புத்தி தத்துவம் உண்டு. இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்குக்கீழ் அனந்த வண்ணமானநாடி ஒன்றுண்டு. இதற்கு மயூரமென்று பெயர். இந்த நாடியின் அசைவால் எழுபத்தீராயிரம் (எஉ,000)நாடியும் அக்கிரம மின்றி நிலைபெறுகின்றபடியால், இதற்குச் சேனாதிபதி யென்றும் பெயர். மேலும் வலது புறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும் இடதுபுறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் அளவு வித்தியாசமிருப்பதால், இவர்களைச் சோதரர்களாகச் சொல்வதுமன்றி, மேற்படி ருத்திராம்சமாகவே சொல்லுகின்றது.

இருதயத்திற்குமேல் இரண்டரை அங்குல இடமான கண்டத்தில் மகேசுவரனும், அதற்குமேல் உ௦ அங்குல அண்ணாக்கில் சதாசிவமும், அதற்குமேல் உ௦ அங்குல உயரத்தில் புருவ மத்தியில் விந்துவும், அதற்குமேல் உ௦ அங்குலத்தில் நாத

மும், அதற்குமேல் ௨௦ அங்குலத்தில் பரவிந்துவும், அதற்குமேல் ௨௦ அங்குலத்தில் பரநாதமும் அதற்குமேல் ௨௦ அங்குலத்தில் திக்கிராந்தம் அதிக்கிராந்தம் துவாத சாந்தம் முதலானவைகளும், அதீதத்தில் சுத்த சிவமு முள. மகேசுவரஸ்தான முதல் விந்துஸ்தானம் வரையிலும் முன்போல் இடம் நாடி தொழில் வண்ணம் முதலியவுமுள்ளன. நாதஸ்தானந் தொட்டுத் துவாதசாந்தம் வரையில் அநுபவ வெளியாகிய ஆகாச பேதமயமாயிருக்கும். அதற்குமேல் அதிகாரண மாத்திரமாய் ஆன் மானுபவத்தில் விளங்கும்.

மேலும் பிரமஸ்தானந் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும் அதற்கு மேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியிற் பருத்து வரவர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய், ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக் காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்குச் சிவாகார பூரண ஸ்தம்ப மென்று பெயர்.

முன் சொன்ன இருதயாக்கினிப் பை அக்கிரமமாய் விரிந்து, விசேஷ அக்கினி ஜ்வாலை விசிரிம்பித்துக் கீழிருக்கும் க்ஷீராப்திப் பையிலிருக்கும் ஜலத்தைச் சுருட்டிக்கொள்ள, ஜீவனுக்கு மரணகாலம் நேரிடும். ஷை பை விரிவதற்கு ஆதாரம் அருந்தல் பொருந்தல். இவை சமமானால் மிருத்தியு வராது.

## 56. சிருட்டிஞாயம்

ஆகாசம் அனாதி. அதுபோல் அதற்குக் காரணமான பரமாகாச சொரூபமாகிய கடவுள் அனாதி.

அறுதியாகிய ஆகாசத்தில் காற்றும் அறுதி. அறுதியான வெளியில் காற்று எப்படி அறுதியோ, அப்படிக் கடவுளிடத்தில் அருட்சத்தி அறுதியாய் இருக்கின்றது. ஆகாயத்தில் அணுக்கள் நீக்கமற நிரம்பி யிருக்கின்றன. இதுபோல் கடவுள் சமூகத்தில்—ஆன்மாகாசத்தில்—அணுக்கள் சந்தானமயமாய் நிரம்பி யிருக்கின்றன. அந்த அணுக்களுக்கு ஆன்மா வென்றே பெயர்.

பூதாகாயத்தி லிருக்கும் சாதாரண அசாதாரண அணுக்கள் எழுவகையாய்ப் பிரியும். அவையாவன: வாலணு, திரவவணு, குருவணு, லகுவணு, அணு, பரமாணு, விபுவணு. மேற்படி அணுக்கள் அனந்த வண்ண பேதமாய் இருக்கும். இவற்றில் காரிய வணு காரியகாரண வணு காரண வணு என மூன்று வகையாய், பக்குவ அபக்குவ பக்கு வாபக்குவ மென நிற்கும். இவைபோல் ஆன்மாகாயமான கடவுள் சமூகத்தில் ஆன்மாக்களும் மூ வகையாய் நிற்கும். யாவையெனில்: பக்குவ ஆன்மா அபக்குவ ஆன்மா பக்கு வாபக்குவ ஆன்மா வென மூவகைப்படும். ஆகாயத்திலிருக்கும் அணுக்கள் மூன்று விதமானதற்குக் காரணம் அங்குள்ள காற்றே யாம். அதுபோல் ஆன்மாக்கள் மூ விதமானதற்குக் காரணம் கடவுள் சமூகத்திலுள்ள அருட் சத்தியே யாம்.

அப்படி மூ வகையான ஆன்மாக்களுக்கு—அருட்சத்தியின் சமூகத்தில் தோன்றிய இச்சை ஞானங் கிரியை யென்னும் பேதத்தால் ஆன்மாக்களுக்குத் தேகம் மூன்றுள. யாவையெனில்: கர்ம தேகம் பிரணவ தேகம் ஞானதேகம் என மூன்று விதம். அப்படி மூன்று தேகம் உண்டானதற்குக் காரணம்: பூத ஆகாயத்தி லுண்டான வாயு பேதத்தினால்

சோம சூரி யாக்கினி யென மூன்று வகை நிற்பன போலுணர்க. அந்த ஆகாயத்தை விரிக்கில் அனந்த பேதமாம். வாயுவின் பேதம் அதுபோ லனந்தம். ஒருவாறு அறுபத்துநான்கு கோடி பேதம். இவற்றில் அமுதபாகம் விஷபாகம் பூதபாகம் உஷ்ண பாகம் எனப் பல பேதப்படும்.

ஷடி அணுக்கள் அனந்தவண்ண மாதலால், அனந்த அணுக்கள் சேர்ந்து ஒரு வித்தாய், இவ்வித்து திரவஅணு சம்பந்தமாய் குரு அணுவோடு சேரும் போது, பூதகாரிய அணுவாகிய கிரண உஷ்ணத்தால் ஜீவிக்கும். ஜீவித்த ஔஷதி முதலியன இந்த ஞாயத்தால் வர்ணம் ருசி முதலிய பேதப் படுகின்றன. இவ்வண்ணமே பௌதிக பிண்ட வணுக்கள் காரண சூரிய உஷ்ணமாகிய ஜீவ உஷ்ணத்தால் வடிவமாய், பரம காரண தயையால் ஜீவிக்கின்றன. சில காலத்தில் வித்துக்க ளாதியாம். சில காலத்தில் விருக்ஷ மாதியாம். எல்லாவற்றிற்கும் ஆதியா யுள்ளது பூத காரிய அணு வாகிய சூரிய கிரணமே யாம்.

இவ்வண்ணமே, ஒரு காலத்தில் கடவுள் பிரேரகத்தால் அருட்சத்தி ஆன் மாகாசத்தில் விசிரிம்பிக்க, ஆன்மாக்கள் வெளிப்பட்டுப் பஞ்சகிருத்தியத் தொழிற்படும். மேற்படி ஆன்மாக்கள் வெளிப்பட்ட அக்கணமே, மேற்படி ஆகாயம் சந்தானமாதலால், ஆன்மாக்கள் நிரம்பி நிற்கும். ஆதலால் பஞ்சகிருத்தியம் எக்காலத்தும் தடையுறாது. ஆன்மாக்கள் தாழ்ந்த கதியடைவது அநாதி யியற்கை யல்ல; ஆதி செயற்கையே யாம். ஆணவம் அநாதி யியற்கையே யாம். இதன் ரஹஸ்யம் குருமுகமா யறிக.

## 57. பிரமாண்ட பகிரண்ட வியாபக சந்திராதித்திய கிரகண பரிச லக்ஷண விவரம்

இவ் வுலகமும் இவ் வுலகத்தினுள்ள சராசர பேதங்களில் முக்கியமாயுள்ள சரமாகிய ஜீவராசிகளும் கற்ப பேதமும் தோன்றி உய்யும் பொருட்டு, அநேகவித வாயுபேதங்கள் அநாதியில் கடவுளால் உண்டுபண்ணப்பட் டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை அமுதக்காற்றும் விஷக்காற்றும். (அவை) விசேஷ வியாபகமா யிருந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் அமுதக்காற்று பிரமாண்ட பகிரண்ட கடாகத்தில் விசேஷ வியாபகமாயும், இம்மகா அண்டத்திலும் பிண்ட ஜீவரிடத்திலும் ஏகதேச வியாபகமாயும் இருக்கின்றது. விஷக்காற்று ஷ௸ பிரமாண்டாதி கடாகத்தில்—ஏகதேசம் நிமிஷ காலம் அல்லது முகூர்த்தம், அசாதாரணத்தில் ஜாமம் வரையில்—வியாபகமாயும், இம்மகா அண்டாதி ஜீவராசிகளிடத்தில் விசேஷ வியாபகமாயும் இருந்துகொண்டிருக்கிறது.

பிரமாண்டாதிகளில் அமுதக்காற்று விசேஷ வியாபகமா யுள்ளதால், அவ் வண்டங்களி லுள்ள சூரிய சந்திர உடுக்கள் முதலியவைகளும் சொல்ப காலத்தில் அழிவடைதலின்றி இருக்கின்றன. விஷக்காற்று ஏகதேச வியாபக மாதலால் (உம்), கற்ப காலத்தில் வியாப்பியமாயும் வியாபகமாயும் இருத்தலால்(உம்), அந்தக்காலங்களில் (அவை) நஷ்டப்படுகின்றன.

ஷ௸ விஷக்காற்று கருமைவண்ணமாயும் செம்மைவண்ணமாயும் இரண்டு பாகமாய்ப் பிரியும். இவைகளை இராகு கேதுக்க ளென வழங்குகின்றனர்.

இது ஒரு முகூர்த்தம் ஒரு ஜாமம் . . .[37] அதற்குமேல் இவ்வண்ணமாய், இவ்வண்டகணிதப்படி, அவ்வண்டங்களிற் கணிதகாலத்தில் வியாபகமா யிருப்பது தான் சந்திராதித்த கிரஹண தோஷ காலம். தோஷ காலமென்பது பிரகாசமின்றி இருள் வண்ணமாய்ச் சில காலத்தில் முற்றும் மறைந்தும் சில காலத்தில் ஏகதேசம் மறைந்தும் இருப்பதால், இவ்வண்ட புருஷனுக்குக் காரணஸ்தானமாகிய சந்திரனும் ஜீவஸ்தானமாகிய சூரியனும் பிரகாசம் மழுங்கு கின்றபடியால் தோஷ மெனப் பெயர். மேலும் தோஷம் என்பது இருள், அறியாமை, அஞ்ஞானம். விஷக்காற்று வியாபகமா யுள்ளது இவ்வண்டத்தி லும் ஜீவர்களிடத்திலும் ஆதலால், ஜீவகோடிராசி கள் சொல்பத்தில் அடிக்கடி நஷ்டப்பட்டுக்கொண் டிருக்கின்றன.

அமுதக்காற்று இவ்வண்டத்தில் இரவில் அருணோதயந் தொடங்கி உதயபரியந்தம் வியாபகமாய் இருக்கின்றது. அக்காலத்தில் ஜீவர்கள் நன்முயற் சியிலிருப்பது விசேஷ நலம். தேகாதி பிண்டத்தில் ஷை அமுதக்காற்று வியாப்பியமாயிருக்கும். ஒரு கால் ஒரு க்ஷணநேரம் அந்தக்காற்று வியாபகமா யிருக்குங்கால், ஜீவர்களுக்கு இதுவரையில் தாங்க ளறியாததான கடவுள் விளக்கம் உண்டாகும். ஷை காற்று வியாபகம் ஏகதேசமு மில்லாவிடில் ஜீவர் கள் விஷக்காற்றினுல் சதா வியாபகமடைதலில், இந் தச் சொல்ப ஜீவிப்பும் விர்த்திக்கு வரமாட்டாது. அமுதக்காற்று வியாப்பியமன்றி வியாபகமா யிருக் குங் காலத்தில், ஜீவர்களுக்கு அறிவு விளக்கம் மன நெகிழ்ச்சி இந்திரிய அடக்கம் ஈசுரபத்தி முதலிய

---

37 இங்குக் கருத்துத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

வும் விளங்கும். அக் காலத்தை அமுதக்காற்றின் வியாபக காலமென்று அறியவேண்டும். இதன்றி இருண்மயமாய் முன்பின் தோன்றாத அறிவின்றி யிருக்குங்காலம் விஷக்காற்று வியாபகமா யிருக்குங் காலமென் றறியவேண்டும்.

அண்டத்தில் சந்திராதித்த கிரஹண தோஷம் போல் இப்பிண்டத்தில் கிரஹண தோஷம் யாதெனில்: பிண்ட புருஷனுக்குப் புறமாகிய காரணமென்னும் சந்திரனாகிய தோற்றும் அறிவு, இரும்பில் துரிசு ஏறுவதுபோல், விஷய வாசனையி லழுந்தி ஏகதேசப் பிரகாச விளக்கமுடையதுதான் சந்திர கிரஹணம். இஃது அறியாமை. சூரிய கிரஹணமென்பது: அகப்புறமாகிய ஜீவனென்னும் சூரியனாகிய தோற்றுவிக்கும் அறிவு, செம்பிற் களிம் பேறுவது போல், விஷய வாசனை மயமாய் யாதுந் தோன்றாது அறிவின்றி நிற்குங் காலம் சூரியகிரஹணம். இஃது மாயாசிருட்டிக்கு இயற்கையானாலும், இரும்பையும் தாமிரத்தையும் பரிசனாதி வேதிகளால் ரவுப்பியாதி ஏமங்கள் செய்வதுபோல், நன்முயற்சியாகிய ஜீவகாருண்ய மயமாய் பரிச்சியஞ் செய்தால் மேற்படிதுரிசு நீங்கும். மேலும் ஆசாரியர் அநுக்கிரகத்தாலும் நீங்கும். இது பிண்டாண்ட கிரஹண சித்தாந்தம்.

## 58. வந்தனமுறை

ஆசாரியனுக்குச் சிஷ்யன் வந்தனஞ் செய்வதற்கும், பெரியவர்களுக்குச் சிறியவர் வந்தனஞ் செய்வதற்கும், எல்லவர்க்கும் ஞானிகள் யோகிகள் சாந்தர்கள் வந்தனஞ் செய்வதற்கும் காரணமும் அதன் பிரயோஜனமும் யாதெனில்:—

வந்தனஞ் செய்வது ஆயுள் விர்த்திக்கும் அறிவு விளக்கத்திற்கும் ஆதாரமா யிருக்கின்றது. சிஷ்ய

னுக்கும் சிறியோருக்கும் ஆசாரியனும் பெரியோ ரும் வந்தனஞ் செய்தால், ஆயுள் விர்த்தியும் அறிவு விளக்கமும் குறைவாகும்.

இதற்குச் சம்பந்தம் யாதெனில்: ஒரு ஜீவனுக் கும் திருவிளக்குக்கும் சம்பந்த மிருக்கின்றது. எப்படியெனில்: ஒரு திருவிளக்கு எரிவதற்கு நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை உதவு கிறது போல், ஒரு ஜீவனுக்கு ஆன்ம விளக்கத் துக்கும் மலப்போக்குக்கும் ஆதாரமான நிராஹங் காரமென்கிற நல்ல உஷ்ண சம்பந்தமான தைல த்தை ஊட்டி விளக்கு வைக்கவேண்டியது. ஆனால் மேற்சொன்ன இரண்டுஞ் சந்திக்கும் பொது நோக்கமான[38] கெட்ட உஷ்ணத்தைச் சம்பந்தப் படுத்தினால் லாபஞ் செய்யாதோவெனின், செய் யாது. திருவிளக்கு ஜல உஷ்ணத்தையும் காற்றி னுண்டாக வேண்டிய உஷ்ணத்திற்கு மேற்பட்ட அதிக உஷ்ணத்தையும் பெற்றால் கெடும். அது போல், ஜீவனுக்கு மும்மலத்தாலாகிய உஷ்ணத்தை யும் இன்னும் பற்பல பேதமுள்ள கெட்ட உஷ் ணத்தையும் சம்பந்தப்படுத்தினால், (அது) கெட் டுப் போய்விடும். இது யாவருக்கும் திருஷ்டாந்தமா யிருக்கிற தல்லவா?

இவற்றால் ஆசாரியனையும் பெரியவர்களையும் சிஷ்யனும் சிறியவர்களும் வணங்கினால் ஆயுள் விருத்தியும், சிஷ்யனையும் சிறுவர்களையும் ஆசாரிய ரும் பெரியவர்களும் வணங்கினால் ஆயுள் குறை வும் உண்டாகுமென்கிற சம்பந்தம் எப்படியெனில்: திருவிளக்கு எரிய—சாதாரண காலத்தில் அதம

---

38 இங்குச் சொற்கள் குறைவுற்றோ அல்லது பிறழ்ச்சியுற்றோ இருக்கின்றன போலும்.

பக்ஷத்துக்குரிய கொட்டையெண்ணெய் இலுப்பை யெண்ணெய் முதலியவற்றால் விளக்கு வைக்கின்றதும், கொஞ்சம் விசேஷகாலத்தில் நல்லெண்ணெயினால் விளக்கு வைக்கின்றதும், கடவுள் சந்நிதானத்திலும் ஞானாசாரியர் சந்நிதானத்திலும் பசுவின் நெய்யிட்டு விசேஷ விளக்கத்தை (யுடைய) விளக்கு வைக்கின்றதும் போல், கொட்டையெண்ணெய் முதலாகியதற் கொப்பாகிய ஒரு ஜீவன் அதமபக்ஷம் மத்திமபக்ஷத்திற் குரிய ஒவ்வொரு மலத்தினா லுண்டாகிய தோஷத்தைப் போக்கிக் கொள்வதில் ஆத்ம விளக்கத்திற்கு ஆதாரமாகிறதும், விசேஷமாய் கடவுளாதி ஆசாரியர்சந்நிதானத்தில் வைக்கும் நெய்விளக்குக்கு ஒப்பான மும்மலப் போக்கான சுத்த நிராஹங்கார மென்கிற தைலத்தை ஆன்மாவுக்கு உண்டாக்கி வைப்பதில் ஜீவவிர்த்தியு முண்டாகின்றது.[39] திருவிளக்கு—அதன் உஷ்ண சம்பந்தமான தைலங்களைவிட்டுக் கொண்டு வருவதில் விளக்கு எரிந்துகொண்டிருப்பது போலும், அதில் நல்லெண்ணெய் நெய் முதலியவை விட்டெரிப்பதில் விசேஷப் பிரகாசமாய் விளக்கு எரிவது போலும்—ஜீவனுக்கு அதன் உஷ்ண சம்பந்தமான மும்மலப்போக்கை யுண்டுபண்ணுவதில் ஜீவிப்பு விர்த்தியுண்டாகிறதும், விசேஷமாய் நிராஹங்காரமென்கின்ற சுத்த உஷ்ணத்தை யுண்டுபண்ணிக்கொண்டு வருவதில் ஜீவனுக்கு விசேஷ விளக்கத்திற்குரிய ஜீவிப்பிருந்து கொண்டிருக்கின்றதும். இதனால்தான் தைலத்தைக் கொண்டிருக்கிற திருவிளக்கு விர்த்தியாவதுபோல் மும்மலப் போக்

---

39 இங்குச் சொற்கள் குறைவுற்றோ அல்லது பிறழ்ச்சியுற்றோ இருக்கின்றன போலும்.

கைக்கொண்ட ஜீவனும் ஆயுள் விருத்தியடைகின்றது. ஆதலால் ஆசாரியரையும் பெரியவர்களையும் சிஷ்யனும் சிறியோரும் வணங்குவதில் நிரஹங்கார சந்தி பெறுவதனால் ஜீவனுக்கு ஆயுள் விர்த்தியுண்டாகின்றது.

சிஷ்யனையும் சிறியோரையும் ஆசாரியரும் பெரியோரும் வணங்குவதில் ஆயுட்குறைவு எப்படியுண்டாவதெனின்: ஒரு மணிவரையில் எரியத்தக்க எண்ணெயிட்டு எரிவித்திருக்கும் சிறிய திருவிளக்குக் சமீபத்தில் ஒரு பெரிய பந்தத்திற்கு ஒப்பான ஒரு பெரிய திருவிளக்கு வைத்து எரித்தால், க மணி நேரம் எரியத்தக்க அந்தத் தீப உஷ்ணத்தைப் பெரிய தீபம் கிரஹித்துக்கொள்வதில் ஒருமணி நேரம் எரியவேண்டிய தீபம் அரை மணிக்குள் எரிந்துவிடுவதுபோல், ஆசாரியனும் பெரியோரும் சிஷ்யனையும் சிறியோரையும் வணங்குவதில், பெரிய தீவர்த்திக் கொப்பான ஆசாரியர் பெரியோர் என்கின்ற யோக்கியதையோடு, நிர்(?) மல ரஹிதமான நிரஹங்கார மென்கின்ற மத்தாப்புக் கொப்பான விளக்கத்தை சிறிய விளக்கான சிஷ்யன் சிறியோர் முன்னிலைக்கு விளக்கி வைப்பதில்; சின்ன விளக்கடைந்த குறைவைப்போல் ஜீவனுடைய ஜீவவிர்த்தியைக் குறைக்கின்றது.[40] இந்த ஞாயத்தால், ஆசாரியனும் பெரியோரும் சிஷ்யனையும் சிறியோரையும் வணங்கினால், ஆயுள் குறைவை அடையுமென்று திருஷ்டாந்தமா யிருக்கிறது.

ஆசாரியன் பெரியோர் ஞானி யோகி இவர்கள் சிறியோரையும் சிஷ்யரையும் வணங்கினால் ஆயுள்

---

40 இந்த வாக்கியத்தில் சொற்கள் பிறழ்ச்சியுற்றுக் கருத்து விளக்கமற் றிருக்கிறது போலும்.

குறைவு வரமாட்டாது என்றதெப்படியெனின்:— மேற்குறித்தவர்களது விளக்கத்துக்கு மேற்பட்ட விளக்கம் இவர்களுக்கு அகத்திலுண்டாகுமாறைல் ஆயுள் விர்த்திக்குக் குறைவு வரமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தம்: சமயச் சார்பில் பரமசிவம் சுப்பிரமணிய சுவாமியிடத்தில் அநுக்கிரகம் பெற்றிருப்பதும், ஞானிகள் மாட்டுச் சம்பந்த சுவாமிகளை அந்தச் சுவாமிகளின் தாய்தந்தையர் வணங்கியதும் அப்பர்சுவாமி முதலியோரும் வணங்கியதுமுணர்க. மேலும் சமயமதாதீத ஞானிகளுக்கும் சமயமதங்கட்குட்பட்ட பெரியோர்களுக்கும் இவ்வுலகத்தின் கண்ணுள்ள ஜீவராசிகளின் தேகமாதி யாவும் தமது பதியின் தூலசூக்குமமாதலாலும், தமது பரிபூரண ஆன்ம அநுபவத்தின்கண் தோன்றிய அநுபவங்களாகிய இயற்கை யுண்மை ஏகதேசங்களாதலாலும், எல்லாம் அவர்கட்குத் தாமன்றி பிரண்டற் றிருப்பதாலும், எல்லாவற்றையும் இவர்கள் அத்துவிதத்தில் சிவமெனக் கண்டுணர்தலாலும்—இவர்கள் சென்றவிடமெல்லாம் கண்டு சிவமாயும் தாமாயும் நீக்கமறக் கைகூப்புவது இயற்கை.

ஆதலால், மலசகிதர்களான ஜீவர்கள் மதிப்புடையவர்களாதலால், ஆசாரிய சிஷ்ய பாவத்தில் வணங்கலாதி தொழிலால் ஜீவிப்பின்மையும் விர்த்தியும் உண்டாகின்றன. மகான்கள் கைகூப்புவதில் ஆன்மவிர்த்தி குறைவுபடாது; ஜீவர்களின் அறிவு விளங்கும். ஏனெனில்: அவர்கள் சங்கல்பம் சுத்தமாதலால், இவர்களை மேலேற்றும்.

**௯. சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள் முடிந்தன.**

## ரு. சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைச் சிறு குறிப்புகள்[41]

---

### 1. பத்தி

பத்தி என்பது மன நெகிழ்ச்சி மன வுருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி ஆன்ம வுருக்கம். ஈசுவரபத்தி என்பது எல்லா வுயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதல்.

ஜீவகாருண்ய முண்டானால் அருள் உண்டாகும்; அருள் உண்டானால் அன்புண்டாகும்; அன்புண்டானால் சிவானுபவம் உண்டாகும். அந்தக்கரண சுத்தியின் பிரயோஜனம் பத்தியை விளைவிப்பது.[42]

### 2. இலக்ஷணம்

இலக்ஷணம் அடையாளம்; இலக்ஷியம் அடையாளத்தை உடையது; அங்கம் இலக்ஷணம்.[43]

---

41 ௩-வது பிரிவைப் பற்றிய அடிக்குறிப்பைப் பார்க்க. அங்குக் குறித்திருக்கும் "திருவருட் பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்—சன்மார்க்க ஒழுக்கத் திருநெறி" என்னும் தலைப்பின் கீழேயே இந்தக் குறிப்புகளும் காணப்படுகின்றன. இவை வேறு சிலரால் அவ்வச் சமயங்களில் எடுத்த குறிப்புகள் போலும்: பெருங் குறிப்பில் இல்லாத அரிய குறிப்புகள் இவற்றில் பல இடங்களில் உள்ளன.

42 30-ம் பக்கம் பார்க்க.

43 55-ம் பக்கம் பார்க்க.

## 3. தயவு

தயவு சுத்தம், வெள்ளைவருணம், ஞானம். தயவு அருள், காருண்ணியம்.[44]

## 4. காவிவேஷ்டி

காவி வேஷ்டி தரிப்பது தயவுக்கு விரோதமானவைகளை ஜெயிப்பதற் கடையாளம்.[45]

## 5. ஜீவகாருண்யமும் சித்தியும்

நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு, அவர் எழுந்தருளி யிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லது வேறு வகையா லடைவது அரிது. அவ்வன்பு ஜீவகாருண்ணியத்தா லல்லது, வேறு வகையில் வாராது. ஜீவகாருண்ணியத்தின் லாபமே அன்பு. இந்த ஜீவகாருண்ணியம் உண்டாவதற்கு மார்க்கம் யாதெனில்: கடவுளினது பெருமையையும் வல்லமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தல்தான். அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாமல் நடத்தலே ஜீவகாருண்ணியம். இதுதான் சித்தி[46] பெறுவதற்கு முதற் படியாக விருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.[47]

## 6. ஜாக்கிரதை

ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம்—இந்த நான்கிலும் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இவற்றில் முக்கியமானவை ஆகாரம் மைதுனம்.

---

44, 45 31-ம் பக்கம் பார்க்க.

46 " முத்தி " என்று ௩-வது பிரிவாகிய பெருங் குறிப்பில் காண்கிறது.

47 22-ம் பக்கம் பார்க்க.

இவற்றிலும் முக்கியமானது மைதுனம். இதனள வில் ஒரு மனிதன் தன்னை ஸர்வ ஜாக்கிரதையுடன் காக்கவேண்டும். இல்லையாயின் அதி சீக்கிரத்தில் மரண மடைவான்; சந்தேகமில்லை. இல்வாழ்வா னுக்கு மைதுனம் ஊற்றுக்கேணி நியாயத்தை யுடையது.[48]

## 7. கரிசலாங்கண்ணியும் தூதுளையும்

கரிசலாங்கண்ணியைப் பச்சையாகவாவது அல் லது சமையல் செய்தாவது தினந்தோறும் அனுஷ் டானம் செய்துவரவேண்டும்: தேகம் திடமுள்ள தாகி நெடு நாளைக்கிருக்கும். தூதுளையையு மப் படியே சேர்த்துக்கொண்டு வந்தால், புத்தியை விகாசப்படுத்தும்.[49]

## 8. சிவம்

சிவம் என்பதற்குப் பொருள் ஸச்சிதானந்தம். ஸச்சிதாநந்த மென்பது ஸத்து சித்து ஆனந்தம். சி சத்து, வ சித்து, ம் ஆனந்தம். சி எல்லாம் உள்ள தாய் விளங்குவது, வ எல்லாம் விளங்குவதா யுள்ள து, ம் இந்த இரண்டினாலும் நிரம்பிய இன்பம்.[50]

## 9. பொன்னும் மகத்துவமும்

ஒன்பது மாற்றுக்கு மேற்பட்ட பொன்னால் செய்த விக்கிரகங்கள் வைத்திருக்கும் தேவாலயங் களில் மகத்துவங்க ளுண்டாகும். மகத்துவத்தின் உயர்வு தாழ்வு பொன்னினது மாற் றுயர்வு தாழ் வாகவே யிருக்கும். மாற் றுயர்ந்த தங்கரேக்கில் பஞ்சாக்ஷரத்தை அடைத்து விக்கிரகத்தின் அடி

48 22-ம் பக்கம் பார்க்க. 49 25-ம் பக்கம் பார்க்க.

50 26-ம் பக்கம் பார்க்க.

யில்லைவைக்க மகத்துவங்க ளுண்டாகும். இது ரகசியம்.[51]

## 10. புராண ஹிருதயம்

பெரிய புராணத்திற் குறித்த ௬௩ நாயன்மார்களும் தத்துவங்களே ஒழிய வேறல்ல. அதை அதை விசாரித்து அநுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். கணபதி சுப்பிரமணியசுவாமிகளும் தத்துவங்களே தவிர வேறல்ல. புராணங்களி னிருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே. இதன் உண்மை சுத்த சன்மார்க்கத்தில் விவரமாய் வெளியாகும்.[52]

## 11. தயவுக்குத் தடைகள்

சூரபத்மனுடைய யுத்தம் முழுமையும் தத்துவ சம்மாரமே. சுப்பிரமணியர் விநாயகர் மயிலின்மேலும் பெருச்சாளியின் மேலும் ஏறினர்களென்கிற தாத்பர்யம் வேறு. அது தெரியாமலக்தச் சுவாமிகளைத் திருவிழாக் காலத்தில் வாகனங்களின் மேல் ஏற்றுதல் தெரியாமை. தத்துவ நியாயத்தை அநுசரித்துச் சமயங்க ளேற்படுத்தப்பட் டிருக்கின்றன. தொழில் நியாயத்தை அனுசரித்து ஜாதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமய ஏற்பாடு ஜாதி ஏற்பாடு முதலியவைகள் ஆதலால், இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெற முடியாது.[53]

---

51 65-ம் பக்கம் பார்க்க. 52 32-ம் பக்கம் பார்க்க.

53 30, 31, 32-ம் பக்கங்கள் பார்க்க.

## 12. சன்மார்க்க சங்கம்

சமரச வேத சன்மார்க்க சங்கமென்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூலின் முடிவான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்ட மென்று கொள்க. மார்க்கம் நான்காவன: தாஸமார்க்கம், சத்புத்திர மார்க்கம், மித்திர மார்க்கம், சன்மார்க்கம்.[54]

## 13. சன்னியாசம்

மூவாசைகளில் விசேஷ பற்றுள்ளவர்க ளாகித் தயை யில்லாத கடினசித்தர்கள் சன்னியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். அக் குற்றத்தை நீக்கினவர்கள் சன்னியாசம் செய்துகொள்ள வேண்டுவதில்லை. குடும்ப சன்னியாசிகளா யிருக்கலாம். தனேஷணம் தாரேஷணம் புத்திரேஷணம். . .[55]

## 14. கற்பபேதம்

கற்பபேதமென்பது கடவுள் ரிஷப வாகன ஆரூடராய் உலகத்தி லெழுந்தருளிக் காட்சி கொடுத்து அருளுங் காலம். ரிஷப மென்கிறதற்குப் பொருள் தரும சொரூபம், காருண்ணியம், தயை.[56]

## 15. ஜீவஸ்தானம்

ஜீவ னிருக்கிற ஸ்தானம் ௩-ல் முக்கிய ஸ்தானம் ௨. அவை சிரசு கண்டம். சிரத்திலிருக்கிற ஜீவ னிறக்கிற தில்லை, கண்டத்திலிருக்கிற ஜீவன் இறக்கும்.[57]

---

54 65-ம் பக்கம் பார்க்க.

55 இங்கு வாக்கியம் முடிவு படுத்தாது விடப்பட்டிருக்கிறது. 31-ம் பக்கம் பார்க்க.

56 31-ம் பக்கம் பார்க்க. 57 45-ம் பக்கம் பார்க்க.

## 16. காரணம்

காரண மென்பது கரண சம்பந்த முடையது. கரண மென்பது ஒற்றுமை வேற்றுமைத் தொழில் தன்மை யுடையது, மட்குடத்தைப்போல்.[58]

## 17. சாகாத கல்வி

வேதங்கள் முக்கியம் சாகாத கல்வியைச் சொல்லி யிருக்கின்றன. தேவர் குறளில் (உம்) முதல் அதி காரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லி யிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.[59]

## 18. கடவுள் மயமாவது

ஜீவ காருண்ணியத்தால் பிரமாவினுடைய ஆயு சும், பாசவைராக்கியத்தால் விட்டுணுவுடைய ஆயு சும், ஈசுரபத்தியால் ருத்திரனாயுசும், பிரமஞானத் தால் என்று மழியாத சுவர்ண தேக முதலியவை யும் பெற்றுக் கடவுள் மயமாகலாம்.[60]

## 19. தயவும் கடவுளும்

கடவுள் சர்வஜீவ தயாபரர். ஆகையால் சர்வ வல்லப முடையவர். அதுபோல் நம்மையும் சர்வ ஜீவ தயையுடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி செய்வார். ஞானிக்குத் தயை அதிகப்பட் டிருப்பதால், (அவர்) இறந்தவர் களை யெழுப்புதல் முதலிய வற்புதங்களைச் செய்யும் வல்லப முடையவரா யிருக்கின்றார். யாரிடத்தில் தயவு அதிகப்பட் டிருக்கின்றதோ, அவரிடத்தில் கடவுளிருக்கின்றார். அந்தத் தயை யில்லாதவர்க

58 55-ம் பக்கம் பார்க்க. 59 64-ம் பக்கம் பார்க்க.

60 29-ம் பக்கம் பார்க்க.

ளிடத்துக் கடவுளிருந்து மில்லாமையா யிருக்கிறார். கடவுளிடத்தில் சதா அன்பும் பத்தியும் செலுத்த வேண்டும்.[61]

## 20. சிவ என்பதன் பொருள்

சிவ என்பதன் பொருள் அறுதியாய் மலமில்லாத சர்வ வல்லபமுடையது. சி என்பது அறுதியாய் மலமில்லாதது, வ என்பது சர்வ வல்லபமுடையது.[62]

## 21. சுவர்க்க நரகம்

மனித தேகமே சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம். பிரமபதம் விட்டுணுபதம் ருத்திரபதம் மயேசுரபதம் சதாசிவபத முதலிய பதங்களின் இடம் இந்த மனித தேகத்தில் கண்டம் முதல் உச்சிவரையில். இந்தப் பதங்களுக்குச் சுவர்க்கம் என்று பெயர். நரகம் நரகாதிகளுக் கிடம் உந்தி முதல் குத பரியந்தம். இயம னிருக்கு மிடம் குதத்திற்கு இடது பாகம்.[63]

## 22. கலை

பெண்பாகத்தில் கலை ச, ஆண்பாகத்தில் கலை ௯, ஆகக் கலை எ. ஒவ்வொரு கலையில் ஒவ்வொரு தாது அணுவாய்ச் சேர்ந்து எ-வது கலையில் கரு சம்பூரணமாய்ச் சப்த தாதுக்களும் கூடிய பின் பிண்டமாகும்.[64]

## 23. பிறப்பு

பிறப்பு எ என்பது ஒவ்வொரு தேகத்திலும் எழு பிறப்பு. அதாவது கர்ப்பத்தில் ௫ மாதம்

---

61 30-ம் பக்கம் பார்க்க. 62 26-ம் பக்கம் பார்க்க.
63 45-ம் பக்கம் பார்க்க. 64 42-ம் பக்கம் பார்க்க.

வரையில் குழவியாக விருப்பது க, அவயவாதி உற்பத்திகாலம் க, பிண்டம் வெளிப்பட்ட காலம் க, குழந்தைப் பருவம் க, பாலப் பருவம் க, குமாரப் பருவம் க, விர்த்தாப்பியப் பருவம் க, ஆகப் பிறவி எ. தாவர முதலிய எழுவகைத் தோற்றத்திலும் ஒவ்வொன்றில் எழு பிறவி யுண்டு. ஒரு பிறப்பில் இறந்தால், ஒரு கற்பகாலம் வரையில் தோற்ற மில்லாமல் மண்ணில் மறைந்திருக்கும். மறு கல்பத்தின்தான் மறுபடியுந் தோன்ற வேண்டும். காரணப் பிறப்பு எ, சூட்சுமப் பிறப்பு எ, தூலப்பிறப்பு எ. அன்றியும், சாக்கிரப் பிறப்பு க, சொப்பனப்பிறப்பு க, சுழுத்திப்பிறப்பு க, சாக்கிரத்தில் சொப்பனப் பிறப்பு க, சாக்கிரத்தில் சுழுத்திப் பிறப்பு க, சொப்பனத்தில் சொப்பனப் பிறப்பு க, சொப்பனத்தில் சுழுத்திப் பிறப்பு க, ஆக எ. இதன்றி மனோ சங்கற்ப மெல்லாம் பிறப்புக்களாம்.[65]

## 24. கோபம்

சினம் வெகுளி யென்பவற்றின் பொருள். சினம் உள்வேக்காடு, புடஞாயம் போல். இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டஞ் செய்யும். வெகுளி மீசை துடித்தல், கண் சிவத்தல், கை கால் உடம்பு துடித்தல் முதலாகியவற்றை வெளிப்படையாகக் காட்டுதல். இதுவும் ஆயுளை நஷ்டம்செய்யும். ஆகையால் எந்த வகையிலுங் கோபங் கூடாது. அதை அவசியம் ஒழிக்கவேண்டியது.[66]

65 48-ம் பக்கம் பார்க்க. 66 54-ம் பக்கம் பார்க்க.

## 25. காமக் குரோதங்கள்

காமக் குரோதாதிகள் முதலிய பெருங் குறைகளை அவசியம் நீக்கவேண்டியது.[67]

## 26. அதிதீவிர பக்குவி

சீவன் என்கிற தீபத்துக்குச் சுக்கிலம் திரி, இரத்தம் எண்ணெய். ஆகையால் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டிச் செலவு செய்துவிட்டால் ஆயுசு நஷ்டமாய் விடும். ஆனால் சிட்டத்தை மாத்திரம் எடுத்துவிட வேண்டியது. அதாவது கசு தினத்திற்கு ஒரு தரம் தேக சம்பந்தஞ் செய்து ஆபாசப்பட்ட சுக்கிலத்தை வெளிப்படுத்திவிட வேண்டும். ஆசானுடைய அல்லது ஆண்டவருடைய திருவடியில் சதா ஞாபக முடையவனுக்குக் கோசத்தடிப் புண்டாகாது. ஆகையால், தேகசம்பந்தம் ஏகதேசத்திற் செய்யலாமென்றது மந்ததரத்தை யுடையவனுக்கே யன்றி, அதிதீவிர பக்குவிக் கல்ல.[68]

## 27. சாகாக் கல்வி

தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விர்த்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு உ௨ நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால், அவன் ஆயிரம் வருடஞ் சீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்துகொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.[69]

---

67 54-ம் பக்கம் பார்க்க. 68 23, 24-ம் பக்கங்கள் பார்க்க.

69 48-ம் பக்கம் பார்க்க.

## 28. ஆன்மாவும் ஜீவனும்

ஆன்மா தனித்தே யிருக்கும். ஜீவன் மன முத லாகிய அந்தக்கரணக் கூட்டத்தின் மத்தியி லிருக் கும்.[70]

## 29. நினைப்பு மறைப்பு

இந்த ஜீவன் அக்கினியின் சூரிய பாகத்தி லுண் டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது நினைப் பும், அக்கினியின் சந்திரபாகத்தில் உண்டாகுங் காற்றினால் அசைக்கப்படும்போது மறைப்பும் உண் டாகின்றன. இதுதான் நினைப்பு மறைப்பு உண்டாவ தற்குக் காரணம்.[71]

## 30. மனிதரும் தேவரும்

அறிவினது உயர்ச்சியினாலும் தாழ்ச்சியினாலும் தேவரென்றும் மனிதரென்றும்சொல்லப்பட்டதே தவிர வேறே யெந்தக் காரணத்தினாலும் அல்ல. ஆனால் தயை விசேஷ மிருக்க வேண்டிய தென்பது அறிவு உயர்ச்சியி லடங்கிவிட்டது. தேவர்களுக்கு சுகை யென்பது ஈகைபற்றிய தயை விசேஷத்தைக் குறித்துச் சொன்னதே தவிர வேறல்ல. ஆகை யால் தயவே வடிவமாக இருக்கிறவர்களே புண் ணிய தேகிகள். அவர்களே தேவர்களு மாவர்.[72]

## 31. ஜீவனும் தீபமும்

இரவில் தீபமில்லாத விடத்தில் இருக்கப்படாது. ஏனெனில், அப்படியிருந்தால், அது ஆயுசு நஷ்டத் தை உண்டுபண்ணும். ஆகையால் நாம் வாழ்கிற வீட்

---

70 45-ம் பக்கம் பார்க்க. 71 38-ம் பக்கம் பார்க்க.

72 47-ம் பக்கம் பார்க்க.

டில் தீபத்தை வைத்து ஆயுசை விர்த்திசெய்து கொள்ளவேண்டும். வீட்டி லெந்த விடத்திலும்தீபம் வைத் திருக்கவேண்டியது அவசியம். இருளிருக்கப் படாது. ஒரு வீட்டில் தீபம் வைத்தால் அந்த வீட்டிலிருந்த இருளெல்லாம் அந்தத் தீபத்தி லடங்கிச் சேரும். அதுபோல் இந்த ஜீவனாகிய தீபம் இருக்கிற விடத்தில் விளக்கில்லாவிட்டால் அந்த இடத்திலிருக்கிற இருளெல்லாம் ஜீவனாகிய தீபத்தைச் சேர்ந்து தேக நஷ்டத்தை யுண்டுபண்ணும். ஆதலால், அவசியம் தீபம் இருக்கவேண்டியது.[73]

## 32. வேதாகமச் சிறப்பு

இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கின்றது. மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாகாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படி யிருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதின் ஏகதேசங்க ளென்பது உண்மை.[74]

## 33. சன்மார்க்க முடிபு

சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதே யன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவ னல்லன். சாகாதவனே சன்மார்க்கி.[75]

## 34. பௌதிகங்கள்

பௌதிகங்க ளென்பவை வீரம் பூரம் முதலிய சுத்த சரக்குகள்.[76]

---

73 55-ம் பக்கம் பார்க்க.

74 70-ம் பக்கம் பார்க்க.

75 70-ம் பக்கம் பார்க்க.

76 72-ம் பக்கம் பார்க்க.

## 35. நான்கு புருஷார்த்தம்

மனிதன் முக்கியமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டியன அடியில் குறித்த ௪ விஷயங்களாம். அவையாவன : ஏமசித்திசெய்தல், சாகாத கல்வி கற்றல், கடவுணிலையறிதல் (கடவுள்) மயமாகுதல், தத்துவ நிக்கிரகஞ் செய்தல்.77 இந் நான்கையும் பூரணமாக வடைதல் வேண்டும்.78

## 36. அயக்கிரீவம்

மாலின் ௧0-வது அவதாரம் அயக்கிரீவஅவதாரம். அயம் என்பதற்குப் பொருள் பிராணவாயு, கிரீவம் என்பது கழுத்து. ஆகவே அயக்கிரீவம் என்பது பிராணவாயுவையே கழுத்தாகக் கொண்டது. இப்படியே மற்ற அவதாரங்கள் என்பவற்றிற்கு வெவ்வேறு பொருள் உண்டு.79

## 37. சன்மார்க்கக் கொள்கை

சர்வ சித்தியையுடைய தனித் தலைமைப் பதியாகிய ஆண்டவரை வேண்டித் தபசுசெய்து சிருட்டிக்குஞ் சித்தியைப் பெற்றுக்கொண்டவன் பிரமன்; சிருட்டி திதி ஆகிய சித்தியைப் பெற்றுக்கொண்டவன் விஷ்ணு; சிருட்டி திதி சங்காரம் ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் ருத்திரன். இவர்கள் ஏற்படுத்திய சமய மார்க்கங்களை அனுட்டிக்கின்றவர்கள் இவர்களை அந்தந்தச் சமயங்களுக்குத் தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்துவந்தார்கள். இம் மூர்த்திகளுடைய சித்திகள் சர்வ சித்தியையுடைய கடவுள் சித்தியின் இலேசங்கள் ;

---

77 "தத்துவவசியம் செய்தல்" என்று ஒரு பிரதியில் காண்கிறது.

78 73-ம் பக்கம் பார்க்க. 79 32-ம் பக்கம் பார்க்க.

அதில் ஏகதேசம்கூட அல்ல. ஆகையால், இவர்கள் அந்தச் சர்வசித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள் ; கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கின்றார்கள். ஆகையால், சமயத்தெய்வங்களை வழிபாடு செய்து, அந்தச் சமயத் தெய்வங்கள் பெற்றுக்கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேறவேண்டிய படிகளெல்லாம் ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல் நில்லாமல், சர்வசித்தியையுடைய கடவுளொருவர் உண்டென்றும், அவரை உண்மையன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெறவேண்டுமென்றும் கொள்ள வேண்டுவது சன் மார்க்க சங்கத்தவர்களுடைய கொள்கை. இதை யாண்டவர் தெரிவித்தார்.[80]

(இது உபதேசித்தது) ஆங்கீரசஹு[81] ஆவணிமீ உகூஉ. இதற்குப் பிரமாணம்: அருட்பிரகாச வள்ளலார் அருட்பாவில் "சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன்" "அறங்குலவு தோழியிங்கே நீயுரைத்த வார்த்தை" என்னும் இரண்டு திருப் பாசுரங்களின் தாத்பர்யத்தால் காண்க.

## 38. கடவுட் பிரகாசம்

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கிற நான்கிடத்திலும் கடவுள் பிரகாசம் காரியத்தாலுள்ள விவரம்: பிண்டத்தில் அகம் ஆன்மா, அகப்புறம் ஜீவன், புறம் மனம் முதலிய காரணம், புறப்புறம் கண் முதலிய இந்திரியங்கள். அண்டத்தில்

80 37-ம் பக்கம் பார்க்க.

81 இத்தேதிக் குறிப்பும் பிரமாணம் காட்டுதலும் இதை எழுதிய அன்பரின் சொந்தக் குறிப்புப் போலும்.

அகம் அக்கினி, அகப்புறம் சூரியன், புறம் சந்திரன், புறப்புறம் நக்ஷத்திரங்கள். ஆகவே பிண்டத்தில் ச, அண்டத்தில் ச, ஆக அ இடத்திலும் கடவுள் பிரகாசம் காரியத்தா லுள்ளது.[82]

## 39. ஞானசபையும் நடராஜரும்

ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு. அதன் நாமரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் மன அறிவு. அதன் பிரயோஜனத்தை யறிதல் ஜீவ அறிவு. அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்ம அறிவு. ஞான சபை யென்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த வுள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத் தான் (முறையே) சித் சபை அல்லது ஞான சபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது.[83]

## 40. சூரியன்

ஏமம் கனகம் என்பன சூரியனைக் குறிக்கின்றன. சூரியனிடத்தில் பொன் னிருக்கின்றது.[84]

## 41. கலியுக முடிவு

முதல் யுகத்திற்கு நாள் அ. உ-வது யுகத்திற்கு நாள் சு. ௩-வது யுகத்திற்கு நாள் ௪. ச-வது யுகத்திற்கு நாள் உ. ஆகக் கூடிய நாள் உ௦-ம் கற்பம் முடிக்கக் கூடும் நாட்கள். சு௦ × சு௦ × சு௦ =

82 20, 21-ம் பக்கங்கள் பார்க்க.
83 20, 21-ம் பக்கங்கள் பார்க்க. 84 21-ம் பக்கம் பார்க்க.

உ,கக,000 நொடி ஒரு நாள். அதாவது, நாள் ஒன்றுக்கு நாழிகை கூO, நாழிகை ஒன்றுக்கு விநாடி கூO, விநாடி ஒன்றுக்கு நொடி கூO என்றபடி. நாளிரண்டிற்கு ச,௩உ,000 நொடி. இந்த ச,௩உ,000 நொடியும் அத்தனை வருடமாகக் கலியுகத்திற்குச் சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தக் கலியுகத்திற்கு வருடம் ஐயாயிரந்தான். இந்தக் கலியுகம் முடிவதற்கு இன்னும் இருபத்தேழு வருடமிருக்கிறது. இந்த ஐயாயிர வருஷமும் ஜீவித்திருக்கும்படி, கலியுகத்திற்குக் குறித்த நாளிரண்டில் கல்பஞ் செய்து தேகசித்தியைப் பெற்றுக் கொண்டு, நம்முடைய கண்ணுக்குத் தோற்றாமல் வேறு வடிவத்தோடு இருக்கிறவன் கலியுக புருஷன். இவனுடைய சங்கல்ப விகற்பங்களால் இந்தவுலகமிப்போ தசைவு பெற்றிருக்கின்றது. இந்தவுலகம் சன்மார்க்க உலகமாக மாறுவதற் கின்னும் பன்னிரண்டு மாத மிருக்கிறது. (இது உபதேசித்தது) ஆங்கீரசஹு புரட்டாசிமீ ௩உ.[85]

## 42. சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல்

சாகாத்தலை ஆகாசம், வேகாக்கால் வாயு, போகாப்புனல் அக்கினி. சாகாத்தலை யென்பது ருத்திர பாகம், ருத்திர தத்துவம். வேகாக்கால் என்பது மயேசுர பாகம், மயேசுர தத்துவம். போகாப் புனல் என்பது சதாசிவபாகம், சதாசிவதத்துவம். இம்மூன்றும் சாகாக்கல்வியைத் தெரிவிக்கின்றது. ஆத்ம தத்து (வாதி சிவகரணம்) ௩கூ-ம் (நிர்மல குரு துரியாதீதம்) எ-ம் சேர்ந்து ஆன நிலை

85 இத்தேதிக் குறிப்பு இது எழுதிய அன்பரின் சொந்தக் குறிப்புப் போலும். 63-ம் பக்கம் பார்க்க.

௪௩-ல் ஒவ்வொரு நிலையிலும் இவைக ளுண்டு. மேலும் சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல் என்கிற தத்துவங்கள் பிண்டத்தில் ௪ இடத்திலும், அண்டத்தில் ௪ இடத்திலும், ஆக ௮ இடத்திலும் உண்டு. இவைகள் பிண்டருத்திரர்கள் அண்டருத்திரர்கள் முதலிய ருத்திர மயேசுர சதாசிவ பேதமென் றறிக. சாகாக்கல்வியைக் குறித்த இந்த நாற்பத்துமூன்று நிலைகளில் முதனிலையின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவன் பிரமன். அவனுக்கு ஆயுசு ௧ கற்பம். இப்படி ௪௩ நிலைகளும் ஏறி யனுபவத்தைப் பெற்றவன் காலங்கடந்தவன், காலாகிதன். சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல் என்பவற்றிற்குப் பொருள் சிலர் உப்புவகைகளின் பேதமென்றுசொல்லுவது பிசகு. அவைகளினுண்மைப் பொருளை மேற்குறித்தபடி யோகக் காட்சிகளில் அனுபவிக்கலாம். ஆகையால் இவைகள் யோக அனுபவங்களே யென்று அறிய வேண்டும்.86

## 43. பூர்வோத்தரம்

பூர்வம் என்பது தலை, உத்தரம் என்பது கால். பூர்வம் என்பது பூர்வ சம்பந்தத்தால் வந்தபெயர்.87

## 44. தயா வடிவம்

பூர்வஞான மென்பது நெற்றிக் கண்ணாற் பார்த்தல். ஒருவன் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணைப் பெற்றுக்கொள்வானானால் அவனுக்கு எல்லாம் பட்டப் பகலைப்போற் றெரியும். அவன் தான் சுத்த ஞானி. அந்த நடுக்கண்ணைப் பெற்றுக்கொண்ட சுத்த ஞானி தயவோடு ஓர் பிணத்தைப் பார்த்த

86 64-ம் பக்கம் பார்க்க. 87 46-ம் பக்கம் பார்க்க.

மாத்திரத்தில், அந்தப் பிணம் உயிர்பெற்று மீள வெழுந்திருக்கும். ஒருவனைக் கோபித்துப் பார்த்தால், உடனே அவன் பஸ்மமாய் விடுவான். இது தான் நடுக்கண் பெற்ற சுத்த ஞானிக் கடையாளம். இந்த நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணுக் கொரு கதவும் பூட்டு மிருக்கின்றது. அந்தக் கதவின் பூட்டை அருளென்கிற திறவுகோலைக் கொண்டு திறக்க வேண்டும். அருளென்பது பெருந்தயவு. ஆகவே தயவே வடிவமாக இருக்க வேண்டியது.[88]

## 45. சத்திய ஞானாசாரம்

ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரமாசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாத்திராசாரம் முதலிய ஆசாரங்க ளொழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய ஞானாசாரம் ஒன்றே இதுதொட்டு வழங்கவேண்டும். அதாவது, பெருந்தயவே வடிவமாக இருக்கவேண்டும். அந்நியரின் தோஷம் விசாரியாமல் இருக்க வேண்டும்.[89]

## 46. ஆதி அநாதி

ஆதி - அநாதி, கீழ் - மேல் என்பவை கால் - தலை.[90]

## 47. பெருங்கோயில்

கிழக்கு முகம், மேற்கு கால், வடக்கு வலதுகை, தெற்கு இடதுகை, கொடிமரம் தொப்புள், கொடிமரத்தின் அளவு உள்நாக்கு, பலிபீடம் வயிற்றின்

88 56-ம் பக்கம் பார்க்க. 89 30-ம் பக்கம் பார்க்க.

90 46-ம் பக்கம் பார்க்க.

மேடு, நந்தி ஆணவம் முதலிய மலங்கள் உள்ள பசு, சிவலிங்கமே மூலாதாரத்தின் உள்ளங்கம்.[91]

## 48. சமய நூல் உண்மை

மாணிக்கவாசக சுவாமிகளும் சூ௩ நாயன்மார்களும் மனிதரல்லர், தத்துவங்கள். தேவாரம் திருவாசகம் முதலியவைகள் மேற் குறித்தவர்கள் பாடியனவல்ல, சித்தர்கள் சில சித்திகளைக் குறித்துக் கற்பனையாய்ச் செய்த சரித்திரம்; அதற்கு மேற்கோள் வேண்டுவதின் பொருட்டுச் சில பாடலுஞ் செய்து, புராணத்தில் மேற்குறித்தபடி பெயரிட்டு, அவர்கள் செய்ததாகப் பரிச்சயஞ் செய்ததேதவிர, உண்மையல்ல. இவற்றிற்குரிய தாத்பரியங்களும் உண்மைகளும் சுத்த சன்மார்க்கத்தில் பகிரங்கமாய் இனி வெளிப்படும்.[92]

## 49. சன்மார்க்க ஆகாரம்

நெய் பால் தயிர் மோர்—இவைகளை ஆகாரத்திற் விசேஷம் சேர்ப்பது தேக நஷ்டம். மனிதர்களுக்கு எல்லாத் தாதுக்களிலும் முதல் தாது கொழுப்பு. அதன் சத்து நெய். அதை எடுத்தால் தேக நஷ்டம். இது போல் பசுக்களினது முதற்று நெய். ஆதலால் அதை யெடுப்பது சுத்த சன்மார்க்க மரபல்ல. சன்மார்க்கத்தில் தேகவிர்த்தி செய்து கொள்வதற் காவது புறப்புற வமுதம். ஆதலால், ஊற்றுநீர் பொற்றலை கரிசலாங்கண்ணி வாழை தென்னை முதலியவற்றின்மேல் பெய்கிற பனிசலம் மழைச்சலம்—இவைகள்தான் சுத்த சலம் அல்லது அமுதம். அல்லது சாதாரண ஜலமுங் கொள்ள

91 46-ம் பக்கம் பார்க்க. 92 32-ம் பக்கம் பார்க்க.

லாம் : அதாவது மேற்குறித்த ஜலத்தை ௫-ல் ௩, ௫-ல் ௨ பாகம் நிற்கக் காய்ச்சி, சர்க்கரை வெல்லம் இவைகளைச் சேர்த்துக் குடிக்கலாம். இவைகள் தேகவிருத்தி செய்யும். சுத்த சன்மார்க்க மாபிற் குரியது இனிப்புத்தான். ஆதலால் தேன் சர்க்கரை கற்கண்டு வெல்லம் — இவைகளை ஆகாரத்தில் சேர்த்துக் கொள்வது உத்தமம்.[93]

## 50. உப்பு

தேக நஷ்டஞ் செய்வது உப்பு. உப்பைக் கட்டி யாகாரத்திற் சேர்ப்பது சித்தமார்க்கம்.[94]

## 51. தேக சத்து

ஆண் பிள்ளையின் தேகத்தில் ௩ இடங்களில் சத்துண்டு. அவை ௧. மண்டையின் மூளை, ௨. கொப் பூழ், ௩. இலிங்கத்தின் கீழ்ப்புறம் ஆம். பெண் பிள்ளைக்குத் தேகத்தில் சத்து ௪ இடங்களில் உண்டு. அவை ௧. மண்டையின் மூளை, ௨. ஸ்தனங் களின்கீழ், ௩. கொப்பூழ், ௪. குய்யம். தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது; சத்து காய்ந்து போம்.[95]

## 52. சர்க்கரை

சர்க்கரை எந்தக் காலத்திலும் புழுத்தலின் ருகலி னுத்தம வாகார மாம். மற்ற வஸ்துக்கள் எல்லாம் புழுக்கும்.[96]

---

93 57, 58, 59-ம் பக்கங்கள் பார்க்க.

94 60-ம் பக்கம் பார்க்க.

95 44-ம் பக்கம் பார்க்க.

96 59-ம் பக்கம் பார்க்க.

## 53. பிண்ட ஞாயம்

பிண்ட ஞாயம். அண்டமென்பது கழுத்துக்கு மேல் சிரம். பிண்டமென்பது கழுத்துக்குக் கீழ் பாதம் வரையில். அண்டத்தில் சோமன் சூரியன் அக்கினி பிரமா விஷ்ணு ருத்திரன் இருக்குமிடம் நெற்றி. பிண்டத்தில் பிரமா விஷ்ணு ருத்திரன் இருக்குமிடம் பிரஜாபதி தொப்புள் மார்பு. இவர்கள் வாயு வடிவம். இதிற் பிரம பேத மனந்தம். விஷ்ணு ருத்திரபேத மனந்தம். அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இதுபோலவே பிரமாண்ட ஞாயம்.[97]

## 54. திருப்பாற்கடல்

திருப்பாற்கட லென்பது தேங்காய். அமுதமென்பது ஜலம். தேங்காய்ப் பாலைப் பிழிந்து முப்பூவைப் போட அமுதமாம். விஷமுண்டா ரென்பது—தேங்காயிலுள்ள எண்ணெயை முப்பூவால் போக்குவதே விஷஞ் சாப்பிடுவ தென்பதற்குப் பொருளாம். கருப்பஞ் சாற்றுக் கட லென்பது கரும்பு. மதுக்கட லென்பது தேன்.[98]

## 55. சிவமாதல்

பசுவென்பது முற்றும் மலமுள்ளது. ஜீவனென்பது மூன்று பங்கு மலமுள்ளது. ஆன்மாவென்பது ஒரு பங்கு மலமுள்ளது. சிவம் முற்றும் மலம் நீங்கியது. ஆதலால் மலம் முற்றும் நீங்கித் தயா வடிவமாவதே சிவமாதல்.[99]

---

97 44-ம் பக்கம் பார்க்க. 98 33-ம் பக்கம் பார்க்க.

99

## 56. நான்கு வகை ஒழுக்கம்

ஒழுக்கம் ச வகையாம். க. இந்திரிய ஒழுக்கம், உ. கரண ஒழுக்கம், ந. ஜீவ ஒழுக்கம், ச. ஆன்ம ஒழுக்கம்.

### க. இந்திரிய ஒழுக்கம்

இவற்றுள் இந்திரிய ஒழுக்கம் ஆவது:—கொடிய வார்த்தை முதலியவை ஆடாமலும் செவி புகாமலும் நிற்றல்; நாத முதலிய ஸ்தோத்திரங்களை அதிசயிக்காமல் உற்றுக்கேட்டல்; மற்றவைகளைக் கேளாதிருத்தல்; அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல்; கொடூரமானவற்றைக் கேளாதிருத்தல், பாராதிருத்தல்; ருசியின்மேல் விருப்பமில்லாதிருத்தல்; சுகந்தம் விருப்பமில்லாமல் அநுபவித்தல்; இனிய வார்த்தை யாடுதல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவர்களுக்கு இம்சை நேரிடுங் காலத்தில் அதை எந்தவிதத் தந்திரத்தாலாவது தடை செய்தல்; பெரியோர்க ளெழுந்தருளி யிருக்கும் இடத்திற்குச் செல்லுதல்; உயிர்களுக்கு உபகார நிமித்தம் சஞ்சரித்தல்; உயிர்களுக்கு மனத்தாலும், வாக்காலும், சரீரத்தாலும், தனத்தாலும் தன் சத்தியின் அளவு மீறாமல் உபகரித்தல்; மலஜலாதிகளை அளவு மீறாலும் குறையாமலும் கிரமமாய்க் கழியும்படி (சரபேத அஸ்தபரிச) தந்திரத்தாலும், ஔஷதிகளாலும், ஆகாரத்தாலும், பௌதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் (முதலியன) இந்திரிய ஒழுக்கமாம்.

### உ. கரண ஒழுக்கம்

கரண ஒழுக்கமாவது: உண்மையான கடவுள் ஒருவரே என்று சத்திய சங்கல்பம் கொள்ளல்;

சிற்சபையின்கண் மனஞ் செல்லுவது தவிர, வேறு எந்த வகை யாபாசத்திலும் செல்லாமல் அதை இழுத்து மேற்குறித்த இடத்தில், அதாவது, கடவுளிடத்தில் நிறுத்துவது; பிறர் குற்றம் விசாரியாது இருத்தல்; தன்னை மதியாதிருத்தல்; செயற்கைக் குணங்களா லுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமாக நிற்றல்; பிறர்மேல் கோபியாதிருத்தல்; தனது சத்துருக்களாகிய தத்துவங்கள்—அரிஷ்டவர்க்கங்கள்—மேல் கோபித்தல்; அக்கிரம அதிக்கிரமப்புணர்ச்சி செய்யாதிருத்தல் (முதலிய) இவற்றையே கரண ஒழுக்க மென்பர்.

ங. ஜீவ ஒழுக்கம்

ஜீவ ஒழுக்கம் எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், கோத்திரம், சூத்திரம், குலம், சாத்திரம், தேசமார்க்கம், உயர்வு, தாழ்வு முதலியன வாகிய பேதம் அற்றுத் தானாக நிற்றலாம்.

ச. ஆன்ம ஒழுக்கம்

ஆன்ம வொழுக்கம் : எண்பத்து நான்கு லக்ஷம் யோநிபேத முள்ள ஜீவர்களிடத்திலும் இரக்கம் வைத்து, ஆன்மாவே சபையாகவும் அதனுள் (ஒளியே) பதியாகவும் (கண்டு) பூரணமாக நிற்றல் ஆன்ம வொழுக்கமாம்.[100]

## 57. சப்த தாதுக்கள்

ஆணிடத்தில் ங, பெண்ணிடத்தில் ச என்பது: ஆணிடத்தில் ஆகாசம், பிரகிருதி, ஆன்மவுணர்ச்சி —இம்மூன்றும் ஒருமித்துச் சுக்கிலமாய், அறிவு

100 73-ம் பக்கம் பார்க்க.

சத்தி வித்து என்னும் பாகத்தோடு தடித்து, ஓர் மணியாம். பெண்ணிடத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் சூரியன், சந்திரன், அக்கினி, இயமானன் என்னும் உயிர் ஆக நான்கும் சேர்ந்து சுரோணித மாயிற்று. ஆக ஏழுங் கூடிச் சப்த தாதுக்க ளாயின.101

## 58. சத்துவம் ராஜசம் தாமசம்

தானாக நிற்றல் சத்துவம். இராகத் துவேஷாதிகளோடு கூடியது இராஜசம். ஜீவஹிம்சை செய்தல், சோம்பல், நித்திரை முதலியன தாமதம். ஆகையா லியற்கையாகிய சத்துவத்தோடு கூடிச் செயற்கையாகிய ராஜச தாமதத்தைச் சிறுகச் சிறுக நீக்க வேண்டியதில் சதா ஞாபகம் செய்யவேண்டியது.102

## 59. தருமம்

தர்மமாவது ஜீவதர்மம், குலதர்மம், சாஸ்திர தர்மம், ஆசார தர்மம், ஆசிரம தருமம், ஜாதி தருமம் முதலாகப் பலவகையாம். இதனது உண்மை ஆன்மாவின் தன்மை. தன்மை என்பது ஆன்மாவின் சுபாவம். சுபாவமென்பது ஆன்மாவின் சுபாவ குணம். சுபாவகுணமென்பது ஆன்மாவி னியற்கைக்குணம், தயை. ஆன்மாவி னியற்கை என்பதே தருமத்துக்குப் பொருள். தருமத்தோடு கூடியவன் தேக நஷ்டத்தை அடையமாட்டான்.103

## 60. அருள் வெளி

அருள் வெளியில் சன்மார்க்கத்திலுள்ள அறுபவங்களைப் பெறலாம். இதற்கு அருட்சத்தி என்

---

101 52-ம் பக்கம் பார்க்க. 102 36-ம் பக்கம் பார்க்க.

103 35-ம் பக்கம் பார்க்க.

றும், அருள் வெளி என்றும், ரிஷப மென்றும், அதின் தன்மை என்றும், அனாதி இயற்கை என்றும், பரஞான மென்றும், பூரண நிஷ்டை என்றும், அகர உகர மென்றும், அருள் நடன மென்றும், ஆன்ம நெகிழ்ச்சி என்றும், ஆன்ம அசை வென்றும் பலபட விரிந்த நாமங்கள் உண்டு. அருள் வெளியின் வடிவாய் உண்மை என்னும் சி காரமாகிய பதியோடு கூடி மௌநா நந்தத்தி லிருப்பதே உண்மை.[104]

## 61. ஆனந்தம்

ஆனந்த மென்பது சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களைத் திருப்தியால் சந்தோஷிப்பித்துத் தா னதிசயமின்றி நிற்றல்.[105]

## 62. சிருஷ்டி வகை

சிருஷ்டிவகை டு: அணுபக்ஷம், பரமாணு பக்ஷம், சம்பு பக்ஷம், விபு பக்ஷம், பிரகிருதி பக்ஷம். இவற்றில் (சம்பு விபு தவிர மற்றவைகளுக்கு) பக்குவம் அபக்குவம் (உண்டு). அணுபக்ஷத்தில் அபக்குவ சிருஷ்டியாவது ஔஷதிகளையும் பவுதிகங்களையும் உள்ளுக்குக் கொடுத்து, ஸ்திரீ புருஷ சம்பந்தத்தோடு பிரஜோத்பத்தி செய்வது; பக்குவ சிருஷ்டி புருஷன் ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் அஸ்தத்தால் தடவி ஊன்றிப் பார்த்து, தேக சம்பந்தம் செய்து ஸந்தானத்தை உண்டாக்குவது. பரமாணு பக்ஷ அபக்குவ சிருஷ்டியாவது புருஷன் தேகத்தைத் தடவிப்பார்த்த உடனே கருத் தரித்தல்;

104 இங்குச் சொற்கள் குறைவுற்றோ பிறழ்ச்சியுற்றோ கருத்து விளக்கமற் றிருக்கிறதுபோலும். 35-ம் பக்கம் பார்க்க.

105 36-ம் பக்கம் பார்க்க.

பரமாணு பக்ஷ பக்குவ சிருஷ்டியாவது கண்ணால் பார்த்தவுடன் கருத் தரித்தல். சம்புபக்ஷ அபக்குவ சிருஷ்டி (?) வாக்கினால் சொன்னவுடன் கருத் தரித்தல்; சம்புபக்ஷ[106] பக்குவ சிருஷ்டியாவது சங்கல்பித்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் கருத் தரித்துக் கீழே பிண்டம் வெளிப்படல். விபு பக்ஷமாவது பார்த்தவுடன் திருண முதலானவற்றை மனுஷியனாகச் செய்து, அதில் அனேக விசித்திரங்கள் செய்தல்.[107]

## 63. அநுபவத்தில் சத்தி சிவம்

சூரியன் அக்கினியோடு கூடியபோது சந்திரனும். சந்திரன் அக்கினியோடு கூடியபோது சூரியனாகும். சூரியன் ஆணாகவும் சந்திரன் பெண்ணாகவும், வலது பாகம் சிவமாகவும் இடது பாகம் சத்தியாகவும் வழங்கி வருவது மருட்டேக ஞாயம். வலது பாகம் சத்தியாகவும் இடது பாகம் சிவமாகவுமிருப்பது அனுபவம்.[108]

## 64. இடது கால்

இடது காலால் இயமனை உதைத்தா ரென்பது இடையாகிய சத்தி என்னும் அருளாகிய ஆன்ம இயற்கையால் தேகத்தை நீடித்து கொண்டது.[109]

## 65. கறுப்பு நாயுருவி

கறுப்பு நாயுருவிக் கஷாயம் ரு மாதத்துக் கர்ப்பிணிக்குக் கொடுக்க, கொடுத்த ஐந்து நாழிகைக்குள் க0 மாதத்துப் பூர்ண கர்ப்பம் உண்டாய்ப் பிரசவமாகும்.[110]

---

106 பிரகிருதி பக்ஷம்?
107 41-ம் பக்கம் பார்க்க.
108 61-ம் பக்கம் பார்க்க.
109, 110 34-ம் பக்கம் பார்க்க.

## 66. குளிர்ந்த கொள்ளி

குளிர்ந்த கொள்ளி என்னும் பச்சிலையைக் கசக்கிக் குக்குட அண்டத்தின் கீழும் மேலும் வைத்து மூடிய ௨௭ நாழிகைக்குள் கரு முற்றிக் குஞ்சு பொரிக்கும்.[111]

## 67. தீப்பூடு

தீப்பூடு பிடுங்கி நசுக்கி இறந்தவனுடைய வலது காதில் வைத்தால் பிழைப்பான்.[112]

## 68. முத்துப் பூண்டு

முத்துப் பூண்டுச் சாற்றை இறந்துபோன பக்ஷி எது ஆனாலும் அதன்மேல் சிறுகச் சிறுக ௨௭ நாழிகை பிழிந்தால் பிழைக்கும்.[113]

## 69. கருங்காந்தள்

கருங்காந்தள் இலையைக் கசக்கி, வெட்டுப்பட்ட துண்டுகளைச் சேர்த்து, அவற்றோடு சேர்த்துக் கட்டி ௨௭ நாழிகை வைத்திருந்தால், துண்டுகள் ஒன்றாய்ச் சேர்ந்து போகும்.[114]

## 70. கல்ப நியாயம்

நாகக்கொட்டையை அரைத்து நாகத்துக்குக் கவசம் செய்து, சிறு புடம் ௧0 போட்டுச் சுருக்கிட்டு, அதற்கு நாலிலொன்று சூதம் தொந்தித்து, துளசியிலை அரைத்துக் கவசம் செய்து புடம்போட்டால்

---

111, 112 34-ம் பக்கம் பார்க்க. 113 34-ம் பக்கம் பார்க்க.

114 34-ம் பக்கம் பார்க்க. பச்சிலையின் பெயர் குறுங்கரந்தை என்றும், குறுங்குருந்தான் என்றும் சில பிரதிகளில் காண்கிறது.

சுண்ணமாகும். அதை எடுத்துப் பசியில்லாதவ னுக்கு நவநீதத்தில் கொடுக்க ௨௦ நாழிகையில் பசி உண்டாகும். இதுதான் குண்டோதரனுக் கன்ன மிட்டதென்பது. கல்ப நியாயம்.[115]

## 71. அவாமாத்திரம்

இந்திரியக் காட்சி என்பது ஒருவஸ்துவின் நாம ரூபமின்றிக் காணுதல்; கரணக் காட்சி என்பது அந்த வஸ்துவைப் பற்றல்; அதை அனுபவிக்க வேண்டுமென்கிற சித்த விருத்தி உண்டாகிறது ஆசை என்னும் காமம்; அதைத் தன் வசப்படுத்த எழுவது மோகம். ஆதலால் எந்த வஸ்துவினிடத் திலும் மோகம் காமம் முதலியவை யின்றி அவா மாத்திரமா யிருத்தல் வேண்டும். சன்மார்க்கத்தில் அவாவும் ஏகதேசத்திலும் கூடாது.[116]

## 72. ஆணவம் மாயை கன்மம்

ஆணவம், மாயை, கன்மம்—இம்மூன்றில் பக்கு வம் ௩ அபக்குவம் ௩ ஆக ௬-ல் ஒவ்வொன்றில் (மும்மூன்றாக) விரிந்தவை ௧௮. பக்குவ ஆணவம் பக்குவ மாயை யிவ்விரண்டும் தனித்து நிற்பது விஞ் ஞான கலர். சுர நரக பைசாசங்கள் அபக்குவ மாயை அபக்குவ கன்மம் அபக்குவ ஆணவம் கூடித் தடித்தது. ஜீவர்கள் பக்குவ மாயை அபக்குவ கன் மம். ஸ்தாவரங்கள் அபக்குவ கன்மம் அபக்குவ மாயை அபக்குவ ஆணவம்—இந்த மயமாக நிற் றல்.[117]

---

115 33-ம் பக்கம் பார்க்க. 116 20, 40-ம் பக்கங்கள் பார்க்க.
117 40-ம் பக்கம் பார்க்க.

## 73. கடவுள் அநுக்கிரகம்

தீபத்தில் ஒளி, சோபை, பிரகாசம் என்னும் கூடல் பிரகாசம் காரண அக்கினி, சோபை காரிய காரண அக்கினி, ஒளி காரிய அக்கினி. பிரகாசமயத்தில் கடவுள் காரியமாய் சொர்ணதேகி ஆனாலும், பிரகாசத்தைப்போல் அதிதூரத்திலிருக்கிற இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கி ஆன்ம அநுபவத்தை வருவிப்பது.[118]

ஒளி யெப்படி அடங்கிச் சோபை காரிய காரணமாயிருக்கிறதோ அதுபோல, ஜீவர்கள் இருளில் மூழ்கிக் கிடந்த காலத்தில், விளக்கினிடத்து லட்சியம் அதிகரித்த தருணம், ஒளியைக்கண்டாலதின்மயமாவார்கள். (அது)போல் கடவுளினது சோபையைக் கண்டால், சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களும் செய்யக்கூடும். ஒளியைத் தொட்டால் சுடுவதுபோல் இறந்த ஜீவர்களை ஆண்டவருக்குச் சமீபத்தில் சேர்த்தால் உடனே ஜீவிப்பார்கள். ஆண்டவரது பிரகாசம் எங்கும் உள்ளதால், எந்த இடத்தில் புலை கொலை யில்லாமல் ஜீவர்கள் முயற்சி செய்கிறார்களோ, அந்த இடத்தில் (கடவுள்) வந்து காரண உருவமாகிய பிரகாசத்தில் நின்றும் காரிய வுருவமாகிய ஒளியாகித் தோன்றி அனுக்கிரகிப்பது சுபாவம். இதற்குப் பிரமாணம்: துருசுச் சுண்ணத்தை மஞ்சளில் நனைத்து, அதிக நீளமுள்ள நூலின் ஒரு தலைப்பைச் சுண்ணத்தில் படும்படி நனைத்த உடனே, அந்நூல் முழுமையும் சிவப்பேறுவது போலாம்.[119]

---

118 இந்த வாக்கியத்தில் சொற்கள் பிறழ்ச்சியுற்றுக் கருத்துத் தொடர்பு தவறியது போலும்.

119 56-ம் பக்கம் பார்க்க.

## 74. ஆண்பெண் பெண்ணாண்

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணு மென்பது எவ்வாறென்றால்: பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் பிரகிருதி ஆன்மா என்னும் எ-ம் கூடிச் சுக்கில சுரோணிதமாய் ஸப்ததாதுவாகி, சிருஷ்டிக்குக் காரணமாயிருப்பன வாதலால், ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணுமிருப்ப துண்மை. ரூப பேதத்தால் பெண் ஆண் என்பது பொய். பெண் ஆண் என்னும் நாம பேதம் வருவானேன்? அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் (என்க.) ஆன்ம அறிவு ஆண், ஜீவ அறிவு பெண். ஆன்ம அறி வென்பதும் ஜீவ அறி வென்பதும் புத்தி அறிவும் மன அறிவுமாம். பிரத்திய க்ஷானுபவம் யாதெனில்:—புருஷபாகம் ரு-ல் ஆகாசத்தில் பிருதிவியும், பெண் பாகம் ச-ல் பிருதிவியினிடத்தில் ஆகாசமும் தோன்றி அடங்குவதுபோல், பெண் ஆணாகவும் ஆண் பெண்ணாகவும் நியாயம் உண்டாயிற்று.[120]

## 75. சுரர் அசுரர்

சுரர் அசுரர் என்பதற்குப் பொருள்: சுரர் என்பது திராவகம், வாசனை, மேலேறிய அறிவுடைய ஜீவர்களாம். அசுரர் என்பது குழித்தைலம், அழுக்குடைய வஸ்து, கிழங்கு, துர்வாசனை, துர்வாசனையுடையவர்கள், துர்க்குண மனுஷியர்கள்.[121]

## 76. சி என்பது

சி என்னுமெழுத்துக்குப் பொருள்: இதன் பீஜாக்ஷரம் ரு. அவையாவன: பிந்து, நாதம், சகர ஒற்று,

---

120 46-ம் பக்கம் பார்க்க. 121 47-ம் பக்கம் பார்க்க.

அகாரம், இகாரம். இவை கூடியது சிகாரமாகிய ஓர் உருவம். இதற்குப் பொருள் சுத்த சன்மார்க்கக் காலத்தில் வெளிப்படும்.[122]

## 77. காட்சி

பூர்வம் புறப்புறம், இந்திரியக் காட்சி. பூர்வ பூர்வம் புறம், கரணக் காட்சி. உத்தரம் அகப் புறம், ஜீவக்காட்சி. உத்தரோத்தரம் அகம், ஆன் மக் காட்சி.[123]

## 78. நினைப்பு மறைப்பு

நினைப்பு மறைப்பு என்பதற்குப் பொருள்: நினைப் பென்பது ஜனனம், மனம் நினைத்தல், சகளம், தத்து வத்தினது கூறுபாடு வேறொன்றில் பற்றல் மேலே றுதல், தத்துவத்தின் ஆவி அதிக்கிரமிக்கிறது. மறைப்பென்பதற்குப் பொருள், மரணம், கேவலம், தூக்கம், தத்துவத்தின் கூறுபாடு கீழ்ச்செல்லுதல், பிரஞ்ஞை யில்லாதிருத்தல், அதனது உஷ்ணம் அதிக்கிரமிக்கிறது, மனம் ஆபாசப்பட்டுக் கீழ்ச் செல்லுதல். ஆதலால், நினைப்பு மறைப்பு அற்று, நிரதிச யாநந்தமாய் அருள் வடிவ மாவதே சுத்த சன்மார்க்க சாதனம். இது ஒருவாறு.[124]

## 79. விருப்பு வெறுப்பு

விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள்: விருப் பென்பது வேண்டுதல், பந்தம். பூர்ண பாவனையை விட்டு அதிசயமாகப் பார்த்து விரும்புதலால் பூர்ண பாவனை தடைப்பட்டுத் தான் கெடுவன். ஆதலால்

---

122 29-ம் பக்கம் பார்க்க. 123 46-ம் பக்கம் பார்க்க.

124 38-ம் பக்கம் பார்க்க.

விருப்பென்பது எவ்வளவும் கூடாது. வெறுப்பென்பது வேண்டாமை, த்வேஷம், எதிர்கண்ட வஸ்துவைப் பற்றா திருத்தல். இதர வஸ்துவைக் கெடுதலென்று நினைப்பதால் வெறுப்பென்பதும் கூடாது. விருப்பு வெறுப்பு அற்று அருள்வடிவாவதே சுத்த சன்மார்க்கம்.[125]

## 80. சைதன்னியம்

ஜீவசைதன்னியம் மேகாகாசம், ஈசுர சைதன்னியம் ஜலாகாசம், பிரமசைதன்னியம் கடாகாசம், கூடஸ்த சைதன்னியம் தத்துவாகாசம், சர்வ சாக்ஷி மகாகாசம். ஜீவசைதன்னியம் தம்பப்பூச்சி முதல் மனிதரில் மூடர்பரியந்தம், பாதந்திரர்கள். ஈசுர சைதன்னியம் அசுரர் ராக்ஷசர் உயரறிவுடைய ஜீவர்கள், சுதந்திரர்கள். பிரம சைதன்னியம் காரிய ரூபத்தோடு கூடிய சுத்ததேகி. கூடஸ்த சைதன்னியம் காரிய காரண அரூபத்தோடு கூடிய பிரணவ தேகி. சர்வசாக்ஷி காரண அரூபத்தோடு கூடிய ஞானதேகி.[126]

## 81. பரிபாஷையும் சுத்த சன்மார்க்கமும்

பரிபாஷை—அங், சிங், வங், பங், அம், விந்து, நாதம், சிவ, வசி, ஓம், அரி, அர, சத்து, சித்து, ஆனந்தம், பரிபூரணம், ஜோதி, சிவய வசி, சிவாய நம, நமசிவாய, ஆ, ஈ, ஊ, ஐ, நாராயணாயநம, சிவோகம், சோகம் முதலியவாகச் சமயமதங்களில் குறிக்கப்பட்ட மந்திர தந்திர ரகசிய வாசக வாச்சிய வசன அக்ஷர தத்துவ பவுதிக முதலியவையும் பரிபாஷையாம். மேல் குறித்த வண்ணம் ஜபித்தும், தியானித்தும், அர்ச்சித்தும், உபாசித்தும், சமாதி

125 39-ம் பக்கம் பார்க்க. 126 71-ம் பக்கம் பார்க்க.

செய்தும், சுவாசத்தை அடக்கியும், விரதமிருந்தும், இவைபோன்ற வேறு வகைத் தொழிற்பட்டும் பிரயாசை யெடுப்பது வியர்த்தம். சுத்த சன்மார்க்கமே சிறந்தது. பாவனாதீ தாதீதம், குணாதீ தாதீதம், வாச்சி யாதீ தாதீதம், லட்சியாதீ தாதீதம் ஆகிய சுத்த சன்மார்க்கப் பொருளாகிய அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரால் இதனது உண்மைகள் இனி வெளிப்படும்.[127]

## 82. சத்தியமார்க்கம்

ஷடாந்தங்களினது அனுபவம் ஒன்றானாலும் காலம் இடம் முதலியவற்றால் அவை வேறுபடும். ஆதலால் ஷடாந்தங்களு மிப்போது வெளிக்கு வியாபகமில்லாம லிருக்கின்றன. வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இந்த உ-ல் வேதாந்தத்தில் போதாந்தமும் யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்தமும் கலாந்தமும் அடங்கியிருக்கின்றன. ஆதலால் வேதாந்த சித்தாந்தமே சிறந்தது. வேதாந் தாந் தாதீத சித்தாந் தாந் தாதீத சுத்த சன்மார்க்கமே நீடூழி அழியாத சத்திய மார்க்கம்.[128]

## 83. சமரசம்

சமரசமென்பது யாது? எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தான் உத்தரத்தில் நின்று மருவியதால் சமரச மாயிற்று. இதற்கு நியாயம்: விந்து பரவிந்து—இவ்விரண்டையும் மறுக்கச் சுத்த விந்துவானது போலும்; சிவம் பரசிவம்—இவ்விரண்டையும் மறுக்கச் சுத்த சிவமானது போலும்; சன்மார்க்கம் சிவசன்மார்க்கம்—இவ்விரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம்.

---

127 70-ம் பக்கம் பார்க்க. 128 66-ம் பக்கம் பார்க்க.

ஆகவே ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கமென்று மருவியது.[129]

## 84. சத்துவகுண லக்ஷியம்

சன்மார்க்கமென்பது யாது? அது ௩ வகைப்படும். சமயசன்மார்க்கம், மதசன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம்.

சமய சன்மார்க்கமாவது சத்துவகுண லட்சியானு சந்தானம். சத்துவகுண சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம். சத்துவ சம்பந்தமுடைய சேர்க்கை யெல்லாம் சன்மார்க்கம். அதாவது சத்போதம், சத்கர்மம், சத்ஸங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சத்ஜனம், சத்செய்கை முதலியவை சத்துவகுண சம்பந்தமானவை யாம். சத்துவகுண இயல்பாவது கொல்லாமை, பொறுமை சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஜீவகாருண்ணியம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம். இந்த உண்மையைக்கொண்டு சத்துவ குணத்தின் வாச்சியத்தை லட்சியம் செய்வதே சமய சன்மார்க்கம்.

சமயாதீத மத சன்மார்க்கம்—நிர்க்குண லட்சியமாகிய சத்துவ குணத்தின் லட்சியார்த்தத்தைக் கொள்வது மத சன்மார்க்கம். அதாவது, சோகம், சிவோகம், அவன், அவள், நான் என்னும் அனுபவம். அதாவது, சத்துவகுணத்திற்கு மார்க்கம் ௪. சத்துவ குணத்தின் முதல் விளைவு தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், ௨-வது புத்திரனைப்போல் பாவித்தல், ௩-வது சிநேகிதனைப்போல் பாவித்தல், ௪-வது தன்னைபோல் பாவித்தல். இது ஜீவநியாயம்.

---

129 67-ம் பக்கம் பார்க்க.

இவ்வாறேதான் கடவுளுக்கு அடிமையாகுதல், புத்திரனாகுதல், சிநேகிதனாகுதல், கடவுளே தானாகுதல். இது சத்துவ குண லட்சியார்த்த மாகிய மத சன்மார்க்கத்தின் முடிபு. சத்துவ குணத்தின் விளைவென்று சொன்னதற்குப் பொருள் சத்துவ குணத்தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம்வல்ல சர்வசித்தியோடு ஞானதேகம் பெறுகிறவரையில் உள்ள அனுபவம். நெல் விளைத்தா னென்பதன் பொருள் உழுதல் தொடங்கிக் கிருகத்தில் சேர்க்கிறவரையில் அதன் தாத்பரிய மடங்கி யிருப்பது போல்.130

## 85. சுத்தம்

சுத்த சன்மார்க்கமாவது குணநிர்க்குண வாச்சிய லட்சியார்த்த மாகிய சமய மதங்களினது அனுபவ மன்று. சுத்த சன்மார்க்கமென்பது சத் சன்மார்க்கமேயாம். சுத்தமென்பது ஒன்றுமில்லாதது. ஆதலால், சுத்த மென்பது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன் வந்தமையால், முன் சொன்ன சமயமதங்களைத் தாண்டினது, அதன் அனுபவங்களையும் கடந்தது.131

## 86. சத்மார்க்கம்

சத்மார்க்கம் என்பதற்குப் பொருள் ௪ வகை : பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத்தரம். ஆதலால் இதின் முக்கிய லக்ஷ்யம் இனிச் சுத்தசன்மார்க்கத்தில் வெளிப்படும். பூர்வம் என்பதற்குத் தாத்பரியம் ஒருவாறு. சிருஷ்டி ஸ்திதி சம்மாரம் திரோபவம் அனுக்கிரஹம் எனும் பஞ்சகிருத்திய தத்துவங்களைக் கர்த்தாவாக

---

130 68, 69-ம் பக்கங்கள் பார்க்க. 131 69-ம் பக்கம் பார்க்க.

வழங்கி வருகிற பிரமா விஷ்ணு ருத்திரன் மகேசுரன் சதாசிவமென்னும் தத்துவங்களில், சிருஷ்டியில் சிருஷ்டி ௸ ஸ்திதி ௸ சம்மாரம் சிருஷ்டியில் திரோபவம் ௸ அனுக்கிரஹம்—இதுபோல் ௫ ஆக விரிந்த தத்துவங்கள் ௨௫; இந்த இருபத்தைந்தையும் அறுபத்து நாலாயிரத்தில் பெருக்கிய காலம் எவ்வளவோ அவ்வளவு கால பரியந்தம் மகா சதாசிவ அனுபவத்தைப் பெற்று, சுத்த தேகியாக இருப்பது. வருஷம் தொகை மொத்தம் ஒரு கோடி அறுபது லக்ஷம்.

சத்தென்பது பரிபாஷை, குழூஉக் குறிப்பெயர்; அனந்த தாத்பரியத்தைக் கொண்டு ஓர் மொழியானது. மார்க்கமென்பது வழி. வழியென்பது சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம். ஆகையால் எவ்வகையிலும் உயர்வுடையது சுத்த சன்மார்க்கம்.

சன்மார்க்கத்தின் ஏகதேச மென்பது எந்தக் காலத்தும் எவ்வகைத் தடைகளும் இன்றி அழியாத சுத்த பிரணவ ஞானதேக மென்கின்ற தேக சித்தியும் எல்லாம் வல்ல சர்வசித்தியும் பெற்றுக் கொள்வது.[132]

## 87. சிவாய நம என்பது

சமயத்தில் சிவாயநம வென்னும் வாக்கியத்திற்குத் தாத்பரியம் ௪ வகைப்படும்: பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத்தரம். பூர்வம்: சிவனை நமஸ்கரிக்கின்றேன் என்பது. பூர்வ பூர்வம்: அஹநி

132 69, 70-ம் பக்கங்கள் பார்க்க. ஒரு பிரதியில் வருஷத்தொகை "ஒரு கோடி அறுபத்து நாலு லக்ஷம் ௬௪000" என்றிருக்கிறது.

யில் மல மில்லாததாயும் எல்லாமுடையதாயும் உள்ள சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கின்றேன் என்பது. உத்தரம் உத்தரோத்தர மென்னும் பொருளுக்கு விவரம் இனிச் சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும்.[133]

## 88. பஞ்சாக்ஷரமும் சித்தியும்

சிவாயநம வென்னும் மந்திரத்துக்குப் பொருள் முன்போல் ச வகை. அதில் பூர்வமாவது: சி என்பது பதி, வா சத்தி, ய ஜீவன், ந திரோதை, ம மாயை. பூர்வ பூர்வமாவது: சி யென்பது எல்லாமுடையது, வ என்பது அபின்னமாகிய அருள், ய ஆன்மாவாகிய சபை, ந ஜீவன், ம பசு. உத்தரத்தின் பொருள்: பரவிந்து பரநாதம் பரத்திலும், அபர விந்து அபர நாதம் பூர்வத்திலும் வழங்கும். இவ்வளவும் சிவத் தியானமல்ல, தத்துவ அனுசந்தானமே. உத்தரத்தில் ஏமசித்தியும் உத்தரோத்தரத்தில் தேக சித்தியும் சொல்லுவது மத சன்மார்க்க அனுஷ்டான மாம். பஞ்சாக்ஷரத்தில் ஏம சித்தியும் தேக சித்தியும் சொல்வதற்குப் பிரமாணம்: "சிவாயநம வெனச் செம்பு பொன்னுயிடும்." "சிவாயநம வெனச் சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளுமில்லை". ஆதலால் பரிபாஷையால் மறுத்தது. மேற்குறித்த ஏம சித்தியும் தேக சித்தியும் எக்காலத்தும் இருக்கும்படியாகச் சொல்வது சுத்த சன்மார்க்கப் பூர்வோத்தரம்.[134]

---

133 27-ம் பக்கம் பார்க்க.

134 27, 28-ம் பக்கங்கள் பார்க்க.

## 89. சர்வ சித்தி

சமய சன்மார்க்கம் மத சன்மார்க்கம் ஆகிய இவற்றிற்குள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம். அதில் சமய சன்மார்க்கம் ௬௬. அதை விரிக்க ஆறு கோடியாம். இதுபோலவே மதத்திலும் ௬௬. மேல் குறித்த சமயம் மதங்களிலும் ஏம சித்தி தேக சித்தி முதலியவை யுண்டு. அவை சமய மதங்களில் சொல்லுகிற கர்த்தா மூர்த்திகள் ஈசுவரன் பிரமம் சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தம் இருப்பதொழிய, அதற்குமேல் இரா.

சமய மதங்களினும் சமரசம் உண்டு. வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால் சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்கச் சுத்த சமரச சன்மார்க்க மாம். இவை பூர்வோத்தர ஞாயப்படி, கடைதலைப் பூட்டாக, சமரச சுத்த சன்மார்க்கமென மருவின. இதற்குச் சாதனம் ஒருவாறு ஷடாந்த சமரசம்.

ஆன்மாவுக்கு அனன்னிய அருள் எப்படியோ, அதைப்போல் சுத்த சன்மார்க்கத்துக்கு அனன்னியமாக இருப்பது சர்வ சித்தியாம். சுத்த சன்மார்க்கத்துக்குப் படி மூன்று. ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் க, சமரச சன்மார்க்கம் க, சுத்த சன்மார்க்கம் க, ஆக ௩. ஆதலால் சுத்த சன்மார்க்கத்திற்குப் படிகள் ௩: சிற்சபை க, பொற்சபை க, சுத்த ஞானசபை க, ஆக ௩. இவைகள் மூன்றுந்தான் படிகளாக இருக்

கும். சுத்த தேகத்தினுடைய அனுபவத்தை விரித்தால் விசேஷமாம். சுத்த சன்மார்க்கம் விளங்கும் காலத்தில் எல்லாம் ஆண்டவர் வெளிப்படையாய்த் தெரிவிப்பார்.[135]

## 90. கடவுள் ஏகம் அநேகம்

கடவுள் ஏகம் அனேக மென்பதற்குத் தாத்பரியம்: சமயத்தில் சிவம் ஏகம், பிரமாதிக ளனேகம். மதத்தில் பிரமம் ஏகம், பரவிந்து பரநாதம் முதலியவை அனேகம். சமயாதீதத்தில் சொல்லிய பிரமம் முதல் சுத்தப் பிரமம் வரையிலும் ஏகம், அதைப் பெற்றவர்க ளனேகம். சாதாரண பாகத்தில் கடவுள் ஏகம், ஜீவர்கள் அனேகம். சுத்த சன்மார்க்கத்தில் கடவுள் ஏகம், கடவுளருளால் சுத்தமாதி மூன்று தேகங்களைப் பெற்ற ஞானிக ளனேகம்.[136]

## 91. சுத்த சன்மார்க்க சாதனம்

சுத்த சன்மார்க்க சாதனம் உ வகைப்படும்: பரோபகாரம் சத்விசாரம். பரோபகார மென்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ் செய்வது. சத்விசாரம் என்பது நேரிடாத பக்ஷத்தில் ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது, கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல். இந்த மார்க்கத்தால் தான் சுத்தமாதி மூன்று தேகங்களைப் பெறவேண்டும்.[137]

---

135 66, 67-ம் பக்கங்கள் பார்க்க. 136 71-ம் பக்கம் பார்க்க.

137 49-ம் பக்கம் பார்க்க.

## 92. கடவுள்தயவும் ஜீவதயவும்

கடவுள் தயை ஜீவதயை யென்பது: கடவுள் தயையென்பது இறந்த வுயிரை யெழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், மிருக பக்ஷி ஊர்வனவாதிகளுக்கு ஆகாரம் கொடுத்தல், கால சக்கிரத்தின்படி சோமன் சூரியன் அக்கினிப் பிரகாசங்களை அளவுமீறாமல் நடத்திவைத்தல் முதலியன: இவற்றை விரிக்கில் பெருகும். ஜீவதயை யென்பது தன் சத்தியளவு உயிர்க்கு உபகரித்தல், ஆன்மநேய தயா விசாரத்தோடு இருத்தல், அன்னிய ஜீவ தோஷ விசாரம் கனவிலும் செய்யாதிருத்தல் முதலியவாம்.[138]

## 93. ஞான வகை

உபாயஞானம் ஜீவ அறிவு, நக்ஷத்திரப் பிரகாசம். உண்மை ஞானம் ஆன்ம அறிவு, சந்திரப் பிரகாசம், அனுபவஞானம் கடவுளறிவு, சூரியப் பிரகாசம். உபாயஞான மென்பது நக்ஷத்திரப் பிரகாசம் போல் தோன்றிய ஜீவ அறிவு. உண்மை ஞான மென்பது சந்திரப் பிரகாசம் போல் தோன்றிய ஆன்ம அறிவு. அனுபவ ஞான மென்பது எல்லா வஸ்துக்களையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுள் அறிவு. ஆகையால் கடவுளை ஆன்ம அறிவைக் கொண்டு அறியவேண்டும்.[139]

## 94. கடவுள் காரியப்படுவது

கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க, சில

---

138 49-ம் பக்கம் பார்க்க. 139 40-ம் பக்கம் பார்க்க.

விக்கிரக பூத தாரு முதலியவைகளில் (கடவுளை) வெளிப் படுத்திக்கொள்வது மந்த ஞாயம். அதில் (கடவுள்) தோன்றி அனுக்கிரகிப்பதாகச் சொல்லு வது ஜாலம். காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதி சீக்கிரம் பற்றுதல்போல், பக்குவர்க ளாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால், சுத்தமாதி மூன்று தேக சித்தியும் அத்தருணமே வரும். பக்குவ மில்லாதவர்க்கு அருள் செய்தாலும், வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலவாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்கு முன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத் துவேஷாதி அசுத்தங்களைப் போக்கிக் கொள்வது உத்தமம்.[140]

## 95. வெந்நீர்

சுத்த சன் மார்க்கத்தில் தேக விர்த்தி செய்தல் வெந்நீராதலால், எக்காலத்தும் சுத்தஜலம் சேர்க் கக் கூடாது. பச்சை ஜலத்தினிடத்தில் ௩ குண முண்டு: விஷஜலம், பூதஜலம், அமுதஜலம். இந்த மூன்றும் ஒன்றாகவே இருக்கும். ஜலத்தின் மேல் பாகத்தில் விஷமாகிய சிலிர்ப்பும், அதனடியில் கொஞ்சம் சுடுகையுள்ள பூதமும், அதனடியில் விசேஷம் சுடுகையுள்ள அமுதமு மாக இருக்கும். பூதஜலம் தத்துவ விர்த்தி செய்யும். அமுதஜலம் பிராணவாயு வை விர்த்தி செய்யும். விஷஜலம் ஆபாசநீர்களாகப் பற்றும். ஆதலால் பச்சைஜலம் கொள்ளப்படாது. வெந்நீர் நேரிடாத பக்ஷத்தில், சர்க்கரை நாயுருவி தென்னை வாழை முதலிய வஸ்துக்களைச் சம்பந்தப் படுத்தியாவது கொள்ளவேண்டும்.[141]

140 54-ம் பக்கம் பார்க்க. 141 58-ம் பக்கம் பார்க்க.

## 96. உரோமதத்துவமும் பிந்துஸ்தானமும்

மனித தேகத்தில் புருவ முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றியும், நெற்றிமுதலாகிய இடங்களில் தோன்றாமலு மிருப்பதற்கு நியாயம்: இந்தத் தேகம் பாதாதி பிரமரந்திரபரியந்தம் வாயுவாலாகிய தேகம். ஆதலால் அதினுடைய பிருதிவி காரியமே தேக வடிவம். ஆதலால் வாயுவின் கூறு செம்மை. கருமயிர் பிருதிவியின் கூறு. இந்த நியாயத்தால் தேகத்தில் செம்மையும் கருமையும் கூடிய உரோமம் உண்டாயிற்று. நரை தத்துவக் கெடுதியால் நேரிட்ட ஆபாசம்.

இந்தத் தேகத்தில் உள இடங்களில் வாயுவில் பிருதிவி தங்குகின்ற இட மாதலால் அவசியம் உரோமம் இருக்கும். மேற்படி இடங்களின் விவரம்: கபாலம் க, புருவம் உ, கண்கீழ் இமை ங, மேல் இமை ச, நாசிக்குட்புறம் ரு, மீசை சு, கன்னம் எ, காதுக்குட்புறம் அ, இருதயம் கூ, கைம்மூலம் க0, உந்தியின் மேல்ரேகை கக, அடிவயிறு கஉ, லிங்கத்தடி கங, புட்டத்தின் கீழ்ப்புறம் கச, தொடை கரு, முழந்தாள் கசு, பாதத்தின் மேலிடம் கஎ, கை விரலின் மேலிடம் கஅ, முதுகு ககூ, உ0, உக, விலாப்புறம் உஉ, உங, முழங்கையின் கீழ் உச, கணுக்கைக்கு மேல் உரு, கைவிரலின் மேற்புறம் உசு. இந்த இடங்களில் தவிர, மற்ற இடங்களில் உரோமம் தோன்றுவது தத்துவ ஆபாசம். தத்துவங்களினது உட்புற மலங்களே வாயுவின் பிருதிவியாதலாலும், மேற்குறித்த இடங்களில் அக்கினியின் காரியமில்லாததினாலும் உரோமம் தோன்றுகின்றது.

அக்கினி காரியப்பட்ட இடங்களில் உரோமம் தோன்றியும் தோன்றாமல் அருகி யிருக்கும். நெற்றியில் ஆன்ம விளக்கம் உள்ளது. அதனாலதற்குப் பிந்துஸ்தான மென்றும், அறிவென்றும், பாலமென்றும், முச்சுடரென்றும், முச்சந்தி யென்றும், முப்பாழென்றும், நெற்றிக்கண் என்றும், கபாடஸ்தான மென்றும், சபாத்துவார மென்றும், மகம்மேரு வென்றும், புருவமத்திய மூலமென்றும், சிற்சபையென்றும் பெயராம். ஆதலால் பிந்துவென்பதே ஆன்மா. பிந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கம். ஆதலால் உரோமம் அருகியிருக்கிறது.[142]

## 97. பிந்து நாதங்கள்

பூர்வத்தில் பிந்துவும் உத்தரத்தில் நாதமு மிருக்கின்றன. பிந்து ஆன்மா; நாதம் பரமான்மா. நாதத்தோடு பிந்து சேர்ந்தால், பிந்து சத்தியும், நாதம் சிவமும் ஆகின்றன. பிந்துவுக்கு இது உத்தர ஞாயம். பூர்வ ஞாயமாவது எல்லாத் தத்துவங்களுக்கும் புறத்தும் அகத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்கித் தத்துவங்களைத் தன்வசப் படுத்தியும், தொழில்களைச் செய்வித்தும், தனித்தும், தன்னோடு தத்துவங்களைச் சேர்க்கிறபடியால், பிந்து சத்தனையும் தத்துவங்கள் சத்தியாயும் இருக்கும்.[143]

## 98. பாலஸ்தானம்

நாம் இருப்பது பாலஸ்தான மாதலால், பாலம் சிறந்தது. இதற்கு அனுபவ சித்திகள் திரயோத சாந்தம் வரையில் உண்டு.[144]

---

142 50-ம் பக்கம் பார்க்க. 143 51-ம் பக்கம் பார்க்க.

144 51-ம் பக்கம் பார்க்க.

## 99. பெண் பிறவியும் பிந்து விளக்கமும்

ஆணிடத்தில் பிந்து விளக்கம் மூன்று பங்கும், பெண்ணிடத்தில் பிந்து விளக்கம் நான்கு பங்கும் இருப்பதால், பெண்களுக்குத் தலை, புருவம், இமைக் கீழ் மேல், மூக்கு உட்புறம், கைம்மூலம், லிங்க ஸ்தானம்—இவை எ ஸ்தானங்கள் தவிர மற்ற இடங்களில் உரோமம் தோன்றாது அருகி யிருக்கும். பெண்களுக்கு உரோமம் தோன்றாமல் இருக்கிற இடங்களெல்லாம் பிந்து விளக்கமாகிய பிரகாசம் ஜாஸ்தியாக இருக்கும். பெண்களுக்குப் பிந்து இருக்கிற ஸ்தானம் மூன்று: வாய், மார்பு, ஸ்தனத்தின் கீழ். உரோமம் விசேஷம் தோன்றுவது தத்துவ ஆபாசம்.[145]

## 100. சாமானிய ஜீவன் விசேஷ ஜீவன்

சாமானிய ஜீவன் விசேஷ ஜீவன் ஆக உ. இவற்றில் சிறந்தது சாமானியம்; தாழ்ந்தது விசேஷம். ஜீவன் இரண்டென்பதற்கு விவரம்: ஆன்ம காரணம் சாமானியம்; ஆன்ம காரியம் விசேஷம். சாமானியமென்பது ஆன்ம அறிவு, விசேஷமென்பது மன அறிவு. இது பூர்வோத்தரமாய் இருக்கின்றது. பூர்வமென்பது லிங்க ஸ்தானம். உத்தர மென்பது விந்து ஸ்தானம். சிருட்டி முதலியவைகளுக்குக் காரணம் லிங்க ஸ்தானம். ஆகையால், சாமானிய ஜீவனே காரணப்பட்டு, விசேஷ ஜீவன் காரியப்படும். விசேஷ ஜீவ சம்பந்த மில்லாத பக்ஷத்தில் சிருட்டி நடவாது; இது சாதாரணம். அசாதாரணத்தில், சம்புபக்ஷ சிருட்டியில் சாமானிய ஜீவனைக் கொண்டே விசேடத்தை வெளிப்படுத்திக் கொள்

145 52-ம் பக்கம் பார்க்க.

வது. சாமானியம் சந்தான மாதலால் விசேடம் உள்ளடங்கி யிருக்கின்றது. நகத்துக்குச் சந்தானம் அடியும் விசேஷம் வளர்ச்சியும் போலவாம். மிருகாதிகளுக்குச் சாமானியம் காரியப் படாததினுல் சாமானியம் இல்லை யென்று சொல்லப்பட்டது.[146]

## 101. சுக்கில வகை

சுக்கிலம் ௩ வகை. அது ௨௭ வராகனெடை யிருக்கும். விஷம் க, சாதாரண பாகம் க, அமுதபாகம் ௭, ஆக பாகம் ௨௭. இது போலவே ஸ்திரீகளுக்குச் சுரோணித மிருக்கும். சுக்கில சுரோணிதத்தின் மேல் கடவுள் ஆவியுருவா யிருப்பர். தேகசம்பந்த காலத்தில் விஷபாகம் வெளிப்பட்டால் தேகநஷ்டம், சாதாரண பாகம் வெளிப்பட்டால் வியாதி, அமுதபாகம் வெளிப்பட்டால் சந்தான விருத்தி. இந்த நியாயத்தால் சதா தேக சம்பந்தம் செய்தாலும், சந்தான விருத்தி ஏகதேசம்.[147]

## 102. சங்கல்பம்

சங்கல்ப மென்பது ரு வகை. அதாவது நிர்விகல்பம் க, சவிகல்பம் ௨, சங்கல்பம் ௩, விகல்பம் ௪, கல்பம் ரு. நிர்விகல்பமென்பது கடவுளறிவு. சவிகல்ப மென்பது அதினது வியாபகம். சங்கல்ப மென்பது யாதொன்றிலும் பற்ருமல் சுத்தமாயிருந்த காலத்தில் தோன்றிய அசைவாகிய நினைப்பே, முன் அசைவின்றி அசைந்த அசைவாகிய மேலசை வென்னும் புடைபெயர்ச்சியே, எக்காலத்தும் மரணமடையமாட்டோ மென்கிற பிரஞ்ஞையே. விகல்பம் என்பது பிரம சதாசிவ கால அளவைக் குறித்தது. கல்பம் என்பது மேற் குறித்தவைகளுக்கு அனுசந்

146 52, 53-ம் பக்கங்கள் பார்க்க. 147 42-ம் பக்கம் பார்க்க.

தானங்கள். சங்கல்ப விகல்பமென்பவை ங வகை: உள் அழுந்தல் ஆன்ம திருஷ்டி, அதைச் சிந்தித்தல் ஜீவ திருஷ்டி, அதை விசாரித்தல் மன திருஷ்டி. இந்த மூன்றுமே சங்கல்ப விகல்பம். ஆதலால், மனத்தில் யாதொன்றும் இல்லாமல் சுத்த மனமாக, நாம் நஷ்டமடைய மாட்டோமென்று உள்ளழுந்தி நிச்சயித்தலே சங்கல்பம்.[148]

## 103. பற்று

மனத்தின் கூறுபாடு ச வகை: அதாவது ஜீவப் பற்று, பந்துப் பற்று, களத்திரப் பற்று, தேகப் பற்று. தேகப்பற்ருகிய அகப்பற்றுப் போயிருத்தல் சங்கல்பம்.[149]

## 104. ஞானசிருஷ்டி

இறந்தவர்கள் உயிர்பெற்று வரும்போது (அது) ஞானசிருஷ்டி ஆதலால், ஞானத்தோடு வருவார்களா முன்னிருந்த அறிவோடுதான் வருவார்களா என்ருல்: இந்த மானிடதேகம் ஆண்டவரது சிருஷ்டி அன்று, மாயா சிருஷ்டி. முன்னிருந்த ஞான அஞ்ஞானத்தோடுதான் வருவார்கள். ஆனல் கிஞ்சித்து ஞான விசேஷம் உண்டாயிருக்கும். ஆதலால், மீள தரிசன விசேஷத்தால் மந்தம் நீங்கி ஞானம் விளங்கும்.[150]

## 105. சாத்திய நிலை

சமய மத சன்மார்க்கிகளில் தாயுமான சுவாமிகளும் இன்னும் அநேக பெரியோர்களும் சுத்தப் பரப் பிரமத்தினிடத்தில் இரண்டறக்கலந்துவிட்ட

---

148, 149 36-ம் பக்கம் பார்க்க.

150 56, 57-ம் பக்கங்கள் பார்க்க.

தாக முறையிடுவது வாஸ்தவமா அவாஸ்தவமா வென்றால், அவாஸ்தவம். சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலையைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக்கூடும். மற்றச் சமய மத மார்க்கங்களெல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிகளாதலால், அவற்றில் ஐக்கிய மென்பதே யில்லை. தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்தியதேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே அன்றிச் சாத்தியமல்ல. நானோச் சுத்த சன்மார்க்கம் வழங்கும்போது இவர்கள் யாவரும் உயிர் பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்.[151]

## 106. சுத்த சன்மார்க்க சாதனம்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென்றால்: எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை. உதாரணம் அருட்பெருஞ் சோதி ஆண்டவர் சொல்லியது: "கருணையுஞ் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம் மருளெறியெனவே எனக்கு நீ உரைத்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்". . .[152]

---

151 70, 71-வது பக்கங்கள் பார்க்க.

152 27, 68-ம் பக்கங்கள் பார்க்க. திருவருட்பா, சு-ம் திருமுறை, பிள்ளைப் பெருவிண்ணப்பம், கo.

## 107. அசுத்த நிவர்த்தி

மனுஷ்ய வல்லபத்தால் தனக்கிருக்கிற அசுத்தங்களை நிவர்த்திசெய்துகொள்ளக் கூடுமோவென்றால்: இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியும் ஞானத்தால் விஷய வாசனையில் கரணங்களைச் செல்லவொட்டாமல் தடுக்கக்கூடுமே ஒழிய, நிவர்த்திக்கக்கூடாது. அது ஆண்டவ ரருளால் சுத்த தேகம் பெற்றவர்களால்தான் முடியும். அது அருளொளி கிடைத்தால் அத்தருணமே சுத்தக் கரணமாய் நிற்கும். அசுத்தம் வருவதற்குக் காரணம் யாதெனில் செம்பிற் களிம்பு இயற்கை. அது போல் ஆன்மாவிற்கு ஆணவம் இயற்கை. செம்பிலே களிம்பு இயற்கையா யுள்ளதைப் பரிசன வேதியினால் நிவர்த்தித்து ஏமமாக்குவது போல், மாயா காரியமான இந்தத் தேகத்தின்கண் உள்ள ஆன்ம இயற்கையாகிய ஆணவமலம் ஆண்டவ ருளினால் நீங்கப்பெற்று சுத்த உடம்பாக்கிக் கொள்ளலாம். ஆண்டவர் அருள் அடைவதற்கு, நாம் இடைவிடாது நன்முயற்சியின்கண் பழகுதல்வேண்டும். இதற்குப் பிரமாணம்:

"ஓடாது மாயைநீ ஊடாது நன்னெறி
வீடா தெனச் சொன்னீர் வாரீர்
வாடா திருவென்றீர் வாரீர்"153

## 108. பஞ்சசபை

ஆண்டவ ரிருக்கும் பொது ஸ்தானங்கள் ரு. இவைகள் பஞ்ச சபைகளாகச் சொல்லப்பட் டிருக்

153 70-ம் பக்கம் பார்க்க. திருவருட்பா, கீர்த்தனைப் பகுதி வருகைப்பாட்டு, (2) கூசு

கின்றன. பிருதிவி பொற்சபை, அப்பு ரஜத சபை, தேயு தெய்வசபை, வாயு நிர்த்தசபை, ஆகாயம் சிற்சபை.[154]

## 109. எழு திரைகள்

இந்தப் பவுதிக உடம்பிலிருக்கிற நீ யாரெனில்: நான் ஆன்மா, சிற்றணு வடிவன். அவ்வணு கோடி சூரியப் பிரகாசமுடையது, லலாடஸ்தான மிருப்பிடம், கால்பங்கு பொன்மை முக்கால்பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சக்திகளாகிய எ திரைகளுண்டு. அவையாவன: கறுப்புத் திரை மாயா சத்தி, நீலத்திரை கிரியாசத்தி, பச்சைத்திரை பராசத்தி, சிவப்புத்திரை இச்சாசத்தி, பொன்மைத் திரை ஞானசத்தி, வெண்மைத்திரை ஆதிசத்தி, கலப்புத் திரை சிற்சத்தி.[155]

## 110. ஒளி

பிண்டவொளி அண்டவொளி, ஆன்ம ஒளி அக்கினி ஒளி, ஜீவவொளி சூரிய ஒளி, மனஒளி சந்திர ஒளி, கண்ணொளி நட்சத்திர ஒளி.[156]

## 111. அநுபவ ஸ்தானங்கள்

சுத்த சன்மார்க்கத்துக் கனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல்.[157]

---

154 57-ம் பக்கம் பார்க்க.

155 ஒரு பிரதியில் சத்திகள் வரிசையில் மாயைக்கு அடுத்து மாமாயை என்று கூட்டிக் கடைசியிலுள்ள சிற்சத்தியை விட்டிருக்கிறது.

156 46-ம் பக்கம் பார்க்க. 157 45-வது பக்கம் பார்க்க.

## 112. அமுத வகை

சுத்த அமுத ஸ்தானங்கள் ரு. க-வது அமுதம் நாக்கினடியில் இனிப்புள்ள ஊற்றுஜலம் போலிருக்கும். உ-வது அமுதம் உள்நாக்குக்குமேல் இளகின இனிப்புள்ள சர்க்கரைப் பாகு போ விருக்கும். ந-வது மூக்கு முனையில் காய்ச்சின சர்க்கரைப் பாகு போலிருக்கும். ச-வது நெற்றி நடுவில் முதிர்ந்தசர்க்கரைப் பாகு போ விருக்கும். ரு-வது மகா இனிப்புள்ள மணிக் கட்டியாக விருக்கும்; அதிக குளிர்ச்சியாகவு மிருக்கும். இந்த ரு-வது அமுதத்தை யுண்டவர்கள் என்றும் அழியாத தேக சித்தியைப் பெற்றவர்கள்.[158]

## 113. சுத்தமாதி தேகங்கள்

சுத்தமாதி மூன்று தேகவிவரம்: சுவர்ண தேகம், பிரணவதேகம், ஞானதேகம்.

சுவர்ணதேக விவரம்: காரியரூபம், பரதேகம், பரவுணர்ச்சி, பர அறிவு, பரத்துவம், பொன் வண்ணம், கஉ வயது, பருவம் நரை திரை பிணி மூப்பு மல ஜலம் வேர்வை ஆகாரம் நித்திரை தாகம் சாயை முதலியன இல்லாமை, ரோம வளர்ச்சி தாழ்ச்சி யில்லாமை, அபாஞ்சிமாற்று, கர்ம சித்தி, கல்பதேகி, அபரமார்க்கி.

பிரணவதேகம்: காரிய காரண ரூபம், பரம்பர தேகம், பரம்பர வுணர்ச்சி, பரம்பர அறிவு, பரம்பர தத்துவம், கரு முதல் க0அ வரையில் மாற்று, ரு முதல் அ வயது, உரைபடாதது(?), தேகம்

---

158 ங-வது மூக்குமூனை, மூக்கின் மூனை என்று சில பிரதிகளில் காண்கிறது.

தோற்றும் பிடிபடாது, சர்வ சித்தி, பிராண கல்ப தேகி, பர அபர மார்க்கம்.

ஞானதேகம்: காரணரூபம், எங்கும் பூரணவியாபகம், பராபர அறிவு, பராபர தத்துவம், அளவு கடந்த மாற்று, சப்தமய தரிசனம், சர்வ மகா சக்தி, சர்வ சுதந்தரம், உருவம் தோற்றியும் தோற்றாமலு மிருக்கும், காலாதீதன்.[159]

## 114. சித்திவகை

கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி எனச் சித்தி வகை மூன்றாம்.

கர்ம சித்தியாவது:—அணிமா, துரும்பை மேருவாக்குகிறது; மகிமா, மேருவைத் துரும்பாக்குகிறது; கரிமா, மேருவை ஒன்றுமில்லாமல் செய்கிறது; லகிமா, ஒன்று மில்லாத இடத்தில் அனேகங்களாகச் செய்கிறது; ஈசத்துவம், குளிகை வல்லபத்தா லெங்கும் செல்லுகிறது; பிராகாமியம், பரகாயப்பிரவேசம்; வசித்துவம், எழுவகைத் தோற்றமாகிய தேவ மானுஷ்ய நரக மிருக பக்ஷி ஊர்வன விருக்ஷம் முதலியவற்றைத் தன் வசப்படுத்துகிறது; தேகத்தைக் கல்பசித்திசெய்து கொள்ளுதல்; அபர மார்க்கி; சதாசிவாந்த அனுபவம்; சதாசிவகால வரை; பிரேதத்தை உயிர்ப்பித்தல்; சித்தி காலம், ௬௯ நாழிகை முதல் ௬௯ வருஷத்திற்குள்.

யோக சித்தி விவரம்:—கூச சித்திகளையும் தன் சுதந்தரத்தில் நடத்துகிறது; சங்கல்ப குளிகை; பிராண கல்பதேகி; பிரம காலம்; பராபரமார்க்கி; சித்திகாலம், கஉ வருஷ முதல் க0அ வருஷத்

159 70-ம் பக்கம் பார்க்க.

திற்குள்; புதைத்த தேகத்தை நாசமடையாமுன் உயிர்ப்பித்தல்.

ஞானசித்திகளின் விவரம் :—அறுபத்து நாலாயிரம் சத்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்துகிறது; கூஎ கோடியாகிய(?) கூஅஅ கோடி பேதமாகிய மகாசித்திகளையும் தன்னிஷ்டம்போல் நடத்துகிறது; காலம் கடந்தது; அடிநிலை முடிநிலை சுத்த கர்ம சுத்த யோக சுத்தஞான சித்திவல்லபங்களைத் தன் சுதந்தரத்தால் நடத்துகிறது. 160

## 115. ரசவாதம்

ரசவாதம் எ, உபரசவாதம் எ.

ரசவாத விவரம் :—ஸ்பரிசவாதம், ரசவாதம், தூமவாதம், தாதுர்வாதம், வாக்குவாதம், அக்ஷிவாதம், சங்கல்பவாதம், ஆக எ. (இவை முறையே) குருசம்பந்தத்தால், ஒஷதி சம்பந்தத்தால், புகைவேதியால், பஞ்சலோகங்களால், சொல்லால், பார்வையால், தியானத்தால் (செய்யப்படும்.)

உபரச வாத விவரம்: மந்திரவாதம், புரீஷவாதம், தூளன வாதம், வாயு பிரேரகவாதம், தேவாங்கவாதம், பிரவேச விசிரிம்பிதவாதம், தந்திர வாதம் ஆக எ. (இவை முறையே) எழுத்துகள் சம்பந்தத்தால், மலமூத்திரத்தினால், பாததூளிகை சம்பந்தத்தால், சுவாசசம்பந்தத்தால், உபாசனையினால், பூததாதுவால், நிரேதுவாக—செய்யப்படும். 161

---

160 சஅஅ கோடி பேதம் என்று ஒரு பிரதியில் காண்கிறது. தவிர, இங்குச் சொற்கள் பிறழ்ச்சி யுற்றிருக்கின்றன போலும் :—70-ம் பக்கம் பார்க்க.

161 சில பிரதிகளில் வாயு பிரேகவாதம், வாயு பிரயோக வாதம் என்றும், தேவாகமவாதம் என்றும் காண்கின்றன. 70-ம் பக்கம் பார்க்க.

## 116. குளிகை மணி

குளிகை மணி ஒன்பதின் விவரம் :—க. பரம்பர மணி, அண்டத்தையும் அண்டவஸ்துக்களையும் காட்டுவது. உ. பராபரமணி, பிண்டத்தையும் பிண்ட வஸ்துக்களையும் காட்டுவது. ௩. அரும்பெறன்மணி, நினைத்ததை நினைத்தபடி அருளுவது. ச. ககனமா மணி, விண்ணுலக வஸ்துக்களை ஆட்டிவைக்கும். ரு. சர ஒளி மணி, மண்ணுலகையும் மண்ணுலக வஸ்துக்களையும் ஆட்டிவைக்கும். சு. கலை நிறை மணி, எல்லா வுலகத்தும் உலாவுதல். எ. வித்தக மணி, சர அசர வஸ்துக்களிடம் விளங்குவது. அ. சித்தி செய்மணி, மகாசித்திகளை நடத்துவது. கூ. வளரொளி மணி, அழியாப் பெரு வாழ்வு அளிப்பது.[162]

## 117. திசைக்குறிப்பு

க. வடக்குப் பாகம், நக்ஷத்திரப் பிரகாசம், உ. கிழக்குப் பாகம், சந்திரப் பிரகாசம். ௩. மேற்குப் பாகம், சூரியப் பிரகாசம். ச. தெற்குப்பாகம், அக்கினிப்பிரகாசம்.

கிழக்குத்திக்கை நோக்கித் தியானம் செய்கிறது போக சித்தியைப் பெறுகிறதற்கு. மேற்கு, மேற்படி சொர்ண சித்தியைப் பெறுகிறதற்கு. தெற்கு, சாகாக்கலையை—நித்திய தேகத்தையும் ஞான சித்தியையும் — பெறுகிறதற்கு. வடக்கு, சித்த சுத்தியைப் பெறுகிறதற்கு. வடக்கு காற் புறம். தெற்கு தலைப்பாகம். இதனால் தான் தெற்கு ஞானத்தில் சிறந்தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந்தியது.

---

162 70-ம் பக்கம் பார்க்க.

தலைகீழ், கால்மேல் என்பதற்கு நியாயம்: அடி கீழ், முடிமேல்; அடி தலை, முடி கால்; தலை கிழக்கு, கால் மேற்கு; கிழக்கு தாழ்ந்தது, மேல் திக்கு உயர்ந்தது. மேலும் இவற்றை அநுபவத்தால் அறிக.[163]

## 118. நித்தியத் துறவு

நித்தியத் துறவென்பது: அறம் பொருள் இன்பம் வீடு—இந்த நான்கையும் நித்தியம் ச காலங்களிலும் செய்து அநுபவித்துப் பற்றற்று இருப்பதே நித்தியத்தை அடைவதற்கு ஏதுவாக இருக்கின்றது.[164]

## 119. சுக்கில சுரோணிதம்

சுரோணிதப் பையிடத்தில் மூன்று மணி சேர்ந்த கொத்து க வலது புறத்திலும், நான்கு மணி சேர்ந்த கொத்து க இடது புறத்திலும் இருக்கின்றன. சுரோணித சுக்கிலம் கலந்து கர்ப்பந் தரிக்கிற காலத்தில், மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப் பட்டால் ஆண் குழந்தையும், நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலது புறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும், இடது புறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண் குழந்தையும் பிறக்கும்.[165]

## 120. சமய நூல்களில் பிழை

சமய மத சாத்திரங்களில் அனேக இடத்தில் பிழைக ளிருக்கின்றன. அதற்குக் காரணம்

---

163 46-ம் பக்கம் பார்க்க. 164 49-ம் பக்கம் பார்க்க.

165 42-ம் பக்கம் பார்க்க.

அவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்தத்தை அடைந்திருந்தவர்கள். ஆகையால் முன்னுக்குப் பின் மறைப்புண்டு தப்புகள் நேரிட்டிருக்கின்றன. மாயையை வென்ற சுத்த ஞானிகளுக்கல்லது மற்றவர்களுக்குப் பிழையற இயற்ற முடியாது. அந்தப் பிழைகள் சுத்த சன்மார்க்கம் விளங்குகிற காலத்தில் வெளிப்படும்.[166]

## 121. மரணம் தவிர்த்தல்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கியத் தடையாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக்குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும், கொலை புலை தவிர்ந்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள் ; மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம்—இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது, செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிசார மரணம் நீங்கும். அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக்கொள்ள மாட்டார்கள் ; அருள் விளங்குங் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அநுபவிக்கக்கூடும் ; பரலோக போகமாகிய ஞான சித்திகளைப் பெறமாட்டார்கள்.[167]

## 122. ஒன்றும் இரண்டும் ஆதல்

கடவுள் ஒன்றல இரண்டல ஒன்றுமிரண்டுமானார் என்பதற்குத் தாத்பரியம்: ஒன்றல, கடவுளானவர்

166 32-ம் பக்கம் பார்க்க. 167 29-ம் பக்கம் பார்க்க.

ஒன்றாகிய ஞான தேகியும் அல்ல; இரண்டல, சுத்தப் பிரணவதேகியும் அல்ல. ஒன்றுமிரண்டுமானார், கடவுளானவர் தன்னருளைப் பெற்ற சுத்த ஞானிக்கு ஞான தேகத்தையும் சுத்தப் பிரணவ தேகத்தையுங் கொடுக்க முதற்கருவியாக இருக்கின்றார். இதை அநுபவத்தால் குருமுகத்தில் உணர்க.[168]

## 123. ஆண் பெண் பருவம்

ஆண் பிள்ளைப் பருவம் ௫ : சைசவம் ௫ வரையில், வாலிபம் ௧௫ வரையில். கௌமாரம் ௩௦ வரையில். யௌவனம் ௪௦ வரையில். வார்த்திகம் ௪௦-க்கு மேல். பெண்பிள்ளைப் பருவம் ௮: பேதை ௭ வரையில். பெதும்பை ௯ வரையில். மங்கை ௧௨ வரையில். மடந்தை ௧௬ வரையில். அரிவை ௨௫ வரையில். தெரிவை ௩௦ வரையில். பேரிளம்பெண் ௪௦ வரையில். விருத்தை ௪௦-க்கு மேல்.[169]

## 124. நவ நிலை

நவநிலை என்பது அநுபவ மார்க்கம். விந்து, நாதம், பரவிந்து, பரநாதம், திக்கிராந்தம், அதிக்கிராந்தம், சம்மௌனம், சுத்தம், அதீதம்.[170]

## 125. பரம் அபரம்

ஞானம் பரஞானம் அபரஞானமென இரண்டு. பரஞானமென்பது முன், சாத்திர ஞானம் அல்லது விசார ஞானம், வாசா கயிங்கரியம், சாதனம், வாச்சியார்த்தம். பரஞானமென்பது பின், அநுபவ ஞானம், சாத்தியம், லக்ஷியார்த்தம். மேலும் பரம்

168 70-ம் பக்கம் பார்க்க. 169

170 29, 79-ம் பக்கங்கள் பார்க்க. சில பிரதிகளில் 5. அபர விந்து, 6. அபர நாதம், 9. அருள் என்று கண்டு, சம்மௌனம், சுத்தம், அதீதம் என்பன விட்டிருக்கின்றன.

முன், அபரம் பின்; சாத்திரம் முன், அநுபவம் பின்; சாதனம் முன், சாத்தியம் பின். ஆதி முதல், அந்தம் கடை, அநாதி ஆதி அந்த மில்லாதது.[171]

## 126. அண்ட பிண்ட அமுதம்

அண்ட அமுதம் ௪. அக அமுதம், அகப்புற அமுதம், புற அமுதம், புறப்புற அமுதம்—மழை. பிண்ட அமுதம் ௪. அக அமுதம், அகப்புற அமுதம், புற அமுதம், புறப்புற அமுதம்—வெயர்வை. அண்ட அமுதம் மழை முதலாக ௪. பிண்ட அமுதம் வெயர்வை முதலாக ௪.[172]

## 127. மூவகை உயிர்கள்

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆக ௩. சகலர் இயற்கையாகிய ஆணவம், இயற்கையில் செயற்கையாகிய மாயை, செயற்கையாகிய காமியம் அல்லது கர்மம்—இம்மூன்று முள்ளவர். பிரளயாகலர் இயற்கையாகிய ஆணவம், இயற்கையில் செயற்கையாகிய மாயை—இவ்விரண்டு முள்ளவர். விஞ்ஞானகலர் இயற்கையாகிய ஆணவ மாத்திரம் உள்ளவர். சகலர் ஜீவர்கள். பிரளயாகலர் கல்பதேகிகள். விஞ்ஞானகலர் காலாதீதர்கள். சுத்தம் ௯, அசுத்தம் ௯, ஆக ௧௮.[173]

## 128. அகரமும் ஓங்காரமும்

அகரமாகிய முதல் எழுத்து உற்பத்தி விவரம்:[174] 1. விந்து, பெரிய வெளிச்சம், சூரிய


---

171 இதில் பரம் அபரம் என்பவை ஒன்றுக்கொன்று இடம் மாறியிருக்கின்றன போலும்.

172 58-ம் பக்கம் பார்க்க. 173 40-ம் பக்கம் பார்க்க.

174 இதன் கீழ் அடுத்த பக்கத்திலுள்ள அகரத்தின் வரிவடிவத்தில் கண்ட எண்கள் இதில் விவகரிக்கும் அவ் எண்களுடைய சத்திகளின் தொடர்ந்த அமைப்பைக் காட்டும். இக்குறிப்பில்

வெளிச்சம். 2. நாதம், பெரிய நாதம். 3. பர விந்து, அதில் பாதி வெளிச்சம், சந்திரவெளிச்சம். 4. பரநாதம், நாதம். 5. அபர விந்து, வெளிச்சம், நக்ஷத்திர ஒளி. 6. அபரநாதம், நாதம். 7. திக்கிராந்தம், அருகிய வெளிச்சம், மின்னல் ஒளி. 8. அதிக்கிராந்தம், சப்தம். 9. வாமசத்தி. 10. ஜேஷ்ட சத்தி. 11. ரௌத்திரி சத்தி. 12. காளி சத்தி.




ஓம் என்னும் எழுத்து பிரணவம் என்று சொல்லப்படும். படைத் தளித் தழிக்க வல்ல தலைவன் என்பதே அந்த ஓங்காரத்தின் பொருள்.

சொற்கள் குறைவு பட்டும் பிறழ்ச்சியுற்றும் கருத்து விளக்கமற்றிருக்கிறது போலும். 29-ம் பக்கம் பார்க்க.

## 129. குணவகை

சத்துவம், ராஜஸம், தாமசம் என்று குணங்கள் ௩. ஒவ்வொன்றிலும் ௩ சேர்ந்து ௯ ஆயின. இந்த ௯-ம் சுத்தம் அசுத்தம் என்னும் பேதத்தால் ௧௮ ஆயின.[175]

## 130. பஞ்ச மகா பாதகங்கள்

கள், காமம், கொலை, களவு, பொய்—இவ் வைந்தும் கொடிய துக்கத்தை உண்டுபண்ணும். இவ்வைந்திலும் கொலை விசேஷ பாவம். (எனினும்), கள்ளுண்டவனுக்குக் காமம் உண்டாகாமலிருக்காது, கொலைசெய்யத்துணிவு வாராமலிராது, களவு செய்யாமலிரான், பொய் பேச அஞ்சான். ஆகையால், இந்த ஐந்தையும் ஒழிக்கவேண்டியது அவசியம். இதில் ஒன்றை அடைந்தவனானாலும் அவனை மற்றவை தொடராமலிரா.[176]

## 131. சிவ குணமும் ஜீவ குணமும்

சிவகுணம் ௮. அதாவது: தன் வயத்தனாகுதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை.

ஜீவகுணங்கள் ௮. அவையாவன: பராதீனன், துக்கதேகி, செயற்கை உணர்வினன், சிற்றுணர்வினன், பந்தன், காடின்னியன், நிர்பவன், மலதேகி ஆக ௮.[177]

---

175 36-ம் பக்கம் பார்க்க. இக்குறிப்பு ஒரு பிரதியில் மட்டும் காணப்படுகிறது.

176 54, 55-ம் பக்கங்கள் பார்க்க.

177 இக்குறிப்பு ஒரு பிரதியில் மட்டும் காணப்படுகிறது.

## 132. பஞ்ச அமுத ஸ்தானங்கள்

யோகானுக்கிரக பஞ்ச அமுத ஸ்தானங்கள் ரு. க-வது அமுதம் நாக்குநுனியில், பக்குவ ஞானத்தால், சிருஷ்டி வல்லபப் பிரஞ்ஞையால். உ-வது புவனமுதம் நாக்குமத்தியில், பக்குவக் கிரியையால், ஸ்திதி பிரஞ்ஞை புணர்ச்சியால். ந-வது மண்டலாமிருதம் நாக்கினடியில், பக்குவ இச்சை, சம்மார உணர்ச்சியின் தன்மையால். ச-வது ரகசியாமிருதம் உள்நாக்கடியில், பக்குவ திரோபவம். ரு-வது மௌனமிருதம் உண்ணாக்குக்கு மேல், பக்குவ அனுக்கிரகம், அனுக்கிரகம், சுபாவத்தினது அனுபவம், துரியநிலை.[178]

## 133. பூதம் என்பதன் சப்தார்த்தம்

பூதமென்பது யாது? அதனது சொரூப ரூப சுபாவங்களென்ன? பூதம் என்பதற்குச் சப்தார்த்தம்: பூ மலர்ந்தது, பிரகாசம்; த தடித்தது, காரியம்; ம் ஊன்றியது, நிலை. இதற்குத் தாத்பர்யம்: நிலைபெற்ற காரியப் பிரகாசம். பூத அக்கினித் தோற்றமென்றும் பெயர். பூதகாரிய அக்கினி என்றும் பெயர். பூ என்பதில் உகர உயிரும் தம் என்பதில் அகர உயிரும் எண்ணில் அ-ம்,உ-ம் ஆயின. ஆக தொகை கo. இந்தப் பத்து இடத்திலும் பூதகாரிய அக்கினித் தோற்றம் உண்டு. கல்லுக்குள் ளிருக்கிற நெருப்பு பஞ்சில் காரியப்படுவது போலாம். பத்துப் பொது ஸ்தானங்களாவன: மண், ஜலம், அக்கினி, காற்று, வெளி, பிரகிருதி,

---

178 இக்குறிப்பில் சொற்கள் பிறழ்ச்சியுற்றும் குறை வுற்றும் கருத்து விளக்கமற்றிருக்கிறது போலும்.

மாயை, சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் ஆக இடம் ௧௦.[179]

## 134. தேக நஷ்டத்தின் முதற் காரணங்கள்

இந்த உலகத்தில் மனிதர்களுக்குத் தேகம் சீக்கிரத்தில் நஷ்டம் அடைவதற்குக் காரணம் இரண்டு. அவையாவன: ஆகாரம், மைதுனம். ஆகாரத்தா லொன்பது பங்கு நஷ்டமும், மைதுனத்தா லொருபங்கு நஷ்டமும் உண்டாகிறது. எப்படி யெனில் : பிண்ட உற்பத்தியின் காலம் தொடங்கி இறந்து போகிற பரியந்தம் ஆகாரம் உண்டு. இது இயற்கை. சிசு, வாலிபம், விருத்தாப்பியம்—இந்தப் பருவங்களில் மைதுனம் கிடையாது. கவுமாரம் யௌவனம்—இந்த இரண்டு பருவங்களில் மாத்திரம் மைதுனம் உண்டு. இந்தப் பருவங்களிலும், நோயாலும் துக்கத்தாலும் தரித்திரத்தாலும் பசியாலும் பயத்தாலும் வேறு அநந்த வகையால் உண்டாகும் துன்பங்களாலும் மைதுனம் தடைப்படும். இந்தக் காலத்திலும் ஆகாரம் உண்டு. பொருந்தல் ஏகதேசம். நஷ்டமும் அப்படியே யிருக்கிறது. ஆகார விஷயத்தில் அதிக்கிரமம் அக்கிரமம் அஜாக்கிரதை அசாதாரணம்—இப்படிப்பட்ட உணவுகளை நீக்கி, சுத்த சத்துவ ஆகாரங்களைப் புசித்து ஆயுள் விர்த்தி செய்து கொள்வது சுத்த சன்மார்க்க ஏற்பாடு.[180]

## 135. சந்திரன்

சந்திரன் மகிமை வரலாறு: ரூபாரூபி, காரியகாரணன், சோபாமாத்திரன், சடாத தன்மை, கலை ௧௨, தாரகை கலை ௪, அர்த்த வடிவன், பிரமாண்ட பகி

179 72-ம் பக்கம் பார்க்க. 180 22-ம் பக்கம் பார்க்க.

ரண்டவியாபகன், பச்சைவெண்மை கலந்தமேனி, மனஅறிவு சபை, மன ஒளியே பதி.[181]

## 136. சூரியன்

சூரியன் வரலாறு: ரூபி, காரியன், ஒளிமாத்திரன் சுட்டுஞ் சுடாத தன்மை, கலை கஉ, வட்டவடிவன், பிரமாண்ட வியாபகி, பஞ்சவர்ணம், ஜீவ அறிவு சபை, ஜீவ ஒளியே பதி.[182]

பஞ்ச வர்ணங்க ளாவன :—

| | | |
|---|---|---|
| வெண்மை | ஆதிசத்தி | அனுக்கிரகம் |
| பச்சை | பராசத்தி | திரோபவம் |
| செம்மை | இச்சாசத்தி | சம்மாரம் |
| கருமை | கிரியாசத்தி | ஸ்திதி |
| பொன்மை | ஞானசத்தி | சிருஷ்டி. |

## 137. அக்கினி

அக்கினியின் வரலாறு: அரூபி, காரணன், பிரகாச மாத்திரன், சுடுந்தன்மை, கலை கூச, பூர்ண வடிவன், எங்கும் வியாபகி, சுவர்ணம், ஆன்ம அறிவு சபை, ஆன்ம ஒளியே பதி.[183]

## 138. காயத்ரி

காயத்ரி : கா - ய - த்ரி. க ஜல தத்துவமாகிய ஸ்தூல தேகம், பிரம ஸ்வரூபம். ய வாயு தத்துவ மாகிய சூக்ஷ்ம தேகம், விஷ்ணு ஸ்வரூபம். ஆ அக்னி தத்துவமாகிய காரண தேகம், ருத்ர ஸ்வ ரூபம். த்ரி மூன்று. அதாவது, மேற்குறித்த

181, 182, 183 61-ம் பக்கம் பார்க்க.

மூன்று தேகங்களின் ஸ்வரூப ரூப சுபாவ குணங்களை ஐயம் திரிபு மயக்க மின்றிக் கடந்தால், ஜனன மரண சாகரம் நீங்கி நித்தியர் ஆவோம். எப்படியெனில்: காயத்திரி மந்திரத்திற்குப் பாதம் மூன்று. பாதம் ஒன்றிற்கு வர்ணம் எட்டு. ஆக மூன்று பாதத்திற்கும் வர்ணம் இருபத்து நான்கு. பாதம் மூன்றென்பதன் குறிப்பு ஜீவர்களுக்கு மலம் மூன்று. வருணம் இருபத்து நான்கு என்பதன் குறிப்பு: இரு இரண்டு, ஜீவகாருண்யம் தத்துவ விசாரம் ஆகிய இரண்டையும்; பத்து (பற்று) பிடி., பற்றினால்; நான்கு நாலாகிய ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, யாசவைராக்கியம், பிரம ஞானம் ஆகிய இவற்றை அடையலாம். அடைந்து; காயத்ரி மந்திரம் திரிமூர்த்தி ஸ்வரூப மாதலால், இதற்கு அதீதமான பிரமானுபவத்தைப் பெறலாம்.

மேலும், தத்துவ த்ரயங்களான மூன்று தேகங்களுக்கும் தத்துவம் யாதெனில்: வர்ணம் இருபத்து நான்கு. ஆதலால், ஸ்தூல தத்துவம் இருபத்துநான்கு. பாதம் மூன்று, காயத்ரி திரிமூர்த்தி ஸ்வரூபம், இவற்றுள் ஒன்றில் ஒன்றைக் கொடுக்க வந்தது ஒன்று:—௩, ௩, க, ஆகிய இவற்றைச் சேர்க்க ஏழு ஆகிறது. ஆதலால், சூட்சும தத்துவம் ஏழு. இதற்குச் சத்தி மூன்று. அநுபவ சத்தி ஒன்று, சமத்துவம் ஒன்று. ஆக ஐந்து. ஆதலால், காரண தேக தத்துவம் ஐந்து. மேற் குறித்த முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தால், அநுபவம் விளங்கும். எப்படியெனில்:—ஓதயாத்: ஓ ஆன்ம அறிவின்கண், த சத்துவ குணமயமாய், த் அருளனுபவம் பெற்று, யா பிரம

மாதல். ஆதலால், மேற்குறித்த காயத்திரியின் ஸ்வரூ பாநுபவத்தைப் பெறுதலாம்.184

## 139. ஜென்மம்

பூர்வ ஜென்மம் என்பது கர்ப்பகோள வாசம். உத்தரஜென்மம் என்பது ஜனன காலம்.185

## 140. திரயோதச நிலைகள்

திரயோதச நிலைகள் யாவெனில்: பூதநிலை க, கரணநிலை உ, பிரகிருதிநிலை ங, மோகினி நிலை ச, அசுத்த மாயாநிலை ரு, அசுத்த மகா மாயாநிலை சு, சுத்த மாயா நிலை எ, சுத்தமகா மாயாநிலை அ, சர்வ மகா மாயாநிலை கூ, குண்டலி நிலை க0, பிரணவ நிலை கக, பரிக்கிரகநிலை கஉ, திருவருள் நிலை கங, ஆக கங. இதற் கதீதத்தில் சுத்த சிவநிலை. இதற்குச் சத்தி, ஆகாயம், நிலை, வெளி, பிரகாசம், அநுபவம், பதம், இடம் முதலிய பெயருள்ளன.

மேலும், வர்ணமாகிய எழுத்தாலும், வண்ணமாகிய ரூபத்தாலும், தொழிலாகிய பெயராலும் அனந்தமாக விரியும். இவை யாவும் ராகமென்கிற திரை நீங்கினால் ஒருவாறு தோன்றும். மேலும் இவைகள் படிப்பால் அறியக்கூடாது. அறிவது எப்படி யெனில்: ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்ப முண்டானால், நாம் தாழுங் குணம் வரும். அத்தருணத்தில் திருவருட் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது நன்முயற்சியில் பழகல் வேண்டும்.186

---

184 இக்குறிப்பில் சொற்கள் குறைவுபட்டும் பிறழ்ச்சியுற்றும் கருத்துத் தொடர்பு அற்றது போலும். இது ஒரு பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

185 இது ஒரு பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

168 இது ஒரு பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

## 141. உபதேசம்

உபதேசம்: படிகமேடை க, ஆயிரத்தெட்டுக் கமல இதழ் உ, ஓங்காரபீடம் ங, குண்டலிவட்டம் ச, ஜோதிஸ்தம்பம் ரு, சுத்த நடனம் சு. இவற்றை அநுபவத்தினு லறிக. இஃது நிராதார லக்ஷணம்.[187]

## 142. சுவர்ணதேகிகள் ஆயுள்

சுவர்ணதேகிகள் ஆயுள்.

ஒரு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு—நாலு லக்ஷத்து முப்பத்தீராயிரம், (ச,நஉ,000).

இரண்டு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு—எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரம்.(அ,சுச,000)

மூன்று மாற்றுள்ள சுவர்ணதேகிகள் வயசு—பன்னிரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்று ஆறுயிரம், (கஉ,சுசு,000).

நான்கு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு—பதினேழு லக்ஷத்து இருபத் தெட்டாயிரம், (கஎ,உஅ,000).

ஐந்து மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு—நாற்பத்து மூன்று லக்ஷத்து இருப தாயிரம், (சங,உ0,000).

ஐந்துபூதங்களின் பேதம் பன்னிரண்டு லக்ஷத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது கோடியாய் இருக்கின்றது—(கஉ,0உ,அரு0,00,00,000).[188]

---

187 இது ஒரு பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

188 இக்குறிப்பு மெய்யன்பர் இறுக்கம் இரத்தின முதலியார் அவர்கள் கைக்குறிப்பில் காண்கிறது.

## 143. அணுபக்ஷ சம்புபக்ஷ அநுபவ விவரம்

ஐந்து மாற்றுள்ள சுவர்ணதேகி பிரமன் வயசு—நாலு லக்ஷத்து முப்பத்திராயிரம், (௪,௩௨,000).

ஆறு மாற்றுள்ள சுவர்ணதேகி விஷ்ணு வயசு—எட்டுலக்ஷத்து அறுபத்து நாலாயிரம்(௮,௬௪,000).

ஏழு மாற்றுள்ள சுவர்ணதேகி ருத்திரன் வயசு—பன்னிரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்று ஆறாயிரம், (௧௨,௯௬,000).

எட்டு மாற்றுள்ள சுவர்ண தேகி மயேச்சுரன் வயசு—பதினேழு லக்ஷத்து இருபத்தெட்டாயிரம், (௧௭,௨௮,000).

ஒன்பது மாற்றுள்ள சுவர்ணதேகி சதாசிவன் வயசு—நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதினாயிரம், (௪௩,௨0,000).

இவர் அணுபக்ஷத்தார்.

அணுபக்ஷத்தில் நாற்பத்து மூவாயிரத்து இருநூறு லக்ஷங்கோடி விந்து சத்தியின் அளவு; அளவிறந்தகோடி நாதத்தின் அளவு.

அணுபக்ஷத்தில் பரவிந்து சுத்த மாயையைக் கடந்தது; பரநாதம் சுத்தமகா மாயையைக் கடந்தது.

சம்பு பக்ஷத்தில் பிரமன், விஷ்ணு, ருத்திரன், மயேச்சுரன், சதாசிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்பவற்றில்—பிரமன் விஷ்ணு சுத்த மகா மாயையைக் கடந்த ஞான அநுபவபேதம்; ருத்திரன் சித் அநுபவம்; மயேச்சுரன் ஆனந்த அநுபவம்; சதாசிவன் சத் அணுபவம்; விந்து சிதானந்த அணுபவம்; நாதம் சதானந்த அணுபவம்; பர

விந்து சச்சிதானந்த அனுபவம்; பரநாதம் சிவானு பவம். இவை ஒருவாறு.[189]

## 144. மூன்றாசை

சுத்த சன்மார்க்க லக்ஷிய அனுபவ விருப்பமுடையவர்களுக்கு நனவினும் மண்ணாசை, கனவினும் பெண்ணாசை, சுழுத்தியினும் பொன்னாசை முதலிய மூன்றுங் கூடாவாம்.[190]

*அருட் பெருஞ்ஜோதி தனிப் பெருங்கருணை*

**ஆ. சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைச் சிறு குறிப்புகள் முடிந்தன**

---

189 இக்குறிப்பு மெய்யன்பர் இறுக்கம் இரத்தின முதலியார் அவர்கள் கைக்நோட்டில் காண்கிறது.

190 இது ஒரு பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

## ரு. சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைத் தனிக் குறிப்புகள்[191]

### 1. வாக்கு

வாக்கு நான்கு என்பது யாதெனில்: அபர வாக்கு, பரவாக்கு, துரியவாக்கு, அநுபவ வாக்கு. இவற்றில் அபரம் ஸ்தூலவாக்கு, பரம் அசரீரி வாக்கு, துரியம் அறிவில் விளங்குவது, அநுபவம் யாவுமாய் விளங்கித் தோன்றுவது.

### 2. பிபீலிகம் விகங்கம்

ஆன்ம லாபம் அடைவதற்கு ஞாயம் இரண்டு. என்னெனில்: பிபீலிகா ஞாயம், விகங்க ஞாயம். இவற்றுள் சிறந்தது விகங்கம். பலவகை இம்சையால் யோகத் தடைப்பட்டுப் போவது பிபீலிகா மார்க்கம்.

### 3. கோன்கண்ட குடியும் கோன்கொண்ட குடியும்

சிஷ்யன் ஆசாரியனைத் தேடிப் பிடிப்பதான மர்க்கடஞாயம்போற் காட்டப்பட்ட கோன்கண்ட குடியாகியது சித்தாந்தம். இவ்வழி நின்று ஜீவ போதம் கெட்டவிடத்தில், ஆசாரியனே சிஷ்யனைப் பற்றி இழுப்பதான மார்ச்சால ஞாயம்போல் ஊட்டப்பட்ட கோன்கொண்ட குடியாகியது வேதாந்தமாகிய அத்வைதம்.

---

191 இந்தத் தலைப்பின்கீழ், ஓர் ஓர் பிரதியில், வேறு வேறு குறிப்புகள், ஓர் ஓர் இடத்தில், தொடர்ச்சியில்லாது எழுதியிருக்கின்றவற்றையும், சுவாமிகளிடம் நேரில் கேட்டவர்கள் பிற்காலத்தில் சொல்லக் கேட்டு மற்றவர்கள் துண்டு துண்டாகக் குறித்து வைத்திருக்கின்றவற்றையும் சேர்த்து இங்குத் தொடர்பு படுத்தியிருக்கிறது.

## 4. ரோம ரோம சாக்ஷி

ஜீவன் முக்தன் மனோசாக்ஷி. ஞானசித்தன் ரோமத்துக்கு ரோமம் சாக்ஷி. எங்கும் சுற்றுதல் இவர் தொழில்—யாவுமாய் நிற்றலே.

## 5. அடி முடி தேடல்

பிரமா அன்னமாகவும் விஷ்ணு வராகமாகவும் உருவங்கொண்டார் என்பதன் பொருள்: பாச அறிவும் பசு அறிவும் ஆம். ஒரு பொருளைக் காணுந் தன்மையுடையது பாச அறிவு. பசு அறிவாவது—பொறி புலன்களாலே அறியப்பட்டது ஜீவ அறிவு. மலத்தில் அழுந்துவது பாசம். பகுத்தறிவது பசு. மேலுங் கீழுஞ் செல்லுதலால், பாதாளத்திலும் ஆகாசத்திலும் தேடினரெனச் சொன்னது. மேலும், ஒவ்வொரு வஸ்துவிலும் பதி பசு பாச லக்ஷணம் உண்டு.

## 6. பிரம தண்டனை

பிரம தேவனுக்கு ஐந்து முகமாவன: ஆணவம், காமியம், மாயை, திரோதை, மாமாயை. இவைகளில் ஆணவம் என்னும் ஒரு தலைமாத்திரம் பரம சிவத்தினால் அரியப்பட்டது. பிரம தேவனது ஒரு சிரசை வெட்டும்பொருட்டுத் தோன்றின ருத்திரனுக்கு ஐந்து தலையாவன: இச்சை, ஞானம், கிரியை, ஆதி, பரை என்னும் ஐந்துமாம்.

இதுபோல் இராவணனது பத்துத் தலையும் அகங்காராதிகள் என அறியவும்.

## 7. சங்கல்பம்

சங்கல்பமாவது: சம் முடிவு; கல்பம் காலபேதம், கால முடிவு.

## 8. சூரியகலை

ஆலமரத்தடியில் சூரியனை வணங்கவேண்டியது என்பது என்னெனில்: சூரிய கலையில் தியானம் முதலிய செயல்கள் எல்லாம் செய்யவேண்டியது பற்றிச் சொன்னது.

## 9. பைரவர் வீரபத்திரர்

வடக்கே பைரவர் இருப்பார் என்பது யாதெனில்: நமது பாதத்தின்கண் உஷ்ணசத்தி விளங்குவதுதான். சிரசிலே வீரபத்திரராவது இச்சாசத்தி. இதைத் தென்திசையில் வீரபத்திரர் இருப்பதாகச் சொல்லுவது.

## 10. விஷ்ணு

ஆகாரம் உண்டவுடனே ஜீரணமாய்ப் பால்வண்ணமாக ஆகாரப் பையில் வெண்மை நிறமாக இருப்பது திருப்பாற்கடல் என்றும், அதனடியில் உண்டாம் பசி—தீவிர சக்தியாகிய உஷ்ணம்—வடவா முகாக்கினி என்றும்,இரண்டிற்கும் மத்தியில் உண்டாகிய சீதளம் விஷ்ணு பள்ளிகொண்டது என்றும் சொல்லுவது. திருப்பாற்கடலில் விஷ்ணு பள்ளி கொண்டது இது தான்.

## 11. வாமனுவதாரம்

காசிபர் என்பது மனம். இவரது பிள்ளையாகிய மாபலிச் சக்கிரவர்த்தியாவது மனதின் மந்தம். அதில் உண்டாகிய சீதம் சாக்கிரத்திலும் சுழுத்தியிலும் நிறைந்து நின்றது உலகளந்த பெருமாள் ஒருகால் மேலும் ஒருகால் கீழும் அளந்து ஓர் அடிக்கு இடமில்லா திருந்தது.

## 12. வடுகநாதர்

வடுகநாதர் விஷ்ணுவினுடைய தோலை உரித்துப் போர்த்துக் கொண்டது யாதெனில்: மனத்தில் உண்டான மந்தத்தில் தோன்றின சீதமான விஷ்ணு அகம் புறம் எங்கும் இருப்பதை, அப்படி எங்கும் பாரவொட்டாது, உஷ்ண சத்தி விளங்கிச் சீதபாகத்துக்குக் கவசம்போல் உட்பக்கம் இல்லாமல் மேற்புறமாகப் பாவியிருப்பது ருத்திரனை வடுகநாதர் என்பது.

## 13. மகளிர் சமத்துவ நிலை

பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்கவேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவைவும் சொல்லிக் கொடுக்கவேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப ரூபாதிகளைத் தெரிவித்துச் சாளமாக்கினால், பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள். "தெய்வந் தொழாஅள்" என்னும் தேவர் குறளால் இதை அறிக.

## 14. மூன்று அவஸ்தை

அவஸ்தை மூன்று: ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி. இவற்றில் உள்ளம் பித்த உஷ்ணத்தோடு கூடி லலாட ஸ்தானத்தில் நிற்பது ஜாக்கிரம்; சொப்பனமாவது உள்ளம் வாத நாடியோடு கூடிக் கண்ட ஸ்தானத்தில் இருப்பது; சுழுத்தியாவது உள்ளம் சிலேத்தும நாடியோடு கூடி மார்பு ஸ்தானத்தில் நிற்பது.

## 15. தக்ஷயாகம்

தக்கன் என்பது யான் எனது என்று அகங்கரிக்கும் ஜீவபோதம். தக்கன் யாகத்தை அழித்தது

என்பது ஜீவபோதத்தை அழித்தது. பிரமதேவன் பத்தினியாகிய சரஸ்வதியை மூக்கறுத்தது யாதெனில் : பிரமதேவனது சிரசில் ஒருமுகமாகிய அகங்கார தத்துவத்திற்கு உபகருவியாவது அவரது பத்தினியாகிய சரஸ்வதி. ஷை கல்வியின் முகப்பை அல்லது முகத்தலையாகிய மூக்கை அறுத்தது என்பது அடக்கியது. இல்லாவிட்டால், அபரஞானமே ஒழியப் பரஞானம் வராது.

## 16. வேதம்

அப்பு தத்துவத்தின் குணம் நான்கில் இருந்துண்டானவையே நான்கு வேதமும்.

## 17. பிரணவம்

பிரணவத்தின் ஐந்து பாகம் யாவெனில்: அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம். பஞ்சமி என்னும் வாக்கு பிரணவத்தின்கண் இருந்து தோன்றியது. அதற்கு ஸ்தானம் மூலாதாரம். அதிலிருந்து தோன்றிய மற்ற நான்கும் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. இவற்றிற்கு இடம் நாபி, இருதயம், கண்டம், லலாடம்.

## 18. குடிலை

குடிலை என்பது மூலப் பிரகிருதி.

## 19. பிண்டதிசை

கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்பவற்றில், தலை தெற்கு, கால் வடக்கு, நெற்றி கிழக்கு, முதுகு மேற்கு.

## 20. தேவாரம்

தேவாரம் என்பது: தேவ் தயவு, ஆரம் ஒழுங்கு; தயாவொழுங்கே தேவாரம்.

## 21. திருவாசகம்

திருவாசகம் என்பது : மெய்ப் பொருள் நிரம்பிய வார்த்தை, மெய்ப் பொருளைத் தரும் வார்த்தை.

## 22. வேதாரண்யம்

வேதாரணியத்தில் கதவு திறக்கப்பட்டதும் மூடப்பட்டதும் யாதெனில்: வேதப் பொருளை மறைத்ததுந் திறந்ததும் எனக் கொள்க. உண்மையை விளக்கினது திறந்தது, மறைத்தது மூடியது.

## 23. சந்திர சாபம்

சந்திரனுக்கு இரண்டு தண்டனை என்பது யாதெனில்: கணபதியாகிய அவாவை உல்லங்கனம் பண்ணினதால் சண்டாளத்துவம் நேரிட்டது. சந்திரனுக்குக் கலைகுறையவும் சிவன் சிரசில் தரித்துக் கொண்டதும் யாதெனில்: தக்கனாகிய ஜீவபோதத்திற்குப் பெண்கள் என்னும் உபகரணங்கள் உள. இவற்றை மனமாகிய சந்திரனுக்குக் கல்யாணம் என்னும் செயற்கையைச்செய்து, சமமாகப் பார்க்கும்படி தக்கன் சொன்னதைத் தடுத்து,கிருத்திகை உரோகிணியாகிய ஆசை மோகம் இரண்டையும் பாராட்டி, மற்றப் பெண்களைச் சந்திரன் அலக்ஷியம் செய்தான். செய்யவே,தக்கனது சாபத்தால் பதினாறு கலையின் கண்ணியங் கெட்டு ஒவ்வொன்றாய்க் குறைய,பயங் கொண்டு பிரமாவாகிய பாச அறிவினிடத்துச் சொன்னான். பிரமன் தக்கனது பலத்தை எண்ணித் தன்னால் முடியாது என்று பதியாகிய சுத்த அறிவினிடத்தில் சொல்லும்படி செய்தான். அங்ஙனம் சொல்லலும், சிவமானது சந்திரனாகிய மனத்தின் வியாபார கலைகளை ஒடுக்கி,

ஒரு கலையான சுத்த மனதைத் தானாகிய அறிவின் சிரம் என்னும் பிரஞ்ஞையில் தரித்து, சாபம் வீண் போகாமல் ஏறியும் குறைந்தும் இருக்கும்படி செய்தது. இப்படிச் செய்யாவிட்டால் அநுபவம் வாராது.

## 24. பக்குவரும் சூரிய கலையும்

சாதாரண ஜீவர்கள் சந்திரகலையில் இறப்பதும் பிறப்பதும் இயற்கை. பக்குவர்கள் சூரியகலையில் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. சூரியகலை அநுபவம் கிடைப்பது கஷ்டம். தினம் சூரியகலையில் செல்லும்படி மனதை அந்தக் கண்களில் செலுத்தல் வேண்டும்.

## 25. சாதம்

சாதம் வடித்துச் சாப்பிடுதல் நலமா, பொங்கிச் சாப்பிடுதல் நலமா எனில்: வடித்துச் சாப்பிடுவது—அதிலுள்ள எண்ணெய் போய்விடுவதால்—நலம். பொங்குவதில் எண்ணெய் போகாது; தாமச குணம் உண்டாகும். இதுபோலவே உப்பு, புளி, மிளகாய் முதலிய வஸ்துக்களின் எண்ணெய் போகச் சுடவைத்துச் சாப்பிடுதல் வேண்டும். பச்சரிசி என்பது இப்போது கொண்டுவருவது அல்ல. . .192 மேலும் உஷ்ணத்தை உண்டு பண்ணக் கூடிய ஆகாரங்கள் கொள்ளுதல் வேண்டும்.

## 26. தீக்ஷை

தீக்ஷை என்பது யாதெனில்: தீ மலம், க்ஷை ஒழிவு; தீக்ஷை மல ஒழிவு.

## 27. வேதம் முதலிய நூல்கள்

வேதம் பதி லக்ஷணத்தை விளக்கும். ஆகமம் பசு லக்ஷணத்தை விளக்கும். புராணம் பாச லக்ஷ

192 இங்குத் தொடர்ச்சி குறிக்கத் தவறியது போலும்.

ணத்தை விளக்கும். இதிகாசம் பத்தியை விளக்கும். ஸ்மிருதி கர்மத்தை விளக்கும். மேலும் வேதம் பதி பசு பாசத்தைச் சொல்லும். அது போல் ஆகமமும் சொல்லும். வேதம் என்பது நான்கு மகா வாக்கியந்தான். மற்றவை அங்க உபாங்க சாங்கப் பிரத்தியாங்கங்கள். இவைகள் யாவும் மனமடங்கும் துவாரமாம்.

## 28. வேதாகம வழிகள்

ஒருவன் ஆன்ம லாபம் பெறுவதற்கு இரண்டு மார்க்கம் உண்டு. ஒரு மார்க்கம் படியுள்ளது; ஒரு மார்க்கம் படியில்லாதது. எப்படி எனில்: மெத்தை ஏற வழியிருப்பதுபோல். ஏறிவிட்டால் மேலிடமாகிய அரமியம் ஒன்றே. அவ்வழி ஆகம வழி, சோபான முடையது. வேதவழி சோபானம் இல்லாதது. ஒருவன் ஆகமவழி செல்லாது வேதவழி போகக்கூடாது. ஏனெனில் ஜீவன் உபாசனு துவாரமாய் ஜீவத்துவங் கெட்ட இடத்தில், இரண்டற்று ஒன்றாகிய வேதவழி என்னும் அத்துவைதம் நிலைக்கும். வேதவழியான அத்துவைதம் அநுபவம்; ஆகம வழியான துவைதம் விவகாரம். ஒன்றென விவகரிப்பவரிடத்தில் அநுபவமில்லை. உபதேச ரீதியில் சொல்லாது ஒன்றெனப்படவேண்டும்.

## 29. கருடன்

கருடன்மீது விஷ்ணு ஏறியது என்பது: க ஜலம், ரு கருமை, ட வெண்மை. ஆதலால் விளங்கா வெண்மையாகிய ஜலத்தின் பின் தோன்றும் செம்மைக்கு இடையில்(உள்ள) கருமையாகிய நீராவியே விஷ்ணு. ஆதலால், சீதவஸ்துக்களெல்லாம் விஷ்ணு;

அணுத்துவமெல்லாம் பிரமா ; உஷ்ணத்துவ மெல்லாம் ருத்திரன். இதுபோல் மற்றத் தத்துவங்களையும் அறியவும்.

## 30. சூரபத்ம சம்ஹாரம்

பதுமாசுரன் என்பது: பதுமம் நாபி, அ அவா, சுரன் சுழித்து எழுதல். நாபியினிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும் தடைபடாதது பத்மாசுரனாகிய அவா. கஜமுகம் என்பது மதம். சிங்கமுகம் என்பது மோகம். இவைகளை வெல்வது ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலும் கூடாது. ஆதலால் சிவத்தால் தடைப்பட்டது. சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படி எனில்: பஞ்ச சத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட்சத்தியையுங் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறறி வென்னும் முகங்களோடு, சுத்த ஞானம் சுத்தக் கிரியை என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்திய வேல் என்னும் விவேகத்தால், தயா வடிவாய் அவா மோக மதங்களை நாசஞ் செய்வது சூரசம்மாரம். மயில் என்பது மேற்படி தத்துவங்கள் நஷ்டமானாலும் அவற்றின் அக்கிரமம் அதிக்கிரமம் கெட்டுக் கிரம (மாத்திரம்) மிருப்பது. பூர்வ வாசனாதிகள் பல வண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால், அவற்றை அசைய வொட்டாது மத்தியில் ஏறி இருப்பதாகிய சுத்த அறிவே ஷண்முகம். விகல்ப ஜாலமே மயில். இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும், நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் மணிபோல் ஓர் ஜோதி யிருக்கிறது. அந்த ஜோதியே ஷண்முகம்.

## 31. புருஷன்

ஜீவனுக்குப் புருஷன் எனப் பெயர் வருவான் ஏன்? வித்தியா தத்துவத்தில் புருஷன் என்பது விஷயத்தில் அழுந்தி யிருக்கும் எட்டுக் குணங்களைக் குறிப்பிக்கின்றபடியால், தத்புருஷன், மத்திய புருஷன், புருஷன் என்று வழங்கியது. மேலும் சிவம் என்பது ஒன்றே.

## 32. தன்மை முன்னிலை படர்க்கை

தமிழில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவை யாவை? அவற்றின் கருத்து யாது? தன்மை பண்புச்சொல். சார்புமயமாய் இருத்தலைப்பற்றி—தனக்கு மேல் ஒன்றினைச் சார்ந்திருப்பதனுல்—பண்புச் சொல் ஆகிறது. முன்னிலை என்பது முன்-நிலை, முன் இடங் கூறினது. ஆனுல் மூன்ரும் இடத்திற்குப் படர்க்கை என்பது என்னெனில்: படர் படரும்படியான, கை இடம், நிலை அகண்ட இடம், கை என்பது குறுகிய இடம். ஆதலால்,பேதாபேதம் குறிக்கும் நிமித்தம் இரண்டாம் இடத்துக்கு முன்னிலை என்றும், மூன்ரும் இடத்திற்குப் படர்க்கை என்றும் பெயர்கள் வந்தன என அறியவும்.

## 33. ஆண்டவர் சோதனை

ஆண்டவர் சோதிக்கின்ருர் என்பது பிணி, மூப்பு, பயம், பசி முதலியவற்ருல் வருந்தச் செய்விப்பதல்ல. மரணமடையச் செய்விப்பதுதான் சோதனை.193

193 இது குள்ளராமசாமிப் பிள்ளை என்பவர் முன்னிலையில் உண்டான திருவார்த்தையின் குறிப்பு எனக் கண்டிருக்கிறது.

## 34. குளிர்ந்த ஜலம்

காலங்கடந்து குளிர்ந்த ஜலத்தில் குளித்து ஈர உடையுடன் இருப்பது தேகக் கெடுதி. குளிக்க வேண்டுமாகில் வெந்நீரில் குளிக்கவேண்டும்.[194]

## 35. சன்மார்க்க சாதனம்

சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால், காலந்தாழ்க்காது, எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இந்தக்குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகிறவன்; அவனே ஆண்டவனு மாவான்.

## 36. பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல்வேண்டும். அப்படிச்செய்வதால், அதில் ஒருவனுக்குவேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.

“ பாதி இரவி லெழுந்தருளிப்
பாவியேனை யெழுப்பியருட்
ஜோதி யளித்தென் னுள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்

194 இது முதல் 40-ம் குறிப்பு வரையில் திருப்பாதிரிப்புலியூர் பிள்ளை, ஷண்முக முதலியார்—இவர்கள் முன்னிலையில் உண்டான திருவார்த்தைகளின் குறிப்புகள் எனக் கண்டிருக்கிறது.

நீதி நடஞ்செய் பேரின்ப
　　நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ்
　　வுலகம் பெறுதல் வேண்டுவனே.195

என்பதே என் பிரார்த்தனை யாகும்.

## 37. இகபர காமங்கள்

இகபர காமங்களை விரும்பாமலிருத்தல் வேண்டும்.

## 38. திருமந்திரம்

இந்த மார்க்க உண்மை தெரிய வேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்.

## 39. பொதுப் பார்வை

எல்லா உயிரையும் பொதுவாய்ப் பார்ப்பதென்பது தனக்குள்ள ஆகாரத்தைக் கொடுத்துவிட்டுத் தான் பட்டினியிருப்பதல்ல. அப்படி இருந்தால் பாவம். வந்தவர்களின் பசி அறிந்து, தாங்காதவர்களாகில் தனது ஆகாரத்தைக் கொடுத்தும், சகிப்பார்கள் ஆகில் எவ்வகையிலாவது முயற்சித்தும் பசியைத் தணிக்கவும். அதற்கும் இடம் இல்லையாகில், பச்சாத்தாபத்துடன் கடவுளைப் பிரார்த்தித்து இன்சொல்லினால் இனிக்கச் செய்து, தான் கெட்டிருப்பதே மேலான புண்ணியம்.

## 40. உடம்பினருமை

இந்த உடம்பை அலக்ஷியம் பண்ணாமல் பொன்னைப்போல் பார்க்கவேண்டும்.

## 41. நாராயணன்

நாராயணன் என்பதன் பொருள்: அப்பு தத்துவத்தின் அதிஷ்டான கர்த்தாவென்றும், அப்பு

195 திருவருட்பா, ௬-ம் திருமுறை, பிரிவாற்றாமை, ௬௦-ம் பாசுரம்.

தத்துவத்தில் தோன்றினவன் என்றும், நாவி சேஷணப் பிறப்பை உடையோன் என்றும், நா னிற்றோன்றினோ னென்றும், மாயா கோஷத்தை அல்லது நடப்பை உயிர்க்கு உண்டுபண்ணுவோன் என்றும், பகுதியின் சேட்டிப்பை உயிர்க்கு உண்டு பண்ணுவோன் என்றும், இன்ப சத்தியை உயிர்க்கு ஊட்டுவோன் என்றும் கொள்ளலாம். இன்னும் பல வேறு வகையிலும் கொள்ளலாம். நாரம் ஜலத்தில், அணன் உற்பத்தியானவன். ந மாயையி னுடைய, ர கோஷம்—நடப்பு—வியாபாரத்தை, ய உயிர்களுக்கு, ண உண்டுபண்ணுகிறவன். ந பிர கிருதியினுடைய, ர சேட்டிப்பை. ந ஆதி சத்தியி னுடைய, ர இன்பத்தை. . .[196]

## 42. கலை அறிவும் அருள் அறிவும்

பத்து ஆள்சுமை ஒரு வண்டிப் பாரம். நானூறு வண்டிச் சுமை ஒரு சூல்வண்டிப் பாரம். சூல்வண்டி ஆயிரங்கொண்ட நூல்களை ஒரு ஜென்மத்தில் ஒரு வன் அதிதீவிர ஜீவ முயற்சியால் படிக்கச் சிறிய உபாசனைச் சகாயத்தால் முடியும். அப்படிப்பட்ட வன் ஆயிரம் ஜென்மம் எடுத்துப் படிக்கும் கலை அறிவை, ஒருவன் அருள் முன்னிடமாகச் சுத்த சிவ நோக்கத்தால் அறியத் தொடங்கினால், ஒரு கணத்தில் படித்துக் கொள்ளலாம். இது சத்தி யம்.[197]

---

196 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

197 இது முதல் 48-ம் குறிப்பு வரையில் கூடலூர் டிரலர். இராக வலு நாய்க்கர் முன்னிலையில் 1861—64-ம் ஆண்டுகளில் உண்டான திருவார்த்தைகளின் குறிப்புகள் எனக் கண்டிருக் கிறது.

## 43. சிவ சிந்தனை

ஓம் சிவாயநம என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட் சத்தி, பொருட் சத்தி, கிரியா சத்தி, யோக சத்தி, ஞான சத்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். யோகம் செய்தல் வேண்டுவதில்லை. அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம். சதா சிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும். உண்மை.

## 44. கவலை

கவலை கூடாது. உள்ளும் புறமும் ஓர் துணையாக வள்ளல் இருப்பதால், வாட்டமடைவதற்குக் காரணமே இல்லை.

## 45. அபேதம்

தங்களைப் பார்க்கவேண்டுமானால், என்னைப் பாருங்கள்; என்னைப் பர்க்கவேண்டுமானல் தங்களைப் பாருங்கள். தங்களைப் பார்த்தால், என்னைப் பார்ப்பீர்கள்; என்னைப் பார்த்தால், தங்களைப் பார்ப்பீர்கள்.

## 46. சகஜ நிலை

சமாதிப் பழக்கம் பழக்கமல்ல. சகஜப் பழக்கமே பழக்கம்.

## 47. அகங்கார ஒழிவு

தன்னைக் காட்டாது ஒழிக்க வேண்டும்.

## 48. தியானம்

தியானஞ் செய்யவேண்டுமானல், ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமா

யிருக்கப்படாது. உருவமாக இருக்கவேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின், உருவங் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில், பார்க்கும் தான் கெடுவது அத்வைதம். பார்க்கப் படும் பொருளும் கெடுவது அதீதம். சத்தியம்.

## 49. ஞானம்

தன்னையும் தனக் காதாரமான தலைவனையும் கூடஸ்தனையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.[198]

## 50. அன்புருவம்

கடவுளைக் காண உண்மையாய் விரும்பினால், அழுத கண்ணீர் மாறுமா? ஆகாயத்தில் இச்சை செல்லுமா?[199]

**ரு. சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைத் தனிக் குறிப்புகள் முடிந்தன.**

198 இது குறிஞ்சிப்பாடி குழந்தைவேலு செட்டியார் முன்னிலையில் ஸ்ரீமுக வருஷத்தில் உண்டான திருவார்த்தையின் குறிப்பு எனக் கண்டிருக்கிறது.

199 194-ம் அடிக்குறிப்பைப் பார்க்க: இதுவுமது.

# ௬. சுப்பிரமணியமும் அருள்நெறியும்[200]

## சுப்பிரமணியம்

சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி யிருக்கின்றது. இந்த ஜோதிமணியை ஷண்முகமென்று பெரியோர்கள் செல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடந் தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி யிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேக மென்பதையும் ஷண்முக மென்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக் கப்பால் சாந்த நிறைவா யுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவான உள்ளமே சுப்பிரமணியம்.

ஆறு சோதியாயும், ஆறறிவாயும், ஆறு தலையுடையதாயும் இருப்பதால் முகம் ஆறு. கால் இரண் டென்பது தோன்றும் அறிவு, தோற்றுவிக்கும் அறிவு என்னும் இரண் டறிவாகிய விஷய வுணர்ச்சியும், நிர்விஷய வுணர்ச்சியுமே யாம். கை

200 இது சுவாமிகளின் திருவார்த்தைகளை நேரில் கேட்ட புண்ணிய புருஷர்களில் ஒருவர் எடுத்த குறிப்புஎன்றே தோன்றுகிறது. எனினும், கிடைத்தவரையில், ஒரு பிரதியில் மட்டும் ஒரு துண்டுக் குறிப்பாக இது எழுதப்பட்டிருக்கிறது.

பன்னிரண் டென்பது ஆ ருதாரங்களிலுள்ள பிர காச அப்பிரகாசமாகிய பன்னிரண்டுமாம். தசாயுதம் அபயவரத மென்பவை யாவெனில் :—வச்சிரமென்பது தீக்ஷண்ணிய வுணர்ச்சி ; வேல் என்பது சத்தி, அருள், அறிவு; மணியென்பது ஆன்ம விளக்கமாகிய நாதம் ; த்வஜ மென்பது கீர்த்தி ; ஸரஸிஜம் என்பது தயவு ; குக்குடமென்பது மாச்சரியமில்லாத நிறைவு ; பராகமென்பது பாசநீக்கம் ; தண்டமென்பது வைராக்கிய அறிவு ; பாணமென்பது அன்பு ; அபயமென்பது சமாதான உணர்ச்சி ; வரதமென்பது நிராபாரமாகிய ஆதரவென்னுஞ் சகிப்பு ; கடப்ப மாலையென்பது சர்வ தத்துவ கண்டனம் ; பலவர்ணமுள்ளதும், விசித்திர வடிவமானதும், மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும், மாயைக்கு இருப்பிடமாயுள்ளதும் ஆன மூலப்பிரகிருதியே மயிலென்பது.

மயிலின் மேல் சுவாமி ஏறிக் கொண் டிருத்தல் முதலியவற்றிற்குக் காரணம் என்னவென்றால் :—பிண் டாண்டமாகிய இந்தத் தேகத்திலும் அண்டத்திலும், மூ லாஞ்ஞான காரணமாயுள்ள கேவலமாகிய பிரகிருதி மாயையின் அசுத்த கேவலமாகிய அசுத் தாசுத்த மகா அகங்காரமென்னும் இராக்ஷச அம்சமான சூரதத்துவம் அதின் சோதரமான மூவகைத் தத்துவத்தோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும், பிண்ட விளக்கமான தேவர்களையும், விஷய விளக்கமான இந்திரியங்களையும், நாடி விளக்கமான யந்திரங்களையும், பிராண விளக்கமாகிய உயிரையும் விழுங்கித் தன்னரசு செலுத்தும். அந்தச் சூரதத்துவத்தை வதைக்கும்போது, ஜடதத்துவம் மகா மாயையாகிய

மாமரமாயும், மாச்சரியமாகிய கோழியாயும், விசித்திர மாயையென்னும் மயிலாயும், மகாமதமாகிய யானை முகமாயும், அதிகுரோதமாகிய சிங்கமுக மாயும் விளங்கும். சர்வ தத்துவங்களையுந் தன்வச மாக்கி, அகங்காரக் கொடி கட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி பசு பாசம் அநாதி நித்தியம் என்னும் சித்தாந் தத்தை விளக்கிக் காட்டுவதற்காக, மாச்சரிய குக்குடத்தைப் போதமாகிய கையால் அடக்கியும், விசித்திர மாயையாகிய மயிலைக் கீழ்ப்படுத்தி மேலிருந் தடக்கியும், ஆபாச தத்துவங்களைச் சம்மரித்தும், சுத்த விஷய புவனமாகிய தேவலோகத்தை நிலை பெறச் செய்தும், இந்திர பதியான ரூபேந்திர னுடைய பெண்ணாகிய தாந்தர தத்துவ மென்னுந் தெய்வயானையை இடப்பாலமைத்தும், இந்திரியங்க ளாகிய வேடர்களின் கண்ணிற் புலப்பட்ட மானச மென்னும் மானினது கர்ப்பத்திலுண்டான வள்ளி யாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும், நவதத்துவ காரணமாகிய நவவைராக தத்துவமாகிய வீரர் களைச் சமீபத்திலிருத்தியும், சகல கேவலங்களுக் கும் நினைப்பு மறப்புக்கும் இடையில் விவேகவடிவா யும், பாதம் முதல் நாபிவரையில் உஷ்ண வுருவாயும், நாபி முதல் கண்டம் வரையில் ஆதாரநாடி யுருவா யும், கண்டமுதல் புருவமத்தி வரையில் மணி யுரு வாயும், உச்சியில் ஒளி யுருவாயும், புத்தியில் சுத்த அறிவாயும், அனுபவத்தில் நித்தியமாயும், எங்கும் நிறைவாயும், கோணத்தில் ஆறாயும், எக்காலமும் மதங்களில் ஆறாயும், சமயத்தில் ஆறாயும், ஜாதியில் ஆறின் கூட்டமாயும் விளங்குகின்ற உண்மைக் கடவுளே சுப்பிரமணியம்.

சுப்பிரமணியம் ஒரு முகம், மூன்று முகம்; நான்கு முகம், ஆறு முகம் ஆனதற்குக் காரணம்: ஒன்று மிரண்டு மல்லாத ஒப்பற்ற பரப்பிரம சொரூபம் நம் பொருட்டுக் குழூஉக்குறியாய்—பாவனைக்கு ஒன்றென்று நிச்சயிக்கும்—பரகாரண நிமித்தம்(?) ஆகிய அறிவுருவமே ஒரு முகமென்று ஞானிகள் சொல்லுவார்கள். சுத்த ராஜசம், சுத்த தாமசம், சுத்த சாத்விக மாகிய மூன்று குணங்களின் கூட்ட விளக்க மாகிய முக்குண விளக்கமே மூன்று முகம். பசுமனம், சுத்தமனம், உன்மனம், சங்கலித மனம் என்னும் நான்கு தத்துவங்களின் கூட்ட விளக்கமே நான்கு முகம். சத்தவறிவின் மூலம், ஒளியறிவின் மூலம், சுவையறிவின் மூலம், பரிசவறிவின் மூலம், வாசனை யறிவின் மூலம், ஆத்ம அறிவின் மூலம் என்னும் ஆறு தத்துவங்களின் கூட்டறிவின் மூல காரணப் பிரகாச விளக்கமே ஆறு முகம்.

மயிலின் காலின்கீழும் வாயிலும் பாம்பு இருப்பதென்ன ? விசித்திர மாயையின் காரிய வுருவமான அகங்காரம் தோன்றி வெளிப்படுங்கால், மூலாங்காரத்திலும் அதிகரிப்பிலும் பிராண வாயு வென்னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயினும், அகங்காரத்தின் முகப்பாகிய மயில் வாய் மூலமாய்ப் பிராணவாயுவினது வேகத்தை (அது) விழுங்கிக் கொண்டிருப்பது இயற்கைதான்.

படைவீடென்பதென்ன? அடங்கி இருக்குமிடம். அடங்கியிருக்கும் ஸ்தானங்களே இயற்கை விளக்கம் தங்கு மிடங்களாகும். இவற்றிற்கு ஊர் ஆறுவானேன்? ஏரகமென்பது அழகு பொருந்திய உள்ளமென்னும் இடம். திருவாவினன்குடி யென்பது திரு-ஆ-இனன்-குடி: திரு - இலக்குமியாகிய சங்

தோஷமும், ஆ-பசுவாகிய விளக்க மென்னுஞ் சீவனும், இனன்-சூரியனாகிய புத்தியும் ஒன்றுகூடி விளங்கும் ஆன்ம அறிவின் சுத்த காரியஇடம். பழமுதிர் சோலையென்பது இந்திரிய கரண சீவ முதலிய அநுபவப் பழங்களாகிய பிரயோசன வின்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம். திருச்சீரலைவாய், திருச்செந்தில், செயந்திபுரம் என்பன:- சுத்த மனத்தின் முகத்தில் விஷயக்கடலின் அவாவாகிய அலையடித்துக்கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களினது இருதய ஸ்தானமாகிய மனம், அஞ்ஞான சூரனை நிவர்த்தித்துச் சந்தோஷகரத்தைப் பெற்ற பதிமனத்தின் விளக்கம். திருப்பரங்குன்றமென்பது அசைவிலாத ஒன்றான விளக்கத்தை யுடைய விவேக உல்லாச வின்ப நிறைவு. குன்றுதோறாடல் என்பது மலைதோறாடல். மலை என்பது அலைவில்லாத உணர்ச்சிக்கு முதற்காரணமாயுள்ள துரிய நன்னிலை. இத்துரியம்—பரதுரியம், சுத்ததுரியம், குருதுரியம், சிவதுரியம், சத்தி துரியம் முதலிய துரிய மலைகள் அநுபவக் காட்சியில் அனந்தம் உண்டு. மேற்குறித்த அநுபவக்காட்சிகளுக்குத் தேகத்திலிடம் எவை? கோசத்தினடி, தொப்புளின் கீழ், தொப்புள், வயிற்றில் தொப்புளுக்கு மேல் மார்புக்குக் கீழ், மார்பு, நெஞ்சு, ஆக கு.

பிரமாவைச் சிறையில் வைத்ததென்பது யாது? சுத்த மன சங்கல்ப சிருஷ்டித் தொழிலையுடைய பிரமாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்க வொட்டாமல், சுத்த விளக்க விவேக நிறைவாயுள்ள சுப்பிரமணிய தத்துவத்தால்—சர்வ பிண்ட விஷயங்களாகிய தோன்றல் வளர்தல் குற்றம் நீங்

கல் ஒன்றினிடத்தில் மலேவடைதல் தெளிதல் முதலிய பஞ்சகிருத்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால்—சலிப்பறப் பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

ஈசுவரனுக்கு உபதேசித்ததென்ன? உருத்திர தத்துவமாகிய பிரேரக நிலையான காரண தத்துவ முடிவான ஈசுவர தத்துவத்தி னியற்கை ஞானம் ஏறிக் கிரியை குறைந்திருப்பதால், கிரியா காரண பூதமாயும் ஞான காரண அம்சமாயும் விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியையற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவரதத்துவத்திற்கு—நியதி செய்வது(?)—சுத்த விவேக தத்துவ அதிஷ்டாதாவான சுப்ரமணியம் அன்றித் தோன்றாது. இது பற்றி யுபதேசஞ் செய்தாரெனலாயிற்று.

கங்கையிலுள்ள நாணற்காட்டிற் பிறந்தது என்பது என்ன? ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவே கங்கை. ஆன்மாவின் அனுபவ மத்திய நிலையாகிய சகித்தலென்னும்—சர்வ விஷயங்களினும் அகங்காரமென்னும் தலை யெடாமல்—கீழ்ப்படிந்த குணமே நாணல். இவ் விரண்டின் மத்தியில், அனுபவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத்தறிவாகிய விவேகம் தோன்றுவதே யுற்பத்தியானது.

பின் கார்த்திகை அரிவை பால்கொடுத்ததென்பதென்ன? விவேக விளக்கந் தோன்றுங்கால், பெண் பாலின் குணமாகிய சமனை யென்னும் சத்தியின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத கிரணம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல்.

சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க, அம்மை குழந்தை ஆறையும் ஒன்றாய்ச் சேர்த்

துக்கையால் தடவ, முகம் ஆறும் ஒன்றி வேருயும், உடல் ஒன்ருயும், கால் இரண்டாயும் ஆனதென்ன? பரமாத்மா வாகிய சுவாமி அருளென்னுஞ் சத்தியுடன், தய வென்னும் நதிக்கரையில், சகிப் பென்னும் நாணற் காட்டில், சமாதி முதலியகாலத்தில் (?) தோன்றி விளங்கும்போது, சுத்த வாசனு தோற்றமாகிய அறுபொறியாகிய குழந்தையை யருள் வசமாக்க, அருட்சத்தி விகாரமன்றி அவிகாரமாய் அறுபொறியையும் அருட்போதக்கையால் அடக்க, விஷயங்களை அறிந்து தோயாமலிருக்க அறுபொறிகள் ஒன்ருயும், குறி ஆருயும், அனுபவ விளக்கம் சாதன விளக்க மிரண்டுந் திருவடியாயுந் தோன்றி, சமாதி நிலை விளங்குவதே.

பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க, அண்டத்தில் இவற்றிற்கு ஊர், ஆலயம், மூர்த்தி, செய்கை முதலியன உண்டாவானேன்? ஆத்மாக்கள் புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு, மந்தம் மந்ததரம் ராஜசம் தாமசம் கருமம் முதலிய வேறுபாடுகளால் அநாதி தொடங்கி இன்றளவில்—உயிர்த் திரள் ஒன்ருனும்—கரணக் கூட்டுறவால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றன. ஆதலால், மாகருணையுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளை அங்கையிற்கனியென வுணர்ந்த அநாதி நித்திய முத்த சித்தராகிய ஈசுவர தத்துவ புவனுனுபவ ஈசுவரனுல், நாம் உய்யும் பொருட்டு, உலகத்தின் கண், பாச நூல் பசு நூல் பதி நூல் அனுபவ நூல் என்னும் புராண வேத ஆகம உபநிஷத்துக்கள் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. அவற்றின் வாயிலாகக் கர்மகாண்டம் பத்திகாண்டம் உபாசனு காண்டம் தந்திரகலை மந்திரகலை உபதேசகலை முத

லிய பேதங்களும், இவற்றிற்கு முக்கியமான ஆசாரம் வருணம் ஆசிரமம் முதலியவைகளும், இவற்றிற்கு ஏதுவான சரியாதி நான்கும், இவற்றிற் கடைவாகிய சாலோகாதி நான்கும், இவற்றிற்கு மார்க்கமாகிய தத்துவம் புவனம் பதம் வர்ணம் மந்திரம் கலை முதலியனவும் நிர்ணயித்து, பாப நாசத்திற்கு ஏதுவான அனசன சாந்திராயண முதலிய பிராயச்சித்தங்களை விதித்து, இவைகள் செய்வதற்கு யோக்கியமான நதி முதலியவற்றையும், அவற்றிற்கு அங்கமான—தத்துவானுபவங்களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க—திருப்பெயர் முதலியவைகளை மூர்த்தி ஸ்தல முதலியவைகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்.

உபாசிக்கின்றவர்களுக்குத் தத்துவ நாமங் கெடாமல் அருட்சத்தி தோன்றக் கிருத்திகையையும், வேதாந்த விளக்கத்திற்கு விசாகத்தையும், சதாசுபத்தைக் குறிக்கச் செவ்வாயையும், ஆறு குறியைக் குறிக்கச் சஷ்டியையும், ஞான நிறைவைக் குறிக்கத் தைப் பூசத்தையும் சுட்டினார்கள். தத்துவங்களைக் கையிலெடுத்து ஆடுவதான போதமென்னுங் கையால் விஷய பலத்தைத் தத்துவமாகிய காவடியில் கட்டித் தானாகிய தோளிலேற்றித் தான் கெட்டுத் தான் அவனாகிப் போத வடிவனாய், சங்கல்ப தீவிரனாய், சுப்பிரமணிய தத்துவமாய் விளங்கும். திருவுருவ முன்னுக்கு விஷயாபாவ நியாயமே காவடி யெடுத்ததாயும், சுத்த வைராக்கியநிச்சய சிவபோதமே இடும்பனாயும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இருதயாகாச ஷட்கோண வடிவமே யந்திரமாய், அதின் அங்க வேறுபாடே காற்பத்து முக்கோணமாய், உபாங்கமே நவகண்ட

மாய், உண்மையே சகரமாய், விஷய நீக்கமே ரகரமாய், நித்திய திருப்தியே அகரமாய், நிர்விஷயமே ணகரமாய், பாப நீக்க ஏதுவே பகரமாய், ஆன்ம இயற்கைக் குணமே வகரமாய் விளங்குவதே ஆறெழுத்து. நமது சரீர இருதய ஸ்தானமே கோயிலாய், மாயா விசித்திரமே மயிலாய், நாபியந்தமே பலி பீடமாய், உண்ணுவின் மேலந்தமே கொடி மரமாய், பஞ்ச கோசங்களே பிராகாரமாய், முக்குணங்களே வில்வ மரமாய், ஆன்மதையையே தடாகமாய், வாயே வாசலாய், அனுபவ நிலையே கோபுரமாய் விதிக்கப்பட் டிருக்கின்றன.

ஞானிகள் கடவுளை எங்கும் உபாசிப்பார்களென்றும், யோகிகள் இருதயத்தி லுபாசிப்பார்களென்றும், கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்களென்றும், பத்தி காண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்களென்றும் விதித்திருக்கிறது. அதற்கு ஒத்தவண்ணம் தத்துவ விசாரத்தையே ஆலய மாக்கினார்கள். ஆலயத்தில் விளங்கும் மூர்த்தியின்பால்—பாசங்களில் செல்லும் ஆத்மாக்களை சிவபாசத்தில் பாச நூலைக்கொண்டு அழுத்தி, பசு நூலைக்கொண்டு(?) மேல்குறித்த தந்திரமந்திர கலைகளைக் குருமூலமாய் உபதேச கலையால் விளக்கி, காண்டத்திரயத்தால் நிலைக்கப் பண்ணி, பதி நூலால் அறிவை விளக்கி, அநுபவ நூலால் சமாதியைத் தெரிவித்திருக்கிறது. இவற்றைச் சீவர்கள் மறவாதிருக்க மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல், ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப்பெருமானைத் தத்துவ வுருவமென்று விளக்கிக்காட்ட, அர்ச்சக வுருவமான ஆசாரியன், நமது அறிவாகிய கர்ப்பூரத்தில், சுப்பிரமணிய உண்மையாகிய விளக்கமென்னும்

பிரகாசத்தைக் கொண்டு, அசுத்த விஷய முதலிய எண்ணங்கள் நம்முடைய பொறிகட்குப் புலப்படாமலிருக்க, உண்மை நாதக் குறியாகிய மணியொலியுடனே தரிசிப்பிக்கச் செய்தும்; வேறு பராக்கன்றித் ததாகாரமாய் நிற்க, நமது தரத்திற் கொத்த உபசார தியர்களால் வழிபடச் செய்தும்— தத்பலமடைய உத்தமர்கட்கு அன்ன விநியோகம் செய்வது மார்க்கமென்று சித்தாந்தம் பண்ணினார்கள்.

இவ்வண்ணமாய், அநாதி தொட்டு இன்றுவரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார் குமர குருபரர் நக்கீரர் முதலிய மகான்கள் தொண்டு செய்து, உத்தம ஞானிகளாய் நித்திய முத்தர்களாய் விளங்குகின்றார்கள். ஆதலால், நாம் யாவரும் அவ்வுண்மைக் கடவுளை வேதாகம விதிப்படி உண்மையாய்ப் பத்திசெய்து, அவர் அருளைப் பெற வேண்டும்.

## அருள் நெறி

கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்யமென்பது ஜீவர்கள் தயவு. ஆதலால் சிறு வெளிச்சத்தைக்கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவது போல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந் தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

அக்கடவுள் தயவாகிய அருள் எத்தன்மையுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற் கொத்த

தாயும், அறியவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

அத் தன்மையான அருள் பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது? காண்பார் காணுமிடம் காணப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம், கருதுவார் கருதுமிடம் கருதப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம் முதலியவாய் விளங்கும்.

இவ்வண்ணம் விளங்கும் அருளை நாம் பெறுவதற்கு உபாயம் என்ன? புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியாரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

நன்மை தீமை என்பவை யாவை? நன்மை தீமையென்பவை புண்ணிய பாவம். புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவித்தற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறடைகின்றன? மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகை

யாய் நம்மை யடையும். அவை யாவன: மனத்தி ஞல் பரதாரகமனம் பண்ண நினைத்தல், அன்னியருடைய சொத்தைக் கிரகிக்க நினைத்தல், அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல், முடியாத காரியங்களை நினைத்து ஆக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொருமையடைதல்—இவை நான்கும் மனத்திஞல் செய்யும் பாவங்கள். வாக்கிஞல் பொய் சொல்லல், கோட் சொல்லல், புறங்கூறல், வீணுக்கழுதல்—இவை நான்கும் வாக்கிஞல் உண்டாகும் பாவங்கள். தேகத்தி ஞல் பிறர் மனைவியைத் தழுவுதல், புசிக்கத் தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல், அன்னியர்களை இம்சை செய்தல், தீங்கு செய்கிற வர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்—இந்நான்கும் தேகத்தா லுண்டாகும் பாவங்கள். இவை போன்றவைகளைத் தவிர்த்து, அன்னியர்களுக்கு நன்மை யுண்டாக நினைத்தல், பொருமை யடையாதிருத்தல், அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணுதிருத்தல், தனது மனைவி தவிர அன்னியமான பெண்களைத் தாய் சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல்—இவை மனத்தால் வரும் புண்ணியங்கள். பொய் சொல்லாமை, கோட் சொல்லாமை, இன்சொல்லாடல், தோத்திரம் செய்தல்—இவை நான்கும் வாக்கிஞ லுண்டாகும் புண்ணியங்கள். அன்னியர்களுக்குத் தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலான நன்மையான கிருத்தியங்களெல்லாம் புண்ணியங்கள்.

அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்? அறிந்த பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக

எவ்வகையிலாவது தெரிந்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாக்ஷிண்ய உடன்பாட்டாலும், உணவுபற்றியும், புகழ்பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!" என்று பச்சாத்தாபப் பட்டுப் பெரியோர்களை யடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச் சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி, யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்றவளவில் அன்னவிரயஞ் செய்தால் நீங்கும். மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயு முள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத்துடன் பாவ காரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாத பாவங்கள் யாவெனில், நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

பிராயச்சித்த முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களா லடையுங் கதி யென்ன? மனத்தால்

செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீர முண்டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீர முண்டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீர முண்டாகும்.

வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும் புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை. நாம் சர்வ சாக்ஷி" என்கின்றார்களே—அஃதென்ன? தேக வாசனை இந்திரிய வாசனை கரண வாசனை பிராணவாயுவின் செயற்கையி லுண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று, ஆகாரம் நித்திரை பயம் முதலியவைகளில் தாம் சலித்தும் சோர்ந்தும் திடுக்கிட்டும் இல்லாமல், நிவாத தீபம் போல் விளங்கும் ஜீவன் முத்தர்கள் சமூகத்தில் பாப கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் காண்பார்கள். அத் தன்மையுடைய நித்திய முத்த சுத்த ஞான தேக சித்தர்கட்குப் பாவ புண்ணிய மில்லை யென்று அவர்கள் சொல்ல வேண்டிய தில்லை; நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும் அசுத்தப் பொறியாயும் அசுத்தக் கரணமாயும் அசுத்த அனுபவமாயும் அசுத்த அறிவாயும் இருப்பது போல் இரா. தக்த படத்தைப் போல் காரியத்தில் இலதாயும் காரணத்தி லுளதாயும், அறிவே வடிவாய் அறிவே பொறியாய் அறிவே மனமாய் அறிவே யழகாய் அறிவே யுருவாய் அறிவே யுணர்வாய் அறிவே யனுபவமாய் அறிவே யறிவாய் விளங்கும்.

**௬. சுப்பிரமணியமும் அருள் நெறியும் முடிந்தது.**

அருட் பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை

# எ. திருவருண் மெய்ம்மொழி[201]

—⊙—

ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியின் உண்மை ஒழுக்கங்களைக் குறிக்கும் அருட்பிரகாசத் தந்தையார்[202] திருவருண் மெய்ம்மொழி :—

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப்பெற்ற நண்பர்களனைவரும் நாமும் அறியவேண்டுவதும் ஒழுகவேண்டுவதும் யாதெனில் :

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும், இயற்கை யிற்றானே உள்ளவராய்

201 இந்தத் திருவருண் மெய்ம்மொழி என்னும் குறிப்பு, சுவாமிகளின் விரிந்த உபதேசங்களைப் பெரும்பாலும் சுவாமிகளின் திருவார்த்தைகளைக் கொண்டே, அவற்றின் சாரமாகத் தமக்கும் தம் போன்ற அன்பர்க்கும் ஆமாறு, ஓர் மெய்யன்பரால் தொகுக்கப் பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. சுவாமிகளது உபதேசங்களைக் கேட்ட அவ்வப்போதே நேர் நேராகக் குறித்த அன்பர்களின் பெயர்கள் முதலியன குறிக்கப்படாம லிருப்பது போலவே, சுவாமிகளது உபதேசங்களின் சாரமாகத் தொகுத்திருக்கும் இதை எழுதிய அன்பரின் பெயர் முதலியனவும்—கிடைத்த அக்காலத்திய மூன்று பிரதிகளில் ஒன்றிலாவது—குறிக்கப்படாம லிருக்கிறது. திருவருட்பா—வசனப் பகுதியில் "சத்திய அறிவிப்பு" "பெரு விண்ணப்பம்" முதலியவற்றையும், இப்பகுதியில் 73-75, 110-111-ம் பக்கங்களையும் பார்க்க.

202 இரண்டு பிரதிகளில் "அருட்பிரகாச ஆண்டவனாரது" என்றிருக்கிறது.

விளங்குகின்றவ ரென்றும், இரண்டுபடாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும் எல்லா உலகங்களையும் எல்லாப் பதங்களையும் எல்லாச் சத்திகளையும் எல்லாச் சத்தர்களையும் எல்லாக் கலைகளையும் எல்லாப் பொருள்களையும் எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் எல்லா உயிர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லா இச்சைகளையும் எல்லா ஞானங்களையும் எல்லாப் பயன்களையும் எல்லா அனுபவங்களையும் மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல் வாழ்வித்தல் குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல் விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங்கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவ ரென்றும், எல்லாம் ஆனவ ரென்றும், ஒன்றும் அல்லாதவ ரென்றும், சர்வகாருண்ய ரென்றும், சர்வவல்லப ரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ் ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக்கடவுள் ஒருவரே, அகம்புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும் பூரணப் பொதுவெளியில், அறிவா ரறியும் வண்ணங்க ளெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து அன்புசெய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பலவேறு மதங்களிலும் பலவேறு மார்

க்கங்களிலும் பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து, பல்வேறு ஆபத்துக்களினால் துன்பத்திலழுந்தி, இறந்து இறந்து வீண்போயினோம்; வீண்போகின்றோம்.

ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல் உண்மை அறிவு உண்மை அன்பு உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்தசன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்பசித்திப் பெருவாழ்வில் பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு—மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங்கொண்டு சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை சித்திவளாகம் என்னும் இச்சந்நிதானத்திற் கடுத்த உத்தரஞான சிதம்பரம் அல்லது ஞானசித்தி புரம் என்று குறிக்கப்படுகின்ற வடலூர் பார்வதி புரத்தில் தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து, "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப் படாத நெடுங்காலம் அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்தருளித் திருவிளையாடல் செய்தருள்கின்றோம்" என்னும் திருக்குறிப்பை இவ்விடத்தே தாயினுஞ் சிறந்த பெருந்தயவுடைய நமது கருணையங்கடலா ராகிய அருமைத் தந்தையார் அருட்பிரகாச வள்ளலார் முன்னிலையாகப் பலவாற்றானும் பிரசித்தப்பட வெளிப்படுத்தி, அருட்

பெருஞ்ஜோதி சொரூபராய் அப் பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக் கொண்டு பொற்சபை சிற்சபைப் பிரவேசஞ் செய்வித்தருளி, அரிய அவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந்தருளிய எல்லாம் வல்ல சித்தத் திருக்கோலங் கொண்டு, அருளரசாட்சித் திருமுடி பொறுத்து அருள் விளையாடல் செய்தருளு நிமித்தம், ஈரேழு பதினான்கு உலகங்களி லுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, இஃது என்னை! இஃது என்னை! என்று அதிசயிக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம் அடுத்த அதிசமீபித்த தருணமா யிருத்தலினால்—அங்ஙனம் வெளிப்படுந் திருவரவுபற்றி எதிர் பார்த்தலாகிய விரதங்காத்தலில் நிற்கும் அல்லது நிற்கவேண்டிய நாம் எல்லவரும் மேற்குறித்த அசிந்திய அற்புதத் திருவரவு நேரிட்ட கணத்திற்றானே, சுத்தசன்மார்க்க அரும் புருஷார்த்தங்களின் பெரும்பயன்களாகிய எக்காலத்தும் நாசமடையாத சுத்தம் அல்லது சுவர்ணதேகம் பிரணவ தேகம் ஞானதேகம் என்னும் சாகாக்கலானுபவ சொரூப சித்தித் தேகங்களும், தன்சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெருவல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், கரும சித்தி யோகசித்தி ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்ப சித்திப்பெருவாழ்வை அடைவதற்கான சுத்த சன்மார்க்கத் தனிப் பெருநெறியைப் பற்றுவதற்குரிய உண்மை ஒழுக்கங்களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுக வேண்டுவது அவசியமாகலில், அவ்வொழுக்கங்கள்

இவை என உணரவேண்டுவது (இன்றியமையாததாகும்.)

சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என நான்கு வகைப்படும்.

அவற்றுள் இந்திரிய ஒழுக்கம் என்பது—நாத முதலிய ஸ்தோத்திரங்களை உற்றுக்கேட்டல் மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றி யிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல் பொய் சொல்லாதிருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத்தந்திரத்திலாவது தடைசெய்தல், பெரியோரிடத்திற் செல்லுதல்—என்றால், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல் உயிர்க்கு உபகரிக்கு நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலஜலபாதைகள் அளவு மீறாமலும் கிரமங் குறையாமலும் அளவைபோல் தந்திர ஔஷதிகளாலும் ஆகாரப் பக்குவத்தாலும் பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கமும் ஆகும்.

கரண ஒழுக்கம் என்பது—சிற்சபையின்கண் மனதைச் செலுத்துவது தவிர மற்றெந்தவகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களாலுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமா யிருத்தல், பிறர் மேற்

கோபியா திருத்தல் தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யா திருத்தல் முதலிய வாம்.

ஜீவ ஒழுக்கம் என்பது—எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல் முதலியவாம்.

ஆன்ம ஒழுக்கம் என்பது—எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்து முள்ள ஆன்மாக்களிடத்து மிரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதனுள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலிய வாம்.

இங்ஙனங் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம் என்னு மிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை புணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுகவேண்டும்; ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் என்னும் இரு வகையான அரிய ஒழுக்கங்கள் திருவருட்டுணை பெற்ற பின்ன ரன்றிக் கைகூடா: ஆதலால், அவ்வொழுக்கங்களைப் பெற்று ஒழுகவேண்டுவதற்கும் ஆன நன்முயற்சிகளில் பழக வேண்டும். அன்றியும்—

இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்றமட்டில் ஒழுகப்பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில்

பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி இருத்தல் வேண்டும். அன்றியும்—

சைவம் வைணவம் சமணம் பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவ சித்தி விகற்ப பேதங்களென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம் சித்தாந்தம் முதலாகப் பல பெயர்கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்தசன்மார்க்கானுபவ லேச சித்திபேதங்க ளென்றும் கேள்விப் பட்டிருக்கின்றனம். ஆகலில், அத்திரு வார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்தப் பெற்று அவைகளின் அனுபவங்களை அடைதல் வேண்டுவதுபற்றி, அவ்வச் சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாது நிற்றலும், அவற்றில் சத்திய வுணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும். அன்றியும்—

உலகியற்கண் பொன்விஷய இச்சை பெண் விஷய விச்சை மண்விஷய விச்சை முதலிய எவ் விஷய இச்சைகளிலும் நமது அறிவை ஓர் அணுத் துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு கடவுள்பத்தி உயிரிரக்கம் பொதுநோக்கம் திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, உண்மையுரைத்தல் இன்சொல்லாடல் உயிர்க்குபகரித்தல் முதலியவாகக் குறித்த நற்செய்கைகளையும் உள்ளபடி பெற்று, சித்திவளாகம் என்னும்

இம்மஹா சந்நிதானத்திற்றுனே தரிக்கப்பெறவும்; உலக முகப்பட்ட பராக்கினால் விலகி ஏமாந்து விடா மலும்; நமது எல்லாம் வல்ல ஆண்டவனார் அற்புதத் திருவரவு குறிக்கும் வெளிப்படுகைக்கு எதிர்பார்க் கும் நிலையினராய், எல்லா அண்ட சராசரங்களை யும் தமது தனித்திருவருட் செங்கோல் கொண்டு நடாத்துவித் தருளும் பேரருட் பெருங் கருணை வாய்ந்த தனிப்பெருந் தலைவனது அரிய திருவரு கைச் சம்பந்தமான வழிபடுகை அல்லது மங்கலம் புனைதல் முதலிய திருப்பணியினிடம் நமது கர ணேந்திரியங்களை விடுத்துக் குதூகலத்துடன் விந்து விளக்கம் நாதஒலி என்பவற்றால் புறக்கடையில் விலகப்படாமலும்; ஆண்டவனாரது அருளற்புத ஞானசித்தத் திருமேனியின் மங்கலத் திருக்கோல த்தைக் கண் காட்சியாக உடல் குழைய உள்ளங் குளிர ஆநந்தக் கண்ணீர்கொண்டு பரவசத்துடன் தரிசிக்கப் பெறும் பெரும் புண்ணிய முடையவர்க ளாய் எதிர்பட வாய்க்கப்பெறவும்—நின்றேமே யானால்:

நாம் எல்லவரும் சுத்த சன்மார்க்கத்தினுக்கு உரிமையுடையவர்களாகி, அறிவு வந்த கால முதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும் கேட்டறி யாத அற்புதக் கேள்விகளையும் அறிந்தறியாத அற்புத அறிவுகளையும் அடைந்தறியாத அற்புதக் குணங்களையும் செய்தறியாத அற்புதச் செயல் களையும் அனுபவித்தறியாத அற்புத அனுபவங் களையும்—வெளிப்படத் தரிசிக்கும் அதே கணத்தி னுள்ளே—பெற்றுப் பெருங்களிப்புடன் எக்காலத் தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடை படா

*த சத்திய சுகபூரணப் பெருவாழ்வு என்னும் பே ரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.*

*இது சத்தியம், இது சத்தியம், இது சத்தியம்.*

இங்ஙனம் நமது ஆண்டவரால் விரித்து விவகரிக்கப் பட்ட மலையிலக்கான பொய்யாப் பெருமொழி யென் னும் கருணைரசத்தின் வெள்ளப் பெருக்கத்தில் ததும்பி வழிந்த மந்திரத்திருவருண் மெய்ம்மொழிகளின் சுருக்கம்:

*அருட் பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை*

*வெண்பா*

*போற்றி யுரைக்கின்றேன் பொய்யென் றிகழாதீர்*
*நாற்றிசைக்கண் வாழு நமரங்காள்—ஆற்றலருள்*
*அப்பன் வருகின்றா னருள் விளையாட் டாடுதற்கென்*
*றிப்புவியி லித்தருண மிங்கு.*203

ஸ்ரீமந் நடராஜ லீலா மானுஷ்ய திவ்விய மங்கள ரூப அருட்பிரகாச ஸ்வாமிநே நம:

*திருச்சிற்றம்பலம்*

எ. திருவருண் மெய்ம்மொழி முடிந்தது.

---

203 *திருவருட்பா—௬-ம் திருமுறை, சுத்த சிவநிலை, ௯௬-ம் பாசுரம்.*

## அ. மஹோபதேசம்

ஸ்ரீ முகவருஷம், ஐப்பசிமீ௨, ௭௨, புதவாரம், பகல் அ மணிக்கு, மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் முதல் கொடி கட்டின வுடனே நடந்த விவகாரத்தின் குறிப்பு.

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். இது முதல் சாலைக்கு ஆண்டவர் போகிற—பத்துத் தினமாகிய கொஞ்சக் காலம்—வரையில், நீங்களெல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால்: நம் நம்முடைய நிலை யெப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை யதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை யெப்படிப் பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாகவாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது, அல்லது—வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்ய தரத்தில் போதுமான வரையில் சொல்லுவார்—அவரிடம் அப்படிக்கேட்டாவது நல்ல விசாரணையி லிருங்கள். அல்லது, தனியாகவும் விசாரிக்கலாம். இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண் டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமா யிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத் திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால்,

மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய் விடும். அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்டதென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்கவேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும்— இவ்வண்ணமாக இருக்கின்றபோதும் படுக்கின்றபோதும் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்குண்மை தெரிவிக்க வேண்டுமென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டு வகையா யிருக்கின்றது. இவற்றில் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம். இவ் விரண்டில் இகலோக விசாரம் விசார மல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கின்றானேயென்றால், அவ்விசாரம் விசார மாகாது, உண்மை விசாரமு மல்ல. ஏனெனில்: விசார மென்கின்றதற்குப் பொருள்: வி-சாரம் என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது; அது மேலும் பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. ஜலத்தி லிருக்கின்ற பாசியை நீக்குவதுபோல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடி யிருக்கின்ற பச்சைத் திரை யாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தா லல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்கமுடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட, ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை

நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம் மலை முழை முதலியவற்றிற்குப் போய், நூறு ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ் செய்து, இவ்வுஷ்ணத்தை உண்டுபண்ணிக்கொள்ளு கிறார்கள். இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும்—இதை விடக்—கோடிப் பங்கு பத்துக்கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில்: ஒரு ஜாம நேரம், மனத்தில் இகவிசார மின்றிப் பரவி சாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத் தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத் திரம் செய்து கொண்டாவ திருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆத லால், இவ்வுலகத்தில் வி-சார மென்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்க மென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த் தம் பண்ணக்கூடாது. அவர்கள் பண்ணுகின்றது—துக்கமே விசாரமென்கின்றது—அது தப்பு; அவ் வர்த்தமு மன்று. சார மென்கின்றது துக்கம். விசாரமென்கின்றது துக்கநிவர்த்தி. வி உபசர்க்கம். சார மென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசார மென்கின்றது முன் சொன்னபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆத லால், இடைவிடாது நாம் விசார வசத்தரா யிருக்க வேண்டியது. மேலும், வி-சார மென்பது: வி விப த்து; சாரம் நீக்குதல், நடத்தல். ஆதலால் இடை விடாது நன் முயற்சியின்கண் பயிலுதல்வேண்டும்.

மேலும், சிலர் "இது ஆண்டவர் வருகின்ற தருண மாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெற வேண்டியதை நாம் பெற்றுக்கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம். இஃது—தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது சத்தியந் தான். நம்மவர்களின் திரை நீங்கப் போகின்ற தும் சத்தியந்தான். நீங்க ளெல்லவரும் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகின்றதுஞ் சத் தியந்தான். ஆனால், முன் சொன்ன ராகசம்பந்த மான பச்சைத் திரை இரண்டு கூறாக இருக்கின் றது. யாவெனில்: அசுத்தமாயா திரை சுத்தமாயா திரை யென்னும் இரண்டு மாம். இவை கீழ்ப் பாகத்தி லொரு கூறும் மேற் பாகத்தி லொரு கூறு மாக இருக்கும். கீழ்ப்பாகத்தி லுள்ளது அசுத்த மாயா திரை. மேற் பாகத்தில் சுத்தமாயா திரை இருக்கும். இவற்றில் அசுத்தமாயா திரை இகலோக போக லக்ஷிய முடையது. சுத்தமாயா திரை பர லோக சாத்தியத்தை யுடையது. இவற்றில்— ஆண்டவர் வந்து அனுக்கிரகஞ் செய்கின்றபோது, முயற்சி யில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்தி லிருக்கிற அசுத்தமாயை யென்னும் பச்சைத் திரையை மாத்திரம் நீக்குவார். ஆத லால், அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் கூடியவரையில் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்க லாமே யல்லது, பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகிறதற்குக் கூடாது. மேலும், பஞ்சகிர்த் திய விபவங்களும் இதர சித்தி முதலியவையும் ஆன் மானுபவத்தையும் செய்யவும் பெறவும்

கூடாது. பின்னும் நன் முயற்சி செய்தே மேலேற வேண்டும்.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல் முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால், நாம் எல்லவரும் இத்தருணம் இப்போதே விசேஷ நன்முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது, நம் கீழ்ப் பாகத்தி லுள்ள அசுத்த மாயா திரையோடு கூடி மேற் பாகத்தி லிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத் திரையும் நீங்கிப் போய்விடும். கருமையிற் பச்சை வண்ணமுடையது அசுத்தமாயா திரை. பொன்மையிற் பச்சை வண்ணமுடையது சுத்தமாயா திரை. கருமையிற் பச்சை வண்ணமுடைய அசுத்தமாயா திரை நீங்கினபிறகு, மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். இத்திரைகளின் விவரத்தைத் திருவருட் பெருஞ்ஜோதி அகவலில் கண்டுணர்க. மேலும், இது நீங்கினவுடனே ஒருவன் பஞ்ச கிர்த்திய முதலானவையுஞ் செய்வான். ஆதலால், ஒவ்வொருவரும் முயற்சியுடனே இருந்தால், அதற்குத் தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்த வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி யன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திர

மேனும் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்: கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்திய லோகாதிபதி யென்றும் பெயரிட்டு, இடம் வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பதுபோல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச்சொல்லி யிருக்கின்றார்கள். "தெய்வத்துக்குக் கைகால்முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே—முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இது வரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லி யிருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்துவருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக்கொண்டால், அற்ப சித்திகளை யடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம்வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால், நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சிசெய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப் பிரயோஜனத்தைத் தெரிந்து

கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லக்ஷியம் வைக்காமல், ஆண்டவரிடத்திலேயே லக்ஷியம் வைக்கவேண்டியது. முன் சொன்ன ஏகதேச சித்தி கற்பனை யென்கின்றது வாசகப் பெரு விண்ணப்பத்தாலும்[204] "இயல் வேதாகமங்கள் புராணங்கள்"[205] என்ற அருள் விளக்கமாலைப்[206] பாசுரத்தாலு முணர்க. மேலும் அதிற்கண்ட குறிப்பையுந் தெரிந்துகொள்ளுங்கள்.

இது போல் வியாகரணம்—தொல்காப்பியம் பாணிநீயம்—முதலியவைகளில் சொல்லி யிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில்: தொண்ணூறு தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும்

---

204 திருவருட்பா, வசனப்பகுதி, முதற் பதிப்பு (1931), 154-ம் பக்கம் பார்க்க.

205 இயல்வேதா கமங்கள்புரா ணங்களிதி காசம்
இவைமுதலா விந்திரசா லங்கடையா உரைப்பார்
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்
மகனேநீ நூலனைத்துஞ் சாலமென அறிக
செயலனைத்தும் அருளொளியாற் காண்கவென எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே—

அருள் விளக்கமாலை, அஎ-ம் பாசுரம்.

206 திரு அருட்பா—கூ-ம் திருமுறை.

உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல்-நூறு தொண்ணூறென்றும், தொல் - ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொக்கது. தொன்மை தொல் லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிர மென்றும், ஒன்று குறைந்த பத் தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால், சிறு குழந்தைகள் கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல், சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். (அவற்றில் தெய்வத்தைப் பற்றி) குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமே யானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில், அவைகளிலும்—அவ்வச்சமய மதங்களிலும்—அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமே யல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை யுண்மை என்னும் ஆன் மானுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக் கெல்லாம் சாக்ஷி நானே யிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வள வென்று அளவு சொல்லமுடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்

படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டிய தில்லை. நான் சொல்லி யிருக்கிற—திருவருட்பாவில் அடங்கி யிருக்கிற[207]—ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துகொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக்கொண்டார்களா? பெற்றுக்கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்ட தென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கி விடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கி விட்டது யாதெனில்: அக் காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப் பெருவிண்ணப்பத்தினும்,[208] "எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததே யன்

---

207 அப்போது திருவருட்பாவில் அச்சாகி வெளிப்பட்டிருந்தவை முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே.

208 திரு அருட்பா—வசனப்பகுதி, முதற் பதிப்பு (1931), 154-ம் பக்கம் பார்க்க.

றித் தலைவ வேறெண்ணியதுண்டோ"[209] என "தேடியதுண்டு நினதுருவுண்மை" என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும்[210] விண்ணப்பித்திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில்: "கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக"[211] என்றதுதான். என்னை யேருநிலை மிசை யேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

---

209 மாயையாற் கலங்கி வருந்திய போதும்
வள்ளலுன் றன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே யல்லாற்
றலைவவே றெண்ணிய துண்டோ
தூயபொற் பாத மறியநா னறியேன்
துயரினிச் சிறிதுமிங் காற்றேன்
நாயகா வெனது மயக்கெலாந் தவிர்த்தே
நன்றருள் புரிவதுன் கடனே—ரு-ம் பாசுரம்.

210 திருவருட்பா—சு-ம் திருமுறை, பிரிவாற்றாமை, க.

211 கருணையுஞ் சிவமே பொருளெனக் காணுங்
காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருணெறி யெனநீ யெனக்கறி வித்த
வண்ணமே பெற்றிருக் கின்றேன்
இருணெறி மாயை வினைகளாற் கலக்க
மெய்திய தென்செய்வே னெந்தாய்
தெருணிலை யின்றிக் கலங்கினே னெனினுஞ்
சிறுநெறி பிடித்ததொன் றிலையே—

திருவருட்பா—சு-ந் திருமுறை,
பிள்ளைப்பெரு விண்ணப்பம், க0-ம் பாசுரம்.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படியிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து சொல்லுவேன்; அல்லது பொருளைக் கொடுத்து வசப் படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படியெந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வாச் செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல்வேண்டும். இராத்திரிகூட "நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷணநேரம் இருக்க மாட்டார்களே என்று என்று . . .212" ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திர மல்ல. உலகத்தி லிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக் கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால்: எல்லவரும் சகோதரர்க ளாதலாலும், இயற்கை யுண்மை யேகதேசங்க ளாதலாலும், நான் அங்ஙனம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக்கொண் டிருக்கிறேன்.

இப்போது நீங்கள்—இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களா

212 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

யிருந்தாலும்—சாலைக்குப் போகக் கொஞ்ச தினை
மிருக்கின்றது—அதற் குள்ளாக நீங்கள் நீங்களும்
நல் லொழுக்கத்திற்கு வருவதோடுகூட, மற்றவர்
களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்வி
தத் தந்திரமாவது செய்து நம்மவர்க ளாக்கிக்
கொள்ளவேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்
துக்கு அப்படிச் செய்துகொண் டிருங்கள். நானும்
ஆண்டவரிடத்தில் இவ் வுலகத்தி லுள்ள எல்லா
ஜீவர்களும் நன்மை யடையப் பிரார்த்தித்தும்,
ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகின்
றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்துகொண்
டிருங்கள்.

சமயந்தவிர மதங்களில் உள்ள வேதாந்தி சித்
தாந்தி யென்று பெயரிட்டுக்கொண்ட பெரியவர்
களும் உண்மையறியாது, சமய வாதிகளைப்போல
வே ஒன்றுகிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆத
லால் நீங்கள் அஃது ஒன்றையும் நம்பவேண்டாம்.
எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்
படச் சொல்லவில்லை. "தெய்வத்தைத் தெரிந்து
கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வ
மெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோ
தரர்கள் தெய்வத்தைத் தெரிந்துகொள்ளாததி
னாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!" என்று
நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக்கொண்
டே இருந்தேன், இருக்கின்றேன்; இருப்பேன்.
தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ள வில்லையென்
றால்: ஒரு பதார்த்தத்தை அனுபவித்தா லல்லது
அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி
தெரியாத பதார்த்தத்தின்மேல் இச்சை போகாது.
அதுபோல், தெய்வத்தை யுள்ளபடி அநுபவித்தா

லல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வாராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்துகொள்ளவேண்டு மென்கிற முக்கிய லக்ஷியத்தி லிருந்து கொண்டு விசாரஞ் செய்துகொண் டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால்: அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள்—இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத் தேகத்தின்கண் புருவம் கைம்மூலம்—இவைகளி லும் இவைபோன்ற மற்ற இடங்களிலும் உரோ மம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங் களில் அது தோன்றாதிருப்ப தென்ன? கால்கை களிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அங்ஙகம் வளர்தலும்—இவைபோன்ற மற்றத் தத்துவங்களி னது சொரூப ரூப சுபாவங்களும் என்னவென்னும் பிண்ட விசாரமுஞ் செய்துகொண்டிருங்கள். இப் படி இடைவிடாது விசாரஞ் செய்துகொண்டிருந் தால், இவ்வுலகத்தின்க ணுள்ள ஜனங்கள் அதைக் குறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங் கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்தவர்—ஆணுக்குக் கடுக்கனிடுத லும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடு தலும் தமக்குச் சம்மதமானால்—காதிலும் மூக்கி லும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட் டிருக்கமாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும்

மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத் தின்கண் அலக்ஷியம் தோன்றினால், நிராசை உண் டாம். ஆதலால், சரியை முதலிய சாதகம் நான் கில், நான்காவது ஞானத்தில் சரியை கிரியை யோகம் ஞானம் என்கின்ற நான்கில், மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனா கிய நிராசை யென்னும் படி உண்டாகின்றது. ஆகை யினாலே, இந்த விசாரத்தி லிருந்து கொண்டிருங் கள்.

இவ் விசாரஞ் செய்துகொண்டிருந்தால், ஆண்ட வர் வந்தவுடனே, கண்டமாக உங்களுக்குத் தெரி விக்கவேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங் களுக்கு உரிமை[213] வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியி லிருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல் லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கள் சில நாள் தடைப்பட் டிருப்பார்கள். இனி நீங்கள் இது வரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள். இது கடைசி வார்த்தை. இதுமுதல்— கொஞ்ச காலம்— சாலைக்குப் போகின்ற வரைக்கும், ஜாக்கிரதையாக மேற்சொன்ன பிரகாரம் விசாரஞ் செய்துகொண் டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண் மையைக் குழூஉக்குறியால் குறித்து, அக்குறிப் பையும் வெளிப்படையாகக் காட்டாது, சிவாய நம என்றும், நமசிவாய என்றும், இதுபோன்ற அனந்த வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று இரண்டு

213 ஒரு பிரதியில் 'ஒருமை' என்றிருக்கிறது.

மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின்மூன்று பதினைந்து பதினாறு இருபத்துநான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால். . .214 நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்மலாபமாகிய சிவானுபவமே யன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்கநரக விசாரமில்லை. சுவர்க்க நரக விசார முள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச்செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைப்பட்டுத் திருவருட்டுணையால் கருணை நன் முயற்சியெடுத்துக்கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பா னுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகா வாக்கியத் திருமந்திரத்தை—தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை—எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த—உண்மையறி வுருப வாநந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய உரிமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்

214 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

டளை யிட்டது யாதெனில்: நமக்கு முன் சாதனம் கருணை யான திலுலே, ஆண்டவர் முதற்சாதனமாக

அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருட் ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக்கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய பேரறிவே யாம். இஃது வாச்சி யார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன் பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்"215 என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்தமாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்தமாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம்

---

215 சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றும் எனலால்
சகமீ திருந்தாலும் மரண முண்டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை
சிந்தை யறியார்க்கிது போதிப்பதல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலரோ?

. . . .

தாயுமான சுவாமிகள்—கருணாகரக்கடவுள், எ-ம் பாசுரம்.

14

கேட்டிருப்போம். மேலும், இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால், இத்தருணம் இக்காலமே சன்மார்க்கக் காலம்.

இதற்குச் சாக்ஷியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக்கொண்டது. அக் கொடி இப்போதுதான் கட்டிக்கொண்டது. அக் கொடி உண்மையில் யாதெனில்: நமது நாபிமுதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி யிருக்கின்றது; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச் சவ்வின்கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக் கொடி நம் அநுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அநுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடிகட்டிக்கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்துகொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்துவிட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள். இப்போது நான் சொல்லி வந்த பிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மையறிவாய் விசாரஞ்செய்து கொண்டிருங்கள். அவசியம்

இதற்குக் காரணமான தய விருக்கவேண்டியது. அந்தத் தயவு வருவதற்கு ஏதுவான உரிமையும் கூட இருக்கவேண்டும். இப்படி இருந்து கொண்டிருந் தால், ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையை யும் பெற்றுக் கொள்வீர்கள். இது சத்தியம், சத் தியம், சத்தியம். இஃது ஆண்டவர் கட்டளை. 216

. . . 217 எல்லோர்க்கும் தாய் தந்தை அண்ணன் தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப் பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம். இது ஆண்டவர் கட்டளை.

அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
தனிப் பெருங் கருணை அருட் பெருஞ் ஜோதி

அ. மஹோபதேசம் முற்றிற்று.

216 இதோடு ஒரு பிரதியில் இக்குறிப்பு முடிவு படுத்தி யிருக் கிறது.

217 இங்குத் தொடர்பு குறிக்கத் தவறியது போலும்.

உ

அருட் பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை

# ௯௰. ஔஷதி குணாகராதி[218]

1 சிந்தில் - காய சித்தி.
2 மருள் - விரணாரி.
3 காஞ்சொறி - கபாரி.
4 பெருங் காஞ்சொறியு மது.

---

218 இது “திருவருட்பிரகாச வள்ளலார் திருவாய்மலர்ந் தருளிய ஔஷதியின் குணாகராதி” என்ற தலைப்பின்கீழும் இறுதியோடும் எழுதப்பட்டு, இறுதியில், “இஃது கருங்குழி ரெட்டியார் வீட்டிலிருந்த கையொப்ப புஸ்தகத்தின் நக்கல்” என்றும், (பெயர்த் தெழுதிய தேதி) “யுவ வருஷம் விருஷப ரவி ௧௮௳” என்றும், (இடம்) “ஞான சித்திபுரம்” என்றும், “இஃது ஆ. சபாபதி புஸ்தகம்” என்றும் குறித்திருக்கிறது. இவர் சுவாமிகளிடம் தொண்டுபட்டு அடுத்திருந்த புண்ய புருஷர்களில் ஒருவராகிய சபாபதி சிவாசாரியர் அவர்கள் என்று தோன்றுகிறது. திருவருள் சம்மதமாகக் கிடைத்த இந்த நோட்டில்மட்டும் உள்ளவற்றை நக்ஷத்திரப் புள்ளி ஒன்றும் இரண்டும் இட்டுக் காட்டி யிருக்கிறது. இரண்டு புள்ளிகள் இவற்றினும் வேறு கை எழுத்தில் பிறகு சேர்த்திருப்பதாய்த் தெரிபவைக்கு இட்டிருக்கின்றன; ஒழுங்கில்லாமல் இடையிடையே எழுதி யிருப்பதால், அங்ஙனம் இரண்டு புள்ளிகள் உள்ளவற்றை முன்னும் பின்னும் உள்ள மூலிகையையும் அநுசரித்து ஆராய்தல் வேண்டும். கிடைத்த பிரதி இரண்டில் மற்ற எட்டுப் பிரதியில் மட்டும் உள்ளனவற்றை மூன்று புள்ளிகளால் வேறு படுத்தியிருக்கிறது. இந்தப் பிரதிகளைக் குறித்த தகவல்கள் மற்றவைகளோடு திருவருட்பா அடக்கவிலைப் பதிப்பு வரலாறு என்பதில் விவகரிக்கப்படும். மலை அகராதியில் இல்லாத பெயர்கள் பலப்பல இவ் ஔஷதியின் குணாகராதியில் இருப்பதால்,

5 ஆடாதோடை[219] - சுராரி.
6 கருங்காலி - குஷ்டாரி.
7 வெண் கருங்காலி - நாகமணி பந்தனி.
8 வேம்பு - பித்தாரி.
9 பெரு வேம்பு - வாதாரி.
10 நில வேம்பு - சுராரி, சூதக நாசி*, வாயு காரி.*
11 சர்க்கரை வேம்பு - காய சித்தி.
12 கோரைக் கிழங்கு - தோஷாரி.
13 பற்பாடகம் - சக்ஷாப்தம்.
14 வெட்டி வேர் - தாபாரி.
15 விலாமிச்சம் வேர் - பித்தாரி.
16 பேய்ப் புடல் - பித்தாரி.
17 வட்டத்திரிப்பி - பேதி மர்த்தனி.
18 குமிள் - சன்னி மர்த்தனி.
19 பெருங் குமிள் - சுர மர்த்தனி.
20 கண்டங் கத்தரி - சுவாச மர்த்தனி.
21 சிறு வழுதலை - சுவாச காச மர்த்தனி.
22 வழுதலை - சிலேட்டும மர்த்தனி.
23 நெரிஞ்சில் - மூத்திர கிரிச்ச மர்த்தனி.
24* வில்வம் - சத்தி மர்த்தனி.
25 முன்னை - மேக மர்த்தனி.
26 கழற்கொடி - விரை வாத மர்த்தனி.
27 வெண் கழற்கொடி - குன்ம மர்த்தனி.
28 கொட்டைக் கரந்தை - வாக்குதாரி.
29 நாறுங் கரந்தை - காய சித்தி.

ஓஷதியின் பெயர்கள் வேறு பட்டிருக்கும் இடங்களில் அவை சுவடியில் கண்டபடி அங்கங்கு கேள்விக் குறியிட்டும் அடிக்குறிப்பாகவும் காட்டப்பட் டிருக்கின்றன.

219 சுவடி - தோடை.

30 நன்னாரி - தேக சித்தி.
31 பேய்ப் பீர்க்கு - கெந்தகத் தைலம்.
32 மற்றைப் பீர்க்கு - வாத சமனம்.
33 பழுப் பாகல் - லிங்க பந்தனி.
34 முள் வெள்ளரி - கிரிச் சாரி.
35 நிலவுகாய் - சத் திறக்கி.
36 வெண் கிலுகிலுப்பை - சூத பற்பி.
37 கோவை - ஜலக் கழிச்ச லாற்றி.
38 தீங் கோவை - பரவிந்து பந்தனி.
39 கொன்றை - கிருமி மர்த்தனி.
40 எலிச்செவி - நீர்ச் சுருங்கி.
41 சதுரக் கள்ளி - பாஷாண மைனி.
42 சிவதை - விரோசனி.
43 பிரசூதிகை* - வாயு ஹாரி.*
44 நாயுருவி - மந் தாரி, குன்ம காரி.*
45 ஷை லவணம்* - சருவ வுபரச மர்த்தனி,* ஷை கட்டு,** ஷை களங்கு.**
46 செஞ் சதுரக் கள்ளி - தங்க தாம்பரி.
47 சாறனை - திமிர் வாத மர்த்தனி.
48 மூக்குறட்டை - பீனிச மர்த்தனி.
49 செம் முள்ளி - சிலேட்டும மர்த்தனி.
50 சித்தா முட்டி - சுர மர்த்தனி, சூத பந்தனி.*
51 பேரா முட்டி - சர்வ சுர மர்த்தனி.
52 பாலை - சுளுக்குப் போக்கி.
53 திருநாமப் பாலை - பித் தாரி.
54 குடசப் பாலை - அதிசார மர்த்தனி.
55 வெட் பாலை - அய வங்கி, சூத சிந்தூரி.**
56 பழப் பாலை - பித் தாரி.
57 முதியார் கூந்தல் - காரிய பற்பி.
58 வெள்ளை யாமணக்கு - வாதம் போக்கி.

59 செவ் வாமணக்கு - சாதிலிங்க பந்தனி.
60 மாதளை - அய முருக்கி.
61 கொம்மட்டி மாதளை - சத்தி போக்கி.
62 விளா - பித்தம் போக்கி.
63 குட்டி விளா* - தாக மடக்கி.*
64 சர்க்கரை - தாகம் போக்கி, மயக்கம் போக்கி.
65 கரும்பு - கல்லடைப்புப் போக்கி.
66 வெண் கரும்பு - க்ஷயம் போக்கி.
67 அமுக்கிரு - க்ஷயம் போக்கி, வாயு போக்கி,* வங்க நாக சிந்தூரி.**
68 பிரமி - வீக்கம் போக்கி, விரோசனி*, வாத மாற்றி.**
69 பூனைக் காஞ்சொறி - சிலேட்டும மர்த்தனி.
70 பூனைக்காலிப் பருப்பு - தம்பனி,*** சுக்கில பந்தனி.*
71 சிறு பூனைக்காலி - நீ ரிறக்கி,* நீ ரிள(?)க்கி.***
72 மந்தாரை - பாஷாண மைனி.
73 கொக்கிறகு220 - சாதிலிங்க மைனி.
74 அழிஞ்சில் - விஷ மர்த்தனி.
75 ௸ மூலதைலம்* - விரோசனி*, லிங்க பந்தனி.*
76 பாகல் - பாஷாண தோஷ மர்த்தனி.
77 காட்டத்தி - கிராணி நீக்கி,* கிரகிணி நீக்கி.***
78 சாளம் - தங்க நீற்றி.
79 முள் முள்ளிக் கீரை* - சர்வ சரக்கு கட்டொடத்தி221,* தங்கச் சுன்னி.*
80 முசுமுசுக்கை - க்ஷய மர்த்தனி, பவழ பற்பி.**

---

220 சவடி - கொக்கிற(?)கு. 221 கட்டுடைத்தி ?

81 புன்னை - கிரந்தி போக்கி.
82 கீழாநெல்லி - காமாலை போக்கி, பித்தம் போக்கி.*
83 கருங் கொள் - உருக்கினை மாதல்.
84 கூகைநீறு - உஷ்ணம் போக்கி.
85 தேற்று - சல மலி ஹரி.
86 தகரை - மாந்தம் போக்கி.
87 ஊமத்தை - சூத வெண்ணெ யிறுக்கி.
88 சேவகனார் கிழங்கு - கடிகை போக்கி.
89 கரிசாலை-பாண்டு மர்த்தனி, க்ஷய மர்த்தனி,* வசீகரி.*
90 பொற்றலை - காய சித்தி, சிந்தூ ராதி.*
91 எருக்கு - சன்னி போக்கி, க்ஷீரம் . . .[222]ணம் போக்கி.*
92 வெள்ளெருக்கு - சாரங் கட்டி.
93 மணத் தக்காளி - தண லாற்றி.
94 கருந் தக்காளி - கெந்தி கட்டி.
95 குன்றிமணி - காரங் கட்டி.
96 பெரு முள்ளங்கி - கிரிச்சரம் போக்கி.
97 சிறு முள்ளங்கி - கெந்தி கட்டி.
98 ஆற்று முள்ளங்கி - சிலேட்டுமம் போக்கி.
99 சுவர் முள்ளங்கி* - நாக பற்பி,* உப்புக்கட்டி.*
100 முருங்கை - கண் விரணம் போக்கி.
101 ஷை பூ* - விந்து கட்டி,* தாம்பர சுத்தி.*
102 ஷை மூலம்* - கட்டுடாத்தி[223].*
103 ஷை பிசின்* - விந்து கட்டி.*
104 ஷை பத்திரி* - மலம் போக்கி.*

---

222 இங்கு இரண்டொரு எழுத்துக்கள் கொண்ட அளவில் ஏடு சிதைந்திருக்கிறது.

223 கட்டுடைத்தி ?

105 ௸ ஏர்க்கு* - வாயு மர்த்தனி.*
106 ௸ வேர்ப்பட்டை* - வங்க பற்பி.*
107 புனல் முருங்கை224 - நாகங் கட்டி.
108 துளசி - தோஷம் போக்கி.
109 கருந் துளசி - செந்தூரத் தாதி.
110 நீர்த் திப்பிலி - சன்னி போக்கி.
111 வெள் ளுள்ளி-வாதம் போக்கி, தேக வலுவி,* மூலம் போக்கி.*
112 ஈருள்ளி-வேகம் போக்கி, பித்த நாசி,* சீதளி.*
113 நொச்சில் - கடுப்புப் போக்கி.
114 ௸ மூல தைலம்* - லிங்க பந்தனி.*
115 ௸ பத்திரி* - நீர் மர்த்தனி *
116 கரு நொச்சி-கறப்பான் போக்கி, வங்க பற்பி.*
117 பேயன் வாழை* - காய சித்தி.*
118 ௸ கிழங்கு* - வழலை போக்கி.*
119 ௸ பூ* - சிந்தூரத் தாதி,* வசி கரி.*
120 ௸ பத்திரி* - உபரச பந்தனி.*
121 ௸ தண்டு* - சர்வ விஷ நாசி.*
122 ௸ பனி* - உபரசாதி பவுதிக பந்தனி.*
123 ௸ லவணம்* - சர்வ பவுதிக பந்தனி.*
124 ௸ பழம்*-ஜீரணகாரி,* மலம் போக்கி.*
125 ௸ காய்* - குற்றம் போக்கி.*
126 ௸ பூ* - சுக்கில பந்தி,* சுரோணித பந்தி,* மல பந்தி.*
127 ௸ மூலம்* - மத நாசி.*
128 இதர வாழைப் பூ* - பெரும்பாடு போக்கி.*
129 வாழை*** - பெரும்பாடு போக்கி.***
130 வாழைக் கிழங்கு - உழலை போக்கி,* வழலை போக்கி.* * *

224 சுவடி - புனமுருங்கை.

182 முட் பலாசு - அரிதார நீறு.
183 ஆலுக்கு - புழுக்கள் போம்.
184 அரசுக்கு - புத்தி வர்த்தினி.
185 இச்சில் - குஷ்டம் போக்கி.
186 நாவல் - விரணம் போக்கி, வங்க பற்பி.*
187 அத்தி-பெரும்பாடு போக்கி, உஷ்ண சமனி.*
188 பேயத்தி - தம்பனி.
189 பூவரசு - சகல விஷ குஷ்டம் போக்கி.
190 அலரி - நடுக்கல் போக்கி.
191 வன்னி - அயத் தாம்பரி, லவண சிந்தூரி.**
192 நீர்க் கடம்பு - நாக பந்தனம்.
193 கடம்பு - பாஷாண பந்தனம்
194 வெண் கடம்பு - சூத பந்தனம்.
195 வாகை - விரண நீக்கம்.
196 கரு வாகை - கெந்தி பந்தனம்.
197 வேங்கை - கடி நீக்கம்.
198 ஓட்டை - புதரி நீக்கம்.
199 இலவு - அதிசார நீக்கம்.
200 இலவம் பிசின் - சுக்கிலங் கட்டும்.
201 மா மரம் - வாந்தி நிற்கும்.
202 பொன்னாங்கண்ணி - கண் ணொளி, உஷ்ண சமனி.*
203 மாவிலிங்கை - சன்னி நீக்கம்.
204 லோத்திரம் - கண்ணுக் கினிது.
205 வெள்ளி லோத்திரம் - துரிசு குரு,* துருசி குரு***
206 வஞ்சிக்கு - இடுப் புறுதி.
207 ஆற்று மருது - வழலை போக்கி.
208 மாட்டுச்செவி மருது - வெள் வங்க பற்பி.
209 குதிரைச்செவி மருது - கரு வங்க பற்பி.

210 இமிற் கிழங்கு - இருளை நீக்கி.
211 பாலிறில் - பாஷாணங் கட்டும்.
212 தேட்கடை - சிரங்கு நீக்கி.
213 நெய்ச்சிட்டி - சீதசுரம் போக்கி, குன்ம நாசி**
214 சிறுவிடு கொள்ளு - தண்ணீர் கட்டு.
215 பெருவிடு கொள்ளு - சார நாசி.
216 தண்ணீர் மிட்டான் - சிங்கி செம்பு.
217 காகோளி - சலங்க ணீக்கி.
218 சீகக்ஷ காகோளி - திற முண்டாக்கி.
219 சீவகம் - கல்லுப்புக் கட்டு.
220 மயிடவகம் - கெவுரிக் கட்டு.
221 போரா மல்லி - சுரங்கள் போக்கி.
222 சித்தா மல்லி - சலவை போக்கி.
223 சிறுபுள்ளடி - கெணங்கள் போம்.
224 அஷ்டிமதுகம் - பிரமியங்கள் போம்.
225 பேர்சாரிபாதி - சூத பந்தனம்.
226 பதுமுகம் - பாலை யாம்.
227 பிரபுணரிகம் - அப்பிரக சத்து.
228 மேதை - மகா தோஷம் போம்.
229 மா மேதை - துஷ்ட சுரம் போம்.
230 தேக்கு - சிரங்கு நீக்கி.
231 ஞாழல் - தினவு போக்கி.
232 பால்விழி - அய வங்கம்.
233 பெருங் குரும்பை - பிறிவுக் காம்.
234 குறுஞ்சூலி - அண்ட மெழுகு.
235 நறு முருங்கை[225] - நாகரச பந்தனம்.
236 பெருங் குறிஞ்சி - கடுப்புப் போம்.
237 ஆயில் - வாதம் போம்.
238 புங்கு - சூலை போம்.

---

225 சுவடி - நறுமுருக்கை.

131 ௸களின் மூல சலம்* - சர்வ வுபரச பந்தனி.*

132 தென்னை - மருளைக்ஷ போக்கி.

133 ௸ பூ* - உபரச பந்தனி, மலபந்தனி,* சுரோணித பந்தனி*, உஷ்ண மர்த்தனி.*

134 ௸ கோம்* - காய சித்தி*.

135 ௸ பழம்* - ஈடு முறித்தல்,* அறிவி விருத்தி.*

136 பனைக்கிழங்கு*** - வறுத்தி.***

137 பனை* - வறுத்தி.*

138 ௸ பூ* - கப நாசி*.

139 ௸ குருத்து* - க்ஷயம் போக்கி.*

140 ௸ மூலரசம்* - சூத பற்பி.*

141 ௸ கிழங்கு* - வறுப்பில் பற்பி.*

142 நிலப் பனை - பாலை யாம், க்ஷயம் போக்கி*, கரண ரோக மர்த்தனி.*

143 வெள்ளைக் காக்கணன் - விரோசனி, தங்கச் சுன்னி.*

144 முடக் கொத்தான் - வாதம் போக்கி.

145 செம்பை - தினவு போக்கி, சுரம் போக்கி.*

146 சங்கங் குப்பி - குஷ்டம் போக்கி, கறப்பான் போக்கி.*

147 பொரும்பில் - விரணம் போக்கி.

148 கறுப் பறுகு - காசம் போக்கி.

149 வெள் ளறுகு - மேகம் நீக்கி, சுரம் போக்கி.*

150 பவள வறுகு - சுவாசம் போக்கி.

151 புளியாரை - காய சித்தி, பித்த மர்த்தனி,* லவண சிந்தூரி,* அப்பிரேக சிந்தூரி.*

152 தாமரை - கண் குளிர்ச்சி.

153 தாமரை வளையம் - நஞ்சு முறிச்சி.

154 தாமரை மணி - வசிகரி.
155 ஷை தாது - மேகம் போக்கி.
156 ஷை கிழங்கு - ஆண்மை உண்டாக்கி, சூத பந்தனி.*
157 செங்கழுநீர் - திரிதோஷம் போக்கி, வசீகரி.*
158 அரக் காம்பல் - சிலேட்டுமம் போக்கி.
159 கற் றாமரை - லோகச் செம்பி.
160 வெண் டாமரை - சூத பந்தனி.
161 குளிரி - உப்புக் கட்டி.
162 மல்லிகை - எண்ணெய் போக்கி.
163 கொடி மல்லிகை* - தார பற்பி.*
164 ஆத்தி மல்லிகை - மேனி அழகி.
165 முல்லை - சோபந் தீரி.
166 முல்லைப்பேதம் - முத்தோஷம் போக்கி.
167 நந்தியாவட்டம் - கண்ணுக் காம்.
168 இருவாட்சி - ரத்த பித்தம் போக்கி.
169 செண்பகம் - மருக்கள் போக்கி,* ப(?)ருக்கள் போக்கி.***
170 சிறு செண்பகம் - பித்தம் போக்கி.
171 செவ் வந்தி - சித்தப்பிரமை போக்கி.
172 குங்கும வந்தி - கோழை போக்கி.
173 எலுமிச்சை - பித்தம் போக்கி.
174 சித் தீஞ்சில் - சிரதோஷம் போம்.
175 பே ரீஞ்சில் - சுரங்கள் போம்.
176 முந்திரிப் பழம் - தோஷம் போக்கி.
177 புளி முந்திரி - திரிதோஷம் போக்கி.
178 இலந்தை - கடுப்புப் போக்கி.
179 இலுப்பை - விரணம் போக்கி.
180 மலை யிலுப்பை - வாதம் போக்கி.
181 பலாசு - பேதி யாற்றி.

239 ஷை பால்* ரண மாற்றி.*
240 வலம்புரி - குளிதோஷம் போம்.
241 மருக்காரை - நசியத்துக் காம்.
242 பாற்பை - சவ்வீரங் கட்டும்.
243 இருள் - குடாரம் போக்கி.
244 பா விருள் - சூத பந்தனம்.
245 இருள்வீடு - காந்த சத்து.
246 களாவிழுது - வெடியுப்பு கட்டு.
247 மரா மரம் - சூடங் கட்டு.
248 குமுகு - பற் குறுதி.
249 தழுதாழை - வாதம் போக்கி.
250 தெற்கை-கிரிச்சம் போக்கி, சுளுக்கு போக்கி.*
251 ஆதண்டை - பீனிஸம் போக்கி, சிரநீர் போக்கி.*
252 குழ லாதண்டை - சரக் கெல்லாம் கட்டும்.
253 செவ் வாதண்டை* - சூத வங்கி.*
254 நாணல் - துன் மாங்கிஷம் போக்கி.
255 திமிசு - சாரங் கட்டு.
256 பூசபத்திரி - வசீகரி.
257 விடத்தேற்கு - சூதபற்பி.
258 நெட்டி - நீரைக் கட்டும்.
259 நளந்துவயம் - நாக செந்தூரி.
260 பெரு வாழை - ஈய செந்தூரி.
261 உத்தாமணி - மாந்தம் போக்கி, பவள பற்பி* அய சிந்தூரி*
262 பிரா முட்டி - சாரஞ் சாம்.
263 குறிஞ்சி - மயி லிறகு சத்தாம்.
264 தந்த சகுரி - இரும் புருக்கி.
265 செப்பு நெருஞ்சில் - சிறுநீர் உஷ்ணம் போகும்.
266 கணம்(ப்?)பு - சிலேமெழு காம்.

267 கல்புகு வெள்ளி[226] - காய சித்தி.
268 முளிகாக்கு[227] - கல்லுப்புக் கட்டு.
269 அசோகுக்கு - குன்மம் போகும்.
270 வாலுகம் - கடிகள் போகும்.
271 முத்தக்காசு - சுர தோஷம் போம்.
272 அதிங்கு-கால் கை நோய் நீக்கம்,*** கர பாத வியாதி நாசம்*.
273 வெள்ள நாகணத்தி - விரோசனி.
274 நேர்வாளம் - பேதி,...[228] பாநாசி.**
275 குறட்டை - கோழை பீனஸம் போம்.
276 கஞ்சாங் கோரை - குளிர் போம்.
277 மருவகம் - தாகம் போம்.
278 இங்குணம் - லிங்க மிறுகும்.
279 இடுகாட்டுத் துளசி - இரைப்பு நீக்கி.
280 திப்பிலி - தாது விர்த்தி.
281 சாசி-பாம்பு பக்ஷி கடி போக்கி.
282 அனிச்சை - சொறி போக்கி.
283 தாழை - சூத சுத்தி.
284 குப்பை மேனி - உப்புக் கட்டு.
285 செருப்படி - சிலேட்டுமம் போம், மேகம் போம்.*
286 ஆடு தின்னுப் பாளை - நாக பந்தனம், புழுக் கொல்லி.*
287 வெற்றிலை - நாகநீற்றி, ஜீர்ணகாரி,* சூத சுத்தி.*
288 ஆகாச கருடன்-சூத பந்தனம், அண்டவெண் கரு . . .*

---

226 சுவடி - கல்புகுவள்ளி. 227 சுவடி - மிளிகாக்கு.

228 இங்கு இரண்டொரு எழுத்துக்கள் கொண்ட ஏடு சிதைந் திருக்கிறது.

289 ரத்த மண்டலி-இரும் புருக்கி, பூரங் கட்டி.
290 காட் டாமணக்கு - அயலோக வங்கி.
291 மருதணி - அயச் செம்பி, கெந்தி கட்டி.*
292 கஞ்சா - யோகி.
293 நில வாகை - புழுக்கள் போக்கி.
294 கட்டுக் கொடி - உப்புக் கட்டு, சூத வெண்ணெய்க் கட்டு*.
295 புரண்டை - வைர நீற்றி, சூதவெண்ணெய் பந்தனி*.
296 வல்லாரை - உடலந் தேற்றி, காம நாசி.*
297 மயூர சிகை - நாக பந்தனம்.
298 தாம்பர சிகை - சூத பந்தனம்.
299 கானல்மா - பித்தளை நீறும்.
300 தில்லை - பாஷாணஞ் சாம்.
301 மலைமா - குடவ னீறும்.
302 கப்பட்டி - குதிரைப்பல் மெழுகு.
303 புளிச்ச சிறுக்கீரை - சூத பந்தனம், தாம்பர சிந்தூரி.*
304 நீரரளி229 - அயச் செம்பி.
305 செவ் வறளி - தங்கச் செம்பி.
306 சத்திச் சாரணை - காரீய பற்பி, வாத நாசி.*
307 தும்பை - சுரங்கள் போக்கி, சில் விஷம் போக்கி,* சிரோ ரோகம் போக்கி.**
308 பேய்த் தும்பை - தோஷம் போக்கி.
309 பேய்க் கொள்ளு - சகல சத்துமாம்.
310 பேய்க் கடலை - கெந்தி தைலம்.
311 பேய்த் துவரை - தாளக தைலம்.
312 அழு கண்ணி - சூத பந்தனம்.
313 தொழு கண்ணி - துணித்த சதை கூடும்.

---

229 சுவடி - நீர்நறளி.

314 முடவாட்டுக்கால் - சவ்வீரங் கட்டும்.
315 நாக சிங்கி - நாக பந்தனம்.
316 இருப்பவல் - மாகட்டி,* மாகெட்டி.***
317 பொன் மத்தை - சூத பந்தனம்.
318 கரு மத்தை - கெந்தி பந்தனம்.
319 நச்சுப் பூலா - செந்தூர குரு வாம்.
320 நான்முகப் புல் - ஈய பற்பி.
321 காவட்டம் புல் - மந்தம் போக்கி.
322 சுணை மரம் - சூத பந்தனம்.
323 எருமைக் கணைச்சான் - தேக சித்தி.
324 ரோம விருட்சி - சகல சித்தி.
325 செந்தாடு பாவை - தங்கச் செம்பு
326 முண்டிளி(ணி?) - சித்து.
327 சாயா மரம் - மா வேதை.
328 கரு நெல்லி - சகல சித்தி.
329 கல்லாரை - சூதங் கல்லாம்.
330 கல்செம்பு - சூத குரு.
331 கல் லறளி - தங்கச் செம்பு.
332 மூவிலைக் குருத்து - சூத மணி.
333 முத்துருக்கன் செவி - சூத பந்தனி.
334 செந்திராய் - சூதச் செம்பு.
335 செம்பல்லி - சூதங் கட்டும்.
336 செவ் வகத்தி - சாதிலிங்க மைனி.
337 நிலச் சோதிக்கு - கண்டர் வெளுப்பு.
338 நிலக் கடம்பு - அப்பிரகஞ் சத்து.
339 பிறங்கைநாரிக்கு - கெவுரிக் கட்டு.
340 பூதணக்கு - மால்தேவிக் கட்டு.
341 செருந்தி - பாஷாணங் கட்டும்.
342 கொத்தான் - பித்தம் போக்கி.
343 வறச்சுண்டி - நீரைக் கட்டும்.

344 ஆயிரம் - வெடியுப்புக் கட்டும்.
345 கட்டுமா - தாபம் போக்கும்.
346 அம்பளங் காய் - கல்லுப்புக் கட்டு.
347 புனம்பிளி - சாரங் கட்டும்.
348 இதளை - சூலை போம்.
349 தும்பி - சூத பற்பி.
350 சிறு தும்பி - சோகம் தீர்க்கும்.
351 சோனகப் பூ - பாதரஸ மாம்.
352 திராய் - சன்னி போக்கும்.
353 பேய்த் துமிட்டி - பாஷாணங் கட்டும்.
354 பெருங் கம்பி - வெள்ளீய பற்பி.
355 மரிதுடாரி* - மால்தேவி பற்பி.*
356 மறிதொடாரி*** - மால்தேவி பற்பி.***
357 தேவ தாளி - சூத பற்பி.
358 தாளி - இரைப்பு இருமல் மூர்ச்சை போக்கும்.
359 நறுந் தாளி - சிலேட்டுமம் போம்.
360 நாக தாளி - நாகங் கட்டும்.
361 பேய்ச் சுரை - விஷம் போம்.
362 பேய்ப் பீர்க்கு*** - கெந்தி தயிலம்.***
363 சற்பாக்ஷி - பாம்பு விஷம் போம்.
364 பைசாசப் பீர்க்கு* - விஷம் போம்,* பேதி.*
365 சுவசற் பாக்ஷி - இங்குலிகங் கட்டும்.
366 விட்டுணு காந்தி - சுரங்கள் போம்.
367 நாக பாலை[230] - தாம்பர செந்தூரம்.
368 நீர்க் கடம்பு - ஈயச் செந்தூரம்.
369 ஈகை - தாளக செந்தூரம்.
370 நறு வெளி[231] - நாக்குப்புண் ஆறும்.
371 புளிவஞ்சி - நாக ரஸம்.

230 சுவடி - நாகபலை. 231 சுவடி - நறுவிளி

372 சிறுகல்லு - கல்லுப்பு கட்டு.
373 வெட் புலா - உஷ்ணம் போம்.
374 நீர்ப் புலா - போக மிக்காம்.
375 தலைச்சூடு வள்ளி - ரசங் கட்டும்.
376 பிரமதண்டி - சூதங் கட்டும்.
377 பொடுதலை - வயிறுகடுப்புப் போம்,வெட்டை போம்,* நீரொழுக்குப் போம்.*
378 கோடகசாலை232 - வயிறு புழுப்போம்.
379 இடு கொள்ளு - சத்து ஆம்.
380 காட்டுக் கொள்ளு*** - காரங் கட்டும்.***
381 நாட்டுக் கொள்ளு* - சாரங் கட்டும்.*
382 கரும்பு - பசாசு போம்.
383 திண்பு - சிலை கட்டு.
384 துரும்பு - சூத பற்பி.
385 முட்பலா - ஆண்மை.
386 வன்மறை - அரிதார வெள்ளை.
387 வெள் வேல் - விரணம் போக்கி.
388 கரு வேல் - பல் லிறுக்கி.
389 காஞ்சிரம் - காய சித்தி.
390 மலை யத்தி - பேதி கட்டும்.
391 சடைச்சி - விரியன் விஷம் போம்.
392 கப்புச் சடைச்சி - கண்டர் வெள்ளை.
393 தமனகம் - தம்பனை.
394 சத்துகம் - உப்புக் கட்டு.
395 மாஞ்சரோணி - கண் புகைச்சல் தீரும்.
396 மூங்கி லரிசி - தோஷம் போம்.
397 மூங்கில் குருத்து - ரத்தம் போம், வங்க வட்டை,* வங்க பற்பி.*
398 செவ் விறகு - அயச் செம்பு.

232 சுவடி - கோடாசாலை.

399 செம் மரம் - தங்கச் செம்பு.
400 ஒரு கொம்பு - ரஜிதச் செம்பு.
401 நீர்விளா - பைத்தியம் போகும்.
402 கழுதை மான் புள்ளி - வெள்ளீயங் கட்டும்.
403 நெய்ம்ம மரம் - அரிதாரங் கட்டும்.
404 பொன்வண்ணச் சாலி - தங்க மாம்.
405 செழுமலர்க் கொன்றை - புழு நீக்கும்.
406 பெருமலர்க் கொன்றை - கிருமி போக்கும்.
407 ஓமை - தினவு போக்கும்.
408 சிறுநிலக்கு - நரைகள் போம்.
409 குருதிமாறிக்கு - துரிசுச் செம்பு,* துருசிச் செம்பு.***
410 புளிநறளை - திமிர் போக்கி.
411 பேய்க் கும்மட்டி - லிங்கங் கட்டும்.
412 சுண்டைக் காய் - சுரங்கள் போம்.
413 கா ரெள்ளு - திலக மாம்.
414 பித்தரோகணி - கண்டுறந்தி,* கண் குளுத்தி(?)***
415 நெல்லி - கெந்திச் செம்பு.
416 சின்னக்கை - தைலத் தாதி.
417 ஆவாரை - ஈயச் செந்தூரி.
418 காட்டுக் கருணை - கெந்தி வெள்ளை.
419 ருதந்தி - சிலை தைலம்.
420 ஆதளைக் காய் - சூதஞ் சாம்.
421 நரி முருக்கு - க்ஷயம் போம்.
422 கிளி முருக்கு - அயச் செந்தூரம்.
423 நெபத்திகை - காய சித்தி.
424 மஞ்சி பத்திரம் - காந்தச் செம்பு.
425 நாய் வேளை - மல(?)ங் கட்டும்.
426 பச்சை நாவி - சூதங் கட்டும்.

427 மாகாளி - மயக்கம் போம்.
428 தாளிப் பனை - சலங்கள் போம்.
429 விருத்தி - சவுக்கார சுண்ணம்.
430 ஓரிலைத் தாமரை - அழுத்தி போம்.
431 நீர் முள்ளி - வீக்கம் போம்.
432 வெள்ளை நீர்முள்ளி - செம்பு குரு வாகும்.
433 நல்லாரை - சூதவெண்ணெ யிறுகும்.
434 கசப்புப் பசளை - சூதங் கட்டும்.
435 இருவேலி - தாபத்தைப் போக்கும்.
436 பருத்தி - பெரும்பாடு போக்கும்.
437 செம் பருத்தி - பித்தம் போம்.
438 அகத்தி - வேக்காடு போம்.
439 அரைக் கீரை - சுரம் போக்கும், கருவங்க பற்பி.**
440 கொடி தும்பை** - சூதங் கட்டும்.**
441 வனமிட்டி - சாரங் கட்டும்.
442 பூசனி - ஊறல் போக்கும், வசீகரி.*
443 கக்கரி - நீர் பெருக்கும்.
444 கொம்மட்டி - வாத மாற்றும்.
445 இரும்பிலி - கெந்தி தைலம்.
446 முள கரணை - கிரந்தி போம்.
447 அவிரிக்கு - லிங்கங் கட்டும், சகல விஷம் போம்.*
448 களவு தும்பை[233] - மூலம் போக்கும்.
449 பிறங்குநாரி - வெடியுப்புக் கட்டும்,* பொட்டிலுப்பு கட்டும்.***
450 செங்கத்தாரி - அயச் செம்பி.
451 காட்டுத்தி - கண்டர் வெளுப்பாம்.
452 புல்லூரி - கருங்குட்டம் போம்.

233 சுவடி - கவுதும்பை.

453 திலகம் - தொட்டிச் சிந்தூரம்,* தோட்டி செந்தூரம்.***
454 உச்சிச்சில் - குதிரைப்பல் கட்டும்.
455 பாவட்டை - வாதம் போக்கும்.
456 கொடிக் கொத்தான் - பாஷாணங் கட்டும்.
457 ஓடமெட்டி[234] - காய முறுதி.
458 செம்பரத்தை - சாதிலிங்க மைனம்.
459 கொடிக் கள்ளி-பாஷாணக் கட்டு, நாகமணல்*, நாக பஸ்பம்*.
460 இலைக் கள்ளி - பாஷாணஞ் சாம்.
461 திருகு கள்ளி - கெவுரி கட்டும்.
462 மான்செவிக் கள்ளி - நாக பற்பி,* தாளகந் தனை(?) மெழுகு.
463 மலை பொன் னுவாரை* - வீர மெழுகு.*
464 பொன் னுவாரை - ஈய செந்தூரி.
465 ஒதி - விரண மாற்றும்.
466 புன்னை - விரண மாற்றும்.
467 சுர புன்னை - அரிதாரங் கட்டும்.
468 நறும் பிசின் - நாகங் கட்டு.
469 சன்னை - சிலை கட்டும்.
470 உகாய் - அப்பிரகஞ் சத்து.
471 சிவப்பு நெல்லி[235] - காயமுத்தும்,* காயமழுத்தும்.***
472 காட்டு வெந்தியம்* - தாம்பர தங்க பற்பி.*
473 தூதுவளை* - கப நாசி,* அறிவு விர்த்தி.*
474 மஞ்சணத்தி* - உப்புக் கட்டி.*
475 கற்றுழை* - வங்க சிந்தூரி.*

234 சுவடி - ஓட்டொட்டி.

235 சுவடியில் இதுவரையில்—ஒரு எட்டில் பாதியளவே—எழுதி, முடிவு படுத்தாமல் விடப்பட்டிருக்கிறது.

476 செங் கற்றாழை* - சிந்தூரத் தாதி.*
477 கருங் காந்தள்* - அறுத்த துண்ட மொன்றும்.*236
478 முத்துப் பூடு* - மிர்த பட்சி சீவிக்கும்.*237
479 குளுந்த கொள்ளி*-குக்கு டாண்ட ஜனிதி.238
480 கரு நாயுருவி* - கர்ப்பார்த்த பிரஸவம்.*239
481 கொடிவேலி* - சீதபேதி கட்டும்.*
482 வை மூல தைலம்* - லிங்கங் கட்டும்.*
483 செங் கொடிவேலி* - செந்தூராதி.
484 நாகக்கொட்டைத் தைலம்* - நாகங் கட்டும்.*
485 துளசி*-வை நாகத்தைச் சுன்னிக்கும்.*

அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட் பெருஞ் ஜோதி

௬. ஓஷதி கு ஞைகராதி முற்றிற்று.

---

236, 237, 238, 239 34, 114, 115-ம் பக்கங்கள் பார்க்க.

# அநுபந்தம்

# சின்மய தீபிகை[240]

## பாயிரம்

*அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்*

அகர வுயிராய்ச் சுடரொளியா
யகண்ட விரிவாய்த் துரியநடுச்
சிகர மணியா மவுனநிலைத்
தேசோ மயமென் பதைப்போற்றிப்
புகரி னுளத்தி னிருளகற்றப்
பொலிந்து வளர்சின் மயதீபம்
பகர வருளும் பரமகுரு
பதும மலர்மென் பதங்காப்பாம். க

---

240 சின்மய தீபிகை என்னும் இந்த ஞானநூல் இன்றைக்கு 74 வருஷங்கட்குமுன், பிங்கள௵ கார்த்திகைமீ-ல் சுவாமிகளால் பரிசோதித்து முதற் பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கிறது. மேலும், இன்றைக்கு 80 வருஷங்கட்குமுன், விரோதிகிருது ௵ ஐப்பசிமீ-ல் ஒழிவிலொடுக்கத்தைப் பரிசோதித்து முதற் பதிப்பாகச் சுவாமிகள் அச்சிட்டதற்குத் தூண்டுகோலாகவிருந்த புண்ணிய புருஷர் மண்ணிப்பாக்கம்-சபாபதி முதலியார் என்பவரே, பாக்குப்பேட்டை - மதுரை முதலியாரோடுகூட, இந்த நூலும் சுவாமிகளைக் கொண்டு அச்சேறுவதற்குக் காரணராய் இருந்திருக்கிறார் என்று தெரிகிறது. ஒழிவிலொடுக்கப் பாயிரத்திற்கும் உரைக்கும் சுவாமிகள் எழுதி அச்சிட்ட விருத்தி உரையும் குறிப்புகளும், சுவாமிகளால் 76 வருஷங்கட்குமுன் நூற்பெயரிலக்கணம் வழிபடு கடவுள் வணக்கப்பாட்டுரை, நூற்கு மேற்கோள் முதலிய சிறப்பினங்களோடு முதற் பதிப்பாகப் பரிசோதித்து அச்சிடப்பட்ட தொண்டமண்டல சதகமும் திருவருட்பா ௯-வது உரைப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை அங்குக் கண்டு தெளிக. தெரிந்தவரையில், சுவாமிகள் கடைசி முறையாக அச்சிற் பதிப்பித்தது இந்த அரிய ஞான நூல் தான். இந்நூலை இயற்றிய

சீரார் மவுனந் திகழ்சுடராய்த்
திகழு மொளியாய்ச் சின்மயமாய்ப்
பாரா ருயிரின் பரமநிலை
பதிந்தா னந்த முற்றுநிதம்
பேரா தருளுங் குருதிருத்தாள்
பெற்றே மயக்கப் பிணக்கறுத்து
வாரா வின்பக் கடல்பருகி
வாழ்வோ ரிணைத்தாள் வாழ்த்துவனே. உ

பொருவேல் விழியொண் பொன்றிதலை
பொலிந்த குரும்பை முலைமங்கைப்
பருவ மிசைந்த மடமயிலைப்
பரிவா யணையும் பருமயக்கிற்
றிரியும் விடர்கொக் கோகவிதந்
தேடி யுணர்வா ரெனப்பரம
குருவின் மலர்த்தாள் வேண்டுபவர்
கொள்வா ரிந்நூற் குறிப்பறிந்தே. ங

தேசோ மயமா மிறையியற்றுஞ்
செய்கை யானுந் துரியநிறை
யாசா னருள்பெற் றதனாலு
மினர் பழக்கத் தானுமென்னுட்

---

ஆசிரியரது பெயர் முதலிய எந்தத் தகவலும் சுவாமிகளது பதிப்பில் காணப்படாததால், அவை அக்காலத்திலேயே மறைந்தன போலும். ஆனால் சுவாமிகளது பதிப்பையே பின்பற்றிப் பதித்ததாய்க் கூறும் இந்த நூலின் 1907-ம் வருஷப் பதிப்பில் இதன் ஆசிரியர் விருத்தாசலம் குமார தேவ சுவாமிகளாதீனம் முத்தைய சுவாமிகள் என்று கண்டிருக்கிறது. இதன் உண்மையை ஆராய்ந்து கொள்க. மேற்சொன்ன வகையில் சுவாமிகளது சம்பந்தம் இந்த நூற்கு ஏற்பட்டிருப்பதாலும், இது சன்மார்க்க சாதகர்களுக்குப் பெரும்பயன் அளிக்குமென்று கருதப்படுவதாலும், திருவருளால் கிடைத்த சுவாமிகளது முதற்பதிப்பின் ஒரு பிரதியைக் கொண்டே இந் நூலை இப் பகுதியில் அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறது.

கூசா துதித்த விந்நூலின்
குறிகண் டமர்ந்த குணத்தோர்கள்
பேசா ராகிக் குருபதத்தைப்
பெறுவா ரின்பம் பெறுவாரே. ௯

பாலர் மழலை மொழிகேட்டுப்
பாகோ டமுதங் கலந்துண்டாற்
போல மகிழ்ந்தா னந்தமிகப்
பொங்குந் தாயுண் மையையறிந்து
ஞால மதிலிச் சிறுவனுரை
நன்று நன்றென் றகமகிழ்ந்து
சால வருளா திருப்பாரோ
சற்சிற் சுகத்திற் சார்ந்தோரே. ௰

## நூல்

### வேறு

அருமறையின் சிரப்பொருளா யண்டபகி
ரண்டமுமா யமல மோனத்
தொருபொருளாய்ப் பலவிதமா யுணர்வரிய
பேரொளியி னுண்மை யாகும்
பெருவெளிகண் டானந்தம் பெறுதற்குக்
குருபதத்தைப் பெறுதல் வேண்டி
யிருளறவே மலம்விளக்கு நெஞ்சையழைத்
தறிவுரைத்த வியல்பு சொல்வாம். ௧

பரஞ்சுடராய்ச் சின்மயமாய்ப் பரம்பொருளா
யிலகுகின்ற பரம சோதி
நிரஞ்சனனும் விஞ்சைகற்றோ னியற்றுமிந்த்ர
ஜாலமெனு நிலத்தின் வண்மை
தெரிந்திதனை யகற்றாமற் கண்டபல
பொருட்காகச் சிந்தை செய்து
திரிந்தனையே நெஞ்சேநீ யென்றறிவாய்
பரமவெளி தேடு மாறே. ௨

எங்குநிறைந் திலகியடி முடிநடுவா
யெப்பொருட்கு மிறையா மென்னும்
பங்கமிலாச் சிறுபாலன் மணல்வீடு
விளையாட்டாம் பாரின் வாழ்வை
யிங்குநிலை யெனமதிப்ப தொழிந்துகுரு
பதமலரி னிச்சை மேவிக்
கங்குல்பக லற்றவிடத் திருந்துசுகங்
காண்பாயோ கடிய நெஞ்சே. ௩

தேனினருஞ் சுவையாகித் திகழ்மலரின்
மணமாகித் தெருளு மாகி
வானிறைந்த வெளிமருவி யுயிர்க்குயிராய்த்
துரியநிறை வயங்குஞ் சோதிக்
கோனெனுநற் கூத்தில்வல்லோன் கோதறவாட்
டியபாவைக் கூத்தை நம்பி
நானெனுமா ணவத்தோடு நாட்கழித்து
நெஞ்சேநீ நலிவுற் றாயே. ௪

வருக்கமுறச் சொற்பனத்திற் கண்டதெலா
நிலையென்றே மதிப்பார் போலுந்
திருக்கமல நதிப்புனலென் றருஞ்சுராங்கண்
டோடிமறி திகைத்தல் போலும்
பெருக்கமுற்றே யழிவாழ்வை வாழ்வென்னும்
பேதைமையைப் பிரித்த றுத்துக்
கரைத்துவிடா தலைந்தாயென் றறிவுரைக்க
நெஞ்சமினிக் கனன்று கூறும். ௫

மாயமெனு மாசையற வல்லமைபெற்
றிடுமறிவே மண்ணின் மாழைச்
சீயமிரு புறந்தாங்கு மாசனத்தில்
வீற்றிருந்து செங்கோ லோச்சி
நாயகனு யழியாத வாழ்வுடைய
மன்னனென்ன நாளும் வாழ
நேயமிக வுற்றேனஃ தடைவனென
வறிவுமினி நிகழ்த்து மன்றே. ௬

நிலவுமிழுந் தனிக்குடைக்கீ ழரசாண்டு
நோலர்க ணெருங்கிப் போற்றப்
பலவிதமாப் படைபுடைசூழ்ந் திடக்களிற்றின்
பிடரியொளிர் பரிதி யென்ன
விலகுகின்றோ ரோடேந்தி யிரந்தமன்ன
ரெண்ணிலா ரென்ற றிந்தும்
உலகுதனி லாசையுற்ற நெஞ்சேநீ
யென்றிதனை யுணரு மாறே. எ

வாரிதிசூழ் புவிதனையே தன்னதென
மதித்தாண்டு மாண்ட மன்னர்
பாரினிலுண் மணனிகர்ப்பா ரெனவுரைக்கும்
பழமொழிபட் டாங்கு கேட்டுந்
தாரிலங்குந் தாமமுடித் தரணிபர்கண்
முதலானோர் தளர்ந்து தேகஞ்
சீரறவே செத்துமண்ணாஞ் செயலறிந்தும்
புவிமயக்கிற் சேர்ந்தாய் நெஞ்சே. அ

இரவுதனிற் கூத்தாடு மவைநோர
மிவ்வாழ்வை யிருக்கு மென்றே
கருதிமிக வாசையுற்றாய் காசினியெ
லாங்குடைக்கீழ்க் காத்தல் போலக்
குரைகடல்சூ ழெழுதீவுக் காசைகொள்ளும்
பாழ்நெஞ்சே குருவின் றாளிற்
சரணமென வடைவதென்று புவிமயக்கிற்
சிக்கிநொந்து தவிக்கின் றாயே. கூ

வாங்குகடல் சூழ்புவியைப் பொதுவறவே
யாண்டுமன மகிழ்ந்து சீர்த்தி
யோங்கிவளம் பெற்றிருந்துங் கடல்கடக்க
வோடிடினு மோடு கையிற்
றாங்கியிரந் துண்டிருந்து மொருசாணி
னுதரபசி தணிக்க நாளும்
ஏங்குவதா லுள்ளதுவே போதுமெனி
லாசையறு மிணங்காய் நெஞ்சே. க0

ஆசையெனு மழுக்கதன்மே லடைந்திருந்தாற்
பரமகுரு வருணீ ராலே
மாசறவே கழுவாமன் மலமிகுத்த
வாழ்க்கையெனு மண்டு சேற்றைப்
பூசியதி லழுந்திநித முழல்கின்றாய்
பாழ்நெஞ்சே பொங்கு மாசை
நாசமுறக் கருதிநிலை நாடாம
னலிந்தனையே நவிலக் கேண்மோ. கக

உன்னுடைய வாழ்வுதனக் குயர்ந்தோரைக்
கண்டுபற்றா யுன்னி யுன்னி
யன்னபடி வாழவென்றாற் சாமளவு
மலைவுற்றே யழன்று வாடி
யின்னலனு பவித்திடுவாய் நெஞ்சேநீ
சங்கற்ப மிகழ்ந்தே யுன்றன்
பொன்னிலகு வாழ்வுதனிற் றனித்தோரை
யெண்ணிமகிழ் புரிந்தி டாயே. கஉ

வண்டறவே யுனக்கமைத்த தல்லாம
லலைந்தாலும் வாரா தென்று
கண்டிருந்து மலைந்தனையே யெனவுரைக்க
நெஞ்சகமுங் கருதிக் கூறும்
உண்டுடுத்துச் சுற்றமுட னன்பாக
வாழ்வதுவே யுலகி லின்பங்
கொண்டதன்மே லாசையுற்றே னெனவறிவு
சுற்றமது குழையக் கூறும். கங

கனகமிகும் பெருவாழ்வு சிறந்தவரைக்
கண்டோர்கள் கலந்து கூடித்
தனதுடைய சுற்றமென மகளைமணம்
புணர்ந்திடவே தருவார் வாழ்க்கைக்
கனமதுகெட் டிடிற்பெற்றோர் பிறந்தோரு
மிகழ்ந்தவிதங் கண்டும் பற்றாய்த்
தினமவரைச் சுற்றமெனத் தியங்கினையே
நெஞ்சகமே செப்பக் கேண்மோ. கச

பழுத்தமரந் தனிற்பறவை நிறைந்திருந்து
பழமோயப் பறந்த தேபோற்
கொழித்தநிதி சிறுத்தவுடன் சுற்றமகன்
றிடுமெல்லாற் கூடு மோமண்
வழுத்தமன்னர் முடிதாழப் புவியாண்டோ
ரிரந்துண்டு வாடும் போதில்
அழுத்தமுட னுதரித்த சுற்றமுண்டோ
நிலையற்றே யலைந்த நெஞ்சே. கரு

தந்தையன்னை சுற்றமொடு தனயர்களு
மடந்தையருந் தாரணி தன்னிற்
சுந்தரமாய் நெருங்கியிடப் புவியாளப்
பெற்றாலுஞ் சொல்லொ ணாத
வந்தமடி நடுவாகு மருண்மவுனப்
பாஞ்சுடரி னமைப்பு நீங்கி
யிந்தவுட லிறந்திடும்போ தெவராலென்
னிதம்பெறுவா யேழை நெஞ்சே. கசு

குலமென்றுஞ் சுற்றமென்று மகவென்று
மனைவியென்றுங் கூட்ட மெல்லாம்
அலமந்த கற்பனையா லல்கலுற்ற
தல்லாம லாவ துண்டோ
மலமென்ற மாயையிதி லெவரிருந்தே
னெவாழிந்தென் மடமை நெஞ்சே
பலனுண்டோ சுற்றமதாற் பரமசுக
மடைவதுண்டோ பகர்ந்தி டாயே. கஎ

அத்துவித நிலையாகிப் பூரணமாய்
நிட்களமா யறிவாய் மோன
தத்துவமாய்ச் சுழுமுனையிற் கற்பூர
தீபமெனச் சார்ந்தே யோங்கு
நித்தியத்தைச் சுற்றமென நெருங்கியதிற்
சேராம னில்லா வாழ்வை
யொத்தபெருஞ் சுற்றமென வலைந்தனையே
யெனநெஞ்ச முரைக்கு மன்றே. கஅ

என்னுடைய குலத்தோரைச் சுற்றமல
வெனவுரைத்தே யிகழ்ந்தாய் மாந்தர்
சொன்னமொழி புகழ்வேண்டிற் சுற்றமடை
கெனவிருப்பச் சுற்றந் தன்னை
யின்னமிது நிலையல்ல வெனத்துறந்தாற்
புகழ்வாரார் செப்பு மென்ற
தன்னிகரி றீமைநெஞ்சுக் கெதிராக
வறிவுமொழி சாற்று மம்மா. கக

பெருமையொடு புகழ்வேண்டிற் பொருள்வேண்டும்
பொருளீட்டிப் பேண வென்றால்
அருமைகெடும் படிச்சிறியோர்க் காளாகி
யேவல்புரிந் தலைந்து நொந்தே
இருவகைக்கு மருண்டுபொரு ளீட்டியிசை
படைப்பதுவா யிசையு மற்றப்
பெரும்புகழ்கள் வருமுன்னம் வருஞ்சிறுமை
யறிந்திலையோ பேதை நெஞ்சே. உ0

பரமகுரு வருணிலையிற் பிணம்போலக்
கிடந்துசகப் பாங்கை நீங்கி
யுரமுடனே சுகவடிவாய்க் கிடப்பதல்லா
லிப்புகழா லூக்க முண்டோ
பெருமயக்க முலகிலழுந் திடுமவர்வாய்ப்
புகழ்மிகவும் பெருமை யென்றே
வருமயக்கிற் சிக்கிநெஞ்சே யலைந்துழன்று
மடங்காமல் வாதுற் றாயே. உக

நில்லாத வாழ்வதனை நிலையென்று
சகமயக்கை நிசமென் றெண்ணிப்
பொல்லாத புகழ்வேண்டி வருத்தமுற்றாய்
நிலையதனாற் பொருந்த லாமோ
எல்லாருங் கண்டிடவே நாயேறி
யோர்பெருமை யெய்து மாறாற்
புல்லாண்மை யுள்ளநெஞ்சே புகழதனாற்
பலம்பெற்றுப் பொருந்த லாமே. உஉ

பிரியாத பேரன்பாற் புகழ்ந்தழைத்தாற்
பரமசுகம் பெறுவ தல்லாற்
பரியாசத் துடனிகழ்ந்து பழிகாரக்
கொலைக்கள்வன் பாவி யென்றுங்
கருதரிய கோளனிவ னெனப்புவியோ
ருரைத்ததனாற் காணோ ணாத
துரியநடு நிலையான குருவருடா
னகன்றிடுமோ சொல்லாய் நெஞ்சே. உ௩

பொய்யாகும் புகழதன்மே லாசைதனை
யொழிந்திடெனப் பொருந்தி நெஞ்சம்
மையாருங் கடற்புவியிற் சொந்தமதாய்
நிலைமைபெற மண்மே லிச்சை
ஐயாவென் றனைவாட்டு தெனமண்ணி
லாசையுற்றா லதிலே நொந்து
மெய்யான தறியாம லலைவாயென்
றறிவுமினி விளம்பு மன்றே. உ௪

குருதிதசை நரம்பெலும்பு தோல்குடல்சீ
நிணங்களெனுங் கூட்டங் கூடி
மருவுபுழுக் கிடமாகு மிவ்வுடற்குச்
சொந்தமதா மண்ணை வேண்டித்
திரியலுற்றா யுடன்மாண்டே யெவ்விதமு
மண்ணாகச் சேரு மென்றே
கருதிநிலை பெற்றிலையே மண்மனையே
சொந்தமெனக் கவரு நெஞ்சே. உ௫

புவிநிரம்பி நித்தியநின் மலவடிவாய்
நிர்க்குணமாய்ப் பொலிந்து மேலாய்த்
தவநெறியாய்ச் சமயமெலாந் தானாகு
மிறைநிலையாந் தடத்தந் தன்னிற்
குவியவுநீ சொக்கியது சொந்தமெனக்
குருவருளைக் குறித்தி டாமல்
அவனிதனின் மண்மனைமே லாசையுற்றா
யெனநெஞ்ச மறையு மன்றே. உ௬

ஓதரிய வறுமையுறுங் காலமெய்தி
னாலுதவ வோங்கு செம்பொன்
ஆதாமாப் புதைக்கவென்ற நெஞ்சையிகழ்ந்
தறிவுரைக்கு மமல மோனப்
பூதாசிற் செயலையன் றிச் சீருளவோ
விரவிமதி பொருந்து நாளிற்
சீதமதி நலம்பெருகக் குடசலத்தி
லிந்துசிறை செய்த தாமே. ௨௭

தீவினைநல் வினையனைத்துந் தானாகி
நின்றதொரு தெய்வந் தானே
மேவியொரு தன்வறுமைத் துயரமுறத்
திருவுளத்தில் விரும்புங் காலத்
தாவியதோர் துன்பமுற்றுத் தளர்வதல்லாற்
சுகமடையத் தகுமோ வீட்டில்
ஆவலுடன் புதைத்தபொரு ளானையுண்ட
விளங்கனிய தாகு நெஞ்சே. ௨௮

இனிப்பொசிக்க வேண்டுமென வாசையிலா
தீப்பொசிப்ப தென்ன நீயுந்
தனிப்பொருளி னமைப்பதனாற் கிட்டுவதை
யுண்டுபசி தணித்தி டாமல்
அனிச்சமலர் வனந்தோறு மலைந்துகொடுந்
தேனீக்க ளருந்தே னீட்டிக்
குனித்தசிலை வேடனுக்குக் கொடுப்பதுபோற்
பொருளீட்டக் குறித்தாய் நெஞ்சே ௨௯

காசினியில் வெறுப்புடனே கடனடுவில்
விட்டிடினுங் கனகச் செம்பொன்
நேசமுற வுரிமையொடு முனைச்சேரு
முனக்குரித்தாய் நெருங்குங் காலை
ஆசையுடன் பொருள்புதைத்துப் பொன்காத்த
பூதமென வருகி னின்றும்
நாசமுறுங் காலம்வந்தா லழிந்திடுமென்
றுரைக்கநெஞ்சு நவில்வ தன்றே. ௩௦

குடும்பமெனுஞ் சமுசாரக் கூட்டமஃ
தென்றனையே குறித்து நம்பித்
திடம்பெறலா மெனவிருக்க வதுதனையே
காக்கநிதந் திகைத்தே னென்றே
யடர்ந்தநெஞ்ச முரைத்திடவே சமுசாரக்
கடலதனி லழுந்தித் துன்பம்
படர்ந்ததனை தனைத்தனைத்துக் கொண்டாயென்
றறிவுமினிப் பகரு மன்றே. ௩௧

அடுத்தவரைக் காக்கநித மல்கலுற்றே
னென்றநெஞ்சே யாவி மாண்டு
படுத்துவிடிற் காப்பாயோ வெனவிருக்கு
மளவவரைப் பரிந்து காக்கத்
தொடுத்தாசை யுற்றெனென வறிவுரைக்கும்
பிணிதொடரி னலதோர் வேளைக்
கெடுத்தாசர் சிறையிடினுங் காப்பாயோ
வெனநெஞ்சங் கிளத்து மன்றே. ௩௨

வக்கணையாய் வெகுசமர்த்தா யுரைத்தாயென்
குடும்பமதை வண்மை யாகப்
பக்குவமாய்க் காக்கவெனை யல்லாம
லொருவருண்டோ பகரா யென்ன
அக்கணமே யதிசயித்தே யறிவுரைக்கு
மலரின்மண மாக வெங்கும்
புக்குவுயிர் களைக்காக்க விறையிருப்ப
தறியாமற் புகல்கின் றாயே. ௩௩

கோபுரத்தி லமைத்துவைத்த பொற்பாவை
கோபுரந்தோட் கொண்டு தாங்கிச்
சோபமுற்ற தெனக்கூனி யிருப்பதொக்கு
நெஞ்சேநீ சொன்ன நீர்மை
தாபரத்தோ டேனையமற் றுயிர்களையுங்
காத்துநிலைச் சார்பு நல்கத்
தீபவொளி யெனத்தேசோ மயமிருப்ப
தறியாமற் றிகைக்கின் றாயே. ௩௪

பருத்தமலைக் குட்டோரை யுண்டாக்கி
யாகாரம் பருக நல்கி
வருத்தமறக் காத்தளிக்கு நீட்களமுன்
குடும்பமதை வளர்க்கு மென்று
கருத்தினினைந் திருக்காமற் காசினியி
லையுறவாற் கலங்கி நொந்து
செருச்செய்வார் போலடர்த்த துயர்க்காளு
யென்றிடவே செப்பு நெஞ்சம். ரு௫

எனையடுத்த பேர்களுக்கா வேதமுற்று
வருந்துவதை யிகழ்ந்தீர் மெத்தக்
கனதனத்தை யுடையோரை யடுத்தவரா
லியான்பிழைக்கக் கருத்தி லுற்றுத்
தினமலைந்தே னென்கின்ற நெஞ்சமதைக்
குறித்தறிவு செப்பு முன்றன்
இனமதெலாஞ் சுத்தமுற வெதுவுரைத்துந்
தெரிந்திலையே யேழை நெஞ்சே. ரு௬

மன்னுமெழிற் பசுங்கிள்ளை யிலவதனைக்
காத்துமன மலைந்த தென்னப்
பொன்னுடையோர் தமைக்காத்துப் புல்லறிவோ
ரலைந்துலைந்து போவர் நாளும்
தன்னிகரி லாவறிவோர் சற்குருவின்
பதம்போற்றித் தனித்தா னந்த
இன்னமுத முண்பரென வறிவுரைக்க
நெஞ்சமினி யேங்கிக் கூறும். ரு௭

பொருளுடைய வேந்தர்தமை யடுப்பதனை
யிகழ்ந்தீரியான் பொசிப்ப தற்கே
அருளுடனல் லன்னமது நல்குவரா
ரெனநெஞ்ச மறைந்த காலை
உரமறிந்தா யில்லைவன விலங்கினுக்கும்
பறவைமுத லுயிர்கட் கெல்லாம்
பருகவுண வருளுமந்த நிலையறியா
யென்றறிவு பகரு மன்றே. ரு௮

ஆவுதனக் கமுதளித்து வளர்த்துமுலை
குயிர்தனக்கு மன்பா யன்னம்
பருகவருள் புரிந்துகடற் பலவுயிர்க்கு
முணவருளிப் பண்பாய் நின்று
தருநெருங்கும் பருவனத்தின் மாந்தனக்குந்
தாரகமாய்த் தண்ணீர் நல்கி
அருமையொடு வளர்த்திடுநற் பொருளிருக்க
வழன்றனையே யலையு நெஞ்சே. ௫௯

முட்டையினுட் குஞ்சினுக்கு மமுதீந்து
வளர்த்துமொய்த்த தளிர்க்குச் சாயந்
திட்டமுட னிட்டுவளர் தெங்கினுக்கு
ணீரருளிச் சேணீர் மீனின்
குட்டிதனக் குள்ளிருக்கு முட்டனக்குக்
கூர்மைதனைக் கொடுத்து மோன
வெட்டவெளி யாயபரஞ் சுடரிருக்க
வீணாக மெலிந்தாய் நெஞ்சே. ௬௦

கரையற்ற வுவராழிக் காசினியைக்
காக்கவைத்துக் காரின் கூட்டம்
விரைவாகப் பொழிந்துலகு செழித்திடவே
யமைத்துவைத்து வெளியி னித்தம்
இரவிமதி கதிமாறா திலங்கவைத்து
மலப்பீற்ற விருக்குங் கூட்டிற்
பரிவாக வைம்பூதம் வாழவைத்த
பொருளிருக்கப் பயமென் னெஞ்சே. ௬௧

விந்துவெனு நீரதனை யுருவாக்கிக்
கருப்பமதில் விரும்பிக் காத்துத்
தந்திரமாப் புவியில்வரத் தயவுபுரிந்
திவ்வளவுந் தனித்துக் காத்த
அந்தமிலா விறையிருக்க வலைகின்றா
யென்றிடவே யறையும் பாசச்
சிந்தையற்றே னுதாபசிக் கென்செய்வே
னெனவறிவு செப்பு மன்றே. ௬௨

காசினியி லுள்ளபல வகங்களெலாம்
வாழ்ந்திருக்கக் கருதும் வேளை
நேசமற்ற பரிகலங்க ளிருக்கவருஞ்
சுவைக்கனிகாய் நெருங்கி யோங்கும்
பாசிலையின் மாங்கடலைத் திருக்கநீர்
படர்ந்திருக்கப் பரிவா யானும்
பூசிக்கும் பரமகுரு வருளிருக்கத்
தவிப்பதென்னே புகலாய் நெஞ்சே. ௨௩

அத்துவிதப் பரமகுரு வருளிருக்கப்
பொருளிருக்க வன்பா யாழுஞ்
சுத்தமுற வுடுத்துதற்கு விரத்தியெனுந்
தூசிருக்கத் துயில்வ தற்கே
அத்தமுடை யோரமைத்த புறந்திண்ணை
பலவிருக்க வகிலந் தன்னில்
எத்தகைமைச் சாதியினு மிரந்துண்ணத்
துணிவிருக்க விளைப்ப தென்னே. ௨௪

திருவோடா நிதியிருக்கத் திகைப்பதென்னே
வென்றிடத்தீஞ் சுவையா யன்னம்
பரிவாக வீகுவரோ வெனச்சுவைக
ளுவளவே பண்புற் றப்பால்
விரைவாக வசக்கியமா மலமாவ
தறிந்திலையோ வெனவே வண்ணம்
பிரிவான பேதமுள தெனவறிவு
மையமறப் பேசு மன்றே. ௨௫

சாதிதனி லுயர்ந்தோர்க ளுடலன்ன
மயமென்னிற் றாழ்ந்தோர்க் கந்த
நீதியா மலதுசயி தன்னியமென்
றிடிலதுவாய் நிற்கு மென்னிற்
பேதமுறு மோக்னக பாத்திரத்து
நீரினிலே பிருதி தோன்றுஞ்
சோதிகதி ரவன்வேறே வங்கணத்திற்
பிருதியுற்ற சுடர்தான் வேறே. ௨௬

கொக்கதனிற் குக்குடந்தான் கூடியிடி
லண்டமது குறிக்கு மோசொற்
பக்குவத்திற் கடைச்சியரைப் பாங்காக
வேதியர்கள் புரிந்து கூடிற்
றக்கவிந்து தரியாதோ சுடலைதனிற்
சுடுநாற்றந் தான்வே றுண்டோ
மிக்கவுரை யாதியந்தம் பேதமுண்டோ
வெனநெஞ்சம் விளம்பு மன்றே. ௨௭

புலன்பொறிகள் வேண்டியதற் காசையுற்றே
னெனவறிவு புகலுந் தும்பி
மலைந்துமிக நாசியினான் மான்காதி
னான்மீன்கள் வாயி னானும்
அலர்ந்தகனற் கண்டவிட்டிற் கண்ணானுங்
கரிபரிச மடைத லானும்
பலன்பெறவே நினைந்திறந்த வென்றிடவே
நெஞ்சமினிப் பகரு மன்றே. ௨௮

எப்பொழுதும் பொறிபுலனுக் கேற்றசுபா
வீகமதை யிருத்து நேர்மை
செப்புமென வறிவுரைக்கு மனமேயுன்
விருத்தியதிற் சேர்ந்த தாலே
அப்புலன்தான் களங்கமுற லாச்சந்த
விருத்தியினை யடக்கிக் கட்டித்
தப்பவிடா திருந்திடவே சகமயக்கிற்
பொறிபுலன்கள் சாரா வன்றே. ௨௯

மனம்வியந்து விருத்திதனை யடக்குவதெப்
படியெனவே மற்றொன் றைத்தா
னினைந்ததனி லழுந்துமப்போ தெதிர்தோன்றும்
பொருளுணரா நெறிபோ னீயும்
கனத்தநினை வினைப்பரம குருபதத்தி
லுறப்புலன்கள் கட்டா யென்ன
எனைப்புரக்க மகவாசைக் கிசைந்தெனென்ற
நெஞ்சையிகழ்ந் தியம்பு மன்றே. ௩௰

நதிதனிலே விரைந்துவரு நீருடனம்
மணலுறவாய் நம்பி நாளும்
அதிகவுற வெனநினைந்த தொக்குமக
வாசைமிக வன்ப தாமோ
ததிகடைந்த வெண்ணெய்தனை யம்மோரிற்
கலந்துவிடிற் சார்கி லாபோற்
சதியிசைந்த நெஞ்சேநற் றந்தையுமக்
களுங்கலந்துஞ் சார்கி லாரே. ௫௧

அந்தியத்தின் மகவுதவி வேண்டுமென
வாசையுற்றே யலைந்தாய் மாயப்
பந்தமல்ல வெவரிருந்தென் னுயிரொடுங்கிப்
புலன்கலங்கிப் பதைக்கும் போது
சுந்தரசிற் பரமகுரு சொன்னிலைபோன்
மயக்கறுக்குந் துணிவுண் டாமோ
சிந்தையுற்ற நெஞ்சேயென் றறிவுரைக்க
நெஞ்சமினிச் செப்பு மன்றே. ௫௨

விண்ணிலங்கு மதிமுகமும் விற்புதலுங்
கொல்கொலைக்கு வேல்வா ளுனுங்
கண்ணிதென வரிபரந்து கடைகிழிக்கு
மதர்விழியுங் காயக் காத
லெண்ணருஞ்சன் னதமூட்டு மிளமுலையுங்
குறுநகையு மிலங்க வொல்கும்
வண்ணமயி லையுங்கூட மறக்கவென்பி
ரோவெனவே வழங்க லுற்றும். ௫௩

நிலவொழுகு மதிமுகத்தி னெடுமூக்கு
நீண்டவிழி நிமையு முத்தென்
றிலகுமிள நகையதனை மறைக்குமித
ழையுங்குறித்தே யீர்ந்து பார்க்கி
லலமிகுத்த வாசைதரு மரிவைமுகத்
தழகதனை யறிய லாகு
முலையதனை மூடியதோ லகன்றிடிலம்
முலையழகு முணர்வாய் நெஞ்சே. ௫௪

கன்னியர்தம் மொளிர்முகத்தைக் கண்டகண்ணால்
வெண்டலையைக் கருதி யூன்றி
யுன்னியதி னுறுப்பறிந்து பெண்முகமு
மிப்படியொன் றென்ன வோர்ந்து
மின்னலெனப் பேசுமுடன் மலக்கூடு
வழியுமிது மின்போ னெஞ்சே
பொன்னின்மலை யென்றமுலை பொதிந்ததசைக்
கட்டியெனப் பொருந்தி டாயே. ௫௫

கள்ளொழுகு மலர்சூட்டிக் குழனாற்றந்
தனைமாற்றிக் களபச் சேற்றை
யள்ளியவண் மீதணிந்தே யுடனாற்ற
மாற்றிவைத்தா யவண்முன் னின்று
வெள்ளெலும்பைக் காட்டிநகைத் திடமயங்கி
யுடன்மறந்து வேட்கை மிஞ்சிக்
கள்ளமலத் துடன்கலந்த நெஞ்சேநீ
யவளுடலைக் கருதி வாயே. ௫௬

நீருண்ட கட்டிதனை வேலென்றுங்
கயலென்று நெடுங்க ணென்றுந்
தாரணியெ லாமறியு மென்பைமுத்து
நகையென்றுந் தசையின் கண்டம்
வாருருவித் தத்தியெழு முலையென்றுந்
தோலுதட்டில் வரும்பல் லூத்தை
சேருமெச்சி லமுதமென்றே குருதிகுழி
யின்பமதிற் றிகைத்தாய் நெஞ்சே. ௫௭

துரியநிறைப் பரமகுரு சொல்லியநன்
னிலைமயக்கிற் சொக்கி நாளும்
பிரமமணிச் சுடர்மலையிற் கண்ணூன்றிப்
பரமசுகம் பெற்று வாழக்
கருதிநகை யடங்காமற் கன்னியருக்
காளாகிக் கலங்கி நொந்து
குருதியொடு புன்னீர்க ளொழுகுகுழி
யின்பமதைக் குறித்தாய் நெஞ்சே. ௫௮

பூரணத்தி னிலைநிதமும் புகன்றிருக்கப்
பூவையரைப் புகழ்ந்தா யென்றே
சீருரைந்த வறிவுரைக்கத் தெரிவையர்க
ணிலையெனக்குத் தெரிந்து மென்ன
காரணமோ வத்துவிதக் காரியநீ
ருரைக்குமிந்தக் கணத்தி லேயு
மாரமுலை மீதாசை யாகுதென்செய்
வேனெனவே யறிவு கூறும். ௫௯

நாடிநரம் பெலும்புதசை தோற்குருதி
நிணம்பொதிந்து நாறற் பீற்றற்
கூடியதிற் புழுக்குதிக்குங் கும்பியெனு
மலப்பாண்டக் கூட்டை நாளுந்
தேடரிய பேரழகா மெமதுடலென்
றுசைமிகச் சிறந்த தாலே
வாடுமிடை யாருடன்மே லாசையுற்று
யுன்னுடலை மதித்தி லாயே. ௬0

பசியறவே புசிப்பதற்கா யாடீர்ந்தே
யுரிக்குமவர் பாலிற் சென்று
வசையறவே யசங்கிதத்தை மறந்துநினை
வதிலூன்றி வளமை பார்க்கிற்
றசையெலும்பு குடலீர னிணங்குருதி
யிருப்பதுவைத் தன்றே கத்தும்
பிசகிலா திப்படியே யிருக்குதெனிற்
பெண்ணாசை பெறுமோ நெஞ்சே. ௬௧

கத்திகாந் தவறிகாத் தரியதசை
தோனரம்பு காணக் கொய்தே
யத்திவெளி கண்டுதென வுரைப்பதன்றித்
தோற்கூடென் றகத்தெண் ணுமற்
சித்திரமா யழகுமணிப் பூணிலங்கத்
தினங்கலவை திமிர்ந்து வாசக்
கொத்துமலர்த் தாரணிந்தே யிறுமாப்பாய்ப்
பெண்மயக்கங் கொண்டாய் நெஞ்சே. ௬௨

பிணங்கள்சுடுஞ் சுடுகாட்டுக் கேகிதனி
யாகவொரு பிணத்தின் பாற்சென்
றிணங்கிபராப் படங்கிடவே யுணர்ந்தறிவாய்ப்
பிணவுறுப்பு மிசைந்த தோலுங்
கணங்கொணவை நிணமொழுகும் படிநாற
வேகுமதைக் கண்டே யெந்த
மணங்கொளூட றனைச்சுடினு மிவ்விதமா
மெனக்கருதி மதித்தி டாயோ. ௯௩

மங்கையர்க ளூடனிலையுந் தனதுடலின்
பெருநிலையு மதித்து நின்று
பங்கமற நானிறக்கப் படிந்துகுரு
வருணிலையிற் பதிந்த மிக்கோர்
கொங்கைமட மின்னார்கள் குவிமுலையின்
மயங்கிமனங் கொதியா ரென்று
சங்கையற நெஞ்சமதுக் குரைத்திடவே
பேசாதாற் சாற்ற லுற்றும். ௯௪

புலன்கலங்கி மனமயங்கி யறிவழிந்து
நிலைதளர்ந்து பொறியு மெத்த
வலம்வந்து மெய்தளர்ந்து கண்ணிருண்டு
வாய்குழறி யாவி நின்ற
நிலைகலங்கி மரணமுறும் வேதனையைப்
பாமறியு நிலையே யல்லாற்
பலரறிய வொண்ணாத மரணவத்தைத்
வருமுன்னம் படியாய் நெஞ்சே. ௯௫

குடம்பைதனி விருந்துபறந் தகன்றபுட்போ
லிவ்வுயிருங் குருதி தோய்ந்த
உடம்பதனை யகன்றுவிடு லிந்தவுடற்
போம்வழியே துரைப்பேன் பேய்க
ணடம்பயிலுஞ் சுடலைதனி னரிநாய்கள்
விருந்துண்டு நடிக்க நாள்க
ளடைந்திடுமுன் குருவருளை யணுகென்ன
நெஞ்சமுரை யறைய லுற்றும். ௯௬

திண்ணமிகு மென்றேகந் தனைநரிதின்
பதுங்கசமோ செப்பா யென்னப்
பெண்ணினொடு தந்தையன்னை சுற்றமுட
னாண்டவனும் பெற்ற சேயுங்
கண்ணினெதிர் சொந்தமென வாழ்வருயி
ரிழந்தவுடன் கழுகு நாயு
மெண்ணரிய புழுவுடன்மண் சொந்தமெனு
முடற்சொந்த மென்றாய் நெஞ்சே. ௬௭

ஆவியிறந் திடின்முன்னா ளணைந்திருந்த
வரிவையரு மகல நின்று
மேவிவிழி யாற்பார்க்கப் பயந்துபிண
மெனவொதுங்க மீறி நாய்கள்
தாவவெரி நரிக்கிரையாய்த் தரணிதனிற்
பலர்சுடலை சாரக் கண்டுங்
கூவியழு தழுதுகுரு வடியணுகி
லாயெனவே நெஞ்சங் கூறும். ௬௮

இந்தவுட லிறந்திடுமுன் னேகுரு
பதம்பணியா திருப்பே னோவென்
றந்தமுட னுரைத்திடவே யறிவுரைக்கும்
பாலகனா யஞ்ஞா னத்திற்
பந்தமுற்றாய் காளையுமாய்ப் பரத்தையருக்
காளானாய் பகைத்த மூப்பு
வந்தவுட னுடற்றளர்வாய் நிலையறிவ
தென்றுநெஞ்சே வாதுற் றாயே. ௬௯

எனவுரைக்க நெஞ்சமது காளையெனும்
பருவமது வேகி னாலித்
தனமுதலே டணைவிளைக்குங் கவலையறும்
பிறகுகுரு தாட்கள் புற்றே
தினம்பணிந்து நிலைபெறுவே னெனவறிவு
செப்புமிடர் செறிந்தே துன்பக்
கனலடர வுடற்றளர்வ தன்றிபுவி
யாசைநிலை காண லாமோ. ௭௦

கவலையுற்றே யுடனடுங்கிக் கனபிணிமே
லாமூப்புக் காலந் தன்னைக்
குவலயத்திற் கவலையிலாக் காலமென
மூப்பதிலே குருவின் றுளைத்
தவமிசையிற் பெறுவனென வுரைத்தனைசித்
தங்குவியத் தகுமோ வுன்ற
னவையிலுட லிடைசாயா திருக்குமோ
கண்குறிமே னடுமோ நெஞ்சே. எக

இளமையெனும் பருவமதிற் சற்குருவைக்
கிட்டாம லிருந்து தேகந்
தளருமூது மூப்பதனிற் பெறுவனென
வுரைத்ததுமெய் தளர்ந்து நாளு
மிளமையற்ற தொண்ணூறு வயதுடையன்
மங்கைமண மிசைந்து கூடி
வளம்பெறுவே னென்றதொக்கு நெஞ்சேநீ
யுரைத்ததென வழங்க லுற்றும். எஉ

பாளைவிரி கமுகளைய கந்தரத்தாண்
மூலமயக்கம் பற்றி யுன்றன்
காளையெனும் பருவமது கழித்துவிடிற்
பின்னயர்வு கடியு மாசான்
றுளைநினைந் தானந்த பரவசமாய்
நாட்கழித்தாற் றளர்ந்து சாகும்
வேளையினு மானந்தக் களிகூரு
மிதிற்றுணியாய் விரைவி னெஞ்சே. எங

உன்னுடைய காளையெனு மிப்பருவந்
தனிற்குருதா ளுகந்தி டாமற்
கன்னியொடு பொன்புவிமேற் காதலுற்று
நெஞ்சகமே கலங்கி மெத்த
வின்னலனு பவித்தாயென் றிடநெஞ்ச
மியம்புமிந்தப் பருவ மேக
வின்னநெடு நாட்செல்லு மிதிற்பெறுவே
னெனவறிவு மியம்ப லுற்றும். எச

சிலையிரும்பை யுடலாகக் கொண்டோரு
மித்துணிவாய்ச் செப்பார் நீயும்
பலவிதமாய் மொழியலுற்றா யிப்பருவங்
கழியவெகு பகலுண் டென்றா
யலமிகுத்த நெஞ்சகமே யாவியிந்தத்
தோற்கூட்டி லனந்த கால
மிலகுமென நினைத்தனையோ வென்றறிவு
வுடனிலையை யியம்ப லுற்றாம். ௭௫

மங்குலிடு விற்புனலில் வருங்குமிழி
யெறிந்தசிலை மாறாத் தீயிற்
றங்குமென வைத்தசில வெண்ணெயொடு
மின்னலையுந் தாணி தன்னிற்
பங்கமிலா திருக்குமிது நித்தியமென்
றுரைத்தாலும் பருந்தோற் பீற்ற
லங்கமதி லுயிர்நிலையென் றாருரைப்பார்
நீயுரைத்தா யலைந்த நெஞ்சே. ௭௬

காத்திரத்தி னேற்றிருந்தா ரின்றிறந்தா
ரெனுமுலகைக் கருதிப் பார்த்தோர்
மாத்திரைப்போ தும்வாழ்வ தரிதெனவே
யுணர்ந்திதனுண் மௌன மூறுங்
கோத்திரத்தி னுச்சியிற்சென் றமுதருந்த
நாட்கழித்திற் குறித்தே யன்பப்
பாத்திரமா யலையலுற்றாய் நெஞ்சேயென்
றறிவுமினிப் பகா லுற்றாம். ௭௭

இனைப்பொழுது வாழ்வதரி தென்றறிந்த
தெருளுடையோர் சிந்தை தன்னி
னினைத்தவுட னனந்த நிலையணுகிப்
பேதமற நிற்பர் நீயுங்
கனத்தபெருங் காணுதிக் கனலவியக்
குருவருளைக் கருதி மோன
தனத்தினைத்தே டாதிருந்து நாட்கழித்தா
யெனநெஞ்சஞ் சாற்று மம்மா. ௭௮

தேகமெனு முடலிறக்கு மென்றமொழி
நெஞ்சுணர்ந்து தேக னொந்து
சாகநெறி யிலதாயோ ருபாயமில்லை
யோவெனவே சாற்றக் கேட்டு
யூகமுற்ற நெஞ்சேயென் றறிவுரைக்கு
நீர்க்குமிழி யொழிந்தி டாமற்
பாகமுடன் பூண்விசிக்க நினைந்தவனை
யொக்குமெனப் பர லுற்றும். ௭௯

அதுவிதுவென் றுணரறியாப் பொருளமைத்த
நாட்கழியி லண்டத் தோடு
மதிகதிரோ டேபூத மழியுமெனிற்
பெண்யோனி வழியே சிந்து
முதிரமுருண் டிட்டவுண்டை யாந்தேக
மலபாண்ட மொழிந்தி டாமற்
பதியவிருந் திடயூக முண்டாமோ
நெஞ்சகமே பகர்ந்தி டாயே. ௮௦

மெய்யெனவே யுரைக்குமிந்தப் புழுக்கூட்டை
நம்பியிதின் மெலிந்தி டாமற்
பொய்யெனுமிவ் வுடலிறக்கு மென்பதனை
மறவாமற் பொருந்தி னுற்பின்
வையமெலா மழுந்தியதோ ராசையெனுங்
கடல்வற்றி வடியுந் துன்பஞ்
செய்யுமந்தக் கவலையெனுந் திரையோயும்
விரைவிலருள் தேடாய் நெஞ்சே. ௮௧

எனவுரைத்த மொழிகேட்ட நெஞ்சியம்பு
மெண்ணிறந்த சமயந் தன்னிற்
றனிப்பொருளுக் கன்பான சமயமியம்
பிடிலதனிற் சார்வே னென்ன
மனமயக்காய்ப் பரஞ்சுடரை வெகுவிதமாய்
வெவ்வேறாய் மதித்து நின்று
தினம்பணிவர் நிலையறியார் பேர்வேறாய்ப்
பேசிநெஞ்சே தியங்கு வாரே. ௮௨

கண்ணிரண்டு மில்லாதார் சிலர்கரியி
னுருவதனைக் காத்தா னீவித்
திண்ணமைந்த யானையுருத் தாங்கள் கண்ட
படியுரைத்துத் தியங்கு வார்போற்
சண்முகபல் சமயமுடை யோர்பரனைச்
சாற்றிதினந் தவித்து நோகுந்
தன்மையல்லாற் பரமிருக்கா திடமுண்டோ
வெனக்கருதித் தணிந்தி டாரே. அரு

வீதிதனில் விளையாடுஞ் சிறுபால
ரகமதனை விரும்பிச் செல்லும்
போதிலுயர் மாமதியைத் தங்கள்தங்க
ளுடன்வருகப் பொருந்து வார்போற்
காதலுற்ற சமயமெலா மெனதுனதென்
றேபரத்தைக் கருதித் தர்க்க
வாதமுட னுழல்வதல்லா லெவ்விடமு
மிறையிருக்கும் வளங்கா ணாரே. அஎ

எவர்களெதை யிறைஞ்சிடினும் பரஞ்சுடரே
யதிலிருப்ப தெனினு மெத்தக்
கவலையுறுஞ் சமயமதாற் பரமசுக
மடைவதற்குக் காணொ ணாது
தவமிசைந்த பரமகுரு நிலையிருக்கச்
சமயமதிற் சார்வ தென்னிற்
சுவையினிய வமுதிருக்க மாழ்கிடவே
கள்ளுண்ட தொக்கு நெஞ்சே. அஅ

இந்தவிதஞ் சமயநெறி யியம்பிடவே
நெஞ்சுரைக்கு மிறையைப் பூசை
யந்தமுடன் புரியநெறி யருளாயென்
றிடவறிவு மறையு மாசா
னுந்தனக்கே யருள்புரிந்தா லந்தநிலை
யிற்பாத்துக் குன்கண் ணென்னுங்
கந்தமல ரிணைச்சாத்தி யுளம்பதியப்
பணிந்துமருள் காண லாமே. அகூ

பூசைபுரி பவனுகி மலராகிப்
பலவாகிப் பூசை தன்னி
னேசமொடு மோதுகின்ற மந்திரமாத்
தெய்வமுமா நிட்க ளத்தைப்
பாசமுற்ற சமயநெறி கடந்தநிரா
மயகுருசொற் பதிந்தா னந்த
வாசையொடு பணிவதல்லால் வேறேயோர்
பூசைநெறி யறியே னெஞ்சே. அஎ

விண்ணினுக்கு விண்ணுகிப் பரவெளியாம்
பாஞ்சுடரை விரும்பிப் பூசை
பண்ணிநிற்கப் பரமகுரு நிலையலா
தில்லையெனப் பணிந்து கூறுங்
கண்ணின்மணி யெனுங்குருவி னடையாளங்
காட்டிலவர் கழலை யானுந்
திண்ணமிது பணிவனென நெஞ்சுரைக்க
வறிவுமினித் தேர்ந்து கூறும். அஅ

அத்துவிதப் பரமகுரு தனையறிவ
தரிதரிதே யவர்பா தத்திற்
பத்திபுரி சற்சனரை யடுத்தவரோ
டன்பாகப் பழகி னுற்பின்
முத்திபெறக் குருகாண்பா யெனவுரைக்க
வவர்குறிப்ப மொழியா யென்னச்
சித்தமதி லறிந்தமட்டுஞ் சற்சனர்தம்
பெருங்குணத்தைச் செப்ப லுற்றும். அகூ

பொய்யுலகந் தனிலழுந்தி மயக்கமுரு
ராசைதனிற் பொருந்தா ருள்ள
மையமுரு ருலகிலுயிர் தன்னுயிர்போ
லருள்புரிவா ராண்மை சொல்லார்
வையமதி லிருவகைக்கும் வாடார்கள்
மகிழார்கள் வருந்தார் நாளும்
துய்யபொலன் கமலமல ரெனவொருசீர்ப்
பட்டுநிதந் துலங்கு வாரே. கூ0

அண்டமெலாம் பொடியாக்க வருள்பெற்று
மாணவமா யறையார் தங்கள்
பெண்டுபிள்ளை சுற்றமதைப் பேணுமற்
பிரிந்துமுடற் பிரிந்து நின்று
கண்டுமன மகிழ்ந்துகுரு வருணிலையை
நாடியதிற் கலந்து நிற்குந்
தொண்டர்புரி பெருந்தகைமை துதிதுதித்த
நெஞ்சேயான் சொல்லொண் ணாதே. ௬௧

தேசிகனா ரங்கைகொடு போதித்த
பரமநிலை சேர்ந்தே மோன
வாசமல ரணைமீது வண்டெனவே
துயில்வோரில் வாழ்வுற் றாலும்
பாசமுறார் வரும்பொருண்மேற் போனபொரு
ளுக்கிரங்கி பதையார் வந்து
நேசமுறும் பொருள்வெறுக்கார் நின்மலவா
னந்தமது நிறைந்த மிக்கோர். ௬௨

சுவையினிதோ டுண்டுடுத்திச் சுகந்தமணிந்
தரிவையர்க டோளிற் சேர்ந்து
குவிகுலையைத் தழுவியணைந் திடுபொழுது
மிறைசெயலைக் குறிப்பர் வல்லோ
ரவைநடுவே மந்திரத்தோ ராவதனை
யாட்டமன மஞ்சா ரென்ன
நவைபுவியின் மயக்கறிந்து விலைமாத
ரெனப்பொருளை நண்ணு வாரே. ௬௩

தனதுடைய கொழுநரொடு கூடியணைந்
திடுபொழுதுந் தனது கும்பக்
கனதனத்தை ஈவியதோர் பிறபுருடன்
றனையணையக் கருது வாள்போற்
புனைமணிமே கலைமடவார் போகமதிற்
றோறோலைப் புல்லச் செய்த
தெனதுடைய பாஞ்சுடரோன் றிசைந்துகுரு
பதம்பெறுவோ ரிருப்பர் நெஞ்சே. ௬௪

பூசையெனும் வகைபுரியார் சாதிவரம்
படங்கார்கள் பொருந்தார் நேமந்
தேசமெனுங் காலமெனும் பகையுறவென்
றறியாமற் றிரிவ ராசை
நாசமுற வகையறிவார் சாதிதனிற்
பேதங்க ணாடார் நாளும்
பாசமிலாப் பாலர்பித்தர் பேயரெனத்
திரிவார்கள் பாராய் நெஞ்சே. ௬௫

எந்தனுடைச் சொந்தமிதென் றிரங்கார்கள்
யானெனதென் றிசையா ரெண்ணார்
பந்தமற்று நின்மலமாய்த் துக்கசுக
மொருவழியாய்ப் பார்ப்பர் பொங்கி
வந்தொருவன் றகர்த்தாலு மிறைசெயலைக்
குறிப்பதல்லால் வாய்பேசார்கள்
சிந்தையற வேதாந்தச் சித்தாந்த
சமமோனந் தெரிந்த மிக்கோர். ௬௬

ஞாலமொடு புனல்கனல்கா னண்ணரிய
வெளிபூத மைந்து நண்பாய்ச்
சீலமுடையோர்கயவ ரரசரொளி
யோர்வலியர் தீமை நன்மை
சாலதனித் தனிப்பிரித்துப் பேதகமாய்ச்
சாராமற் சமம தாம்போன்
மாலறவே யிறையாட்டுஞ் செயலெனவே
சமமேவி வாழ்வர் மிக்கோர். ௬௭

காசினியோ ரதுநிசமென் றுரைத்தாலு
மதுநிசமே கருது மென்று
பேசியடங் குவதல்லால் வேறொன்றால்
வாதுமொழி பேசார் போதும்
வாசனையுங் கலந்தென வுயிர்தோறு
மிறைகலந்த வளமை பார்க்கு
நேசர்குரு பரந்தனக்கும் பேதமிலா
தொன்றாக நிற்கு மன்றே. ௬௮

இந்திரியச் சேட்டைகெட மனமடக்கிக்
குருநாத னிசைந்த மோன
மந்திரத்தி னிலைநாடிச் சகம்பாவைக்
கூத்தெனவே மதிப்ப ரெனச்
சிந்தையுற்ற நெஞ்சியம்பும் பாவைக்கூத்
தெனவுரைத்தீர் தெரிய விந்த
விந்தைதனை விவரமதாய் விளம்பீரென்
றிடவறிவு விளம்ப லுற்றாம். ௯௯

ஆனந்தச் சின்மயமா யமர்ந்திருக்குங்
கூத்தில்வல்ல னகிலந் தன்னி
லூனுந்திப் புழுத்துடிக்கு முடற்பாவைக்
குகந்துவளிக் கயிறு பூட்டி
மோனந்த மெனுந்தீப மேற்றியகந்
தனினினைப்புத் திரையான் மூடி
வானந்த மாகியநம் மிறையுவந்தே
யாட்டிவைக்கும் வளமை நெஞ்சே. ௧௦௦

வஞ்சமற வுரைத்தீர்நம் மிறையிருந்தே
யாட்டுமிடம் வழங்கா யென்ற
நெஞ்சமதற் கறிவுரைக்குந் தாவரத்துஞ்
சங்கமத்து நிறைந்து பூத
மஞ்சினுக்கு மகம்புறமா யுயிர்க்குயிராய்ப்
பூரணமா யமர்ந்த தென்ன
மிஞ்சிகணக் கற்றசரா மசரமன்றோ
வெனவறிவு விளம்ப லுற்றாம். ௧௦௧

பெருவெளிக்கு ளண்டமெலாங் கலந்ததுபோ
லும்பேத மான மெய்யா
முருவெழுத்துக் குயிராகக் கலந்துதனித்
தகரமொன்றே யுறையு மாபோன்
மருவியுயிர்க் குயிராகிக் கலந்துதனித்
தொன்றாக வயங்குமென்னக்
குருவருளா லறிவுரைக்க நெஞ்சமது
வினவியசொற் கூற லுற்றாம். ௧௦௨

உடலுறையு முயிர்கடொறும் பரஞ்சுடரே
யுறைந்திருப்ப துண்மை யாகிற்
றடையறவே யொருவிதமாய் வாழாம
லலைந்தவகை சொல்லா யென்னக்
கடற்புவியி லாடுகின்ற பாவையெலா
மரசனெனக் காட்டி நிற்கிற்
றிடப்படுமோ வாகையினாற் பலவிதமா
யாட்டிவைக்குஞ் செய்கை நெஞ்சே. ௧0௩

துக்கசுக மென்பவைக ளனுபவிக்க
வைத்தவிதஞ் சொல்லா யென்ன
மிக்கதெளிந் தறிவுரைக்குங் கற்பனைய
லாதுசுக துக்க மேது
தக்கபுகழ் வேந்தனென வேடமுற்றோன்
பொய்ச்சுகமுந் தளர்ந்து மெத்தத்
துக்கமுறு வேடமுற்றோன் பொய்த்தளர்வு
மாஞ்சகத்தின் றொல்லை நெஞ்சே. ௧0௪

கண்ணினுரு வாயதற்கு முன்னொளியாய்க்
கலந்திருந்துங் கண்ணாற் காணா
மெண்ணரிய வுருவாகி யருவாகிப்
பலவாகி யேக மாகிப்
புண்ணியபா வங்களுமாய்ப் புரிபவனாய்ச்
சுகதுக்கப் பொலிவாய் நித்த
மண்ணிலதை யடைந்தவனா யிறையிருந்து
விளங்கியமெய் வளங்கா ணெஞ்சே. ௧0௫

தினந்தினமிவ் வுயிரனைத்துஞ் செயுஞ்செயலெ
லாமிறையின் செயலென் றோரார்
நினைவுறவே நினைத்திடவுஞ் செயலிலையோ
வெனவறிவு நிகழ்த்துஞ் சோதித்
தனிப்பரமா மிறையாட்டுஞ் செயலன்றி
யுடனடக்கத் தகுமோ மெத்த
வினித்தமொழி தசைநாவு மியம்பிடுமோ
வெனினினைப்ப தெதுவா நெஞ்சே. ௧0௬

நினைப்பதுவு மறப்பதுவுஞ் சித்தமதை
மயக்குவது நோய்ச் செய்து
தனித்திருக்கச் செய்வதுவுந் தொந்தமொடு
நிர்த்தொந்தத் தர்க்க மெல்லாஞ்
சினத்துடனே வளர்ப்பதுவுந் திரமுறவே
துடைப்பதுவுந் தேச தான
கனச்சுடரொன் றுனிநினைக்க மறக்கசெய
வினியேது காணாய் நெஞ்சே. ௧௦௭

மனமேநற் சின்மயத்தி லாசைவரு
வித்துகுரு வடிவாய் வந்து
கனவெளியிற் றங்கவொரு நிலைகாட்டி
யந்நிலையிற் கருதொண் ணாத
தனிச்சுடராய் வெளிகாட்டித் தனியுணர்ந்த
வானந்தத் தவனு மாகி
வனமுலைமா தொடுமயங்கு பவனுமிறை
யாய்ப்புவியில் வயங்கு மன்றே. ௧௦௮

ஆட்டிவைக்கு மவனாகி யாடுவனா
யாட்டமதை யன்பாய் நின்று
காட்டுபவ னாயதனைக் காண்பவனாய்த்
துரியநிறை கடவு ளாகி
வாட்டமிலாக் களிப்பாகி நினைப்பாகிச்
சொந்தமென்ற வாஞ்சை யாகிக்
கூட்டமொடு கூடாதா யிறையிருக்க
நினைப்பேது கூறாய் நெஞ்சே. ௧௦௯

இந்தமொழி யுணர்ந்தோர்க ளுலகிலுயிர்க்
குயிராகி யுறைந்தே யோங்கும்
பந்தமற்ற பரஞ்சுடரின் செயலாகி
யெங்கெங்கும் பார்க்குந் தோறு
மெந்தவித மெவ்விடமும் பரஞ்சுடரி
னியல்பாக விருப்ப தாலே
சிந்தையற்றார் பேசவே றொருவரிலா
தான்மோனஞ் சிறந்தார் நெஞ்சே. ௧௧௦

உலகில்பரி பூரணமே தானுகி
யாட்டிவைத்தே யுருவா யாடி
யிலகிபுவி நிறைந்ததென நெஞ்சுரைக்கு
மென்செயலுக் கிசைந்த தெல்லாஞ்
சொலவரிய விறையியற்றுஞ் செயலென்றீ
ரெனவறிவு சுழுத்தி தன்னி
லலமிருத்த காணமொடு பொறிபுலனே
டுன்செயலை யறிந்தி லாயோ. கககூ

யானெனதென் செயலெனவே மயக்கமுற்ற
தாலண்ட புவன மெல்லாந்
தானேயாய்ச் சாமசாந் தானுஞ்சிற்
செயன்மறந்து சலித்தா யீங்கு
நானேயென் றிடுமொழிக்கே யுரித்தாரா
குவராய்ந்து நவிலு கென்ன
வானேடைம் பூதமுமாஞ் சகமியானன்
றெனநெஞ்சம் வழங்க லுற்றும். ககஉ

மாசறுவெள் ளென்புதசை தோல்குருதி
நிணம்பொதிந்த மலச லாதி
நேசமுறு முடற்பாவை நானல்ல
வாசிகயி றல்ல நேரே
யாசைதரு மனம்புந்தி யகங்காரா
ணவதிரைநா னல்ல மேலாந்
தேசுபெறுஞ் சின்மோனச் செழுஞ்சுடரே
யானென்று சிறந்த தம்மா. ககங

வீரியமாய்ப் பகையுறவு விளைப்பதுவு
முண்டுடுத்து வேட்கை யாக
நாரியரை நயப்பதுவு நற்றவங்கள்
புரிவதுவு நாம ரூபப்
பேருலகா யுடலுயிராய்ப் பேதமெனக்
காண்பதெல்லாம் பிரமா னந்த
வாரியெனு மிறைசெயலென் றுணர்வதுவு
மதுவாக வயங்கிற் றம்மா. ககச

ச. உபதேசப் பகுதி முற்றிற்று.

# திரு அருட்பாவின்
# இந்த அடக்கவிலைப் பதிப்பின் விவரம்

*திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராம லிங்க சுவாமிகள் அருளிச்செய்த அமுதினும் இனிய தெய்வத் திருவருட்பா முழுவதையும், வேறுவகையில் அவர்களது சம்பந்தம் பெற்ற மற்றவற்றையும் தெளிவாகப் பாகுபாடு செய்து, சுத்தபாடமாக, நல்லகாகிதத்தில், விளக்கமான அச்செழுத்தில், உயர்ந்த கட்டடத்தோடு, பகுதிப் பகுதியாக, அடக்கவிலையில் வெளிப்படுத்தி, ஆண்டவரிடம் ஆசை கொண்டிருக்கும் இந்தத் தமிழ் நாட்டிலுள்ள மகளிர், சிறுவர், வறியர், முதியர், நோய் வாய்ப்பட்டவர், துறந்தார், சிறுதொழிலாளர், இலக்கிய இலக்கணம் கல்லாதார் என்பவர் உள்ளிட்ட அடியார் இனங்கள் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்னும் நோக்கத்தோடு இவ்விருப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.*

*இப்பதிப்பின் சிறப்பியல்களாவன :—*

1. இது வரையில் எவரும் அச்சிட்டு வெளிப்படுத்தாத பலப்பல அரும் பகுதிகள் இப்பதிப்பில் முதல் முதல் அச்சிடப்பட்டு வருகின்றன.

2. இப்பதிப்பில் வெளிவரும் ஒவ்வொரு பகுதியிலுள்ள பிரிவுகளும் சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகளோடும், சுவாமிகள் பார்வையிலேயே அச்சான முதற் பதிப்புகளோடும், சுவாமிகளை அடுத்திருந்த பேரன்பர்களின் கைஎழுத்துப் பிரதிகளோடும் ஒப்பிட்டுச் சுத்த பாடமாக ஆக்கப்பட்டவையாகும்.

3. இப்பதிப்பின் எல்லாப் பகுதிகளும் துருவித் துருவி எழுத்தெழுத்தாக நுட்பமாக ஆராயப்பட்டு, பொருத்தமான முறையில்—சிறுவர்களும் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில்—பாகுபாடு செய்தே வெளிப்படுத்தப்படும்.

# திரு அருட்பாவின்
# இந்த அடக்கவிலைப் பதிப்பில்
# இதுகாறும் வெளிவந்திருக்கும் பகுதிகள்

1-வது கீர்த்தனைப்பகுதி—(1-2-1931), 1000 பிரதி,
144 பக்கம், ராப்பர் விலை அணா 3.
2-ம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

2-வது வசனப் பகுதி—(23-5-1931), 1000 பிரதி,
176 பக்கம், ராப்பர் விலை அணா 4.
2-ம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

3-வது உரைப் பகுதி—(9-10-1931), 500 பிரதி,
264 பக்கம், உயர்ந்த கட்டடம்,
ராப்பர் விலை அணா 9.
காலிகோ ,, 12.

4-வது உபதேசப் பகுதி—(23-1-1932), 1000 பிரதி,
272 பக்கம், உயர்ந்த கட்டடம்,
ராப்பர் விலை அணா 8.
காலிகோ ,, 10.

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.